



லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ விடிகின்ற வேளையிலே... ★ முத்துலட்சுமி ராகவன்






லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ விடிகின்ற வேளையிலே... ★ முத்துலட்சுமி ராகவன்



முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# விடிகின்ற வேளையிலே...

## 1

புலர்காலைப் பொழுதின் அறிகுறிகள் வானத்தில் தென்பட ஆரம்பித்திருந்தன... லேசான வெளிச்சம் பரவியிருந்த அந்த வேளையில் மாடி பால்கனியில்

நின்று கொண்டிருந்தான் ஆதவன்.. இருள் பிரிந்து கொண்டிருந்த அந்தப் பொழுதை பார்க்கும்போது ஏதோ ஓர் விதமான புத்துணர்வு மனதில் தோன்றுவதை அவனால் உணர முடிந்தது... வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு மாடிப்படிகளில் இறங்கினான்...

சமையலறையில் லேசான வெளிச்சக் கீற்றுத் தெரிந்தது... பால் பாத்திரத்துடன் வீட்டின் பக்கவாட்டு வாசல் வழியாக உள்ளே வந்த செல்வி இவனைக் கண்டதும்..

"காபி வேணுமாங்கய்யா..." என்று கேட்டாள்...

"இன்னும் யாரும் எழுந்திருக்கலை போல இருக்கே... நீ மெதுவா போடு... நான் தோட்டத்துப் பக்கம் போயிட்டுவரேன்.."

அவளின் முகம் பார்க்காமல் பதில் சொல்லிவிட்டு நடந்து விட்டான் ஆதவன்... வாசல் படியில் இறங்கி... வீட்டின் முன்புறமாக இருந்த பிரம்மாண்டமான போர்டிகோவைக் கடக்கும் போது.. காரைத் துடைத்துக் கொண்டிருந்த டிரைவர் திரும்பிப் பார்த்தான்...

"காரை எடுக்கட்டுமாங்கய்யா..?" என்ற அவனின் கேள்விக்கு..

"வேண்டாம்..." என்ற ஒற்றைச் சொல் பதிலாக வந்தது...

நீண்டிருந்த சிமிண்ட்பாதை வாசலை நோக்கிப் போனது... அதன் இருபக்கமும்.. அரைச் செங்கல் முக்கோன வடிவத்தில் நடப்பட்டிருந்தது... அழகான அந்த செங்கல் வரிசைக்கு அப்பாலிருந்த தோட்டத்தில் மலர்ச்செடிகள் பூத்துக் குலுங்கின.. அதன் மையத்தில் போடப்பட்டிருந்த சோபா ஊஞ்சலில் அமர்ந்து அந்தக் காலை வேளையில் ஆடுவது பரமசுகமான ஒன்று என்ற நினைவு அவன் மனதில் எழுந்தது..

ஆனாலும் அவன் அந்த சுகத்தை நாடிப் போகவில்லை.. அதனாலெல்லாம் அவன் மனதில் குடி கொண்டிருக்கும் புழுக்கம் ஓடிப் போய்விடாது என்பதை அவன் நன்கு அறிவான்..

பாதை முடிந்த இடத்திலிருந்த பிரம்மாண்டமான வெளிவாசல் கேட்டை அவன் திறந்த போது.. வாசல் தெளித்துக் கொண்டிருந்த மல்லிகாவும்.. அவளை பார்வையிட்டுக் கொண்டிருந்த தோட்டக்காரனும் பதறிப் போய் நிமிர்ந்து நின்றார்கள்...

அவர்களைக் கண்டும் காணாதவனைப் போல கடந்து நடந்து விட்டான் ஆதவன்..

"என்னய்யா நம்ம சின்னய்யா இப்படிப் போறாரு..?" கோலப் பொடியை கையில் பிடித்தபடி கோலம் போடுவதை மறந்தவளாக கேள்வி கேட்டாள் மல்லிகா..

"எப்படிப் போறாரு..?" எஜமானன் கண்டு கொள்ளாமல் போய்விட்ட உற்சாகத்தில் விகடம் பேசினான் கோதண்டம்...

"பேயடிச்சதைப் போல மெகாலு பிடிச்சதனமா போறாரு..?"

"அவரைத்தான் ஒரு வருசத்துக்கு முன்னாலேயே பேயடிச்சிருச்சே புள்ள.. உனக்கு அது தெரியாதா..?"

கோதண்டம் எதைச் சொல்கிறான் என்று மல்லிகாவிற்குப் புரிந்தது.. அவள் மனதில் எஜமானனைக் குறித்த பரிதாபம் எழுந்தது..

"ம்ஹீம்.. அது வெறும் பேயா மச்சான்..? அழகான மோகினிப் பேயாச்சே.. அதுகிட்ட அடி வாங்கினா நம்ம ஐயாவுக்கு மெகாலு பிடிக்காம என்ன செய்யும்..?"

பேச்சுவாக்கில் அவள் 'மச்சான்' என்று அழைத்துவிட.. குஷியாகிப் போன கோதண்டத்தின் வாயெல்லாம் பல்லானது... அவன் மல்லிகா சொன்ன மோகினிப் பேயைப் பற்றிய ஆராய்ச்சியை மறந்து..

"புள்ள..!.." என்று ஜொள்ளினான்...

அதற்குள் சுதாரித்துக் கொண்ட மல்லிகா மனதை மறைத்துக் கொண்டவளாக கடுமையாக முகத்தை வைத்துக் கொண்டாள்...

"யோவ்... எதுக்குய்யா இப்படி இஞ்சிதின்ன குரங்கைப் போல இளிக்கிற..? போ.. போய் வேலைக்கழுதையைப் பாரு..."

'மச்சான்' என்று மனதைத் தாலாட்டியவள் கணப்பொழுதில் மாறி 'யோவ்' போட்டு விட்டதில் தன் விதியை நொந்து கொண்ட கோதண்டம் வேலையைப் பார்க்கப் போனான்...

கீழ்வானில் சூரியனின் உதயக்கதிர்கள் எழுந்து கொண்டிருந்த அந்த விடிகின்ற வேளையிலே... வயிலின் வரப்பில் நடந்து கொண்டிருந்த ஆதவனின் மனப்புழுக்கம் அடங்கின பாடாக இல்லை... எதிரில் தென்படுகிறவர்கள் விச்ராந்தியான பேச்சை மறந்து.. தலைக்குக் கட்டியிருக்கும் துண்டை அவிழ்த்து தோளில் போட்டுக் கொள்வதையோ... இடுப்பில் மடித்துக் கட்டியிருக்கும் வேட்டியை இறக்கி விட்டுக் கொள்வதையோ... கவனிக்காதவனைப் போல.. அவர்களின் வணக்கம் சொல்லும் கை குவித்தல்களை ஒரு சிறு தலையசைவுடன் அங்கீகரித்தவாறே தன் போக்கில் நடந்து கொண்டிருந்தான்...

அவனைப் பார்ப்பவர்களின் கண்களில் தென்பட்ட ஆச்சரியத்திற்கு ஒரு அர்த்தம் இருக்கிறது... அவன் அது போல இயல்பாக தெருவில் இறங்கி.. நடந்து

போகிறவனல்ல... வரப்பில் நடந்து வயல் வரப்பை மேற்பார்வை இடுகிறவனுமல்ல...

அவனின் அண்ணனான மாதவன்தான் வயலுக்கு வந்து மேற்பார்வை இடுவார்... அதையும் அவர் நடந்து வந்து செய்ய மாட்டார்.. அவரின் கார் தோப்புக்குள் வந்து நிற்கும்.. தென்னந்தோப்பில் இறங்கியவர்.. அதன் நால்புறமும் நடந்து.. அவரின் பிரதிநிதிகளாக வேலையாள்களை அனுப்பி நடந்து கொண்டிருக்கும் விவசாய வேலைகளை மேற்பார்வையிடுவார்..

ஆதவனின் அடையாளமே வேறு... அவன் தொழில்துறையை நேசிப்பவன்... விவசாயம் என்ற தொழிலில் இருக்கும் பசுமையான பயிர்களை விட இயந்திரங்களை அதிகமாக நேசிப்பவன்...

"அதனாலதான் உன் மனசில ஈரம் வத்திப் போச்சுடா மகனே..."

படுக்கையில் கிடந்த செண்பகவள்ளியின் குற்றச்சாட்டு அவன் மனதை குதறிக் கொண்டிருந்தது...

"எந்திரத்தோட எந்திரமா.. நீயும் ஒரு மெஷினா மாறிப் போயிட்டடா ஆதவா... பெரியவன் மனசில இருக்கிற ஈரப்பசை உன் மனசில இல்லாமப் போச்சே..."

பெற்றவளின் வாய் மொழியில் எழுந்த இந்தக் குற்றச்சாட்டுத்தான் அவனை இரவு முழுவதும் தூங்கவிடாமல் துரத்தி அடித்துக் கொண்டிருந்தது...

'நான் ஈரமனசுக்காரன்னு புருவ் பண்ண என்ன செய்யனுமாம்..? என் சுயமரியாதையை காற்றில் பறக்க விடனுமா..?'

அவன் மனம் கொந்தளித்தது... அந்தக் கொந்தளிப்பை தாயிடம் கேட்டுவிட அவனால் முடியாது... அவள் நோய் படுக்கையில் கிடக்கிறாள்.. அவளுக்கு எத்தனையோ விதமான வைத்தியங்களைப் பண்ணிப் பார்த்தாகி விட்டது.. அவள் எழுந்து கொள்கிறபாடாக இல்லை.. இந்த நிலையில் ஊரில் திருவிழா வந்து விட்டது... அது

வரப்போகும் செய்தியை அறிந்த பின்னால்தான்.. செண்பகவள்ளி இளைய மகனை நோக்கிப் பறக்க விடும் குற்றச்சாட்டு கணைகளின் எண்ணிக்கையும் அதிகமானது...

"ஊர்க் கொடை வந்துருச்சு.. திருவிhழவைச் சாட்டிட்டாங்க.. ஒவ்வொரு வீட்டிலயும் சுத்துப்பட்டில இருக்கிற சொந்தபந்தம் அத்தனையும் வந்து இறங்கிடும்.. நம்ம வீட்டிலயும் அப்படித்தான்.. உனக்கு முன்னால ரெண்டு பொம்பளப் புள்ளகளை பெத்து வளர்த்து கட்டிக் கொடுத்திருக்கேனே.. அவுகளை அழைக்காம இருக்க முடியுமா..?"

அசைய முடியாமல் படுக்கையில் கிடக்கிறவளுக்கு.. நாவு மட்டும் எப்படி.. இப்படி அசைந்து கொடுக்கிறது என்ற விந்தை ஆதவனுக்கு புரிபடவே இல்லை...

"ஏம்மா.. அக்காக்களை அழைக்க வேணாம்ன்னு நான் சொன்னேனா..?"

"அதையும்கூட ஏன்ப்பா விட்டு வைச்சிருக்க..? சொல்லித்தான் பாரேன்.."

இப்படிப் பேசுகிறவளிடம் எப்படிப் பேசுவது என்று ஆதவனுக்கு ஆயாசமாக இருந்தது.. ஆனாலும் அவனால் எதையும் வெளிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.. அவள்.. அவனது தாய்.. பத்துமாதம் அவளின் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்தவள்.. பேணி வளர்த்தவள்.. அவளின் வார்த்தைகளை அவனால் அலட்சியப் படுத்த முடியாது...

"இப்படி முன்னாடி வந்தா கடிப்பேன்.. பின்னாடி போனா உதைப்பேன்னு இருந்தா.. நான் என்னதான் செய்ய முடியும்மா..?"

"எதையும் செய்யாமத்தான் நீ என் உயிரைக் குறைக்கறியே.."

"அம்மா..!"

"கொடைக்கு வருகிற உன் அக்காமார்கள் ரெண்டு பேரும் தனியாவா வருவாங்க..? புருசன் புள்ளைக.. மாமனார்.. மாமியார்.. நாத்தனா.. கொழுந்தன்னு குடும்ப சகிதம் வந்து இறங்க மாட்டாங்களா..?"

"வருசா வருசம் அப்படித்தான வந்து இறங்குவாங்க..? இதைப் போயி புதுசா சொல்கிறதைப் போல சொல்லி வைக்கறிங்களேம்மா..?"

"எப்பவும் போலத்தான் இந்த வருசமும் இருக்குதா..?"

நறுக்கென்ற கேள்வியைக் கேட்டாள் செண்பகவள்ளி.. அந்தக் கேள்வி போகும் திசையைப் புரிந்து கொண்ட ஆதவன் மெளனம் சாதித்தான்...

"பேச மாட்டியே.. இதுக்கு மட்டும் பதிலைச் சொல்ல மாட்டியே... ஆதவா.. ஊருக்குப் பெரிய மனுசங்களாப் பொழைச்சுட்டா.. ஊரு கேக்கிற நாலு கேள்விகளுக்கு பதிலைச் சொல்லித்தாண்டா ஆகனும்.. இப்படி என் முன்னாலே வாயடைச்சுப் போய் உட்கார்ந்திருக்கிறதைப் போல அவங்க வாயை அடைச்சுக்க வைக்க உன்னால முடியாது.. உலை வாயை மூடலாம்.. ஊர் வாயை மூடமுடியாதுன்னு பழமொழியே இருக்குடா மகனே...!"

ஆதவனால் அந்த குத்தல் வார்த்தைகளைக் கேட்டுக் கொள்ள முடியவில்லை... அவன் என்ன செய்தான் என்று இந்த அம்மா குற்றவாளிக் கூண்டில் அவனை நிறுத்துகிறாள்..?

"இப்ப ஊர் கேள்வி கேட்கிற அளவுக்கு என்னம்மா நடந்துருச்சு..?" சுள்ளென்று எரிந்து விழுந்தான்...

"எதுவும் நடக்கலையா..?" இமைக்காமல் அவனையே பார்த்தாள் செண்பகவள்ளி...

அவளின் வார்த்தைகளை விட.. பார்வையின் சக்தி அதிகமானதாக இருந்தது... சுட்டெரிக்கும் அந்தப் பார்வையைத் தாங்க முடியாமல் சட்டென்று எழுந்து போய் விட்டான் ஆதவன்.. போனவனால் நிம்மதியாக படுத்து உறங்கத்தான் முடியாமல் போய்விட்டது...

அவன் பாசமிக்க மகன்தான்.. காலையில் மில்லுக்குப் போவதற்கு முன்னால் தாயைப் பார்த்துப் பேசாமல் போக மாட்டான்தான்.. அதேபோல.. இரவில் திரும்பியதும்.. தூங்கப் போவதற்கு முன்னால் அவளருகில் அமர்ந்து சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுத் தூங்கப் போவதை வழக்கமாக வைத்திருப்பவன்தான்...

ஆனாலும் கூட அவனால் அவள் பேசுவதற்கு பதில் சொல்லமுடியாமல் போய்விட்டது... அப்போது மட்டும்தான் என்றில்லை.. கடந்த ஒருவருடகாலமாகவே அவனால் செண்பகவள்ளியின் குற்றசாட்டுக்களை எதிர்கொள்ள முடியாமல்தான் இருக்கிறது..

"மூத்தவனைப் பெத்தேன்.. குழந்தையும்.. குட்டியுமா.. பொண்டாட்டி புள்ளைகளோட அருமையா குடும்பம் நடத்தறான்.. அடுத்ததுக ரெண்டும் பொண்ணாப் பொறந்திருச்சு.. அவுகளையும் கட்டிக் கொடுத்தேன்.. பொன்னே.. பூவேன்னு அதுகளும் நிறைஞ்ச வாழ்க்கையை புருசன் வீட்டிலே நடத்தறாங்க.. கடைசியாய் உன்னையும் மகனாப் பெத்தேன்.. ஆனா.. நீ..?"

செண்பகவள்ளி முடிக்காமல் விட்ட வார்த்தைகள் உண்டாக்கிய மன வலிதான் அந்த விடியும் வேளையில் அவனைத் துரத்தியடித்துக் கொண்டிருந்தது...

வயலின் பசுமை நிறைந்த நாற்றுக்களின் இடையே பறந்த வெண்ணிற நாரைகளின் அணிவகுப்புக் கூட அவன் கருத்தைக் கவரவில்லை.. வயலில் நிறைந்திருந்த நீரின் மீது படிந்து வந்த ஈரப்பசையுடன் கூடிய இதமான காலைக் காற்றும் அவன் மன வெம்மையை தணிக்கவில்லை..

'நானா.. புள்ளையும் குட்டியுமா குடும்பம் நடத்த மாட்டேன்னு ஓடினேன்..?' சினந்தான் அவன்..

யாரோ செய்கின்ற செயல்களுக்கெல்லாம் அவனை பொறுப்பாளியாக்கும் அன்னையின் மீதான கோபம் வடியாமலே வீட்டுக்குத் திரும்பினான்.. அவனை எதிர்பார்த்து வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தார்

மாதவன்... அண்ணனைக் கண்டதும் அவனது நடை நின்றது..

"அண்ணா..." பேசத் தயங்கினான் ஆதவன்..

"காலையில காபி கொடுக்கிறப்பவே உன் அண்ணி சொல்லிட்டா.. விடியறப்பவே எழுந்திருச்சு.. வெளியே போயிட்டதா செல்வி சொன்னாளாம்.. கார் வேணாம்ன்னு சொல்லிட்டதா டிரைவர் சொன்னான்.. நீ நடந்தே போனதா மல்லிகாவும்.. கோதண்டமும் சொன்னாங்க.. என்னைக்கும் நீ இப்படிச் செய்ய மாட்டியே.. அதான்.. நீ வருகிற வரைக்கும் மனசில நிம்மதியில்லாம போயிருச்சு.."

கவலையுடன் பேசிய மாதவன்.. ஆதவனை விட இருபது வயது மூத்தவர்... அவருக்கு அடுத்து இரண்டு பெண் குழந்தைகள் பிறக்கவும்.. அத்துடன் பிரசவிக்க வேண்டிய வேலை முடிந்த தென்று நிம்மதியாக இருந்த செண்பக வள்ளிக்கு.. பத்து வருடங்கள் கழித்து.. அதிர்ச்சி வைத்தியம் குடுத்து.. அவளின் வயிற்றில் உதித்தவன் ஆதவன்.. அவனுக்கும்.. அவனுடைய பெரிய அண்ணனுக்கும் இடையில் இருந்த அதிகமான வயதின் இடைவெளியில் மாதவன் அவனை தன் மூத்த மகனைப் போலத்தான் நடத்துவார்... அவரின் கரம் பிடித்து வந்த வைஷ்ணவிக்கும் அவன் மூத்தமகனாகவே.. ஆனான்..

"மனசு சரியில்லைண்ணா.. அதான்.. காலார நடந்துட்டு வரலாம்ன்னு.." ஆதவன் முடிக்காமல் இழுத்தான்..



"மனசு சரியில்லாம ஏன் போகனும்..?" மாதவனின் கேள்வி அவனைத் துளைத்தது..

"உன் மனநிம்மதி உன்கிட்டேத்தான் இருக்கு ஆதவா.. அதை உனக்குள்ளே தேடு.. ஊரைச் சுற்றித் தேடாதே..."

அழுத்தமான வார்த்தைகள் அவரிடமிருந்து வெளிப்பட்டன..

"இறைவன் வருவான் - அவன்

என்றும் நல்வழி தருவான்..

அறிவோம் அவனை -அவன்

அன்பே தனிப்பெருங்கருணை..."

டைனிங் ஹாலில் இருந்த தொலைக் காட்சிப் பெட்டியில்.. காலை மலர் என்ற கடவுள்களின் பாடல் தொகுப்பு ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.. மாதவனுடன் வந்த ஆதவனை காபியுடன் எதிர் கொண்டாள் வைஷ்ணவி..

"காலங்கார்த்தாலே ஒருவாய் காபி குடிக்காமக் கூட.. வயலுப் பக்கம் ஓடுவாங்களா ஆதி..? அதுசரி.. இதென்ன புதுசா..வயலுப் பக்கம் உன் பார்வை பேகுது..? மழை பெய்தாக் கூட நீ தோப்புப் பக்கம் ஒதுங்காத ஆளாச்சே.." கிண்டலாக வினவுவதைப் போல விசாரித்தாள் வைஷ்ணவி..

அவள் கேட்க வருவதை ஆதவனால் புரிந்து கொள்ள முடிந்தது...

"மெஷினோடு மெஷினாப் பழகி என் மனசில ஈரம் அத்துப் போச்சாம் அண்ணி.. அதான்.. ஈரத்தை மனசில வாங்கிக்க.. வயலுப் பக்கமா போனேன்.." காபியை உறிஞ்சியபடி அவன் பதில் சொன்னான்..

"இதென்ன கூத்தா இருக்கு.. காத்து வாங்கப் போனேன்னு சொல்லக் கேட்டிருக்கோம்.. மனசில ஈரம் வாங்கப் போனேன்னு சொல்றதை இப்பத்தான் கேட்கிறோம்.. அதுசரி.. உன் மனசில ஈரம் அத்துப் போச்சுன்னு யார் சொன்னது..?" டைனிங் டேபிளில் பாத்திரங்களைப் பரத்தியபடியே இயல்பாகக் கேட்பதைப் போலக் கேட்டாள் வைஷ்ணவி..

"வேற யாரு சொல்லுவா..? உங்க மாமியாதான் சொன்னாங்க.." காலிக் காபித் தம்ளரை நீட்டியபடியே சொன்னான் ஆதவன்..

நொடிப் பொழுதிற்கு மாதவனின் பார்வையை சந்தித்து மீண்டது வைஷ்ணவியின் பார்வை..

"தாய் சொல்லே வேதவாக்குன்னு கழனிப் பக்கம் போனியாக்கும்..? சரி.. சரி.. சீக்கிரமா குளிச்சுட்டு வா.. உனக்காக உன் அண்ணன் சாப்பிடாம காத்துக்கிட்டு இருக்கார்.." ஆதவனை விரட்டுவதைப் போலப் பேச்சை மாற்றினாள் வைஷ்ணவி..

"அண்ணன் ஏன் காத்துக்கிட்டு இருக்கனும்.. அவர் சாப்பிடட்டுமே அண்ணி.." என்றான் ஆதவன்..

"இதை எங்கிட்டச் சொல்லாம உன் முன்னால நிக்கிற உன் அண்ணன்கிட்டச் சொல்லு பாப்போம்..." கேலியாக சவால் விட்டாள் வைஷ்ணவி..

ஆதவனின் முகம் வெட்கத்தில் சிவந்தது.. அவன் தமையனின் முகம் பார்க்காமல் திரும்பிக் கொள்ள அதை ரசித்துச் சிரித்தாள் வைஷ்ணவி..

"இந்த லட்சுமணன் இல்லாம எனக்குத் தாலிகட்டின ராமரு எந்தக் காலத்தில சோத்துத்தட்டில கையை வைச்சாராம்..? போப்பா.. போயி குளிச்சுட்டு வா..."

வைஷ்ணவி சிரித்தபடி சொன்னாள்.. மரியாதையுடன் முகம் பார்க்காமல் நகர்ந்த தம்பியை வாத்சல்யத்துடன் பார்த்தார் மாதவன்..

"உங்க அம்மாதான் எதையோ சொல்லியிருக்காங்க போல.. அதான் தம்பி கிடந்து மருகுது.." கவலையுடன் சொன்னாள் வைஷ்ணவி..

"அம்மாவுக்கு மட்டும் இவன் மனசை நோகடிக்கனும்னு நேர்த்திக் கடனாடி..? அவங்களும்தான் என்ன செய்வாங்க..? ஊர்த்திருவிழா முன்னாலே நிக்குது.. இதுவரைக்கும் இலைமறைவு.. காய் மறைவா பேசிக்கிட்டு இருந்த ஊர்ஜனமும்.. சொந்தபந்தமும்.. அன்னைக்கு நேருக்கு நேராகவே கேள்வி கேட்கப் போகிறாங்க.. இது வரைக்கும் யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லாம குடும்பம் நடத்திய நம்ம குடும்பம்

அன்னைக்கு பதில் சொல்ல முடியாம திணறப் போகுது.. அந்த ஆதங்கத்தில அவங்க பேசியிருப்பாங்க.." தாயின் பக்க நியாயத்தை எடுத்துச் சொன்னார் மாதவன்..

"என்னவோ போங்க.. இதுக்கெல்லாம் என்ன முடிவுன்னுதான் எனக்கு பிடிபட மாட்டேங்குது.." அலுத்துக் கொண்டாள் வைஷ்ணவி..

"உனக்கு அது தெரியாதா..?" ஆழமாகப் பார்த்தார் மாதவன்..

"என்னைப் பார்த்து என்ன பிரயோசனம்..? இந்தப் பார்வையை உங்க தம்பி மேல இல்ல நீங்க வீசனும்..?"

சிரித்தபடி சமையலறைப் பக்கமாக போகத் திரும்பினாள் வைஷ்ணவி..

"யார் மேல.. எதை வீசனுமாம்..?" கேட்டபடி வந்தான் தியாகு என்று வீட்டினரால் அழைக்கப் படும் தியாகராஜன்...

"உன் மேல செல்வி சுட்டு அடுக்கியிருக்கும் இட்லியை வீசனுமாம்.." என்றபடி அங்கே வந்தாள் வித்யா..

"ஏனாம்..? அந்த இட்லியடியை நீ வாங்கினா ஆகாதா..?" தியாகராஜன்.. நெற்றிக்கண்ணைத் திறந்தான்..

"நெவர் பாஸ்.. நான் அப்பாவுக்கு செல்லப் பொண்ணு.. இந்த வீட்டுக்கு.. இளவரசி.. இட்லியடியெல்லாம் உனக்குத்தான்.." கண் சிமிட்டினாள் வித்யா..

"அப்படின்னு இ.பி.கோ சட்டப் பிரிவில் எந்தச் சட்டம் சொல்லுது..? நீ செக்சனைச் சொல்லு பார்க்கலாம்.." வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு கிளம்பினான் தியாகு..

"இவன் சட்டம் படிக்கப் போறேன்னு லா காலேஜில சேர்ந்தாலும் சேர்ந்தான்.. எதுக்கெடுத்தாலும் இ.பி.கோ செக்சன்தான் தூள் பரக்குது.." அலுத்துக் கொண்டாள் வித்யா..

"அங்கே மட்டும் என்னவாம்.. மியுஸிக்கில டிகிரி வாங்கறேன் பேர்வழின்னு மியுஸிக் காலேஜில சேர்ந்தாலும் சேர்ந்தே.. அப்பாவுக்கும்.. அம்மாவுக்கும் ஜால்ரா தட்டி பின்பாட்டுப் பாடறதையே முழுநேரத் தொழிலா வைச்சிருக்கே..." தியாகு போட்டுத் தாக்கினான்..

"நானா ஜால்ரா..?"

"நானா இட்லியடி வாங்கனும்..?"

அங்கே போர் முரசு ஒலிக்க.. வைஷ்ணவி அதட்டல் போட்டாள்..

"இங்கே நின்னுக்கிட்டு சத்தம் போட்டுக்காதீங்க.. போயி தெருவில நின்னு சத்தம் போடுங்க.. அப்பத்தான் பெரிய வீட்டு மருமக பெத்த பிள்ளைகள எப்படி வளர்த்திருக்கா பாருன்னு இந்த ஊரு பேசும்.."

அவளின் கோபத்தை அவள் பெற்ற குலக் கொழுந்துகள் கண்டு கொள்வதாகவே இல்லை..

"போம்மா.. இந்த ஊருக்கு பெரிய வீட்டை கண்காணிக்கிறது மட்டும்தான் வேலையா..? அதுக்கு இருக்கும்மா ஆயிரம் வேலை..." வித்யா சிணுங்கினாள்..

"சரியாச் சொன்னே வித்யா... இதை அப்படியே போய் உன் பாட்டியோட காதிலயும் போட்டு வைச்சின்னா தேவலாம்.." என்றபடி மாடிப்படிகளில் இறங்கி வந்தான் ஆதவன்..

"வித்யா.. சித்தப்பா உனக்காக சொல்றதைப் போலத் தோணவே இல்லியே.. என்னவோ பக்கத்து இலைக்கு பாயாசம் போடுன்னு சொல்றதைப் போலல்ல இருக்கு.." கண் சிமிட்டினான் தியாகு...

"டேய்.. நான் எதை நினைச்சேனோ.. அதை அப்படியே சொல்றடா தியாகு.. எப்படிடா அண்ணா.. எப்படி..?" புல்லரித்துப் போனாள் வித்யா..

"பார்த்தீங்களா அண்ணி.. இதுக சண்டைக்கு பஞ்சாயத்துக்குப் போனா இந்தக் கதிதான்.. இதுக கூட்டுச் சேர்ந்துக்கிட்டு நம்மளையே கலாய்ச்சிருவாங்க..."

சிரித்தபடி வித்யாவின் காதைப் பிடித்துத் திருகினான் ஆதவன்..

"ஐயோ.. வலிக்குது சித்தப்பா.." அலறினாள் வித்யா... ஆதவன் காதை விடுவதாக இல்லை.. உடனே அவனின் முதுகுக்குப் பின்னால் பார்த்த வித்யா..

"ஐ.. அப்பா வந்திட்டாரே.." என்று குதூகலித்தாள்..

உடனடியாக ஆதவன் அவள் காதை விட்டு விட்டான்.. சமர்த்துப் பிள்ளையாக டைனிங் டேபிளில் அமர்ந்து திரும்பிப் பார்த்தான்.. அங்கே மல்லிகாதான் ஷோ-கேஸை துடைத்துக் கொண்டிருந்தாள்..

"வாலு..! பொய் சொன்னியா..?" செல்லக் கோபத்துடன் அண்ணன் மகளை முறைத்தான்..

"என்ன ஆதி..? வித்யா என்ன செஞ்சா..?" என்று கேட்டபடி நிஜமாகவே வந்து அமர்ந்தார் மாதவன்..

அது நேரம் வரை.. அண்ணன் பிள்ளைகளுடன் விளையாட்டாகப் பேசிக் கொண்டிருந்த ஆதவன் மௌனகுருவாகி விட்டான்.. அவன் உதடுகள் மட்டுமே அசைவதை மொழிபெயர்க்க ஆரம்பித்தாள் வித்யா...

"ஒன்னுமில்லையாம்பா..." என்றவளை.. நிமிர்ந்து பார்த்த மாதவன்..

"உன்கிட்ட நான் கேட்டேனா..?" என்று கேட்டார்..

"கேட்கலைதான்.. ஆனா.. உங்க முன்னாலே சித்தப்பா பேச ஆரம்பிச்சா.. அவர் பேச்சு யாருக்கும் கேட்கறதில்லையே..."

கிண்டலாகச் சொன்னாள் வித்யா..

மகளை தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்து விட்டு தம்பியின் பக்கமாகத் திரும்பினார் மாதவன்..

"ஆதி..."

"அண்ணா.."

"அம்மா சொல்கிறதைப் பத்தி என்ன முடிவு பண்ணியிருக்க..?"

அவரின் அழுத்தமான இந்தக் கேள்வியில் திகைத்துப் போனான் ஆதவன்...

"இதில முடிவு சொல்ல என்னண்ணா இருக்கு..?"

இவ்வளவு நீளமான கேள்வியை பதிலாக அவன் மாதவனிடம் சொல்லி தியாகுவும் வித்யாவும் கேட்டதே இல்லையென்பதால் அவர்கள் ஆச்சரியத்துடன் ஆதவனின் முகத்தைப் பார்த்தார்கள்..

"ஒன்னுமே இல்லைன்னா சொல்ற..?" மாதவனின் கூரிய பார்வை ஆதவனைத் துளைப்பதைப் போலப் பார்த்து வைத்தது..

"என்னைப் பொறுத்தவரைக்கும் எதுவுமே இல்லைண்ணா.." உறுதியாகப் பதில் சொன்னான் ஆதவன்..

"உனக்கு அப்படியிருக்கலாம் ஆதி.. அம்மாவுக்கும்.. ஊருக்கும் அப்படியில்லையே.." மாதவன் கடினமாகப் பேசினார்..

வித்யாவின் முகத்திலிருந்த விளையாட்டுத் தனமும்.. தியாகுவின் முகத்திலிருந்த சிரிப்பும் மறைந்தன.. அவர்கள் பேச்சுப் போகும் திசையை யூகித்தவர்களாக பார்வைகளை பரிமாறிக் கொண்டார்கள்..

உலகமே தலைகீழாக மாறி நின்றாலும்.. தமையனை எதிர்த்து ஒரு சொல்.. சொல்லியிராத ஆதவன்.. எதனால் தமையனின் பேச்சிற்கு எதிர்பேச்சைப் பேசுகிறான் என்று அப்போதுதான் அவர்களுக்குப் புரிந்தது..

"அண்ணா ப்ளீஸ்.. என்னையும் நீங்க புரிஞ்சுக்கனும்.. மத்தவங்களுக்காக வாழ்கிறது வாழ்க்கையில்லை.. என் வாழ்க்கையை எனக்காகத்தான் நான் வாழனும்.." கண்டிப்புடன் சொன்னான் ஆதவன்..

"அப்படியா ஆதி..? இப்ப.. உன் வாழ்க்கையை உனக்காகத்தான் நீ வாழறயா..?" நிதானமாக கேட்டார் மாதவன்..

"அண்ணா.." ஆதவனால் பேச முடியவில்லை..

"எதுக்காகடா.. காலையிலேயே.. மனசில ஈரத்தை வாங்கனுமுன்னு வயலுப் பக்கமா உலாத்தப் போன..?"

கடுமையாகக் கேட்ட மாதவனுக்கு.. ஆதவனின் மௌனம்தான் பதிலாக கிடைத்தது..

"இது குடும்பம்டா.. இங்கே ஒருத்தர் தடுமாறி நின்னாக் கூட குடும்பமே கலங்கி நிற்கும்.. அவங்கவங்க மனசுக்குப் பிடிச்சபடி அவங்க வாழனும்னு ஆரம்பிச்சா இது குடும்பமா இருக்காதுடா.."

"என்னை என்னதான் செய்யச் சொல்றிங்க..?" ஆதவன் இறங்கி வந்தான்..

"உனக்காக வேணாம்.. அம்மாவுக்காகவும்.. நம்ம கூடப் பொறந்த பொம்பளைப் புள்ளைகளுக்காவும் இதைச் செய்.." மாதவன் கட்டளையிட்டார்...

"எதை..?" ஆதவன் முகம் சுளித்தான்..

"அம்மா கேட்டதை.." மாதவன் விடவில்லை..

"இல்லைண்ணா.. என்னால் அது முடியாது.." ஆதவன் தீர்மானமாக மறுத்து விட்டான்..

"ஆதி.. உன்னோட அக்காக்களை நினைச்சுப் பாரு.. அவங்க கொண்டு போன சீர்வரிசைகளால மட்டும் அவங்க புகுந்த வீட்டிலே சந்தோசமா வாழ்ந்திர முடியாது.. பிறந்த வீடு ஒரு சொல்லுப்படாம நிமிர்ந்து நிக்கனும்.. அதில ஒற்றைச் சொல் வந்து அது புகுந்தவீட்டிலே கேலிப் பேச்சாகிட்டா அவங்களாலே அதைத் தாங்கிக்க முடியாது.. நம்ம வீட்டில பொறந்த புள்ளைக அதைக் கேட்டுக்கிட்டு நிக்க மாட்டாங்க.. பதிலுக்கு எதையாச்சும் சொல்லிப் புடுவாங்க.. அதுக்கப்புறம்.. சண்டையும்.. சச்சரவும்மாத்தான் அவங்க

காலம் கழியும்.. இது தேவையா..?" மாதவன் இதமாக எடுத்துக் சொன்னார்..

"அண்ணா.. நான் போக மாட்டேன்.. இந்தக் குடும்பத்தில இருந்து வேற யாராவது போகனும்னு நினைச்சா அதைத் தடுக்கவும் மாட்டேன்.."

ஆதவன் தன் முடிவைச் சொல்லி விட்டு விர்ரென்று வெளியே சென்று விட்டான்.. அவனின் கார் கிளம்பும் சப்தம் கேட்டது.. மாதவன் பெருமூச்சோடு மகனை நிமிர்ந்து பார்த்தார்..

"தியாகு..!"

## 3

வட்ட வடிவமான தோசைகள் மடித்து வைக்கப்பட்டு.. அரைநிலாவைப் போன்ற தோற்றத்துடன் அழகாக தட்டில் அடுக்கப் பட்டிருந்தன.. அதன் மறுபக்கம் சிகப்பு வண்ணத்தில் தக்காளி சட்டினியும்.. பச்சை வண்ணத்தில் கொத்தமல்லிச் சட்டினியும்.. வெள்ளை வண்ணத்தில் தேங்காய் சட்டினியும் தேசியக் கொடியைப் போல வரிசை கட்டி நின்றன..

நந்தினி தோசையைப் பிட்டு சட்டினியில் தோய்த்து வாயில் போட்டுக் கொண்டபடி டிவியைப் பார்த்தாள்..

"புத்தம்புது ஓலை வரும்...

இந்த பூவுக் கொரு

மாலை வரும்...

நந்தவனங்கள் பொன் மாலை தரும்..

நாதஸ்வரங்கள் கெட்டிமேளம் கொட்டும்..

நட்சத்திரம்.. அட்சதைகள் போடும்..

பண் பாடும் - இப்போது

புத்தம்புது ஓலை வரும்

இந்த பூவுக்கொரு மாலை வரும்.."

கதாநாயகி மலர் தோட்டத்தில் நுழைந்து பாடினாள்.. அந்தப் பாட்டின் வரிகளில் ஈர்க்கப்பட்ட நந்தினி மெதுவாக சிரித்துக் கொண்டாள்...

மாலை வருவது என்பது ஒரு பெண்ணுக்கு அத்தனை உற்சாகம் தரும் நிகழ்வா என்ற கேள்வி அவள் நெஞ்சில் எழுந்தது...

"எந்தக் கோட்டையைப் பிடிக்க இவ்வளவு ஆழமா சிந்தனை செய்யறேடி..?" என்ற கேள்வியுடன் அவளுக்கு எதிரே வந்து அமர்ந்தாள் கௌசல்யா..

'கோட்டை..!' திடுக்கிட்டு நிமிர்ந்தாள் நந்தினி..

அவளது மனக் கண்ணில் பிரம்மாண்டமான கோட்டைச் சுவர் எழுந்து நின்றது.. அதன் மறுபக்கம் நடந்தவை நினைவில் வந்தபோது.. அவளது நெஞ்சம் குலுங்கியது..

தலையை ஆட்டி.. நினைவுகளை துரத்த முயன்றாள் நந்தினி...

"ஏய்ய்.. இவளைப் பாருங்கடி.. தனக்குத்தானே தலையைக் குலுக்கிக்கிறா..."

கௌசல்யா குரல் கொடுத்ததில்.. ஆஷாவும்.. மேகாவும் அருகில் வந்து நந்தினியை விசித்திரமாகப் பார்த்தார்கள்.. நந்தினிக்கு வெட்கமாகி விட்டது...

"என்னடி.. இப்படி எக்ஸிபிசன்ல காட்டற ஷோவைப் பார்க்கிறதைப் போல பார்த்து வைக்கறீங்க..?" என்று கேட்டபடி கைகழுவ எழுந்தாள்..

"அதுக்குள்ள எழுந்திருச்சிட்டிங்களாம்மா..." கையில் தோசையுடன் வந்த ஈஸ்வரி ஆதங்கப் பட்டாள்..

"சாப்பிட்டு முடிச்சாச்சு.." லேசாக சிரித்தாள் நந்தினி..

"ரெண்டு தோசையை முழுங்கறது ஒரு சாப்பாடா..?"

ஈஸ்வரி இதைக் கேட்டபடி வேறு எங்காவது பார்த்திருக்கலாம்.. மேகாவைப் பார்த்துத் தொலைத்து விட்டாள்.. கௌசல்யாவும்.. ஆஷாவும் குலங்கிச் சிரிக்க..

"ஏன்.. ஈஸ்வரி..?" என்று கையை விரித்தாள் மேகா..

"என்னம்மா..?" ஈஸ்வரிக்கு புரியவில்லை..

"இங்கே நான் மட்டுமா இருக்கேன்..? கல்லுக் குண்டைப் போல இன்னும் மூணு ஜீவன் உன் முன்னாலே உட்கார்ந்திருக்குதுகளே... அவங்களைப் பார்க்காம என்னை எதுக்காக பார்த்து வைச்சே ஈஸ்வரி..?"

"அட போங்கம்மா.. யதார்த்தமா பார்த்துக்கெல்லாம் விளக்கம் கேட்டுக்கிட்டு.. நானென்ன ஆம்பளையா..? பொம்பளதானே.. பொம்பளையை பொம்பளை பார்க்கிறது கூட குத்தம்ன்னு இப்போத்தான் நான் காது கொடுத்து கேக்கறேன்"

"ஏன் கேட்க மாட்ட.. நான் இருபது தோசையை உள்ளே தள்ளறது என்னவோ வாஸ்தவம்தான்.. என்னைப் பார்த்தா.. இருபது தோசைகளை முழுங்கறவ மாதிரியா இருக்கு..?"

இப்படிக் கேட்ட மேகா கொடி போல ஒல்லியாக இருந்து வைத்தாள்..

"யாராச்சும் சொல்ல முடியுமா..? நீங்க அரைத் தோசையை உள்ளே தள்ளிட்டு... அரைப்பட்டினி கிடக்கறீங்கன்னுதான் சொல்லுவாங்க..." பெருமூச்சு விட்டாள் ஈஸ்வரி..

அதற்கும் ஆஷாவும்.. கௌல்யாவும் சிரித்து வைக்க.. ஈஸ்வரியை என்ன செய்தால் தேவலாம் என்ற யோசனையோடு அவளைப் பார்த்தாள் மேகா.. ஆனாலும்..

"என்னம்மா அப்படிப் பார்க்கறிங்க..?" என்று ஈஸ்வரி கேட்டபோது..

"நானா தோசைகளை உள்ளே தள்ளறேன் ஈஸ்வரி.. உன் கை மணத்தில.. தானா அத்தனை தோசைகளும் உள்ளே பேடுது.." என்றுதான் அவளால் சொல்ல முடிந்தது..

அவளும்தான் என்ன செய்வாள்..? அவள் எதையாவது சொல்லப் போய்.. அதனால் ஈஸ்வரி வேலைக்கு 'டாட்டா' சொல்லி விட்டுப் போய் விட்டால் மற்ற மூவரும் அவளை உண்டு.. இல்லையென்று ஆக்கி விடுவார்களே.. தனித்து முடிவெடுக்க.. அவளென்ன அவள் வீட்டிலா இருக்கிறாள்..? சிங்காரச் சென்னையிலே.. வேலைபார்க்கும் மகளிர் விடுதிகளில் இருக்கப் பிடிக்காமல்.. நான்கு தோழிகள் ஒன்று சேர்ந்து வாடகைக்கு இருக்கும் வீடு அது.. அங்கே அவளின் தனிப்பட்ட கோபதாபங்களை காட்டி விட முடியாதே...

வாய்க்கு ருசியாக சமைத்துப் போட்டு... அவர்களின் அழுக்குத் துணிகளை வாசிங் மெஷினில் போட்டு.. வீட்டைச் சுத்தம் பண்ணி குப்பை கூளங்களை அள்ளிக் குப்பைத் தொட்டியில் போட்டு.. என்று ஈஸ்வரி போடு.. போடு.. என்று போட்டுக் கொண்டிருக்கும் அந்த வீட்டில் அவளுக்கு எதிராக வாய்திறந்து பேசிவிட மேகாவினால் முடியுமா..?

அவளைப் போன்ற வேலையாள் கிடைப்பதென்பது மிகமிக அரிதான ஒன்று என்பதினால் அவளும் அமைதிகாக்க வேண்டியதாகி விட்டது..

ஈஸ்வரி அஃது என்ற பார்வையுடன் சமையல்றைக்குப் போய்விட ஆஷாவும்.. கௌசல்யாவும் சிரிப்பை நிறுத்தாமல் தொடர்ந்தார்கள்...

"எதுக்குடி இப்படிச் சிரிக்கறிங்க..? பல்லு சுளுக்கிக்கப் போகுது.." எரிந்து விழுந்தாள் மேகா..

"இல்லே.. இங்கே ஜான்ஸி ராணியப் போல ஒருத்தங்க மனசுக்குள்ள பொங்கினாங்களே.. அந்த வீரப் பெண்மணிய காணோமே.. அவங்க எங்கேன்று தேடிக்கிட்டு இருக்கோம்.." ஆஷா சிரிப்பை அடக்க முடியாமல் தவித்தாள்..

"ஆக்சுவலா மேகா.. நீ அணுகுண்டாய் வெடிப்பேன்னுதான் நாங்க நினைச்சோம்.. இப்படிப் புஸ்வாணமா போய் விடும்ன்னு நாங்க நினைச்சுக்கூடப் பார்க்கலை.." கௌசல்யா சிரிப்பை நிறுத்தி விட்டுச் சொன்னாள்..

"ஏண்டி பேச மாட்டிங்க.. இதுவே எங்க வீடா இருக்கனும் நடக்கறதே வேற..."

பொறுமியபடி குளிக்கப் போன மேகா.. எதிரே அலுவலகம் செல்லத் தயாராகி வந்த நந்தினியைக் கண்டதும் தலையில் கை வைத்துக் கொண்டாள்..

"என்ன மேகா.. தலையை வலிக்குதா..?" அக்கறையுடன் விசாரித்தாள் நந்தினி...

"ஏண்டி இப்படி ஓவர் பெர்பகஷனிஸ்டா இருந்து வைக்கிற..? நீயே பி.எம் போஸ்டில இருக்கிற.. உன்னை யாரு கேள்வி கேட்கப் போகிறாங்கன்னு இப்படி உன் ஸ்டாப் வர்றதுக்கு முன்னாலேயே ஓடற..?"

கேள்வி கேட்ட மேகாவிற்கு புன்னகையை மட்டும் பதிலாகத் தந்துவிட்டு வெளியே வந்த நந்தினி.. அவள் காரில் ஏறி அமர்ந்து கிளப்பினாள்.. அவளது கார் சப்தத்தில்.. தோட்டத்து பூமரத்தில் அமர்ந்திருந்த இரண்டு மைனாக்கள் ஜோடியாகப் பறந்தன..

'ஜோடி மைனா..!' நந்தினியின் முகத்தில் மென்மை படர்ந்தது..

ஜோடி மைனாக்களைப் பார்த்தால் அன்று முழுவதும் நன்மைகளே நடக்குமென்று அவளுடைய பாட்டி சொல்வது அவளுக்கு நினைவில் வந்தது..

இன்றைக்கென்ன நன்மை வரப் போகிறது என்ற சிந்தனையுடன் காரைக் கிளப்பியவளின் வாய் அவளையுமறியாமல் முணுமுணுத்து வைத்தது....

"புத்தம் புது ஓலை வரும்.."

என்ன இது..? என்ற நினைவுடன் தனக்குள் லேசாக சிரித்துக் கொண்டாள் நந்தினி.. இதுபோல பலமுறை

அவளுக்கு நிகழ்ந்ததுண்டு.. காலையில் கேட்க நேரிடும் பாடலை அன்று முழுவதும் அவள் வாய் முணுமுணுத்துக் கொண்டே இருக்கும்.. அதைப் போலவே அன்றும் முணுமுணுத்தவளுக்கு.. வெகு நாள்களுக்குப் பின்னால்.. மனதுக்குள் ஒர்விதமான உற்சாகம் பரவுவதை உணர்ந்து கொள்ள முடிந்தது..

'நாள்களா..? மாதங்கள்..!' என்று நினைத்துக் கொண்டவளின் மனம் வலித்தது..

"ஒருநாள்... அந்த ஒருநாள்..

உன்னை... முதலில் பார்த்த

அந்தத் திருநாள்..!

அதை மறக்க முடியுமா..?"

காரிலிருந்த சிடியின் பாடல் வரிகளில் அவள் அதிர்ந்து காரை நிறுத்தி விட்டாள்..

முகத்தில் படிந்திருந்த வியர்வைத் துளிகளை ஒற்றி எடுத்துக் கொண்டவளுக்கு.. அவனை முதன் முதலாகப் பார்த்த அந்த ஒருநாளின் நினைவு வந்தது...

'அது திருநாளா..?' மனம் கசந்தது..

பின்பு ஒர் நாளில்.. திருநாளும் வந்தது.. அந்த ஒர் நாளின் நினைவில் அவர்கள் இருவரும் அதிர்ந்து நோக்கிய நொடியில் அது வெறும் நாளாகிப் போய் விட்டது..

பெருமூச்சு விட்டுத் தன்னைச் சமனப்படுத்திக் கொண்ட நந்தினி காரைக் கிளம்பினாள்.. அன்று ஏனோ.. அதிகமாக அவள் மனம் அதிர்வதை அவளால் உணர முடிந்தது..

'ஏன்..?' அதுதான் அவளுக்கு விளங்கவில்லை..

ஏதோ ஒன்று நிகழப் போவதிற்கான எதிர்பார்ப்பு அவள் வயிற்றில் பட்டாம் பூச்சிகளாக பறந்து கொண்டிருந்தபோது..

'ஹ...' என்று அலட்சியமாக அவற்றைப் புறம் தள்ளினாள் நந்தினி..

என்ன நடக்கப் போகிறது..? அவள் வாழ்வை புரட்டிப் போட்டு விட்ட அந்த திருநாளுக்குப் பின்னால்.. எது நடந்து அவள் வாழ்வில் மாற்றத்தைக் கொண்டு வரப் போகிறது..?

அர்த்தமில்லாத அபிலாசைகளால் யாருக்கு என்ன லாபம் வரப் போகிறது என்ற நினைவுடன் அவளது அலுவலக வளாகத்திற்குள் காரைச் செழுத்தினாள் நந்தினி.. காரை அதற்கு உரிய இடத்தில் நிறுத்தி வைத்து விட்டு.. லிப்டை நாடிப் போனபோது.. வாசலில் இருந்த செக்யூரிட்டி அவளுக்கு வணக்கம் வைத்தான்..

யாருமே வந்திராத அந்தக் காலைப் பொழுதில் அவனின் வணக்கத்தை ஏற்றுக் கொண்டபடி நிமிர்ந்த நன்னடையும்.. நேர் கொண்ட பார்வையுமாக உள்ளே சென்றாள் நந்தினி.. அவளுடைய கேபினில் போய் அமர்ந்தவள்.. மேஜையின் மீதிருந்த கம்யூட்டரை உயிர்ப்பித்தாள்.. அன்றைய அலுவல்களை வரிசைப்-படுத்திக் கொண்டு வேலைகளை ஆரம்பித்தாள்..

"குட்மார்னிங் மேடம்.." அரக்கப் பறக்க ஓடி வந்தவளாய் அவள் முன்னால் நின்றாள் வயலெட்..

"குட்மார்னிங்.. எதுக்கு இப்படி மூச்சிறைக்க ஓடி வர்றீங்க.. ரிலாக்ஸ்.." மென்மையாக முறுவலித்தாள் நந்தினி..

அவளின் இதமான பேச்சில் வயலெட்டின் பதட்டம் குறைந்தது.. இப்படிப்பட்ட மேலதிகாரிகள் இருந்தால்.. அவர்களுக்குக் கீழே வேலை பார்ப்பவர்களுக்கு ஏன் பதட்டம் வரப் போகிறது என்ற நினைவுடன் பதிலுக்கு முறுவலித்தாள்..

"நேரமாகிருச்சேன்னு பயந்துட்டேன் மேடம்.."

"நோ.. நோ.. நீங்க கரெக்ட் டயத்துக்கு வந்துட்டிங்களே.."

"நீங்க எனக்கு முன்னாலே வந்துட்டிங்களே.."

எனக்கென்ன குடும்பப் பொறுப்பா இருக்கிறது..? என்ற நினைவுடன் அவளுக்கான பதிலைச் சொல்லாமல் இதமான புன் சிரிப்பைத் தொடர்ந்தாள் நந்தினி...

காலையில் விழிக்கும் போதே அவள் கையில் காபித் தம்ளரைத் திணிக்க ஈஸ்வரி இருந்தாள்.. குளித்து.. உடைமாற்றி.. அவள் செய்து போடும் டிபனை சாப்பிட்டு விட்டு.. அவள் கொடுக்கும் டிபன் கேரியரைக் கொண்ட பையை வாங்கி காரில் வைத்துக் கொண்டு அலுவலகத்திற்கு வந்து சேரும் அவளும்.. அரக்கப் பரக்க எழுந்து.. காபியைப் போட்டு.. சமைத்து.. குழந்தைகளைத் தயார் பண்ணி சாப்பாடு கொடுத்து.. மதிய உணவையும் கட்டிக் கொடுத்து.. கணவனையும்.. குழந்தைகளையும் அனுப்பி வைத்து விட்டு.. சமைத்து வைத்த சாப்பாட்டை சாப்பிடக்கூட நேரமில்லாமல் அரக்கப் பறக்க.. பஸ்பிடித்து.. அலுவலகத்திற்கு ஓடிவரும் வயலெட்டும் ஒன்றாகி விட முடியுமா..?

வயலெட் நிம்மதியாய் வேலையைப் பார்க்கப் போக.. நந்தினி அவளின் வேலையைத் தொடர்ந்தாள்.. பதினொரு மணியளவில் கேபின் கதவைத் திறந்து கொண்டு வயலெட் உள்ளே வந்தாள்...

"யெஸ்.." நந்தினி நிமிர்ந்தாள்..

"உங்களைப் பார்க்க ஒரு யங்மேன் வந்திருக்கார் மேடம்.."

"என்னைப் பார்க்கவா..? அபிஷியலா..? பெர்ஸனலா..?"

"பெர்ஸனல்தானாம் மேடம்.. உங்க ரிலேடிவ்ன்னு சொல்றார்.."

"வரச் சொல்லுங்க.."

வயலெட் போனதும்.. உள்ளே வந்த இளைஞனை அதற்கு முன்னால் பார்த்த ஞாபகமே நந்தினிக்கு இல்லை.. இவன் எனக்கு உறவினனா..? என்ற கேள்வி அவள் விழிகளில் தெரிந்ததை அவன் உணர்ந்தானோ என்னவோ

"என் பெயர் தியாகராஜன்.. தியாகுன்னு கூப்பிடுவாங்க.. நான் ஆதவனின் அண்ணன் மகன்.." என்று கரம் குவித்தான்..

நந்தினியின் கண்கள் ஒளிர்ந்தன..

# 4

"ஓ..!"

புரிந்து கொண்ட பாவனையில் அந்த ஒற்றை எழுத்தை உச்சரித்தாள் நந்தினி.. அந்த ஒற்றை எழுத்தில் ஒரு கோடி உணர்வுகள் பிரதிபலித்தன..

அதை தியாகுவும் கவனிக்கத்தான் செய்தான்.. அவன் மனம் நெகிழ்ந்தது.. எதிரே அமர்ந்திருந்தவளின் அழகிய முகத்தை சொந்தத்துடன் பார்த்தபடி அவன் தொடர்ந்து பேசினான்..

"என்னைத் தியாகுன்னு வீட்டில் கூப்பிடுவாங்க.. எனக்கு ஒரு தங்கை இருக்கிறா.. வித்யான்னு பெயர்.."

"படிக்கிறாளா..?" நந்தினியின் கேள்வியில் அவனுடைய குடும்பத்தைப் பற்றி அறியத் துடிக்கும் ஆர்வம் வெளிப்படையாகத் தெரிந்தது..

"ஆமாம் சித்தி.. மியுஸிக்கில் டிகிரி படிக்கிறா..." இயல்பாகச் சொன்னான் தியாகு..

"என்ன சொன்னீங்க..?" பரபரத்தாள் நந்தினி...

எதற்காக அவள் அந்த அளவுக்கு பரபரக்கிறாள் என்று தியாகுக்கு புரியவில்லை.. புரியாத பார்வையுடன்..

"அவ மியுஸிக் படிக்கறா சித்தி.." என்று சொன்னான்..

"சித்தின்னா சொன்னீங்க..?" நந்தினிக்கு கண்கள் கலங்கி விட்டன..

தியாகராஜனுக்கு என்னவோ போல ஆகிவிட்டது.. வீட்டிலுள்ளவர்களின் வாய் மொழி வழியாக அவனறிந்த நந்தினியின் பிம்பத்திற்கும்.. இப்போது நேரடியாக அவன் உணரும் நந்தினியின் தன்மைக்கும் இடையில் ஏகப்பட்ட வித்தியாசம் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது..

"நீங்க என்னோட சித்திதானே சித்தி..? உங்களை வேற எப்படிக் கூப்பிட முடியும்..?"

நிதானமாக அவன் கேட்டபோது நந்தினியால் பதில் சொல்ல முடியவில்லை.. சுழல் நாற்காலியில் சரிந்து அமர்ந்தவள்.. கண்மூடி ஒரு நிமிடம் அசையாமல் அமர்ந்திருந்தாள்.. அவளின் மோனநிலையைக் குலைக்க தியாகராஜன் முயலவில்லை...

சற்றுநேரம் பொறுத்து கண் விழித்த நந்தினி.. தியாகுவைப் பார்த்து புன்னகைத்தாள்...

"என்ன சாப்பிடறிங்க..? கூல்டிரிங்..? காபி.. ஆர்.. டீ..?"

"கூலா எதையாச்சும் குடிக்கிறேனே.. வெயிலில் நாக்கு வறளுது.. அப்புறம் சித்தி.. என்னை நீ.. வா.. போன்னே கூப்பிடலாமே.. மரியாதை கொடுத்தா.. எனக்கே என்னை யாரோ போல தோணி வைக்குமே.."

அவனின் பேச்சில் நந்தினியின் இதயம் பூவாக மலர்ந்தது.. அது நாள் வரை அவள் மனதில் அடி ஆழத்தில் அமிழ்ந்திருந்த குடும்ப உறவுகளைப் பற்றிய ஏக்கம் தலைதூக்குவதை அவள் உணர்ந்தாள்...

"ஓகே தியாகு.." அவள் தலைசரித்து சிரித்தாள்..

சிரிக்கும் போது இவள்தான் எத்தனை அழகாக இருக்கிறாள் என்று அவன் நினைத்துக் கொண்டான்.. இப்படிப்பட்ட ஒருத்திக்காக எதையும் செய்யலாமே என்று அவன் நினைக்கும் போதே.. துரும்பைக் கூடக் கிள்ளிப் போட மறுத்த ஆதவனைப் பற்றிய நினைவு அவனுக்கு வந்தது..

குளிர் பானம் வந்தது.. அதை தியாகு குடிக்க ஆரம்பிக்க.. அவனையே ஆதுரத்துடன் பார்த்தபடி அமர்ந்திருந்தாள் நந்தினி.. அவன் குடித்து முடித்ததும்..

"அப்புறம்.. உன் பாட்டி எப்படியிருக்காங்க..?" என்று கேட்டாள்..

"படுத்த படுக்கையாய் இருக்காங்க.. தினமும் உங்க நினைவுதான்... சித்தப்பாகிட்ட உங்களுக்காக சண்டை போடுவாங்க.." என்று சொன்னான் தியாகு..

நந்தினி உதட்டைக் கடித்தபடி மௌனமானாள்.. தியாகு அறையைச் சுற்றிப் பார்வையை ஓட விட்டான்.. அதன் நவீனமான உயர்தரமான அமைப்பில் அவன் மனம் பிரமித்து...

"இங்கே நீங்க என்னவா இருக்கீங்க சித்தி..?" என்று விசாரித்தான்..

"பெர்ஸனல் மேனேஜர்.." கர்வமில்லாமல் பதில் சொன்னாள் நந்தினி...

"ஓ..."

இப்போது ஒற்றை எழுத்தில் பிரமிப்பது தியாகுவின் முறையாகி விட்டது..

நந்தினி அவனிடம் அவனது ஊரைப் பற்றி விசாரித்தாள்.. குடும்பத்தைப் பற்றி விசாரித்தாள்.. அவனைப் பற்றி விசாரித்தாள்.. வித்யாவைப் பற்றி விசாரித்தாள்.. ஒரே ஒரு ஆளைப் பற்றி அவள் மறந்தும் விசாரிக்கவில்லை..

அதைக் கவனித்த தியாகராஜன்..

"சித்தப்பாவைப் பற்றி ஒன்னுமே நீங்க கேட்கலையே சித்தி.." என்று கேட்டே விட்டான்..

நந்தினியின் முகம் மாறிவிட்டது.. கைவிரல்களைக் கோர்த்து பிடித்தபடி சிந்தனையாக அமர்ந்திருந்தவள்.. தியாகுவை நிமிர்ந்து பார்த்து லேசாக சிரித்தாள்..

அந்தச் சிரிப்பில் இழையோடிய துயரத்தின் இழையில் தியாகுவின் மனம் வலித்தது..

"நான் எதுக்காக வந்திருக்கேன்னு நீங்க கேட்கவே இல்லியே சித்தி.." அவன் விவரத்திற்கு வந்தான்...

"நீ பார்க்க வந்ததே எனக்குப் பெரிய சந்தோசம்.. இதில எதுக்கு வந்தேன்னு நான் காரணம் கேட்பேனா தியாகு..?

உனக்கு ஏதாச்சும் வேலையிருந்திருக்கலாம்... இல்லேன்னா காலேஜ் டூர்ன்னு வந்திருக்கலாம்.. வந்த இடத்தில் என் நினைவு வந்திருக்கலாம்.. பார்த்துட்டுப் போகலாம்ன்னு தோனியிருக்கலாம்.. இப்படி எத்தனையோ இருக்கு தியாகு.. எது எப்படியா இருந்தாலும் நீ என்னைப் பார்க்கனும்ன்னு நினைச்சு வந்ததே எனக்குப் போதும் தியாகு.. சென்னைக்கு வந்தா இந்த சித்தியை மறக்காம வந்து பார்த்துட்டுப் போ.. செய்வியா..?" நந்தினியின் குரல் தழதழத்தது..

"சித்தி.." தியாகு உருகி விட்டான்..

"நான் உங்களைக் கையோட நம்ம ஊருக்கு கூப்பிட்டுக்கிட்டுப் போகத்தான் வந்தேன் சித்தி..."

அவன் சொந்தத்துடன் கூடிய 'நம்ம ஊர்' நந்தினியின் காதுகளில் தேனாகப் பாய்ந்தது.. தியாகுவின் மீது அவளுக்குள் பாசம் பொங்கியது..

அவன் சொல்வதை வேடிக்கையாக எடுத்துக் கொண்டு தலையைச் சரித்து அவனைப் பார்த்தாள் நந்தினி..

'இந்தச் சித்திதான் எத்தனை வசீகரமானவள்..' தியாகுவின் மனம் நினைத்தது..

"என்ன சித்தி.. அசையாம உட்கார்ந்திருக்கீங்க.. கிளம்புங்க.. கிளம்புங்க..." தியாகு அவளை அவசரப் படுத்தினான்..

"ஹேய் தியாகு.. வாட் இஸ் திஸ்..?" நந்தினி ஆச்சரியத்துடன் கேட்டாள்..

"நிஜமாவே நான் உங்களைக் கூப்பிட்டுக்கிட்டுப் போகத்தான் வந்தேன் சித்தி.. கார் கொண்டு வந்திருக்கேன்.. கிளம்புங்க போகலாம்.."

அவன் சொல்வது உண்மை என்பதை அறிந்தவுடன் நந்தினியின் விழிகளில் ஆச்சரியம் மின்னியது..

"என்ன.. திடிர்ன்னு.." ஆச்சரியத்துடன் அவள் கேட்டாள்..

"ஊரில் திருவிழா சாட்டியிருக்காங்க.. சொந்த பந்தம் அத்தனையும் வந்து வீட்டில் இறங்கிருவாங்க.. அதில அத்தைகளின் குடும்பமும் சேர்ந்துக்கும்.." தியாகு சொல்லிக் கொண்டே போக..

"அத்தைகளுக்கு மகள் இருக்கா..?" என்று தலையைச் சரித்துச் சிரித்தாள் நந்தினி..

"இரண்டு அத்தைகளுக்குமே மகள் இருக்காங்க.." தியாகு உல்லாசமாகச் சிரித்தான்..

"வாஹ்ரே வா... அப்ப உன் பாடு கொண்டாட்டம்தான்னு சொல்லு.." நந்தினியின் சிரிப்பு அதிகமானது..

"கொண்டாட்டமா..? சரியான திண்டாட்டம்ன்னு சொல்லுங்க சித்தி.. இவகிட்டப் பேசினா அவ போட்டிக்கு வருவா.. அவகிட்டப் பேசினா.. இவ சண்டைக்கு வருவா.. ஊடே மாட்டிக்கிட்டு நான் படுகிற அவதி இருக்கே.. அப்பப்பா.." தியாகராஜன் விவரிக்க..

"உன் முகத்தைப் பார்த்தா அதில நீ அவதிப்படறதைப் போலத் தெரியலையே.. கொண்டாட்டம் போடறதைப் போல இல்ல தெரியுது.." நந்தினி ரசித்துக் சிரித்தாள்..

அவளின் சிரிப்பை ஆர்வத்துடன் பார்த்தபடி உள்ளே வந்த வயலெட் சில கோப்புகளில் அவளின் கையெழுத்தை வாங்கிச் சென்றாள்..

வயலெட்டின் பார்வையிலிருந்து.. அப்படி மனம்விட்டு நந்தினி சிரிப்பதை அவள் பார்த்ததே இல்லையென்பது தியாகுக்கு புரிந்தது..

'ம்ஹீம்.. எப்படிப் பட்ட உயரத்தில் இருக்கிறவங்க'

அவன் மனம் நந்தினியின் நிலைமைக்காக பரிதாபம் கொண்டது..

"இப்படிச் சிரிச்சுக்கிட்டே இருந்தா எப்படி சித்தி..? காலாகாலத்தில் நாம கிளம்ப வேணாமா..?" உரிமையுடன் அவன் அவசரப்படுத்தினான்..

நந்தினி புதிராக புன்னகை செய்தபடி.. வயலெட்டை அழைத்து ஜெனரல் மேனேஜரிடம் அவளின் லீவ் லெட்டரைக் கொடுக்கச் சொன்னாள்.. எழுந்து தியாகுவுடன் பேசியபடி அலுவலகத்தின் வாசலுக்கு வந்தாள்.. அவளின் காரில் ஏறிக் கொள்ள போனபோது தியாகு தடுத்தான்..

"என் கார் இருக்கு சித்தி.."

"நான் என்னோட காரில் வந்தேன் தியாகு.. இதை வீட்டில் கொண்டு போய் சேர்க்க வேணாமா..? நீ என் காரை ஃபாலோ பண்ணி ஓட்டிக்கிட்டு வா.."

"வீடா..?!"

"வீடுதான்.. நானும்.. என்னோட மூணு பிரண்ட்ஸீம் சேர்ந்து வீடெடுத்து தங்கியிருக்கிறோம்.. அந்த வீட்டைத்தான் சொன்னேன்.. ஃபாலோ மி.."

அவளின் காரைப் பின் தொடர்ந்து தன் காரைச் செழுத்தினான் தியாகு.. வீட்டுக் கதவைத் திறந்த ஈஸ்வரி..

"என்னம்மா.. சீக்கிரமாவே வந்துட்டிங்க..?" என்று கேட்டாள்..

"ஒரு கெஸ்டு வந்திருக்கார் ஈஸ்வரி.. இவருக்கும் சேர்த்து மதிய லன்ச் பிரிபேர் பண்ணு.. " என்றாள் நந்தினி..

மதிய உணவின் போது  தியாகுவின் வாயைக் கிளறி மீதி விவரங்களை கிரகித்தாள்..

"எல்லா சொந்தபந்தமும் உங்களைத்தான் கேட்பாங்கன்னு பாட்டி சொல்றாங்க சித்தி.. அத்தைகளின் வீட்டில இதையே சொல்லிக் காண்பிப்பாங்கன்னு நினைக்கிறாங்க.. இதுவரைக்கும் வெறும் வாயை மென்ற ஊர் ஜனங்க.. அவல் கிடைச்சிருச்சுன்னு நம்ம குடும்ப சங்கதியை அள்ளித் தெளிச்சிருவாங்கன்னு கவலைப் படறாங்க..."

"ம்ம்ம்..."

"இந்த ஒரு மாசமா சித்தப்பாகூட பாட்டி சண்டை போட்டுக்கிட்டே இருக்காங்க சித்தி.. சித்தப்பாதான் பிடி கொடுத்து பேச மாட்டேன்னு சொல்லிட்டார்.. பாட்டி

கரையாய் கரைச்சதில் அப்பா நேத்து சத்தம் போட்டுட்டார்.. அதுக்கு அப்புறம்தான் சித்தப்பா கொஞ்சமா இறங்கி வந்தார்.."

"ம்ம்ம்..."

"நான் போக மாட்டேன்.. இந்தக் குடும்பத்தில் இருந்து வேற யாராவது போகனும்னு நினைச்சா அதைத் தடுக்கவும் மாட்டேன்னு சொல்லிட்டார்.. அப்பா என்கிட்ட அந்தப் பொறுப்பை ஒப்படைச்சார்.. நானும் கிளம்பி வந்துட்டேன்.. இப்ப நீங்க கிளம்பறிங்களா..?"

"இந்த வெயிலிலா..? நீ படுத்து ரெஸ்ட் எடு.. ஈவினிங்கில இதைப் பத்திப் பேசலாம்.."

நந்தினி ஹால் சோபாவில் அவனுக்காக ஒரு தலையணையை போட்டு விட்டாள்.. படுத்தவுடன் கண்கள் சொக்கயதில் தியாகு தூங்கிப் போய்விட.. யோசனையுடன் அவள் அறைக்குப் போய்விட்டாள்..

மாலையில் வந்த மற்ற மூன்று தோழிகளுக்கும் அவனை ஆதவனின் அண்ணன் மகன் என்று அறிமுகப்படுத்தினாள்.. அவர்கள் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்துவிட்டு மரியாதையின் நிமித்தம் சில வார்த்தைகளைப் பேசி விட்டுப் போய் விட்டார்கள்..

"காபி.. டிபன் சாப்பிட வா தியாகு.."

அவனைக் காபி டிபன் சாப்பிட வைத்து விட்டு.. முன் பக்கத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்று பேச்சுக் கொடுத்தாள்.. அவன் பேசுவதை கவனமாக கேட்டுக் கொண்டவளின் முகத்தில் சிந்தனை படர்ந்திருந்தது..

"இன்னும் நீங்க உங்க திங்ஸை பேக் பண்ணிக்கலை சித்தி.."

"நைட் டிபனுக்கு பூரி.. உருளைக் கிழங்கு மசாலாவாம்.. உனக்குப் பிடிக்குமில்ல..?"

சம்பந்தமில்லாமல் பேசினவளை இமைக்காமல் பார்த்தான் தியாகு...

"சித்தி.. நானென்ன சொல்றேன்.. நீங்க என்ன சொல்றீங்க..? இப்ப நீங்க ஊருக்குக் கிளம்பப் போறிங்களா இல்லையா..?"

உரிமையுடன் கோபித்துக் கொண்டவனின் உரிமையான கோபம் மனதை வருட... அவன் முகத்தையே ஆதுரத்துடன் பார்த்தாள் நந்தினி..

"இல்லை தியாகு நான் உன்கூட வரலை.."

5

அதுவரை அவளும் அவனுடன் ஊருக்குக் கிளம்பி வரப் போகிறாள் என்ற நிச்சயத்துடன் இருந்த தியாகராஜனின் முகத்தில் ஏமாற்றம் சூழ்ந்தது..

"சித்தி..?"

"ஐ ஆம் ஸாரி தியாகு.. இதை ஆபிஸிலேயே சொல்லாம லீவ் போட்டுட்டு ஏன் உன்கூட இங்கே வந்தேன் தெரியுமா..? இந்த ஒரு வருசத்திலே.. என் புகுந்த வீட்டுச் சொந்தம்ன்னு என்னைத் தேடி வந்த ஒரே ஜீவன் நீ மட்டும்தான்.. உன்னை சரியான முறையிலே ரிஸீவ் பண்ணி.. என் கையாலே இரண்டு வேளையாவது சாப்பிட வைச்சு அனுப்பனும்ன்னு தோணிச்சு... அதான்.."

அவளின் பாசத்தில் தியாகு மனம் கசிந்தான்.. அவனைவிட மூன்று வயது மூத்தவளாக அவள் இருந்தாலும்.. உறவு முறையில் சித்தியாக அவள் இருந்ததில் அவளின் பாசம் அவனைத் தாலாட்டியது..

"ஆனா சித்தி.. இந்த அளவுக்கு எங்க குடும்பத்து மேல பாசம் காட்டற நீங்க.. வெறுப்பையும் காட்டறிங்களே.."

"இப்ப வரைக்கும் நீ நம்ம குடும்பம்ன்னு சொன்னதாத்தான் எனக்கு ஞாபகம்.. திடிர்ன்னு எப்படி தியாகு 'நம்ம குடும்பம்' 'எங்க குடும்பம்'ன்னு மாறுச்சு..?"

"சித்தி.."

அவளின் கேள்வியில் வாயடைத்துப் போனான் தியாகு...

"நான் நம்ம குடும்பத்தை வெறுக்கலை தியாகு.. அங்கே நான் வருகிறதா இருந்தா.. எந்த சொந்தத்தைச் சொல்லிக்கிட்டு வரமுடியும்..? நீயே சொல்லு.."

"இதென்ன கேள்வி சித்தி..?" நீங்க என் சித்திங்கிற சொந்தம் இருக்கே..

"அது இருக்கிறதை உன் சித்தப்பா ஒப்புக்க வேணாமா..?"

"சித்தி..."

"அவர் கூப்பிட வரமாட்டேன்னு சொல்லியிருக்கார்.. வேற யார் கூப்பிட்டாலும் அதற்கு ஆட்சேபனை சொல்ல மாட்டேன்னு மட்டும் சொல்லியிருக்கார்.. அதை மட்டும் பிடித்துக்கிட்டு அந்த வீட்டின் வாசல் படியை மிதிக்க என்னால் முடியுமா..?"

தியாகுவினால் பேச முடியவில்லை...

"நானும் மனுஷிதான் தியாகு.. எனக்கும் சுய மரியாதை இருக்கு.. சூடு.. சொரணை இருக்கு.." நந்தினி கடினமாகப் பேசினாள்..

தியாகு பதில் சொல்ல முடியாமல் மௌனித்தான்.. மாலை மயங்கி இருள் படலம் கவிய ஆரம்பித்திருந்தது.. தோட்டத்துச் செடிகளின் பூக்களில் இருந்து புறப்பட்ட நறுமணம் அவன் நாசியை வருடியது.. இதமான மாலை நேரத்தின் கடல் காற்று உடல் வருடிக் கொடுத்தது..

அந்த மங்கிய மாலைப் பொழுதினிலே நந்தினி தேவதையைப் போல அவனருகில் நின்றாள்.. அவளின் கோபம் கூட ஓர் விதமான சோபையை அவள்மேல் தெளித்தது...

"பெரிய வார்த்தைகளைப் பேசனுமா சித்தி..?"

"பேச வேண்டியதை பேச வேண்டிய நேரத்தில் பேசித்தான் ஆகணும் தியாகு.. நம்ம குடும்பத்தையே எடுத்துக்க.. இது நாள்வரை என்னைப் பற்றி நினைத்துக் கூடப் பார்த்திருக்காத உன் பாட்டி இப்ப நினைச்சுப் பார்த்திருக்காங்க.. ஏன்..? ஊரில் திருவிழா வருது.. உறவு ஜனங்க முன்னாலே அவங்களுக்கு தலை குனிவு வந்து விடக்கூடாது.. குடும்ப கௌரவம் சிதைஞ்சிரக் கூடாது.. அதுக்காகத்தான்.. அதுக்காக மட்டும்தான்... எனக்காக இல்லை.."

அவளின் தன்னிரக்கத்தில் தியாகு தவித்துப் போய் விட்டான்..

"என்னைக்கும் தம்பியை சத்தம் போட்டிருக்காத உன் அப்பா.. இன்னைக்கு சத்தம் போட்டிருக்கார்.. என்னைப் பத்தி பேசியிருக்கிறார்.. எதுக்காக..? அவரோட அம்மாவோட சொல்லுக்காக.. அவரின் தங்கைகளின் வாழ்க்கைக்காக... எனக்காக இல்லை..."

அவள் பேசிய ஒவ்வொரு வார்த்தைகளும் கூரிய அம்புகளாக தியாகராஜனின் இதயத்தில் தைத்தன.. அவற்றைப் பிடுங்கி எறிய முடியாமல் அவன் தவியாய் தவித்தான்...

"நீ என்னைத் தேடி வந்திருக்க தியாகு.. உன் அப்பாவோட கட்டளைக்காக.. எனக்காக இல்லை..."

"சித்தி..."

தியாகராஜனின் குரல் தழதழத்தது.. அவனின் குற்ற உணர்வு அதில் வெளிப்பட்டதில் நந்தினி தன்னை அடக்கிக் கொண்டு இதமாக புன்முறுவல் செய்தாள்...

"ஸாரி தியாகு.. உன் மனசை புண் படுத்திட்டேன்.."

அவளின் மனப் புண்ணை மறைத்துக் கொண்டு இதமாக அவள் பேசிய விதத்தில் தியாகுவின் குற்ற உணர்வு அதிகரித்தது..

"இல்லை சித்தி.. நீங்க உங்க மனசில இருக்கிறதைச் சொன்னீங்க.. அது எப்படி என்மனசை புண்படுத்தும்..?"

அவனது இணக்கமான பேச்சில் நந்தினியின் புண்பட்ட மனம் லேசாக ஆறியது..

"நீ அருமையான பிள்ளை தியாகு.. உன் அப்பா அம்மா உன்னை நல்லா வளர்த்திருக்காங்க..."

"சித்தப்பாவும் அருமையானவர்தான் சித்தி.. ஏன்னா.. அவரை வளர்த்ததும் என் அப்பா அம்மாதான்.. அப்பாவை விட சித்தப்பா இருபது வயது இளையவராம்.. அவருக்கு ஆறு வயதாய் இருக்கிறபோது என் அப்பாவுக்கு கல்யாணம் முடிந்து அம்மா வீட்டுக்குள் வந்தாங்களாம்.. நான் பிறக்க நாளானதாம்.. அம்மா சித்தப்பாவைத்தான் மூத்த மகனா நினைச்சாங்களாம்.. நான் பிறந்த பின்னாலேயும்.. நான் அவங்களுக்கு இரண்டாவதுதான்.. சித்தப்பாதான் பர்ஸ்ட்...."

தியாகராஜனின் பேச்சில் முறுவலித்தாள் நந்தினி.. ஆதவனைப் பற்றிய விவரங்களைக் கேட்க அவளுக்குப் பிடித்திருந்தது..

"சித்தப்பா என்னைவிட பத்து வயது மூத்தவர்.. ஆனாலும் கூட.. எனக்கு அவர் மேல் அண்ணன் பாசம்தான் வரும்.. சித்தப்பான்னு தோணாது..."

"ஓ..."

அதற்கு மேல் என்ன சொல்வது என்று தெரியாதவளாய் நந்தினி வானத்தில் எழுந்த வட்ட நிலவைப் பார்த்தாள்...

"இன்னைக்கு பௌர்ணமியோ.." தியாகுவிடம் கேட்கவும் செய்தாள்..

அவனுக்கு அவளைப் பார்க்க பாவமாக இருந்தது.. அழகிலும்.. அறிவிலும் சிறந்தவள்.. உயர் பதவியை வகிப்பவள்.. இப்படி யாருமற்ற அநாதை போல மனதில் தனிமையுடன்.. வட்ட நிலவை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டவனின் மனம் பிசைந்தது..

"உங்க வீட்டுக்கு போவிங்கள்ல சித்தி..?"

"என் வீட்டுக்கா..?"

நந்தினி பெருமூச்சு விட்டாள்...

"இந்த ஒரு வருசமா போகலை தியாகு.."

அவளின் பதிலில் அதிர்ந்தான் தியாகு.. அவனுக்கு எதுவோ புரிவதைப் போல இருந்தது..

"சித்தி..?"

"ஆமாம் தியாகு.. உங்க ஊரில் இருந்து கிளம்பி நேராய் சென்னைக்கு வந்தவள்தான்.. வேற எங்கேயும் போகலை.."

"தீபாவளி..? பொங்கல்..?"

"எல்லாம் இங்கேதான்.. மத்தவங்க அவங்கவங்க ஊரைப் பார்த்து ஓடி விடுவாங்க.. நான் மட்டும் ஈஸ்வரியோட துணையோட இங்கேயே இருப்பேன்.."

"சித்தி.." தியாகு வெளிப்படையாக கண் கலங்கி விட்டான்.

"ஈஸி தியாகு.." நந்தினி இதமாக முறுவலித்தாள்...

"அவங்க உங்களைப் பார்க்க வருவாங்களா..?"

"ம்ம்.. அப்பாவும்.. அம்மாவும் ரெண்டு தடவை வந்தாங்க அதுக்கப்புறம் வரலை.."

"ஏன்..?"

"அண்ணனும்... அண்ணியும் திட்டினாங்களாம்..." வெறுமையாகப் பதில் சொன்னாள் நந்தினி...

இருவரும் சற்று நேரம் பேசாமல் நின்றிருந்தார்கள்.. எங்கோ தொலைதூரத்தில்.. யார் வீட்டிலோ டிவியில் ஒலிபரப்பான பாடல் அவர்கள் காதில் நுழைந்தது..

"நானொரு சிந்து.. காவடிச்சிந்து..

ராகம் புரியவில்ல...

ஒரு தாளம் தெரியவில்ல..

தந்தையிருந்தும்.. தாயுமிருந்தும்..

சொந்தம் எதுவுமில்ல..

அதைச் சொல்லத் தெரியவில்ல.."

எதிரில் நின்றவளின் நிலையைப் படம் பிடித்துக் காட்டிய அந்தப் பாடலில் கரைந்து போனான் தியாகராஜன்.. அவளுக்கு தாயுண்டு.. தந்தையுண்டு.. அண்ணன் உண்டு.. அண்ணி உண்டு.. ஆனாலும் அவர்கள் அவளைத் தேடவில்லை.. ஏன்..? எது அவளை அவர்களிடமிருந்து பிரித்தது..?

"ஊருக்குப் போனா  அப்பா ஏன்னு கேள்வி கேட்பாரே.. நான் என்ன பதிலைச் சொல்ல சித்தி..?"

"கூப்பிட வேண்டியவர்.. கூப்பிட வரட்டும்ன்னு நான் சொன்னதா போய் சொல்லு தியாகு.."

அதற்குமேல் அதைப் பற்றி அவர்கள் பேசிக் கொள்ளவில்லை.. பொதுவாகப் பேசினார்கள்.. ஈஸ்வரி வந்து டிபன் ரெடியாகி விட்டதென்று அழைக்கவும்.. சாப்பிட உள்ளே போனார்கள்.. நந்தினியே தியாகுவிற்கு தட்டைப் போட்டுப் பரிமாறினாள்.. அவன் கிளம்பும் போது வாசல்வரை வந்து வழியனுப்பினாள்..

"அடிக்கடி வந்து போ தியாகு..." அவளின் கண்களில் பிரிவுத் துயர் தெரிந்தது..

"ஆகட்டும் சித்தி.." கையசைத்து விட்டு காரைக் கிளப்பினான் தியாகராஜன்...

புள்ளியாக மறைந்த காரின் பின்பக்க சிகப்பு நிற வெளிச்சப் புள்ளிகளையே பார்த்தபடி அசையாமல் நின்றிருந்தாள் நந்தினி அவளது கன்னங்கள் கண்ணீரால் நனைந்திருந்தன..

"நந்து.." மேகா அவளின் தோள் தொட்டுச் சமாதானப்படுத்தி உள்ளே அழைத்துச் சென்றாள்..

மற்ற தோழிகள் அவளுக்காக சாப்பிடாமல் காத்திருக்க.. அவர்களுக்காக கூட அமர்ந்து சாப்பிட்டதாகப் பெயர் பண்ணி விட்டு எழுந்து விட்டாள் நந்தினி..

இரவின் அமைதியில் மொட்டு வளையை வெறித்தவளுக்குள் நிராசை குடி கொண்டது..

**கா** லை நேர பூஜையில் இருந்த மாதவன் வாசலில் கார் சத்தத்தைக் கேட்டதும் திரும்பிப் பார்த்தார்..

"தியாகு வந்திட்டான் போல.."

மனைவியிடம் சொன்னவர் அவசரமாக பூஜையை முடித்துவிட்டு வாசலுக்கு விரைந்தார்.. தனியாகப் படியேறி வந்த மகனின் முதுகுக்கும் பின்னால் அவரின் கண்கள் துழாவி ஏமாந்தன..

"என்னடா.. உன் சித்தி வரலையா..?"

"வரலை.."

"ஏனாம்..? பார்த்தியா வைஷ்ணவி.. இந்தக் குடும்பத்திலே இருந்து கூப்பிட்டுக்கிட்டு வர ஆள் போயும்.. அந்தப் பொண்ணு வர மாட்டேன்னு சொல்லியிருக்கு.. இதெல்லாம் நல்லதுக்கில்லை வைஷ்ணவி.. சொல்லிட்டேன்.."

"பொறுங்கப்பா.. நீங்களா.. பேசிக்கிட்டே போகாதீங்க.."

"இன்னும் எதைடா பொறுத்துக்கச் சொல்ற..? இவ்வளவுக்கும் பின்னாலேயும் நாம் தேடிப் போனமே.. நம்மளைச் சொல்லனும்.."

மாதவன் ஆத்திரத்துடன் பேச.. அதைவிட அதிகமாக ஆத்திரப்பட்டான் தியாகு..

"என்னத்தைச் சொல்லனும்..? சொல்லுங்க என்னத்தைச் சொல்லனும்..?"

"நீயேண்டா எங்க மேல காயறே..? இந்தக் கோபத்தை அங்கே காட்டவேண்டியதுதானே.." மாதவன் கோபமாக கேட்டார்..

"காட்டியிருப்பேன்ப்பா.. அவங்க கோபத்தைக் காட்டியிருந்தா பதிலுக்கு நானும் கோபத்தைத்தான் காட்டியிருப்பேன்.. அவங்க பாசத்தைக் காட்டினாங்களே... பதிலுக்கு பாசத்தைக் காட்டாம இருக்க எனக்கு உங்களைப் போல கல் மனசில்லைப்பா..."

வார்த்தைக்கு வார்த்தை பதில் பேசிக் கொண்டிருந்த மகனின் கோபத்தில் மாதவனின் புருவங்களில் முடிச்சு விழுந்தது.. அவர் வைஷ்ணவியைப் பார்த்தார்.. அவள் எதையும் பேசாமல் மகனிடம் காபியை நீட்டினாள்..

"அம்மா.."

"முதலில் காபியைக்குடி.. அப்புறமாய் குளிக்கப் போ.. வந்து வயித்தில் எதையாவதுப் போட்டுட்டு உன் வழக்கை ஆரம்பி.."

மாதவன் எதையோ பேச முயல.. அவரைப் பார்த்து

"த்ச்சு.." என்று ஆட்சேபித்தாள் வைஷ்ணவி..

"அவனுக்கு சொன்னதுதான் உங்களுக்கும்.. போங்க.. இதைப் பத்தி மெதுவாப் பேசிக்கலாம்.."

மனiவியின் கண்டிப்பில் வேகம் தணிந்தாலும்.. கோபம் தணியாதவராக உடை மாற்ற அவரின் அறையைத் தேடிப் போனார் மாதவன்...

தியாகு குளித்து.. முடித்து.. சாப்பிட வந்த போது.. டைனிங் ஹாலில் குடும்பம் கூடியிருந்தது.. என்றைக்கும் இல்லாத வகையில் செண்பகவள்ளியும் சக்கர நாற்காலியில் அமர்ந்து அங்கே வந்திருந்தாள்..

"பாட்டி நீங்க எதுக்காக இங்கே வரனும்..?"

தியாகராஜன் பணிவுடன் கேட்டான்.. அவனின் கேள்வி அங்கிருந்த அனைவரின் முகத்திலும் தெரிந்தது..

# 6

சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தாலும்.. தொய்வையும் மீறிய கம்பீரத்தோடு இருந்தாள் செண்பக வள்ளி.. அந்தக் குடும்பத்திற்கு பெரியவள் என்பதற்கான கண்டிப்பும்.. ஆதுரமும் சேர்ந்த கலவை அவள் முகத்தில் தெரிந்தது..

"ஏன் தியாகு.. நான் இங்கே வரக் கூடாதா..?"

"அப்படிச் சொல்லலை பாட்டி.. நானே உங்களைத் தேடிவந்து விவரம் சொல்லியிருப்பேனே.. நீங்க எதுக்காக சிரமப்படனும்..? அதைத்தான் நான் சொன்னேன்.."

"இது சிரமமில்லைடா தம்பி... நீ சொல்ல வந்ததைச் சொல்லு.. அதுக்கு மத்தவங்க என்ன பதிலைச் சொல்றாங்கன்னு எனக்கு இப்பவே தெரிஞ்சாகனும்.."

செண்பகவள்ளியின் பேச்சுக்கு 'சூள்' கொட்டி தன் அதிருப்தியை வெளிப்படுத்தினான் ஆதவன்...

"நான் வேண்டாம்ன்னு தலைப் பாடாய் அடிச்சுக்கிட்டேன்.. நீங்க யாரும் கேட்கலை.. இப்ப அவளுக்கு உச்சாணிக் கொம்பில உட்கார வைச்சதைப் போல ஆகிருச்சு.. இது நமக்குத் தேவையா..?"

மாதவனின் மௌனம் தம்பியை ஆதரிப்பதைப் போல இருக்க.. தியாகு ஆத்திரப்பட்டான்..

"அவங்க ஒன்னும் புதுசா உச்சாணிக் கொம்பில இல்லை.. ஏற்கனெவே உச்சத்தில் இருக்கிறவங்கதான்.. ஒரு கம்பெனிக்கே அவங்க பெர்ஸனல் மேனேஜர்.."

"ஓ.. பதவி மோகத்திலதான் நம்ம கிராமத்து வீட்டுக்கு அந்தப் பொண்ணு வரமாட்டேன்னு சொல்லிருச்சா..?" மாதவனின் யோசனை வேறு திக்கில் ஓடியது..

"அப்பா.. அவங்க வர மாட்டேன்னு சொல்லலை.."

தியாகு எரிந்து விழுந்தான்.. செண்பக வள்ளியின் முகத்தில் வெளிச்சம் படர்ந்தது.. மாதவனின் முகத்தில்

குழப்பம் படர்ந்தது..

"என்னடா சொல்ற..? வரமாட்டேன்னு சொல்லாத பொண்ணு உன்கூட வந்திருக்கலாமே.."

"அப்பா.. அவங்க என்கூட வரமாட்டேன்னு சொல்லிட்டாங்க.."

"இதுக்குத்தானேடா நான் சத்தம் போட்டேன்..? நீ உடனே வரிஞ்சு கட்டிக்கிட்டு வக்காலத்து வாங்கின..?"

"அவங்க என் கூடத்தான் வரமாட்டேன்னு சொல்லிட்டாங்க.."

தியாகு பொடி வைத்துப் போச்சை நிறுத்த.. மற்றவர்கள் அவன் என்ன சொல்லப் போகிறான் என்ற எண்ணத்துடன் அவன் முகம் பார்த்தார்கள்..

"ஆனா கூப்பிட வேண்டியவர் வந்து கூப்பிட்டா வருகிறதைப் பத்தி அவங்க யோசிக்கிறதாச் சொன்னாங்க.."

அங்கே கடுகு விழுந்தால் கூடக் கேட்கும் அளவிற்கு நிசப்தம் நிலவியது.. ஆதவன்தான் முதலில் அதை உடைத்து சப்தம் போட்டான்..

"அவளைக் கனவு காண வேணாம்ன்னு சொல்லிட்டு வர வேண்டியதுதானேடா.."

"ஆதி..." மாதவன் தம்பியை அதட்டினார்..

"என்னை எதுக்காகண்ணா அதட்டறிங்க..? நீங்களும்.. அம்மாவும் பிடிவாதம் பிடிச்சீங்க.. நான் இறங்கி வந்தேனா இல்லையா..? இதுக்கு மேலயும் அவள் திமிரைக் காட்டினா அதுக்கு நான் ஆளில்ல.." ஆதவன் படபடத்தான்..

"இதை மட்டும்தான் அந்தப் பொண்ணு சொன்னாளா..?" செண்பக வள்ளி கேட்டாள்..

"இல்லை பாட்டி இன்னும் நிறையச் சொன்னாங்க.. இந்த ஒரு வருசமா என்னைப் பற்றி நினைச்சுக் கூடப் பார்த்திருக்காத உன் பாட்டி இப்ப நினைச்சுப் பார்த்திருக்காங்களே.. அது எனக்காகவா.. அவங்க குடும்ப

கௌரவத்தை காப்பாத்திக்கிறதுக்காகத்தானே இப்ப என் நினைப்பு அவங்களுக்கு வந்திருக்குன்னு கேட்டாங்க பாட்டி.."

"கேட்டிங்களாம்மா.. என்னவோ.. அவளுக்காக பரிஞ்சு பேசினீங்களே.. அவ உங்களைப் பத்தி என்ன சொல்லியிருக்கான்னு இப்பவாவது காது குளிரக் கேட்டுக்கங்க.." ஆதவன் கொதித்தான்..

செண்பகவள்ளி கொதிக்கவில்லை.. கோபப்பட வில்லை.. அவள் முகத்தில் சிந்தனை ரேகைகள் ஓடின..

"அப்படியா அவ சொன்னா..?" யோசனையுடன் கேட்டாள்..

"ஆமாம் பாட்டி.." என்றான் தியாகு..

"என்னம்மா நீங்க.. இன்னும் விளக்கம் கேட்டுக்கிட்டு இருக்கீங்க.. அவ உங்களைப் பத்தி இவ்வளவு பேசியிருக்கா.. அதைக் கேட்டு கோபப்படாம மகிழ்ந்து போயிருக்கீங்க.." ஆதவன் தாயைத் திட்டினான்...

"பேசாம என்னடா செய்வா..? அவ பேசறதில நியாயம் இருக்கேடா.. இத்தனை நாளா அவளைப் பத்தி நான் நினைச்சுப் பார்த்தேனா..? இப்ப இந்தக் குடும்பத்தோட கௌரவத்தை ஊர் திருவிழா சமயத்தில காப்பாத்தனும்னுதானேடா அவளைப்

பத்தி நினைச்சுப் பார்த்திருக்கேன்..?" செண்பக வள்ளியின் வார்த்தைகளில் குற்ற உணர்வு இருந்தது...

வைஷ்ணவி அதை ஆதரிப்பதைப் போல மௌனமாக இருந்தாள்...

"அவளைப் பத்தி நீங்க ஏன்ம்மா நினைச்சுப் பார்க்கனும்..?" ஆதவன் முகத்தைச் சுளித்தான்...

"இந்தக் குடும்பத்துக்கு பெரிய மனுஷியா போயிட்டேனில்ல.. நான்தான் நினைச்சுப் பார்த்திருக்கனும்.. அப்படி நினைச்சுப் பார்த்திருந்தா.. இப்படி ஒரு கேள்விய என்னைப் பாத்து அவ கேட்டிருக்க மாட்டா.." வருத்தத்துடன் சொன்னாள் செண்பகவள்ளி...

அதுவரை பேசாமலிருந்த வைஷ்ணவி.. வாயைத் திறந்தாள்..

"தியாகு.. இதை மட்டும்தான் உன் சித்தி சொன்னாளா..?"

"இன்னும் சொன்னாங்கம்மா.. என்னைக்குமே தம்பியை சத்தம் போட்டிருக்காத உன் அப்பா இன்னைக்கு சத்தம் போட்டிருக்கார்... என்னைப் பத்தி நினைச்சுப் பார்த்திருக்கார்.. எதுக்காக..? அவரோட அம்மாவோட சொல்லுக்காகவும்.. அவரோட தங்கைகளோட வாழ்க்கைக்காகவும்தானேன்னு கேட்டாங்கம்மா.."

"என்னது..?!" மாதவனின் முகத்தில் ஈயாடவில்லை...

"ஆமாம்ப்பா.. அவங்க அப்படித்தான் சொன்னாங்க.. அவங்களுக்காக நீங்களும்.. பாட்டியும் யோசிக்கலைன்னு அவங்க ஃபீல் பண்ணினாங்கப்பா.."

"என்னடி வைஷ்ணவி இது..? அந்தப் பொண்ணு மனசில இப்படியொரு எண்ணமிருக்கா..?" மனைவியைப் பார்த்தார் மாதவன்...

"பின்னே..? இருக்காதா...? வீட்டுக்கு மூத்த மகன்.. உங்க தம்பிக்கு அண்ணன்.. ஒரு வருசமா வாயைத் திறக்காம இருந்துட்டு இப்பத் தேடிப் போகச் சொன்னா இப்படித்தான் கேள்வி வரும்.." வைஷ்ணவி சுள்ளென்று பேசினாள்...

"என்னடி..? என் மேலயும்.. அம்மா மேலயும் அந்தப் பொண்ணு புகார் சொல்லியிருக்கு.. நீயும் அதை நியாயம்ன்னு சொல்ற..."

"எனக்கு அவ பேச்சு நியாயமாத்தான்ங்க படுது.. இத்தனை நாளாய் பேசாமலிருந்தவங்க.. ஊரில் திருவிழா வருது.. நாலுபேரு நாலு விதமா பேசுவாங்க.. அதனால நீ வந்து உன் தலையைக் காட்டிட்டுப் போன்னு சொன்னா அவளுக்கு எப்படியிருக்கும்ன்னு நீங்க யாராவது நினைச்சுப் பார்த்தீங்களா..? நாமளும் ஒத்தப் பொண்ணைப் பெத்திருக்கோம்.. அந்த நினைப்பும் மனசில இருக்கட்டும்..," வைஷ்ணவி பொரிந்து தள்ளினாள்...

"ஏண்டி.. நாங்கதான் அந்தப் பொண்ணை தள்ளி வச்சிருக்கிறதைப் போல.. நீ எங்களையே குத்தம் சொல்றயே..." மாதவன் நியாயம் கேட்டார்...

"தள்ளி வச்சிருக்கிறதைக் கண்டிக்காம வேடிக்கை பார்த்தவங்கதானே நீங்க..? உங்ககிட்ட எனக்கென்ன பேச்சு..? நீ சொல்லுடா தியாகு..." வைஷ்ணவி மகனைத் தூண்டினாள்..

"அவங்க நம்ம குடும்பத்தைப் பத்தி பாசமா விசாரிச்சாங்கம்மா... பாட்டி எப்படியிருக்காங்கன்னு கேட்டாங்க.." தியாகு சொல்லிக்கொண்டே வர...

"அதை உன் பாட்டியின் காதில விழுகறதைப் போலச் சத்தமா சொல்லு..." என்றாள் வைஷ்ணவி...

"ஏம்மா மருமகளே.. எதுக்காக ஜாடை பேசற..? நான் என்ன செஞ்சேன்..?" செண்பகவள்ளி புருவங்களை உயர்த்தினாள்..

"அவ உங்களை விசாரிச்சிருக்கிறா.. ஆனா நீங்க..?" வைஷ்ணவி முகம் திருப்பிக் கொண்டாள்...

"இப்பத் தெரியுதாடா தியாகு.. நான் ஏன் இங்கே சாப்பிட வந்தேன்னு..?" விளம்பர பாணியில் கேட்டாள் செண்பகவள்ளி...

"என்னைப் பத்தி சித்தி கேட்டாங்களாடா..?" வித்யா ஆர்வமாக விசாரித்தாள்...

தியாகு சொன்னான்.. நந்தினியைச் சந்தித்தது முதல்.. விடை பெற்றது வரை ஆதியோடு அந்தமாக பிட்டுப்பிட்டு வைத்தான்..

வைஷ்ணவி கரண்டியை டைனிங் டேபிளில் கடாசிவிட்டு.. கன்னத்தில் கைவைத்து உட்கார்ந்து கொள்ள.. வித்யா சாப்பாட்டை மறந்து.. 'ஆ'வென்று தமையனின் வாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.. மாதவன் தன்னைப் பார்த்து இப்படியொரு கேள்வி வந்து விட்டதே என்று நொந்து நூலாகிக் கொண்டிருக்க.. செண்பகவள்ளி கடமை

தவறிவிட்ட குற்றஉணர்வுடன் பேரன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்..

இவை அனைத்திலும் ஆர்வம் காட்டாத பார்வையாளனாக எரிச்சல் பட்டுக் கொண்டிருந்தவன் ஆதவன் மட்டும்தான்..

"அண்ணி.. இப்ப டிபனைப் போடப் போறிங்களா இல்லையா..?"

"பொறுப்பா... நீ சொல்லுடா தியாகு..."

"அம்மா.. முதுகை வலிக்கப் போகுது.. நீங்க உங்க ரூமுக்கு போய் ரெஸ்ட் எடுங்க..."

"போடா.. ரெஸ்ட் எடுத்து எடுத்து என்னத்தைக் கண்டேன்..? காலம் போன கடைசியில இப்படியொரு கேள்வி என்னைப் பார்த்து வந்திருச்சே..."

"வித்யா.. காலேஜீக்கு கிளம்பு..."

"போங்க சித்தப்பா.. காலேஜ் எங்கேயும் ஓடிப் போகாது.. நாளைக்குப் போயிக்கறேன்.. இப்ப சித்தியைப் பத்தி எனக்குத் தெரிஞ்சாகனும்..."

"அண்ணா.. தென்னந்தோப்பில காய் இறக்கறாங்க போல இருக்கே..."

"இறக்கட்டுமேடா.. நாம போயி நின்னாலும்.. நிக்காட்டியும் ஒத்தைக் காய்கூட குறையாது.. ம்ஹீம்.. வேலையாள்களை அப்படிக் கட்டுக் கோப்பா இருக்கப் பழக்கியிருக்கேன்.. உன்னை மட்டும்தான் அப்படி வளர்க்கத் தவறிட்டேன்..."

யாரும் அசைந்து கொடுக்காமல் தியாகராஜனின் வாயைப் பார்ப்பதையே தலையாய கடமையாய் வைத்திருக்க.. பொறுக்க மாட்டாத ஆதவன் பொங்கி வெடித்தான்...

"நிறுத்துடா..."

அவன் போட்ட சத்தத்தில் சமையலைறயிலிருந்த செல்வி பாத்திரத்தை நழுவவிட.. அங்கே 'டமால்' என்ற சப்தம் கேட்டது.. ஆதவனின் ருத்ர அவதாரத்தில் தியாகராஜன் பேச்சை நிறுத்தினான்..

"என்னடா நினைச்சுக்கிட்டு இருக்கே..? உன் மனசில தூது போய்விட்டு வந்ததா நினைப்போ...? அள்ளி விடற..? அவ பெரிய இவ.. இவன் போய் அவளப் பார்த்துட்டு வந்துட்டானாம்... அந்தக் கதையை விடியவிடிய ராமாயணம் போலச் சொல்லுவானாம்.. வீட்டில இருக்கிறவங்க.. வேலை வெட்டியை மறந்து சுத்தி உக்காந்துக்கிட்டு ஊம் கொட்டுவாங்களாம்.. அடங்குடா.."

தியாகராஜன் பாட்டியைப் பார்க்க.. அவள் பெரிய மகனைப் பார்த்தாள்.. அவர் ஆதவனைக் கண்டிக்கும் தொனியில் பேச ஆரம்பித்தார்...

"ஆதி நீ செய்கிறது கொஞ்சம்கூடச் சரியில்லை... நடக்கிற பிரச்னையில நீதான் சம்பந்தப் பட்டிருக்க.. அந்த நினைப்பு கொஞ்சம்கூட உன் மனசில இருக்கறதைப் போலத் தெரியலையே.."

"அண்ணா.. முதல்ல இது பிரச்னையே இல்ல.. நான்தான் வேண்டாம்ன்னு சொன்னேனில்ல.. நீங்கதான் கேட்காம தியாகுவை அனுப்பிட்டு.. இப்படி வாங்கிக் கட்டிக்கறிங்க..."

"ம்ப்ச்.. என்னடா பேசற..? அந்தப் பொண்ணு கேட்கிறதிலயும் நியாயம் இருக்கில்லடா..."

"எனக்கு எந்த நியாயமும் தெரியல.. எனக்கு பசிக்குது.. அதுமட்டும்தான் தெரியுது..."

"வேணாம் ஆதி.. என் கோபத்தைக் கிளராதே..."

"அவ திமிர் பிடிச்சவண்ணா.. நான் சொன்னாத்தான் நீங்க யாரும் அதைக் காதில போட்டுக்க மாட்டிங்களே..."

"அது திமிரில்லை ஆதி.. சுயமரியாதை..."

"அண்ணா..."

"அந்தப் பொண்ணு சொல்கிறதுதான் சரி.. தியாகு கூட அந்தப் பொண்ணு எப்படிடா கிளம்பி வரும்..? அசோக வனத்தில சீதையைத் தேடிப் போய் பார்த்த அனுமன் அவர் முதுகில ஏறிக்கச் சொல்லி சீதையிடம் சொன்னாராம்.. அதுக்கு சீதை மாட்டேன்னு சொல்லிருச்சாம்... ஏன்..? ராமர்

வந்து கூப்பிட்டாத்தான் சீதையால வரமுடியும்.. அதுதான் சீதைக்கு பெருமை.. அதனாலதான் அப்படிச் சொல்லுச்சு..."

மாதவன் வெகு தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டு ராமாயணத்தில் மேற்கோள் காட்டியதில் தியாகராஜன் நொந்தே போய்விட்டான்...

கடைசியில் அவன் அனுமான் ஆகி விட்டானா...?

## 7

பொங்கி வரும் சிரிப்பை அடக்க முடியாமல் வித்யா தவித்தாள்..

"டேய் தியாகு.. உன் மூஞ்சியை குரங்கு மூஞ்சின்னு நான் சொன்னா சண்டைக்கு வருவியே.. இப்ப அப்பாவே உன்னை அனுமான் ஆக்கி விட்டாரே பார்த்தியா..?" வித்யா சன்னக்குரலில் முணுமுணுக்க...

"அதைக்கூட நான் தாங்கிக்குவேண் வித்தி.. ஆனா.. நம்ம சித்தப்பாவைப் போய் ராமன் கூட இணை கூட்டிட்டாரே.. அதைத்தான் என்னால தாங்க முடியலே...", என்று தியாகு நெஞ்சைப் பிடித்தான்...

"அதைச் சொல்லு.. இவர் கோபியர் கொஞ்சும் ரமணனாச்சே.."

"சித்தி நிச்சயமாக சீதைதான்.. ஆனா.. இவர் ராமரா..?"

அண்ணன் பிள்ளைகளின் பேச்சு.. ஆதவனின் காதுகளில் தெளிவாக விழுந்தது.. அவன் பல்லைக்கடித்தான்...

"ஆக.. அவ சீதை.. நம்ம ஊர்தான் அயோத்தி.. நான் படையோடு கிளம்பிப் போய் அவளை சிறைமீட்டுட்டு வரனும்.. அப்படித்தானேண்ணா..?"

"சேச்சே.. உன் புத்தி ஏன் இப்படியெல்லாம் குதர்க்கமா சிந்திக்குது ஆதி..? நீயும் ராமனும் ஒன்னா..?"

தியாகுவும்.. வித்யாவும் முணுமுணுத்ததை நேரடியாகவே சொல்லி விட்டார் மாதவன்.. ஆதவனின் முகத்தில் ரௌத்திரம் வந்தது...

'எல்லாம் அவளாலே வந்தது..' அவன் கொந்தளித்தான்..

'முத முதலா பார்த்தப்பவே எனக்கு அயோக்கியன் பட்டம் கட்டினவதானே அவ.. இன்னும் எத்தனை பட்டத்தை வாங்கிக் கொடுக்கனும்னு கங்கணம் கட்டிக்கிட்டு இருக்காளோ...'

"பாரு ஆதி.. தேவையில்லாம ராமாயணத்த வம்புக்கு இழுக்கிறதை விட்டுட்டு அந்தப் பொண்ணு சொன்னதைப் போல அவளைப் போய் நீயே கூப்பிட்டுக்கிட்டு வந்திரு..." மாதவன் முடிவாகச் சொல்லி விட்டார்...

"என்னது..?" ஆதவன் அதிர்ந்து விட்டான்...

ராமாயணத்தை விட்டு விடுவதில் அவனுக்கு யாதொரு ஆட்சேபனையும் இருக்கவில்லை.. ஆனால் நந்தினியை அழைத்துக் கொண்டுவரப் போவதில் அவனுக்கு ஆயிரத்தைந்து ஆட்சேபணைகள் இருந்தன...

"என்னால முடியாதுண்ணா..." அவன் நிர்தாட்சண்யமாக மறுத்தான்...

"ஏன் முடியாது..? முடியனும்..."

"இதில நீங்க தலையிடாதீங்க..."

"சரிப்பா.. நான் தலையிடலை.. ஆனா.. இனிமே நீயும்.. நானும் அண்ணன் தம்பிகளா உறவு கொண்டாடிக்கிட்டு ஒரே வீட்டில் இருக்க முடியாது... இனி நீ யாரோ.. நான் யாரோ..."

ஆதவன் இந்த அணுகுண்டு தாக்குதலை எதிர்பார்க்கவில்லை.. இந்த அளவுக்கு மாதவன் பேசக்கூடும் என்பதை அன்றுதான் அவன் அறிந்தான்...

"அண்ணா..."

"அந்த உறவும்.. நினைப்பும் உன் மனசில இருந்தா நான் சொன்னதைச் செய்..."

"நீங்களாவது சொல்லுங்க அண்ணி..."

"எதைச் சொல்லச் சொல்ற ஆதி..? நானும் இந்த வீட்டில் வாழ வந்தவதான்.. என்னை உன் அண்ணன் தள்ளி வச்சிருந்தா.. இப்ப நந்தினி சொன்னதைத்தான் நானும் சொல்லுவேன்..."

"என்னம்மா இது..?"

"உன்னைப் பெத்ததுக்கு என் சின்ன மருமககிட்ட நல்ல பெயர் வாங்கிக் கொடுத்துட்டடா ராசா.. பெரிய மனுஷியாய் இருந்துக்கிட்டு அவ பாவத்தை நான் நினைச்சுப் பார்க்காம போயிட்டேன்..."

"வித்யா..."

"போங்க சித்தப்பா.. உங்க பேச்சு காய்.. சித்தியைப் போல அழகான பொண்ணு இந்த சுத்துப்பட்டுக் கிராமத்திலேயே இல்ல.. அவங்களை எங்க கண்ணுல படவிடாம பிரிச்சு வைச்சிருக்கீங்களே.. இது டூ பேட்..."

"என் மனசைப் பாருடா தியாகு..."

"உங்க மனசைப் பார்த்து என்ன செய்ய சித்தப்பா..? அது கல் மனசு.. அதுக்கு சித்தி மனசைச் சொல்லுங்க.. அது பூ மனசு.. அந்த மனசை கசக்கிப் பிழியறிங்களே.. இது நியாயமே இல்லை சித்தப்பா.. அவ்வளவுதான் நான் சொல்லுவேன்..."

வீடு மொத்தமும் எதிர்ப்பைக் காட்டியதில் ஆதவன் சாப்பிடாமலே மில்லுக்குப் போய்விட்டான்.. என்றைக்கும் தம்பியைக் கோபித்துக் கொள்ளாத மாதவன் அன்று கடுமையாக பேசிவிட்டதில் அவருக்கு மனம் சரியில்லாமல் போய்விட.. அவரும் சாப்பிடாமலே தோப்புப் பக்கம் போய்விட்டார்... தூது போகும் வேலையை ஏற்றுக் கொண்டதால் அனுமானாகி விட்ட மனக்கிலேசத்தில் தியாகுவும் சாப்பாட்டைத் தவிர்த்து விட்டான்.. வீட்டிற்கு

பெரிய மனுஷியாக இருந்தும் நியாயத்தைச் சொல்லாமல் விட்டு விட்டோமே என்று செண்பகவள்ளியும் சக்கர நாற்காலியை உருட்டிக் கொண்டு போய்விட்டாள்...

மீதமிருந்த வைஷ்ணவியும்.. வித்யாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்...

"ம்ஹீம்.. இன்னைக்கு சாயந்திர டிபன்.. சூரியவம்சம் உப்புமாதானா..?" நெடுமூச்செரிந்தாள் வித்யா....

"என்னடி சொல்ற..?" வைஷ்ணவி திருதிருத்தாள்...

"இட்லி உட்புமாவைத்தான் சொன்னேன்ம்மா... இத்தனை பேரும் சாப்பிடாத இட்லியை நீங்க உள்ளே தள்ளப் போறதில்ல.. என்னால முடிஞ்சது பத்தோ.. இருபதோதான்.. மீதி இட்லியை என்ன பண்றது..? உப்புமாதானே போடனும்..?"

"அப்ப நீ சாப்பிடப் போறியா..?"

"ஒரு தாய் கேட்கிற கேள்வியா இது..?"

"இல்லைடி.. வீட்டில யாருமே சாப்பிடலையே..."

"அதனால நானும் சாப்பிடக் கூடாதுன்னு சட்டமா இருக்கு..?"

"ஒரு பேச்சுக்கு சொன்னேன்டி..."

"சாப்பாட்டு விசயத்தில யெல்லாம் பேச்சுக்கே இடமில்லம்மா... நீங்க முதல்ல இட்லிய இந்தப் பக்கமா தள்ளுங்க.. விட்டா என்னையும் உண்ணாவிரத லிஸ்டில் சேர்த்துருவீங்க போல இருக்கே..."

வித்யா வெகு உஷாராக இட்லியையும்... சட்னி.. சாம்பார் வகையறாக்களையும் தன் பக்கமாக இழுத்துக் கொண்டாள்...

மில்லின் வாசல் பக்கமாக இருந்த தோட்டத்தின் முன்பாக ஆதவன் நின்றிருந்தான்.. அவனுக்கு மரியாதை தரும் வகையில் தள்ளி நின்றிருந்த சதானந்தன்.. தூரத்தில் வந்த காரைக் கண்டதும்..

"பெரியவர் வருகிறார் சார்.." என்று சொன்னான்...

ஆதவன் திரும்பிப் பார்த்தான்.. மாதவனின் கார்தான் வந்து கொண்டிருந்தது.. அவர் மில் பக்கமாக வரவே மாட்டார்.. அது ஆதவனின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட அவனுடைய தொழில என்பதால் விலகியே நிற்பார்...

'இப்ப எதுக்காக அண்ணன் இந்தப் பக்கமா வர்றாரு..?'

இந்தக் கேள்விக்கான விடை எதுவாக இருக்கக் கூடும் என்பதை அவன் நன்றாக அறிந்துதான் வைத்திருந்தான்.. இருந்தும் மனது கேள்வி கேட்பதை அவனால் தடுக்க முடியவில்லை...

காரை விட்டு இறங்கிவந்த மாதவனின் முகம் கவலையில் தோய்ந்திருந்தது.. அதைக்கண்ட ஆதவனின் மனம் துணுக்குற்றது.. மாதவனிடம் மௌன விரதத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்ற வைராக்கியத்தை மறந்தவனாக...

"என்ன விசயம்ண்ணா..?" என்று கேட்டுவிட்டான்...

"அம்மா மயக்கம் போட்டுட்டாங்க ஆதி..." கவலையுடன் சொன்னார் மாதவன்...

"என்னது..?"

அடுத்த வார்த்தையைக் கேட்க ஆதவன் அங்கே இல்லை.. மாதவனை மறந்தவனாக காரில் ஏறிப் பறந்து விட்டான்.. தம்பியின் வேகத்தில் பெருமிதம் கொண்டவராக மாதவனும் அவர்காரில் பின் தொடர்ந்தார்...

கண்மூடிப் படுத்திருந்த செண்பகவள்ளிக்கு குளுகோஸ் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தது.. அவளைக் கவனிப்பதற்கென்றே பிரத்யேகமாக நியமிக்கப் பட்டிருந்த நர்ஸ் அங்குமிங்கும் ஓடியாடி டாக்டர் கேட்பதை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள்...

"என்ன ஆச்சு டாக்டர்..?" ஆதவன் பரபரப்பாக கேட்டான்...

அவனுக்குப் பதில் சொல்லாமல் செண்பகவள்ளியை பரிசோதித்து விட்டு நிமிர்ந்த டாக்டரின் முகத்தில் எள்ளும்.. கொள்ளும் வெடித்தன...

"என்ன ஆச்சுன்னு என்னைக் கேட்டா என்ன அர்த்தம்..? இந்தக் கேள்விய நான் உங்களைப் பார்த்துக் கேட்கனும்.. என்ன ஆச்சு..?"

"டாக்டர்.." ஆதவன் திகைத்துப் போனான்...

"உங்கம்மா காலையில இருந்து தண்ணிகூடக் குடிக்கலையாம்.. நர்ஸ் சொல்றாங்க... நேந்று நைட் சாப்பிட்டது தானாமே.. அப்புறம் மயக்கம் வராம எப்படி இருக்கும்..?"

டாக்டரின் கடுமையான பேச்சில் ஆதவன் குற்ற உணர்வுடன் தடுமாறினான்.. அவர் குடும்ப டாக்டர்.. மாதவனுக்கு நண்பர்.. அவரிடம் விளக்கம் சொல்லாமலிருக்க அவனால் முடியாது...

"அது.. அதுவந்து.. டாக்டர்.." விளக்கம் சொல்ல முடியாமல் அவன் திணறினான்...

"உங்க குடும்ப விசயத்தில நான் மூக்கை நுழைக்க முடியாது ஆதவன்.. பட்.. என்னோட பேஷண்டின் ஹெல்த் கண்டிசன்ல நான் மூக்கை நுழைக்க முடியும்.. வயசானவங்களை சரியாக் கவனிச்சு.. வேளா வேளைக்கு சாப்பிட வைத்து.. மாத்திரை மருந்துகளைக் கொடுக்க முடியும்ன்னா வீட்டில வைச்சிருங்க.. இல்லைன்னா என் ஹாஸ்பிடலில் சேர்த்துருங்க.. இவங்க எனக்கும் அம்மா போலதான்.. என் ஹாஸ்பிடலுக்காக உங்க அப்பா எத்தனையோ உதவிகளைச் செய்திருக்காரு.. பதிலுக்கு இவங்களை கடைசி வரைக்கும் நான் கவனிச்சுப் பார்த்துட்டுப் போறேன்..."

பெற்ற மகனுக்கு இதைவிட கசையடி உண்டா..? டாக்டர் எய்த வார்த்தை அஸ்திரங்கள் கூர்மையுடன் ஆதவனைத் தாக்கி அவன் மனதைப் பிளந்தன.. அவன் நிலை குலைந்தான்.. டாக்டர் போய் விட்டார்.. அவன் குற்றம் செய்த மகனாக தாய்க்கு அருகில் அமர்ந்தான்..

"அம்மா.." என்று தீனமான குரலில் அழைத்தான்...

செண்பகவள்ளி லேசாக கண்திறந்து பார்த்தாள்... ஆதவனின் கலங்கிய முகத்தைக் கண்டதும் மீண்டும் கண்களை மூடிக் கொண்டாள்...

"ஏம்மா இப்படிச் செய்றீங்க.. கடைசியில டாக்டர் என்ன வார்த்தையைக் கேட்டுட்டாருன்னு பார்த்தீங்களா.. இதைக் கேட்கிறதுக்கா நாங்க இருக்கோம்..? நீங்க வாய்க்கு வாய் சொல்வீங்களே.. நாம ஊருக்கு பெரிய குடும்பம்.. இதோட கௌரவம் குறையக் கூடாதுன்னு... அது உங்க மனசில இருந்தா இப்படியாப்பட்ட வார்த்தைகளை எங்களைக் கேட்க வைப்பீங்களா..?" ஆதவன் துக்கத்துடன் கேட்டான்..

"எங்களைன்னு பெரியவனையும் உன்கூட இணை கூட்டிராதேடா சின்னவனே.. அவன் ஒரு நாள்கூட எனக்குப் பேச்சு வருகிறதைப் போல நடந்துக்கிட்டது இல்லை..."

"அம்மா..."

"ஒன்னா..? ரெண்டா..? நீயே யோசிச்சுப் பாரு.. ஓராயிரம் வம்பை நீ இழுத்துக்கிட்டு வந்த.. நான் ஏன்னு கேட்கலை.. தோளுக்கு மேல வளர்ந்த பிள்ளையை என்ன கேட்க முடியும்ன்னு ஜாடைமாடையாய் பேசினதோட உன் போக்கில பட்டுத் திருந்தட்டும்ன்னு விட்டுட்டேன்.. இப்ப அப்படியில்ல... வீட்டுக்கு வாழ வந்த பொண்ணு நம்ம வீட்டு வாசப்படியை இன்னும் மிதிக்கல.. அதை நினைச்சுப் பார்க்காத பெரிய மனுஷியா நானிருந்திருக்கேன்னு அவ குத்தம் சொன்ன பின்னாலதானே எனக்கே அது உறைக்குது..? நானெல்லாம் பெரிய மனுஷியா..? ஊருக்கு பெரிய வீட்டுப் பொம்பளையா..?" செண்பகவள்ளி திக்கித் திணறினாள்...

மாமியாரின் அருகே இருந்த வைஷ்ணவி கண்ஜாடைகாட்டி ஆதவனை வெளியே அழைத்தாள்...

"என்ன அண்ணி..?"

"காரியம் பெரிசா..? வீரியம் பெரிசான்னு கேட்டா.. காரியம்தான் பெரிசுன்னு நான் சொல்வேன்.. இப்ப நமக்கு

அத்தையோட உடம்புக்கு நல்லா ஆகனும்.. அதுக்காக அவங்க கேட்டதை செய்திரு ஆதி..."

"அண்ணி..."

"பிடிவாதத்திற்கு இது நேரமில்ல ஆதி.. டாக்டர் சொன்னதைக் கேட்டியில்ல.. இந்தப் பேச்சு நமக்குத் தேவையா..? போப்பா.. போயி அத்தையை இந்த ஜீஸைக் குடிக்க வைய்யி.. அது இப்ப உன்னால மட்டும்தான் முடியும்..."

செண்பகவள்ளி ஆதவனைப் பெற்றவள்தான்... வளர்த்த தெல்லாம் வைஷ்ணவிதான்.. கண்ணனைப் போல இரண்டு அன்னைகளைக் கொண்டிருந்த ஆதவன்.. பெற்றவளின் உடல் நிலையை கருத்தில் கொண்டு வளர்த்தவளின் பேச்சுக்கு கீழ்படிந்தான்.. பழரச தம்பளரை வாங்கிக் கொண்டான்.. செண்பகவள்ளியின் பக்கத்தில் போய் உட்கார்ந்தான்...

"நீங்க கேட்டதைச் செய்றேன்ம்மா.. இந்த ஜீஸைக் குடிங்க.."

அந்த வார்த்தைகளுக்குத்தான் எத்தனை சக்தி..!

செண்பகவள்ளி முகத்தில் ஒளிர்வோடு கண்திறந்து பார்த்தாள்...

## 8

"இன்னைக்கு என்னென்ன புரோக்ராம் வயலெட்..?"

நந்தினி அவளுடைய உதவியாளரிடம் கேட்டாள்.. வயலெட் அதற்கான பதிலைச் சொல்லிவிட்டு.. கையோடு கொண்டு வந்திருந்த ஷெட்யூல் பிரிண்டை அவளிடம் நீட்டினாள்...

"குட்.."

அதை வாங்கிக் கொண்ட நந்தினி படிக்க ஆரம்பிக்க வயலெட் கேபினை விட்டு வெளியேறினாள்...

ஷெட்யூலில் ஆழ்ந்திருந்த நந்தினி.. இன்டர் காம் ஒலிக்கவும் அதை எடுத்து காதுக்கு கொடுத்தாள்.. மறுமுனையில் வயலெட் பேசினாள்...

"மேடம்.. உங்களைப் பார்க்க ஆதவன்னு ஒருவர் வந்திருக்கார்..."

நந்தினியின் கையில் பிடித்திருந்த போன் ரிஸிவர் நழுவப் போகிறேன் என்று பயமுறுத்தியது.. அவள் கைகள் நடுங்கின... வயிற்றில் பட்டாம்பூச்சிகள் பறந்தன...

"வரச் சொல்லுங்க..." என்று சொல்வதற்குள் அவள் வெகுவாக சிரமப்பட்டுப் போனாள்...

கேபின் கதவைத் திறந்து கொண்டு வந்த ஆதவனின் கூரிய பார்வை அவளைத் துளைத்தது.. ஆறடி உயரத்தில் அவள் முன்னால் அவன் நிமிர்ந்து நின்றான்...

"உட்காருங்க..." நந்தினி தன்னை சமாளித்துக் கொண்டு சொன்னாள்...

"உன்கூட உட்கார்ந்து பேசவெல்லாம் எனக்கு நேரமில்லை.." அவன் சுள்ளென்று பேசினான்...

அவன் பேசிய விதத்தில் அவளது நடுக்கம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விட்டது... பழைய நிமிர்வு அவளிடம் திரும்பி வந்தது...

"இட்ஸ் ஆல்ரைட்.. எனக்கும் நேரமில்லைதான்.. என்னோட நேரத்தை வீணடிக்காம வந்த விவரத்தை நீங்க சீக்கிரமா சொன்னால் தேவலை.." அவள் கைக்கடிகாரத்தில் பார்வையை ஓட்டினாள்...

"கொழுப்பாடி..." அவள் முன்னால் குனிந்து அவள் முகம் பார்த்த ஆதவன் சீறினான்...

நந்தினியிடம் விடை பெற்றுக் கொண்ட நடுக்கம் வரவா என்றது.. அவள் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்

முகத்தை கடினமாக வைத்துக் கொள்ள முயன்றாள்...

"உங்களுக்கு என்ன வேணும்..?"

கவனமாக அவன் முகத்தைப் பார்க்காமல் டேபிளிலிருந்த கம்யூட்டர் திரையில் விழி பதித்தபடி அவள் கேட்டாள்..

"நிச்சயமா நீ எனக்கு வேணாம்..." அவன் வெறுப்பைக் கொட்டினான்...

'அப்புறம் எதுக்காகடா வந்து நிக்கறே..' அவளுக்குள் கோபம் எழுந்தது...

வேண்டாமென்று தூக்கிப் போட அவளென்ன கறிவேப்பில்லையா..? உயிருள்ள மனித ஜீவனில்லையா..?

அவள் முகம் இறுகிப் போனது.. இப்போது அவன் முகத்தைத் தயக்கமில்லாமல் அவளால் பார்க்க முடிந்தது...

"ஓ..கே.. தென்..?" அலட்சியமகா வினவினாள்...

அவளின் அந்த அலட்சியத்தில் அவன் கொதித்துப் போனான்..

"ஏய்ய்..!" ஒற்றை விரலை உயர்த்தி எச்சரித்தான்...

"செய்கிறதையும் செய்துட்டு எகத்தாளம் பண்றியா..? உன்னைக் கூப்பிட தியாகு வந்தானில்ல..? அவன்கூட வரனும்னா வந்து தொலைக்க வேண்டியதுதானே.. என்னை ஏண்டி வர வைச்சே..."

"ஹலோ.. யாரையும் நான் வரவைக்கலை.. தியாகு கூப்பிட்டப்ப என்னால அது கூட வரமுடியாதுன்னு சொல்லியாச்சு.. சந்தேகமிருந்தா நீங்க உங்க அண்ணன் மகனுக்கு போன் போட்டு கேட்டுக்கங்க..."

அவள் மீண்டும் கைக்கடிகாரத்தைப் பார்க்க அவன் கோபத்தின் உச்சிக்கே போய்விட்டான்.. அவள் உட்கார்ந்து கொண்டே பேச.. அவளுக்கு முன்னால் நின்று கொண்டு வாதாடுவதை சௌகரியக் குறைவாக நினைத்த ஆதவன்.. அவளுக்கு எதிரேயிருந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக்

கொண்டு அமர்ந்தான்.. அது சப்தம் எழுப்பி அவனது கோபத்தின் பரிணாமத்தை வெளிப்படுத்தியது...

"உட்கார்ந்து பேச உங்களுக்கு நேரமில்லைன்னு சொன்னீங்க..?"

லேசாக விழியுயர்த்தி சாதாரணமாகக் கேட்பதைப் போல அவள் கேட்டு விட்டாள்.. ஆதவனின் முகம் கோபத்தில் ஜிவுஜிவுத்து விட்டது...

"திமிராடி..? என்னை யாருன்னு நினைச்சே.. நீ உட்கார்ந்துகிட்டு தெனாவெட்டா பேசுவ.. நான் உன் முன்னாலே கைகட்டி நின்னுக்கிட்டு பதிலைச் சொல்லனுமா..? அதுக்கு வேற ஆளைப் பாரு.."

நந்தினி நிதானமாக அவன் முகத்தைப் பார்த்தாள்.. அவனின் சிவந்த விழிகளைப் பார்க்கும் போது.. அந்த நாளின் நினைவு வர.. உதட்டைக் கடித்துக் கொண்டாள்..

சிங்கத்தை அதன் குகையில் நேருக்கு நேராக சந்திக்கும் அனுபவத்தை இரண்டாம் முறையாக அவள் உணர்ந்தாள்...

"நீங்க சொன்னதைத்தான் நான் சொன்னேன்..."

"இதிலயும் ஜெயிச்சுட்ட ஆணவமா..?"

அவனின் சிவந்த விழிகள் மேலும் சிவக்க ஆரம்பிக்க அதைக் கண்கொண்டு பார்த்தால் மனதைரியம் குலைந்து விடுமென்ற எச்சரிக்கை உணர்வுடன் பார்வையைத் தழைத்துக் கொண்டாள் நந்தினி...

அவனை ஜெயிக்க வேண்டுமென்று அவளுக்கு மட்டும் ஆசையா..? அப்படிப்பட்ட சூழ்நிலைகளை அவள் வாழ்வில் விதி உருவாக்கி விட்டிருக்கும் போது அவள்மேல் அவன் கோபம் கொள்கிறானே.. அவளென்ன செய்வாள்..? விதி வலியது.. அவள் பாவம் எளியவள்.. விதியின் கையில் அகப்பட்டுக் கொண்ட விளையாட்டு பொம்மை...

"உங்களை ஜெயிக்கனும்னு ஒருநாளும் நான் நினைச்சதில்ல.." உண்மையான வருத்தத்துடன் தான் அவள் சொன்னாள்...

"நிறுத்துடி..." என்று ஆதித்தன்தான் எரிச்சல்பட்டான்...

"உன்னை எனக்குத் தெரியாதா..? ஒன்னும் தெரியாத ஊமையைப் போல முகத்தை வைச்சுக்கிட்டு.. என்னவெல்லாம் நீ வேலையைக் காட்டின..? மறந்திட்டேன்னு நினைச்சியா..?" கனல் கக்கும் முகத்துடன் அவன் கேட்க...

"மறக்கலையா..?" என்று இருபொருள்பட கூரிய பார்வையுடன் அவள் கேட்டாள்..

"ஹ.. தெரியும்டி.. நீ சந்துக்குள்ள சிந்து பாட நினைப்பன்னு எனக்கும் தெரியும்.. யாரு நீ..? கிடைச்ச வாய்ப்பை இறுக்கிப் பிடிச்சுக்கிட்டு என்னையே உன் கழுத்தில் தாலியைக் கட்ட வைச்சவளாச்சே..." ஆதவன் முறைத்தான்...

"வாய்ப்பைக் கொடுத்தது யாரு..?" நந்தினி நிதானமாகக் கேட்டாள்...

"இப்படியாகும்ன்னு நினைச்சிருந்தா அப்படியொரு வாய்ப்பை ஏண்டி நான் உருவாக்கப் போறேன்..? ம்ஹீம்.. நான் நினைச்சது ஒன்னு.. நடந்தது வேற ஒன்னாப் போயிருச்சே.."

அவன் வருத்தப் பட்டதில் அவள் மனம் வலித்தது...

"நீங்க நினைச்சதெல்லாம் நடந்துட்டா கடவுள்ன்னு ஒருத்தர் எதுக்காக இருக்கார்.. கோவில்ன்னு ஒன்னு எதுக்காக இருக்குது.. தெய்வம் இருக்கு பாஸ்.. அது பாதிக்கப்பட்ட மனுச ஜீவன்களை ஒருநாளும் கைவிட்டதில்லை.."

அவள் பேசப்பேச.. அவன் கண்கள் இடுங்க அவளையே முறைத்துக் கொண்டிருந்தான்...

"பேசுடி.. பேசு.. இது நீ பேசி நான் கேட்க வேண்டிய நேரமாபோயிருச்சு... என் அம்மாவுக்காக பாக்கிறேன்.. இல்லைன்னா உன் கூடல்லாம் நான் உட்கார்ந்து பேசற ஆளில்லை.."

அவனின் உதாசீன வார்த்தைகள் முள்களாக மனதில் தைக்க.. மனம் நைந்தாள் நந்தினி...

"அதானே.. நீங்க உட்கார்ந்து பேசற ஆள்களைத்தான் நான் பார்த்திருக்கேனே... அவங்களின் ஒருத்தியை உங்க அம்மா முன்னாலே கொண்டு போய் நிறுத்தாம.. என்னைத் தேடிக்கிட்டு ஏன்பாஸ் வந்தீங்க..? இப்பப் பாருங்க.. நம்ம ரெண்டு பேருக்குமே நேரம் விரயமாகுது.." நந்தினி வருத்தப் படுவதைப் போல முகத்தை வைத்துக் கொண்டாள்...

"உன்னை.." அவன் பல்லைக் கடித்தான்.. அவளின் பேச்சுக்கு பதில் கொடுக்க அவனால் முடியவில்லை.. அதை நந்தினி மனதுக்குள் ரசித்தாள்...

'பேசுடா மச்சான்.. என்னைச் சொல்லிட்டு.. நீ இப்ப ஊமை வேசம் போடற..? உன்கூடத் தொத்திக்கிட்டு அலைஞ்ச மேனாமினுக்கிகளில எவளையாவது ஒருத்தியைக் கொண்டு போய் உன் அம்மா முன்னாலே நிறுத்த வேண்டியதுதானே..? அதைச் செய்ய மாட்டியே.. அவளுகளைப் பார்த்தா உன் அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக்கே வந்திரும்னுதானே நீ என்னைத் தேடி வந்திருக்க..? உனக்கு ஊரைச்சுத்த அவங்க வேணும்.. ஊருக்கு உன் பெண்டாட்டின்னு காட்ட மட்டும் நான் வேணும்.. நீ பலே கில்லாடிடா மச்சான்...'

"என்னை..? ..ம்ம்..? ஏதோ சொல்ல வந்தீங்களே பாஸ்.. அதைச் சொல்லுங்க..." அப்பாவி போல முகத்தை வைத்துக் கொண்டு அவனை ஊக்குவித்தாள் நந்தினி...

"வேணாம்டி.. கொலைவெறியைக் கிளப்பாதே.. தியாகுகிட்ட ஏன் அப்படிச் சொல்லி விட்ட...?"

"எப்படி..?"

"கூப்பிடறவர் கூப்பிட்டா வர்றேன்னு..."

"அப்படித்தானே சொல்ல முடியும்..?"

"ஏய்.. உனக்குத்தான் வரனும்கிற நோக்கம் இருக்குதே.. வர வேண்டியதுதானே..? அதான் பாச மழையைப் பொழிஞ்சு அனுப்பி வைச்சிருக்கியே.. அப்படியே வந்தும் தொலைச்சிருக்க வேண்டியது தானே..?"

"எதுக்காக வரனும்..?" அவள் புருவங்களை உயர்த்தினாள்...

"ஏய்ய்..."

"சும்மா சவுண்டைக் கிளப்பாதீங்க... என்னவோ.. வரனும்னா வா.. வரனும்னா வான்னு சொல்றீங்களே.. உங்க வீட்டுக்கு எதுக்காக நான் வரனும்...?"

"என்னைக் கேட்டா..?"

"உங்க வீட்டிலேயிருந்துதானே என்னைக் கூப்பிட ஆள் வந்துச்சு..? நான் தகவல் சொல்லி விட்டேனா..?"

நந்தினி சரியான இடத்தைப் பிடித்து விட்டாள்.. ஆதவன் அவளை இடுங்கிய கண்களுடன் முறைத்துக் கொண்டிருந்தான்..

"சொல்லுங்க பாஸ்... இந்த ஒரு வருசமா நீங்க இருக்கிற திசைப்பக்கம்கூட நான் திரும்பிப் பார்த்திருப்பேனா..? என் வேலையைப் பார்த்துக்கிட்டு ஒதுங்கித்தான வாழறேன்..? அதுக்கப்புறமும் உனக்குத்தான் வரனும்கிற நோக்கம் இருக்கேங்கிற பேச்சு எதுக்கு..? எனக்கென்ன சாப்பாட்டுக்கும்.. துணிகளுக்கும்.. இருக்க இடத்திற்கும் கஷ்டமா..? எதுக்காக பாஸ் உங்க வீட்டுக்கு வர நான் நோக்கப்படனும்..?"

"தியாகுதான் சொன்னான்..." ஆதவன் முகம் மாறிப் போனவனாக முணுமுணுத்தான்...

"என்ன சொல்லுச்சு..? ம்ம்ம்..."

"நீ பாசத்தைக் காட்டினேன்னு..."

"வேற என்ன செய்ய..? வெறுப்பைக் காட்ட என்னால முடியாது.. என்னைத்தேடி வந்த புகுந்த வீட்டின் முதல் சொந்தம் தியாகுதான்... அதுகிட்ட எனக்கென்ன கோபம்..?"

நந்தினி வேகத்துடன் கேட்டு விட்டு டேபிளில் இருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து மடமடவென்று வாய்க்குள் சரித்தாள்.. மூச்சு வாங்கியபடி.. கைவிரல்களை கோர்த்துக்

கோர்த்துப் பிரித்தபடி அமர்ந்திருந்தாள்.. சற்று நேரத்திற்கு அங்கே மௌனம் சூழ்ந்திருந்தது...

"முடிவா நீ என்னதான் சொல்ற..?" ஆதவன் மௌனத்தை கலைத்தான்...

"எதைப் பத்தி...?" நந்தினி திடமான குரலில் கேட்டாள்...

"எங்க ஊருக்கு வருகிறதைப் பத்தி..." எரிச்சலுடன் சொன்னான் ஆதவன்...

"எனக்கு யோசிக்கனும்..." நந்தினியின் புருவங்கள் சுருங்கின..

ஆதவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.. தியாகுவின் வாய்மொழியின்படி.. அவன் கூப்பிட்டதும் நந்தினி கிளம்பி வந்து விடுவாள் என்றுதான் அவன் நினைத்திருந்தான்.. இப்படி யோசிக்க வேண்டுமென்று சொல்லுவாள் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை...

போடி.. நீ ஒன்னும் என்கூட வர வேண்டாம் என்று எழுந்து போய்விடலாமா என்றுதான் முதலில் அவன் நினைத்தான்.. ஆனால் அவன் எப்படியும் நந்தினியை அழைத்துக் கொண்டு வந்து விடுவான் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கும் செண்பகவள்ளியின் முகம் நினைவில் ஆடி.. அவனை எழுந்திருக்க விடாமல் அமர்த்தி வைத்தது...

'காரியம் பெரிசா..? வீரியம் பெரிசா...?'

வைஷ்ணவியின் குரல் அவன் காதுகளில் ஒலித்ததில் அவன் யோசனையானான்...

"இதில யோசிக்க என்ன இருக்கு..?" நெருக்கடியான நிலையில் வரும் கோபம் அவனுக்கும் வந்தது...

"நிறைய இருக்கு..." அவள் அசைந்து கொடுக்கவில்லை...

"நீ நேரம் பார்த்து போட்டுத் தாக்கற..." என்றான் ஆதவன்..

"அது உங்க குணம்.. என் குணமில்லை..." பச்சை மிளகாயின் காரத்தோடு நந்தினி பதில் சொன்னாள்...

"தியாகு விவரம் சொல்லியிருப்பான்தானே..."

"ம்ம்ம்..."

"அம்மாவுக்கு அதை நினைச்சே உடம்புக்கு முடியாம போயிருச்சு..."

"அப்படியா..?"

"அண்ணனுக்கும்.. எனக்குமே மோதல் வருது..."

"ஓஹோ..."

"ஊர்த்திருவிழா.. என் அக்கா குடும்பங்கள்.. சொந்த பந்தம்ன்னு எல்லோரும் வருவாங்க..."

"வரட்டுமே..."

"அவங்க முன்னாலே எங்க குடும்ப கௌரவம் குறையக் கூடாது..."

"அது உங்க பிரச்னை.. இதையெல்லாம் எதுக்காக என்கிட்டச் சொல்றீங்க..?"

பட்டுக்கொள்ளாமல் அவள் பேசியதில் ஆதவன் வெறியாகிப் போனான்.. அந்தக் கொலைவெறியில் அவளிடம் சீறினான்...

"நீ வழியில் போறவளா..? என் பெண்டாட்டி தானேடி...?"

அந்த வார்த்தைகளில் சட்டென்று நிமிர்ந்து அவனைத் தீர்க்கமாகப் பார்த்தாள் நந்தினி... அவளின் அந்தப் பார்வையில் ஆதவனின் புருவங்கள் முடிச்சிட்டன...

9

"அந்த நினைப்பு உங்க மனசில இருக்கா..?" நந்தினி குமுறினாள்...

ஆதவன் முகம் திருப்பிக் கொண்டான்.. அவளுடைய கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை...

"உங்க ஊரில திருவிழா வருது.. சொந்தபந்தம் வரப் போறாங்க.. அவங்க வந்தா உங்க பெண்டாட்டி எங்கேன்னு கேட்பாங்க.. விவரம் தெரிஞ்சா உங்க குடும்ப கௌரவம் என்ன ஆகிறதுன்னு உங்க அம்மா பயப்படறாங்க.. அதனால உங்க அம்மாவுக்கு உடம்பு சரியில்லாமப் போயிருச்சு.. உங்க அண்ணனுக்கும் உங்களுக்கும் மோதல் வருது... இதெல்லாம் சரியாகனும்னா உங்க ஊர்திருவிழாவில நீங்க உங்க பெண்டாட்டி கூட நடமாடியாகனும்.. அதுக்காக மட்டும்தானே என்னை நீங்க தேடி வந்திருக்கீங்க..?"

"இதோ பார்... இதெல்லாம் உனக்கு ஏற்கனெவே தெரிஞ்ச விவரம்தானே.. தியாகு சொல்லியிருப்பானே..."

"அதுக்கு நான் என்ன பதிலைச் சொன்னேன்னும் தியாகு சொல்லியிருக்குமே..."

"கூப்பிட வேண்டியவர் கூப்பிடவரட்டும்ன்னு சொன்னியா.. இல்லையா...?"

"சொன்னேன்தான்... அவர் கூப்பிட வந்தா அவர்கூடவே குதிச்சுக்கிட்டு கிளம்பி வந்துடறேன்னு சொல்லவே இல்லையே.."

"நந்தினி..." அவன் கோபத்துடன் அழைக்க.. அவள் கண்களில் மின்னல் வந்தது...

"அட..! என் பெயர் கூட உங்களுக்குத் தெரிஞ்சிருக்கே..."

அவன் உதட்டைக் கடித்தபடி அவளையே இமைக்காமல் பார்த்தான்.. அவள் நேர் கொண்ட பார்வையுடன் அவனின் அந்தப் பார்வையைச் சந்தித்தாள்...

"ஆக.. நீ சொல்லிக் காட்டத்தான் என்னை வர வைச்சிருக்கிற.. அப்படித்தானே..?"

அவனின் கூர்மையான கேள்வியில் அவள் மௌனம் சாதித்தாள்...

"ம்ஹீம்.. இது தெரியாம எங்கம்மா உனக்காக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தறாங்கடி.."

"எனக்காக இல்லை.." என்று சொல்லும் போதே நந்தினிக்கு குரல் மெலிந்தது.. அவனும் அதைக் கவனிக்கத்தான் செய்தான்.. ஒருநொடியில் சுதாரித்துக் கொண்டு அவள் பேசினாள்..

"அவங்க குடும்ப கௌரவத்துக்காக போராடறாங்க..."

"திமிர்..?"

"இருந்தாத் தப்பில்லை..."

"உன்னைச் சொல்லிக் குற்றமில்லைடி.. என்னைச் சொல்லனும்.."

"என்ன சொல்லப் போறிங்க..?"

"உன் கழுத்தில தாலியைக் கட்டற சூழ்நிலையை உருவாக்கிக் கிட்டேன் பாரு.. அதைச் சொல்லனும்..."

"சொல்லிக்கங்க..."

நந்தினி எனக்கென்ன என்று மீண்டும் கம்யூட்டரின் திரையைப் பார்க்க ஆரம்பித்தாள்.. ஆதவனுக்குள் எரிச்சல் மண்டியது.. அவளின் அறையைச் சுற்றிப் பார்வையை சுழல விட்டான்.. இதமான நறுமணத்துடன் மிக நேர்த்தியாக.. ஏஸி வசதியுடன் இருந்தது அந்த அறை.. டேபிளில் சிறிய சரஸ்வதியின் பொம்மையொன்றை வைத்திருந்தாள்...

'இவளைப் போலவே இவ ரூமும் செம ஸ்மார்ட்டா இருக்குது..' என்று நினைக்காமலிருக்க அவனால் முடியவில்லை...

'இவளை என்ன சொல்லிக் கிளப்புவது..' அவன் யோசித்து யோசித்துப் பார்த்தான்.. தலை காய்ந்ததுதான் மிச்சம்.. ஒருவழியும் தென்படவில்லை...

பேசாமல் அவளிடமே கேட்டு விடுவதுதான் உத்தமம் என்று தோன்றி வைக்க.. நிமிர்ந்து அமர்ந்தான்...

அவனின் அசைவிலிருந்தே அவன் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க போகிறான் என்பதை யூகித்துக் கொண்ட

நந்தினி சுதாரித்துக் கொண்டாள்..

"நீ சொன்னதெல்லாம் சரின்னே வைச்சுக்குவோம்.."

"அது சரியானதுதான் பாஸ்.. தப்புன்னு சொல்லிருவீங்களா..?"

"சரி.. நான் ஒப்புக்கறேன்.. இப்ப நீ என்னுடன் கிளம்பி வரனும்னா உனக்கு என்ன வேணும்..?"

ஆதவன் என்னவோ... 'நான் என்ன செய்யனும்..' என்று கேட்பதாகத்தான் இருந்தான்.. பழக்க தோசம்... எதையும் பணத்தைக் கொண்டு சாதித்துக் கொண்டிருந்த மமதை.. இவை எல்லாம் சேர்ந்து.. 'உனக்கு என்ன வேணும்' என்று கேட்க வைத்து விட்டன..

"அதானே பார்த்தேன்.." இகழ்ச்சியாகச் சொன்னாள் நந்தினி..

"வார்த்தை தவறிருச்சு.. உடனே நீ மலையேறிடாதே தாயே.."

"வார்த்தை தவறுகிற ஆளுக்கு.. இது சகஜம்தான்.."

"முதலில் நீ சண்டை போடறதைப் போலப் பேசறதை நிறுத்து.."

"சமாதானமாகப் பேச நமக்குள்ளே என்ன இருக்கிறது..?"

"உன் கழுத்தில நான் கட்டிய தாலி இருக்கிறது..."

நிதானமாக ஆதவன் சொன்னதும்.. அதுவரை சூடாகப் பேசிக் கொண்டிருந்த நந்தினி உக்கிரம் தணிந்தவளாக உதட்டைக் கடித்தாள்...

"இதுக்குத்தான் பேசறதுக்கு முன்னாலே எதையும் ஒரு தடவைக்கு ரெண்டு தடவை யோசிச்சுப் பேசனும்கிறது.." இடக்காக சொன்னான் ஆதவன்..

நந்தினி பதில் பேசவில்லை..

"சொல்லு.. நான் என்ன செஞ்சா நீ என்கூட கிளம்பி வருவ..?" ஆதவன் கேட்டான்..

நந்தினி டேபிளில் இருகைகளையும் ஊன்றி அதில் முகம் வைத்து அவனையே ஊன்றிப் பார்த்தாள்...

"என்ன..? யோசனை பலமாயிருக்கு..?" புருவங்களை உயர்த்தினான்.. ஆதவன்...

"இல்லை.. எதைக் கேட்கலாம்ன்னு யோசிக்கிறேன்.." நந்தினி மிதப்பாக பதில் சொன்னாள்..

"இப்ப உன் காட்டில மழை பெய்யுதுடி.. நீ எதையும் கேட்கலாம்..."

"ஊம்..? அப்படியா..? உங்க மில்லை எழுதித் தர்றீங்களா..?"

அவள் சிரிக்காமல் கேட்க.. அவன் முகம் மாறாமல்..

"வாங்கிக்க..." என்று சொன்னான்..

"அப்புறம்.. உங்க தோப்பு.. துரவு.."

"உன் பெயரில எழுதி வைச்சுட்டாப் போச்சு.."

"உங்க குடும்ப நகைகள் இருக்காமே.."

"அதுவும் வேணுமா...?"

"பின்னே..? வேணாமா..?"

"குடுக்கிறேன்.. இவ்வளவுதானா.. இன்னும் மிச்சம் மீதி இருக்கா..?"

"அதை அப்புறமாய் யோசிச்சுச் சொல்றேன்.."

"பாருடா.. இனியும் யோசிக்கனுமா..?"

ஆதவனின் எள்ளலில்.. இமைக்காமல் அவன் முகம் பார்த்தாள்...

நந்தினி.. சளைக்காமல் அவனும் பார்த்தான்.. ஒரு பெருமூச்சுடன் பார்வையைத் தழைத்துக் கொண்ட நந்தினி...

"எல்லாத்துக்கும் விலை வைச்சிருக்கீங்க போல..." என்றாள்..

"நான் வைக்கலை.. நீதான் கேட்ட.."

"உங்க சொத்து சுகம் எனக்கெதுக்கு..? நகை நட்டும் எனக்கெதுக்கு..?"

அவளின் கேள்வியில் ஆதவனின் முகம் மாறவில்லை.. உன்னை எனக்குத் தெரியாதா என்ற பார்வையுடன்தான் அவன் அமர்ந்திருந்தான்...

"உங்களுடன் கிளம்பி வர எனக்கு சில கண்டிசன்ஸ் இருக்கு.."

"சொல்லித் தொலை..."

"உங்களுக்குன்னு சில பழக்கங்கள் இருக்கு..."

நந்தினி அவன் முகம் பார்க்காமல் சொல்லிய விதத்தில் அவன் முகம் கன்றினான்...

"ம்ம்ம்..."

"நான் அங்கே இருக்கிற வரைக்குமாவது நீங்க அந்த பழக்கங்களை அடியோட விட்டிருக்கனும்..."

"அறிவோடதான் பேசறயா..? நானே என்ன நிலைமையில வந்து நிக்கறேன்.. இதில பழக்கமாவது.. வழக்கமாவது..."

"ஹலோ பாஸ்.. இன்னைக்கு நெருக்கடி இருக்கு.. அதை மறந்திருக்கீங்க... நாளைக்கே அது சரியாப் போச்சுன்னு வைங்க.. திரும்பவும் ஒரு கிண்ணத்தை ஏந்துகிறேன்னு உமர்கயாம் மாதிரி கிளம்பிட்டிங்கன்னா என்ன செய்றது..?"

"என்னைத் திருத்தத்தான் அங்கே வர்றதா நினைப்பா..?"

"அந்த நினைப்பு எனக்கெதுக்கு..? உங்க பெண்டாட்டியா.. உங்க பக்கத்தில நான் நிக்கனும்னா உங்களுக்கு இந்தப் பழக்கமெல்லாம் இருக்கக்கூடாது.. இது கண்டிசன் நம்பர் ஒன்.."

"பாக்கலாம்..."

"அந்தக் கதையே இங்கே வேணாம்.. கூடாதுன்னா கூடாதுதான்..."

"சரி..." எரிச்சல் பட்டான் ஆதவன்..

"உங்க கூடவே நிறைய ஜோடிக்கிளிகள் தொற்றிக்கிட்டு அலையுமே..."

"இப்ப எதுக்காக அதை இழுக்கற..?"

"நீங்க அதுகளில் எதையும் இழுக்கக்கூடாது.. இது கண்டிசன் நம்பர் டூ..."

"நானா யாரையும் தேடிப் போக மாட்டேன்.."

"ஊஹீம்.. உங்களைத் தேடி வந்தாலும்.. பற்றி விடனும்.. முடியுமா.. முடியாதா..?" கறாராக கேட்டாள் நந்தினி..

"செய்து தொலைக்கிறேன்.."

"ஓகே.. போகலாம்.." நந்தினி எழுந்து கொள்ள..

"இவ்வளவுதானா..?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் ஆதவன்..

"இவ்வளவுதான்.. வேற எவ்வளவு இருக்கும்னு நினைச்சீங்க..?"

"நீ கண்டிசன்ஸ்ன்னு சொன்னதும் பட்டியல் நீண்டிருமோன்னு பயந்துட்டேன்.."

பயப்படுகிற ஆளைப் பார் என்று நந்தினிக்குச் சொல்லத் தோன்றியது.. ஆனாலும் அவள் அதைச் சொல்லவில்லை.. அப்படியெல்லாம் இயல்பாக அவனுடன் பேசிவிட அவளால் முடியாது...

அவள் காயம் பட்டவள்.. உடல் காயம் ஆறிவிடும்.. மனக்காயம் ஆறுமா..? அவள் மனதின் ரணத்தை அவள் விழித்திருந்த இரவுகளும்.. கண்ணீரால் நணைந்து விட்ட தலையணையும் கதைகதையாய் சொல்லும்..

நந்தினி ஒரு பெருமூச்சோடு லீவு லெட்டரை எழுதி வயலெட்டிடம் கொடுத்து அனுப்பினாள்.. அவசர வேலைகளை முடித்து வைத்தாள்.. போனில் ஜி.எம்மிடம் அனுமதி வாங்கிக் கொண்டு எழுந்து நின்றாள்.. கூட வந்த ஆதவனிடம்..

"என் கார் இருக்கு.." என்றாள்..

"தியாகு சொன்னான்.. உன் வீடு வரை உன் காரில் நீ வருவது சரிதான்.. என் ஊருக்கு தனிக்காரில் நீ வருவது சரிவராது.."

நந்தினி பதில் சொல்லாமல் காரைக் கிளப்பினாள்.. வீட்டிலிருந்த ஈஸ்வரியிடம் ஆதவனை அடையாளம் சொன்னாள்.. அவள் விழுந்து.. விழுந்து ஆதவனுக்கு உபசாரம் செய்தார்..

"ஏங்க ஐயா.. எப்ப வெளிநாட்டிலிருந்து வந்தீங்க..?" என்று அவள் கேட்டபோது.. ஆதவன் நந்தினியின் முகம் பார்த்தான்..

"ஒரு வருசமா ஹஸ்பெண்ட் பார்க்க வராம இருந்தா.. இதைத்தானே மத்தவங்ககிட்டச் சொல்லியாகனும்.." நந்தினி முணுமுணுத்தாள்... மற்ற மூவரும் வேலையிலிருந்து திரும்பியிருக்கவில்லை...

ஒருவகையில் நந்தினிக்கு அது விடுதலை உணர்வை அளித்தது.. ஈஸ்வரிக்கு தெரியாத சில விவரங்கள் மற்ற மூன்று தோழிகளுக்கும் தெரியும்.. அவர்கள் கண்களில் படாமல் ஆதவன் இருப்பதில் ஒர்விதமான தர்ம சங்கடத்திலிருந்து தப்பித்து விட்ட உணர்வு அவளுக்கு..

பெட்டியில் துணிகளை அடுக்கியவள்.. கிளம்பி ஹாலுக்கு வந்தாள்.. டிவியின் செய்திச் சேனலில் கவனமாக இருந்த ஆதவன் அவளைக் கண்டதும் டிவியை அணைத்து விட்டு எழுந்தான்..

"போகலாமா...?"

"ம்ம்ம்..."

பூஜையறையில் குங்குமத்தை எடுத்து நெற்றி வகிட்டில் வைத்துக் கொண்டு கிளம்பியவளுக்கு கால்கள் பின்னின.. மனதுக்குள் பதட்டம் சுரந்தது.. அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் சமாளித்தபடி காரின் பின் பக்க கதவைத் திறக்கப் போனாள் நந்தினி..

"ம்ப்ச்.." ஆதவன் ஆட்சேபித்தான்..

"என்ன..?" புரியாமல் பார்த்தாள்..

"முன் பக்கமா வா.. பார்க்கிறவங்க என்ன சொல்லுவாங்க..?"

அவன் அதட்டியதும்.. முன் பக்காக ஏறி அவனுக்கு அருகே அமர்ந்தாள்.. கார் கிளம்பியது.. சாலையின் போக்கு வரத்தில் கலந்தது..

எந்த உறவின் அடிப்படையில் இவனுடன் கிளம்பியிருக்கிறோம் என்று நந்தினிக்குள் ஓர் விதமான அதிர்வு உண்டானது..

அவள் கழுத்தில் கிடந்த தாலி அந்த உறவைச் சொல்லியதுதான்.. ஆனாலும் அதற்கு எந்தவிதமான அர்த்தமும் இல்லாமல் அவன் செய்து விட்டானே..

ஊரறிய.. உறவறிய.. கெட்டி மேளம் ஒலிக்க.. நாதஸ்வர ஓசையுடன்தான் அவள் கழுத்தில் அவன் தாலியைக் கட்டினான்.. கட்டின மறுநொடியில் அவளைத் தள்ளியும் வைத்து விட்டான்..

"இது மனம் விரும்பிப் பண்ணிக்கிட்ட கல்யாணமில்ல.. நிர்பந்தத்தில பண்ணிக்கிட்டது.. இவகூட என்னால வாழ முடியாது.."

அவளைப் பெற்றவர்கள் பதைத்து நின்றார்கள்.. கூடப் பிறந்தவன் தள்ளி நின்றான்.. யாரைப் பற்றியும் கவலைப் படாமல் திருமண மண்டபத்தை விட்டு ஆதவன் வெளியேறி விட்டான்..

அந்த கணவனுடன்தான் நந்தினி கிளம்பியிருக்கிறாள்..

கம்யூட்டர்களின் ராஜாங்கம் கொடி கட்டிப் பறக்கும் ஹைதராபாத் நகரம்.. ஒரு பக்கம் நவின யுகத்தின் அடுக்கு மாடிக் கட்டிடங்கள்.. மறு பக்கம் பழமை மாறாத கோட்டைகள் என்று பழமையும் புதுமையும் பின்னிப் பிணைந்திருக்கும் பாரம்பர்ய பெருமை கொண்ட நகரம்.. அங்கே நிலை கொண்டிருக்கும் கோல்கொண்டா கோட்டை..!

பெரிய சுற்று மதில் சுவர்களுடன் இஸ்லாமிய அரசர்களின் வாழ்க்கை முறையையும்.. அவர்களின் கட்டிடக் கலையையும்.. இந்த உலகிற்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கும் அந்தக் கோட்டையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் நந்தினியின் மனதில்

ஏன் வந்தது என்று  இன்று வரை அவள் நொந்து கொண்டிருக்கிறாள்..

ஆஷாவும்.. கௌசல்யாவும் அன்று ஆச்சரியப் பட்டார்கள்..

"ஏண்டி மைசூர் போகலாம்ன்னு பிளான் பண்ணி அங்கேயிருக்க பிருந்தாவனத்தைப் பார்க்கனும்னு சொல்லுவியா.. அதைவிட்டுட்டு ஹைதராபாத் போகலாம்.. கோல்கொண்டா கோட்டையைப் பார்க்கலாம்.. கொடியை நாட்டலாம்ன்னு என்னடி பிளான் போடற..?"

"எனக்கு அந்த கோட்டையைப் பார்க்கனும்.."

"அதைத்தான் ஏன்னு நாங்க கேட்கிறோம்.."

ஏன்..? அதுதான் இன்றளவும் அவளுக்குத் தெரியவில்லையே.. எது அந்தக் கோட்டையை நோக்கி அவளை அழைத்தது..? விதியா..?

அன்று நந்தினியிடம் இந்த யோசனைகளில் எதுவுமே இல்லை...

"சின்ன வயசில பார்த்த ஞாபகம் ஆஷா.. திரும்பவும் பார்க்கனும் போல இருக்கு.."

"இவளைப் பாருடி.. என்னவோ.. சின்ன வயசில ஏதாச்சும் டிரவுசர் போட்ட பையன் கூட ஆத்தோரமா ஓடி.. மணல் வீடு

கட்டி விளையாடிட்டு.. வளர்ந்த பின்னாலே அவனைத் தேடி.. அப்பப் பாடின பாட்டைப் பாடிக்கிட்டுப் போறதைப் போல பேசிவைக்கிறா..." மேகா அதற்கும் கிண்டலடித்தாள்..

"நீங்க என்ன வேணும்னாலும் கலாய்ச்சிங்க.. எனக்கு அந்தக் கோட்டையைப் பார்த்தாகனும்.." பிடிவாதம் பிடித்தாள் நந்தினி..

"என்னடி நந்து.. இப்படி அடம் பிடிக்கிற.. மைசூர்ன்னா அங்கே பிருந்தாவனம் இருக்கு.. பெங்களூர்ன்னா லால் பார்க் இருக்கு.. போதாக் குறைக்கு அந்த ஊரே கார்டன் சிட்டி.. கிடைச்சிருக்க இரண்டு நாளில மூணு பேரும் வேற எங்கயாவது போகலாம்டி.." கௌசல்யா சொல்லிப் பார்த்தாள்..

"எனக்கென்னவோ.. கௌசி சொல்றது பெட்டர்ன்னு தோணுதுப்பா நமக்கு ஒன்னுபோல ஒருநாள் லீவு கிடைக்கிறதே கஷ்டம்.. எனக்குக் கிடைச்சா இவளுக்கு கிடைக்காது.. இவளுக்கு கிடைச்சா அவளுக்கு கிடைக்காது.. உனக்குப் பரவாயில்லை.. சன்டே லீவு கன்பர்ம்.. நாங்க அப்படியில்ல.. ஐடி ஃபீல்டில் இஷ்டத்துக்கு லீவு கிடைக்கும்.. இதில சேர்ந்தாற்போல ரெண்டு நாள் லட்டு போல கிடைச்சிருக்கு.. எவளுக்கும் ஊரைப் பார்க்கப் போகிற வேலை.. இப்ப இல்லை.. டூரைப் பார்க்கப் போகலாம்ன்னா.. நீ கோட்டைக்கு போகலாம்கிற.."

அலுத்துக் கொண்டாலும்.. அவள் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்து இரண்டாம் நாள் அவளை கோல்கொண்டா கோட்டையைப் பார்க்க அழைத்துச் செல்வதாக அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள்..

"பட்.. முதல்நாள் முழுக்க பெங்களூர்தான்.. அதில சொதப்பின மகளே... உன்னை பொலி போட்டிருவேன்.."

எச்சரித்துத்தான் அவளை அழைத்துப் போனார்கள்.. பெங்களூரில் ஊரைச் சுற்றிவிட்டு.. அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வந்தபோது.. மற்றவர்கள்.. தூக்கம் கண்களைச் சுழற்றுகிறது என்று தூங்கப் போய்விட..

நந்தினி மட்டும்.. அறையை விட்டு வெளியே வந்து.. நீண்ட காரிடாரின் முடிவிலிருந்த பால்கனிக்குப் போய் நின்றாள்...

அங்கேயிருந்து பார்த்த போது.. பெங்களூர் நகரின் அனைத்து அம்சங்களும் அழகான கோணத்தில் தெரிந்தன.. ஹோட்டலுக்கு முன்புறமிருந்த நீச்சல் குளத்தின் அருகே.. பூங்காவைப் போன்ற தோட்டம் அமைந்திருக்க.. அங்கே.. ஜோடிகள் பலர் கை கோர்த்துக் கொண்டு அலைந்தார்கள்...

'காதலர்களை உலகமே காதலிக்கும்..' லேசாக சிரித்துக் கொண்டே பார்வையை திருப்பிக் கொண்டாள்..

இவர்கள் எல்லோருமே காதலர்களாக இருப்பார்களா என்ற நினைவு அவளுக்குள் எழுந்தது.. அப்போதுதான் அவனைப் பார்த்தாள்.. நந்தினி...

அன்று முழுவதும் பல இடங்களில் அவனை அவள் பார்க்க நேர்ந்திருந்தது.. ஒவ்வொரு முறையும் அவன் அருகே ஒரு பெண் இருந்தாள்..

"என்னடி இவன்.. இப்படி மன்மத லீலையைப் பண்றான்..?" ஆஷா முகம் சுளித்தாள்..

"ம்ஹீம்.. இவனுக்குன்னு மாட்டாறாளுக பாரு.. இவளுகளைச் சொல்லனும்.. இதுக்குன்னே ஊரைச் சுத்த வர்றானுக.." கௌசல்யா எரிச்சல் பட்டாள்..

"ஆள் பார்க்க நன்றாகத்தான் இருக்கான்.." மேகா அவனை ஏற இறங்கப் பார்த்தாள்..

"நான் போய் வேணும்னா அட்ரஸைக் கேட்டுட்டு வந்து சொல்லவா..?"

நந்தினிதான் அவளைக் கேலிபண்ணிச்சிரித்தாள்.. அந்த 'அவன்..' நீச்சல் குளத்தின் அருகே நின்று வேறொரு பெண்ணின் முகத்தோடு முகம் வைத்து ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான்..

'இவ வேற போல இருக்கே..'

மாலையில் பார்த்தவளின் நினைவில் முகம் சுளித்தாள் நந்தினி.. அந்தப் பெண்ணுடன் பேசியபடி தலையை நிமிர்த்திப் பார்த்தவன் பால்கனியில் நின்று கொண்டிருந்த நந்தினியைப் பார்த்து விட்டான்.. அருகில் இருந்த பெண்ணை விட்டுவிட்டு.. அவன் நந்தினியை பார்க்க ஆரம்பித்ததில் நந்தினி அரண்டு போனாள்.. அவசரமாக பின்னுக்கு நகர்ந்து சற்று நேரம் நின்று விட்டு.. மெதுவாக எட்டிப் பார்த்தாள்.. நீச்சல் குளத்தின் அருகே அவன் இல்லை...

'அப்பாடி..' நிம்மதிப் பெருமூச்சுடன் வேடிக்கை பார்க்க வாகாக தள்ளி நின்று கொண்டவள்... மீண்டும் பெங்களூரின் அழகை ரசிக்கத் தொடங்கினாள்..

"என்னைத்தானே தேடற..?"

அவள் முதுகுக்கு பின்னால் கேட்ட குரலில் அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.. பதறிப் போனவளாக திரும்பிப் பார்த்தாள்.. அந்த அவன் நின்று கொண்டிருந்தான்..

'இவன் என்கிட்டயா பேசினான்..?' அவளால் நம்ப முடியவில்லை..

வேறு யாரும் பக்கத்தில் நிற்கிறார்களா என்று பார்வையால் துழாவினாள்.. யாரையும் காணோம்...

இருந்தும்கூட அவன்.. அவளிடம்தான் பேசியிருக்கிறான் என்பதை அவள் மனம் நம்ப மறுத்தது.. யாரேனும் அவனருகில் இருந்திருக்கலாம்.. அவர்களிடம் அவன் பேசியிருக்கலாம் என்று தனக்குத் தானே சமாதனம் சொல்லிக் கொண்டபடி.. அங்கிருந்து நகர முற்பட்டாள் நந்தினி...

"நான் கீழே நின்னப்ப அப்படிப் பாத்த.. இப்ப என்னடான்னா ஓடப் பார்க்கிற.. திருட்டுத்தனமாய் சைட் அடிக்கத்தான்.. உனக்குப் பிடிக்குமா..?" அவள் முகம் பார்த்து கேட்டான் அவன்..

அவளுக்கு 'சுரீர்' என்றது.. அவளிடம்தான் அவன் பேசிக் கொண்டிருக்கிறான் என்பது ஊர்ஜிதமாகி விட..

"மைன்ட் யுவர் வெர்ட்ஸ்.." என்று படபடத்தாள்..

இவனைப் போய் அவள் ஒளிந்திருந்து பார்வையிட்டாளா..? என்ன வார்த்தை சொல்லி விட்டான் என்று அவள் ரத்தம் கொதித்தது..

அவளுடைய கோபத்தை அவன் சட்டை செய்யவே இல்லை.. மாறாக ரசனையுடன் பார்த்து விட்டு..

"கோபத்திலும் நீ அழகா இருக்கே.. காலையில இருந்தே உன்னை வாட்ச் பண்ணிக்கிட்டுத்தான் இருக்கேன்.. நான் எங்கே போனாலும்.. ஃபாலோ பண்ணிக்கிட்டு வந்த.. என்ன..? கண்டதும் காதலா..?" என்று போதையுடன் கேட்டான்..

"அடக் கடவுளே.." என்று வாய் விட்டே சொல்லி விட்டாள் நந்தினி அவனைப் போய் அவள் தொடர்ந்து சென்றாளா..? இருந்தாலும் அவனுக்கு இவ்வளவு தன்னம்பிக்கை ஆகாது என்றிருந்தது அவளுக்கு.. அதை வாய் விட்டும் சொல்லி விட்டாள்..

"ஏன்..? எனக் கென்ன குறைச்சல்..?" என்று கேட்டான் அவன் அத்துடன் நிறுத்தாமல்..

"நான் பார்க்க நல்லாத்தான் இருக்கேன்னு உன் பிரண்ட் ஜொள்ளு விட்டாளே.. நீ கூட என் அட்ரஸைக் கேட்டுக்கிட்டு வரவான்னு அவகிட்ட கேட்டயே... அட்ரஸை யாருக்காக கேட்கணும்னு நினைச்சே..? அவளுக்காகவா.. இல்லை.. உனக்காகவா..?" என்றும் கேட்டு வைத்தான்..

இதையெல்லாம் அவன் கேட்டுக் கொண்டிருந்திருப்பான் என்று நினைத்தும் பார்த்திராத நந்தினி பயந்து போய் விட்டாள்..

விளையாட்டாய் அவள் கேட்டது வினையாகி விடுமோ என்ற நடுக்கத்துடன்..

"நாங்க சாதாரணமா அரட்டையடிச்சுக்கிட்டு இருந்தோம்.. நீங்க அதைக் கேட்டுட்டு தப்பா அர்த்தம்

பண்ணிக்கிட்டிங்க.." என்று சமாதானம் சொல்ல முற்பட்டாள்..

"ஏன் பயப்படற..?" அவன் உல்லாசமாக சிரித்தான்..

"நான்தான் உன்னைக் கோவிச்சுக்கவே இல்லையே.." அவளை சமாதானப் படுத்தும் விதத்தில் அவன் சொல்ல ஆரம்பிக்க.. அவளுக்கு சுவற்றில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது..

அவன் யார்..? அவள் யார்..? அந்த இரவு வேளையில் அவனைப் போன்ற குணம் படைத்தவனுடன் தனித்து நின்று அவள் பேச வேண்டிய அவசியமே இல்லையே...

"அப்படியா சார்.. தேங்க்ஸ்.."

விட்டால் போதும் என்று அவள் பேச்சை முடித்துக் கொண்டு அங்கிருந்து ஓட முற்பட.. அவன் கைநீட்டி அவளைத் தடுத்தான்..

"இரு.. இன்னும் நான் பேசவேண்டியது நிறைய இருக்கு.."

அவளிடம் பேச அவனுக்கு என்ன இருக்கப் போகிறது என்ற நினைவில் அவளின் அடிவயிறு கலங்கியது.. துணைக்கு தோழிகள் இல்லாமல் அறையை விட்டு வெளியே வந்த தனது அறிவுகெட்ட தனத்தை அவள் நொந்து கொண்டாள்..

"உங்களுக்கும்.. எனக்கும் பேச என்ன இருக்கு சார்..? நாங்க ஊரைச் சுத்திப் பார்க்க வந்தோம்.."

"நானும்தான்.. நீ எந்த ஊர்..?"

அவன் விடாமல் கேள்வி கேட்டதில் அவள் இழுத்துப் பிடித்து வைத்திருந்த பொறுமை காற்றில் பறந்து விட்டது..

"அது எதுக்கு உங்களுக்கு..?"

"ஊம்..? எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு.."

"என்னது..?" அவள் அலறிவிட்டாள்..

காலையிலிருந்து.. மாற்றி.. மாற்றி அவனுடன் கொஞ்சிக் குழாவிக் கொண்டிருந்த பெண்களின் எண்ணிக்கை

நினைவில் வந்ததில் அவள் கொதிநிலைக்குப் போனாள்..

"யாரைப் பார்த்து என்ன கேள்வி கேட்கிற..?"

அவள் மரியாதையை கைவிட்டதில் அவன் முகம் மாறிப் போனான்...

"அப்படிக் கேட்கக் கூடாத எந்தக் கேள்வியை நான் கேட்டுட்டேன்..?"

"நான் எந்த ஊருன்னு நீ கேட்கல..?" நந்தினி ஆத்திரத்துடன் கேட்டாள்..

"கேட்டேன்தான்.. அதில என்ன தப்பிருக்கு..?"

"உனக்கு எதுவுமே தப்பில்லைதான்.. எனக்கு அப்படியில்ல.. தப்பான ஆள் வாயில இருந்து வர்றதெல்லாம் தப்பாத்தானே இருக்கும்..?"

அவள் வெறுப்புடன் அவனைப் பார்த்து முகம் சுளிக்க.. அவன் முகம் பாறையைப் போல இறுகியது...

"ஓ.." உதட்டை இகழ்ச்சியாக வளைத்து ஒற்றைச் சொல்லைச் சொன்னான்..

"என்னைப் பிடிச்சிருக்குன்னு எப்படி நீ சொல்லலாம்..?"

"ஏன்..? சொன்னால் என்ன..? இப்பவும் சொல்றேன்.. உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு.." அவன் நிதானமாகச் சொன்னான்..

"ச்சீ.. தரம் கெட்ட தனமாய் பேசாதே.." நந்தினி சீறினாள்..

அவளின் 'ச்சீ..' என்ற வார்த்தையில் அவன் கண்களில் கொலை வெறி எழுந்தது.. அவனுக்குள் உறங்கிக் கொண்டுருந்த மிருகத்தை உசுப்பி விட்டு விட்டதை அறியாதவளாக நந்தினி படபடத்துக் கொண்டிருந்தாள்..

"நீயெல்லாம் ஒரு மனுசனா..? தூ.."

இப்போது அவன் இமை மூடி.. கைகளைக் குவித்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.. இமைதிறந்து

அவளைப் பார்த்தபோது அவன் விழிகளில் வேட்டைக்காரனின் தீவிரம் தெரிந்தது...

"உன்னைப் பிடிச்சிருக்குன்னு சொன்னதுக்கு இத்தனை பேச்சா..? அது தரம் கெட்டதா..? ஏன்.. நீ தரம் கெட்டவளா...?"

நிதானமாக அவன் வினவிக் கொண்டிருக்க.. நந்தினி நிதானமிழந்து விட்டாள்...

"ஏய்ய்..." என்று ஒற்றை விரலை உயர்த்தி அவனை எச்சரித்தவள்.. "செருப்பு பிய்ஞ்சுடும்..." என்று சத்தம் போட்டாள்..

அதே நேரத்தில் பாத்ரூம் போக எழுந்த ஆஷா.. நந்தினியைக் காணாமல்.. அவளைத் தேடிக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள்...

## 11

எது நடந்ததோ.. அது நன்றாக நடக்கவில்லை.. அப்படியெல்லாம் நடக்குமென்று நந்தினி நினைத்துக் கூடப் பார்த்திருக்கவில்லை.. அவளைத் தேடி வந்த ஆஷா.. நந்தினியின் வார்த்தைகளைக் கேட்டதும் முன்னே பின்னே யோசிக்காமல் மற்ற தோழிகளை எழுப்பி விட்டு கூட அழைத்துக் கொண்டு வந்து விட்டாள்.. நந்தினியை சூழ்ந்து கொண்டவர்கள் மாற்றிமாற்றி கேள்வி கேட்க.. நந்தினி பதட்டத்துடன் வாய்க்கு வந்ததைச் சொல்லி விட்டாள்..

"என்னாச்சு நந்தினி..?"

"இவன் தப்பாப் பேசறான் ஆஷா.."

"சும்மாவா விட்ட.."

"அதான் செருப்பைச் சொன்னியா..?"

"சொல்லியிருக்கக் கூடாது.. செய்த காட்டியிருக்கனும்.."

ஆளாளுக்கு அவனைக் காய்ச்சி எடுக்க.. ஹோட்டல் மேனேஜரின் காதுக்கு விவரம் பறந்தது.. அவர் அவசரமாக அங்கே ஓடி வந்தார்.. விளக்கம் சொல்ல முற்பட்ட ஆதவனை அவர் பேசவே விடவில்லை..

"ஐ நோ யு மிஸ்டர் ஆதவன்.. உங்க பெர்ஸனல் எங்களுக்கு தேவையில்லை.. பட் தி ஸேம் டைம்.. எங்க ஹோட்டலில் தங்க வருகிற பேமிலி கேர்ள்ஸிடம் நீங்க இன் டீஸன்டா பிஹேவ் பண்ணினா.. அதைப் பார்த்துக்கிட்டு ஹோட்டல் நிர்வாகம் சும்மா இருக்காது.."

"என் சைடு என்னன்னு நீங்க கேட்கவே மாட்டீங்களா மேனேஜர்..? இந்தப் பெண்ணிடம் நான் சாதாரணமாகத்தான் பேசினேன்.."

"அவங்க அப்படிச் சொல்லலையே.."

"அவங்க சொல்வதைத்தான் நம்புவீங்களா..? நான் சொல்கிறதை நம்ப மாட்டிங்களா..?"

"ஸாரி மிஸ்டர் ஆதவன்.. அவங்க ரெஸ்பக்டபிள் பெர்ஸன்.. உங்களைப் பற்றி வேண்டும்ன்னே பேசனும்னு அவங்களுக்கு என்ன வேண்டுதலா இருக்கு..?"

"ஓ..."

அப்போது ஆதவன் பார்த்த பார்வையை நந்தினி ஆயுள் முழுவதுக்கும் மறக்க மாட்டாள்.. வெறி கொண்ட வேட்டைநாயின் பார்வையாக அது இருந்தது..

"ஓகே.. இப்ப நான் என்ன செய்யனும்..?"

"அவங்களிடம் ஸாரி கேளுங்க.."

மேனேஜர் தீர்மானமாகச் சொல்லிவிட்டார்... நீண்ட மூச்சுக்களை இழுத்து விட்டு தன்னை நிதானப் படுத்திக் கொண்ட ஆதவன்...

"ஸாரி.." என்று நந்தினியின் முகம் பார்த்துச் சொன்னான்...

அவள் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. ஆதவன் திரும்பி அவன் அறையை நோக்கி நடந்து

விட்டான்..

"நீயேண்டி இவன் கண்ணில் படறதைப் போல வெளியில வந்த..?"

"பெங்களூர் வியுவைப் பார்த்து ரசிக்க நினைச்சேன் கௌசி.."

"இவனுகளை மாதிரி ஆளுக இருக்கிற இடத்தில நாமதாண்டி ஜாக்கிரதையா இருக்கனும்.."

அவர்கள் தூங்கப் போய் விட்டார்கள்.. நந்தினியால் தூங்க முடியவில்லை.. இமை மூடினால் வெறி கொண்ட பார்வையுடன் ஆதவனின் முகமே கண்ணுக்குள் வந்து நின்றது..

விடிந்ததும்.. கோல்கெண்டா கோட்டையைப் பார்க்கப் போனார்கள்.. நந்தினியிடம் மெல்ல.. மெல்ல.. பழைய கலகலப்பும்.. சிரிப்பும் திரும்பி வந்தன.. நடந்ததை அவள் மறந்தே போனாள்..

'வாவ்..! பெண்டாள்டிக்..! மார்வலங்..!'

கோட்டையின் ஒவ்வொரு அங்குலத்திலும் அவள் பிரமித்துப் போனாள்.. அதை உன்னிப்பாய் ரசித்தபடி தன் செல் போனில் படம் பிடித்தவள் தோழிகளிடமிருந்து பின் தங்கிவிட்டாள்..

மகாராணிகளின் மாளிகையின் படிக்கட்டுகளில் இறங்கிய போது.. இருள் சூழ்ந்த பாதாள அறை அவளை வரவேற்றது..

"பயமாயிருக்குல்ல ஆஷா.." என்றபடி திரும்பிய நந்தினி பயந்து விட்டாள்..

அங்கே அவளின் தோழிகளைக் காணவில்லை.. மாறாக..

"எனக்கு பயமாயில்லையே.." என்றபடி ஆதவன் நின்று கொண்டிருந்தான்..

நந்தினி மிரண்டு போனவளாக சுற்று முற்றும் பார்த்தாள்... யாரும் அங்கே தென்படவில்லை... படிகளின்

உச்சியிலிருந்த வேலைப்பாடுகளுடன் கூடிய கனத்த மரக்கதவு சாத்தப் பட்டிருந்தது...

இறங்கும் போது வெளிச்சத்தை அள்ளி இறைத்துக் கொண்டிருந்த அந்த அறையில் இருள் சூழ்ந்ததின் காரணம் அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது...

யாருமற்ற பாதாள அறையில்.. மங்கிய வெளிச்சத்தில் அவனிடம் சிக்கிக் கொண்டதை உணர்ந்து கொண்டவளின் நாவறண்டது.. அவள் கையிலிருந்த செல்போனில் ஆஷாவின் நம்பர் தெரிய.. அவசரமாய் அதை அழுத்தினாள்...

"ஆஷா.." நந்தினி அலறியபோது.. அவள் கையிலிருந்த செல்போன் பறிக்கப் பட்டது...

"நந்தினி.." அஷா மறுமுனையில் பதறிக் கொண்டிருக்க செல்போன் தரையில் விழுந்தது...

"வேண்டாம் கிட்ட வராதே.." நந்தினி எச்சரித்தாள்...

"வந்தால்.. என்ன செய்வ..?" ஆதவன் எகத்தாளமாக கேட்டான்...

"நீ நினைக்கிறதைப் போல பெண் நானில்லை..."

"நான் என்ன நினைச்சேன்னு நினைச்சே..?"

"என்கூட விளையாடாதே..."

"நீ சொல்கிறப்பவே எனக்கு விளையாடிப் பார்க்கனும்னு ஆசை வருதே ம்ம்..? என்ன செய்யலாம்..?"

அவன் நெருங்கினான்.. அவளின் சேலை முந்தானயில்.. அவன் கை படிந்தது.. இழுத்தது..

எதுவும் நடக்கவில்லை.. ஆனால்.. நந்தினியின் சேலை அவன் கையில் இருந்தது.. பாதாள அறையின் கதவு பலமாக தட்டப்பட ஆரம்பித்த போது.. அவன் கையிலிருந்த சேலையை அவள்மேல் எறிந்தான்...

"உன் பிரண்ட்ஸ்தான் வந்திருக்காங்க... தனியா வந்திருக்க மாட்டாங்க.. ஊரைக் கூட்டிக்கிட்டுத்தான் வந்திருப்பாங்க..

போ.. போய் அவங்ககிட்ட எதுவும் நடக்கலைன்னு சொல்லு.. யாரும் நம்ப மாட்டாங்க.. இல்ல.. என்ன நடந்ததுன்னு சொல்ல முடிஞ்சாச் சொல்லு.. போலிஸ்கிட்டப் போ.. உன் மேல என் விரல் கூடப் படலைங்கிறப்ப என்ன குற்றத்தை என் மேல சொல்லுவ..? நீ ரெஸ்பக்டபிள் பெர்ஸனாமே..? அந்த மேனேஜர் சொன்னானே.. இப்ப கதவைத் திறக்கிறேன்.. உன் ரெஸ்பெக்ட் என்னன்னு இந்த ஊரே தெரிஞ்சுக்கட்டும்..."

அவன் பேசிக் கொண்டிருந்த போதே அவசரமாக சேலைக்குள் புகுந்து விட்டாள் நந்தினி.. இருந்த போதும் அவன் கதவைத் திறந்த போது வெளியே குழுமியிருந்த கூட்டம்.. உடைகளைச் சரிசெய்து கொண்டிருந்தவளைத்தான் பார்த்தது...

"என்னம்மா.. நீங்க என்னவோ சொன்னீங்க.. உள்ளே வேற மாதிரி இருக்குதே..."

கோட்டையின் காவலாள்களில் ஒருவர் சந்தேகத்துடன் நந்தினியைப் பார்த்தபடி ஆஷாவிடம் கேட்டார்.. கையிலிருந்த செல்போனை காதுக்கு கொடுத்திருந்த அவள் உள்ளே நடந்த அனைத்துப் பேச்சுக்களையும் கேட்டிருந்தாள்.. என்ன சொல்வது என்று புரியாதவளாய் நந்தினி தோழியின் அருகே ஓடினாள்...

"ஏன் சார்..? இது பப்ளிக் பிளேஸ்.. இங்கே போய் இப்படியா நடந்துக்குவீங்க..?" காவலாளி தலையில் அடித்துக் கொள்ள...

"என்ன செய்யச் சொல்றிங்க..? அவதான் சொல்லச் சொல்லக் கேட்காம என்னைக் கூப்பிட்டுக்கிட்டு வந்துட்டா..." என்று கண் சிமிட்டினான் ஆதவன்...

இழுத்துப் போர்த்திய சேலையுடன் வெளியே வந்த நந்தினியை அங்கே கூடிநின்ற கூட்டம் பார்த்த பார்வையில் அவள் உடல் கூசிப் போனாள்.. ஆதவனைக் கடக்கும் போது அவன் தாழ்ந்த குரலில்...

"என்னடி..? உன் காலில் செருப்பு இல்லையா..?" என்று கேட்டான்...

பதிலுக்கு தீப்பொறி பறக்கப் பார்த்த நந்தினியை அலட்சியத்துடன் பார்த்தபடி எதுவுமே நடக்காததைப் போல போயே போய்விட்டான்...

"இந்தப் பொண்ணு யாராம்...?"

"அவன் பாட்டுக்கு போயிட்டானே..."

"இதுக கோட்டையைப் பார்க்கவா வந்துச்சுக..? தூ..."

"காலம் கெட்டுப் போச்சு.. பார்த்தா பதவிசா இருந்துக்கிட்டு இது என்ன வேலை பண்ணியிருக்கு..?"

"அதான் ஊருக்குள்ளே ஆயிரம் இடம் இருக்கே.. அதையெல்லாம் விட்டுட்டு.. இங்கேயா..? ச்சீ.."

முதல்நாள் இரவில் ஆதவனைப் பார்த்து அவள் சிந்திய 'ச்சீ' யும்.. 'தூ'வும் அவளிடம் இப்போது திரும்பி வந்து கொண்டிருந்தன... அவனின் வேட்டை நாயின் பார்வைக்கான அர்த்தத்தை அப்போதுதான் புரிந்து கொண்டாள் நந்தினி...

சுற்றியிருந்தவர்களின் பேச்சில் உடலும்.. மனமும் குன்றிப் போனவளாக அரை மயக்க நிலைக்கு போய்விட்ட நந்தினியை அவளின் தோழிகள் தாங்கிப் பிடித்துக் கொண்டார்கள்... கோட்டையைச் சுற்றிப் பார்க்காமலே அறைக்குத் திரும்பி விட்டார்கள்...

பித்துப் பிடித்தவளைப் போல சுவரில் சரிந்து அமர்ந்து விட்டாள் நந்தினி... அவளைத் தேற்ற முயன்று அவர்கள் தோற்றார்கள்..

"எதுவும் நடக்கலையே.. அதை நினைச்சு மனசைத் தேத்திக்க நந்தினி.."

"எதுவும் நடக்கலையா..?"

துயரத்துடன் அவள் பார்த்த பார்வையில் மயூரியின் வாய் அடைத்துக் கொண்டது..

"போலிஸீக்குப் போகலாமா..?"

"என்னன்னு சொல்றது கௌசி..?"

அந்த வழியும் அடைபட்டது...

"விட்டுத் தொலைடி..."

"விட்டுட்டு..?"

அதற்கும் மேகாவிடம் கேள்வி கேட்டாள் நந்தினி...

"இப்ப என்னதாண்டி செய்கிறது..?"

"தெரியலை.. ஆனா.. ஏதாச்சும் செய்யனும் ஆஷா.. அது மட்டும் தெரியும்..."

நந்தினி சென்னைக்கு கிளம்பவும் மறுத்தாள்... அவளைத் தனியே விட்டுப் போக முடியாமல்... அவளுடைய தோழிகள் தவித்தார்கள்.. பாதி ராத்திரியில் ஆஷாவை அவள் எழுப்பினாள்..

"எனக்கு அவன் யாருன்னு தெரிஞ்சாகனும் ஆஷா..."

அனைத்தையும் செல்போன் வழியே கேட்டிருந்த ஆஷா இரக்கத்துடன் தோழியைப் பார்த்தாள்.. அவளின் நிலைமை அவள்மனத்தை உருக்கியது...

"விடிஞ்சதும் மேனேஜரிடம் கேட்டுச் சொல்கிறேன்..."

சொன்னதைச் செய்துவிட்டாள் ஆஷா.. அவள் என்ன சொன்னாளோ.. ஏது சொன்னாளோ.. ஆதவனைப் பற்றி அவருக்குத் தெரிந்த விவரங்களை ஆஷாவிடம் ஒப்பித்து விட்டார் மேனேஜர்...

"சோழவந்தானுக்கு பக்கத்திலே ஏதோ ஊரணின்னு பெயர் வருகிற கிராமமாம்.. மதுரையில பெரிய மில்லு வைச்சிருக்கானாம்.. பெரிய பணக்காரணம்.. அடிக்கடி இங்கே வருவானாம்.. இஷ்டத்துக்கு ஆட்டம் போடுவனாம்..."

"பேரு என்னவாம்...?"

"ஆதவனாம்..."

அன்றுதான் அவன் பெயரை அறிந்தாள் நந்தினி... சென்னைக்கு வந்தவுடன் அலுவலகத்தில் தொடர் விடுப்பைப் போட்டு விட்டு... அடுத்ததாக அவனது ஊரை அறியும் வேலையில் இறங்கிவிட்டாள்...

"அந்த ஊருக்குப் பெயர் செக்கானூரணி மேடம்.."

அவள் உதவி கேட்ட டிடெக்டிவ் ஏஜன்ஜியின் ஆள் சொன்னார்...

'அன்றொரு நாள்...

அவனுடைய பெயரைக் கேட்டேன்...

அடுத்த நாள்...

அவனுடைய ஊரைக் கேட்டேன்..

இன்று வரை...

அவன் முகத்தை நானும் காணேன்...'

என்றோ ஓர்நாள் அவள் கேட்ட பாடல் அவள் மனதில் ஒலித்தது...

12

"ஊருக்கு பெரிய வீடு.. கௌரவமான குடும்பம்.." டிடெக்டிவ் ஏஜன்ஸிக்காரன் சொல்லிக் கொண்டே போக...

"ஓ..." என்று இகழ்ச்சியாக உதட்டை வளைத்தாள் நந்தினி..

அவன் குடும்பம் மட்டும் கௌரவமாக இருக்க வேண்டும்.. அவள் குடும்பம் அந்த கௌரவத்தை இழக்க வேண்டுமா..?

அப்படிப்பட்ட நடத்தை உடையவனைப் பெற்ற குடும்பமே நிம்மதியாக வாழும்போது.. அவளைப் போன்ற மகளைப்

பெற்ற அவளின் குடும்பம் நிம்மதியை இழந்து தவிக்க வேண்டுமா..?

"சார்... எனக்கு இன்னும் கொஞ்சம் இன்பர்மேசன் வேணும்..."

திரட்டிய விவரங்களுடன் அவள் தனது வக்கீல் தோழியை அணுகினாள்.. அவள் சொன்னதையெல்லாம் பொறுமையாக கேட்டுக் கொண்ட அந்தத் தோழி.. யோசித்தாள்...

"இது சக்ஸாஸ் ஆகும்ன்னா நினைக்கிற..?"

"மே..பி..! ஆகலைன்னா வேற வழி இருக்கு.."

"என்ன..?"

"அவங்க வீட்டு முன்னாலே சாகும் வரை உண்ணாவிரதம்ன்னு கூடாரம் கட்டி... தட்டி கட்டி.. மீடியாக்களுக்கு தகவல் கொடுத்திட்டு உட்காரப் போறேன்..."

"இதை என் லெட்டரில் நோட் பண்ணவா..?"

"இதைத்தான் முக்கியமாச் சொல்லனும்..."

"லெட்டரை யார் பெயருக்கு அனுப்பனும்..? அவன் பெயருக்கா..?"

"ஊஹீம்.. அவன் அம்மா பெயருக்கு அனுப்பு..."

இப்படிச் சொன்னவளை ஆச்சரியத்துடன் பார்த்தாள் அந்தத் தோழி....

"ஏண்டி..? அவனோட அண்ணன் பெயருக்குக் கூட அனுப்பலாமே.."

"அதுக்கு ஒரு பலனும் இருக்காது சுசி.. அண்ணன்காரர் அம்மா காதுக்கு விசயத்தை போக விடாம அமுக்கத்தான் பார்ப்பார்.. தம்பிகாரனை கூப்பிட்டு விசாரிப்பார்.. இவன் இல்லேம்பான்... தேவையா...?"

நந்தினியின் சொல்படி கடிதம் தயாரானது...

மதிப்பிற்குரிய செண்பகவள்ளி அவர்களுக்கு...

தங்களின் செல்ல மகன்.. சின்ன மகன்.. ஆதவனால் என் கட்சிக்காரரர் நந்தினி பாதிக்கப்பட்டிருக்கிறார்.. அவர் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர்.. உயர் படிப்பைப் படித்தவர்... பொறுப்பான பெரிய பதவியில் இருப்பவர்..

சமூகத்தில் உயரிய நிலையில் வாழும் அவரின் நற்பெயருக்கு களங்கம் விளைவித்து விட்டார் உங்கள் மகன் ஆதவன்.. இதற்கான பரிகாரமாக நந்தினியை உங்கள் மகன் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அவர் கோருகிறார்... அவ்வாறு அவரை

உங்கள் மகன் திருமணம் செய்து கொள்ள மறுத்தால்.. உங்கள் ஊரில்.. உங்களது பாரம்பரியம் மிக்க வீட்டின் முன்பு சாகும்வரை உன்னாவிரதமிருக்கும் முடிவோடு அவர் இருக்கிறார்.. அப்படி அவர் உண்ணாவிரதமிருந்தால் அவர் ஏன் உண்ணாவிரதம் இருக்கிறார் என்பதற்கான விவரத்தை அனைத்து தொலைக்காட்சிகள் உள்ளிட்ட ஊடகங்களுக்கு தெரியப் படுத்தும் முடிவுடன் இருக்கிறார்.. இது குறித்த உங்களின் பதிலை ஒரு வாரத்திற்குள் எனக்குத் தெரியப் படுத்தவும்...

கடிதம் சுசிலாவின் கையெழுத்தோடு செண்பகவள்ளிக்கு பறந்தது.. மாதவனுக்கு விவரம் தெரிய வந்த போது செண்பகவள்ளி கடிதத்தை படித்து முடித்திருந்தாள்.. தம்பியின் சார்பில் அவர் பேச முயன்றபோது செண்பகவள்ளி அதைக் காது கொடுத்துக் கேட்க மறுத்து விட்டாள்...

"ஆதவனைக் கூப்பிடுடா..."

"அம்மா.. இது மொட்டைக் கடிதாசி..."

"அறிவோடதான் பேசறியா பெரியவனே..? இது வக்கீல் நோட்டிஸீடா..."

"நாம நம்ம வக்கீல்கிட்ட கலந்து பேசலாம்..."

"எதைப் பத்திப் பேசப் போறப்பா..? என் குடும்ப மானம் கப்பல் ஏறிப் போகப் போகிறதைப் பத்தியா..?"

நந்தினியின் கணக்கு சரியானதாக இருந்தது...

செண்பக வள்ளி பெரிய மகனின் விளக்கத்தை கேட்க வில்லை.. இதுவரை அவள் பார்த்தறியாத புது யுத்தத்துடன் வந்து சேர்ந்த அந்த வக்கீலின் கடிதத்தில் அவளின் இதயம் பதறிக் கொண்டிருந்தது...

"இது பணத்துக்காக வந்த கடிதமில்லைடா பெரியவனே.. உன்தம்பி நல்ல குடும்பத்தில பிறந்த பொண்ணுகிட்ட விளையாடிப் பார்த்துட்டான்..."

"அவன் அப்படி இப்படி இருக்கிறவன்தான்ம்மா.. ஒப்புக்கிறேன்.. அதெல்லாம் அவன்கிட்ட இருக்கிற பணத்துக்காக வருகிற கூட்டத்தோட போடற ஆட்டம்.. இதைப் போலல்லாம் அவன் செய்திருக்க மாட்டான்..."

"எங்கே.. அவனைக் கூப்பிட்டு.. இல்லைன்னு சொல்லச் சொல்லு..."

ஆதவன் இல்லையென்று சொல்லத்தான் வந்தான்.. ஆனால் செண்பகவள்ளி உறுதிமொழியைக் கேட்ட விதத்தில் அவனால் அதை மறுத்துப் பேச இயலவில்லை...

"சொல்லுடா சின்னவனே..! உன்னாலே அந்தப் பெண்ணோட பேருக்கு களங்கம் வரலைன்னு சொல்லு..."

இதை எப்படி ஆதவன் சொல்லுவான்..? அவனால் நந்தினியின் நற்பெயருக்கு களங்கம் வந்தது உண்மைதானே.. அவன் உதட்டைக் கடித்தபடி மௌனமான போது...

"இப்ப என்னடா சொல்கிற..?" என்று மாதவனிடம் மோதினாள் செண்பகவள்ளி...

"என்கிட்ட வேற மாதிரி சொன்னானேம்மா..." மாதவன் குழம்பினார்...

அதுவரை அவரிடம் ஆதவன் பொய் சொன்னதில்லை.. அவனின் விரல்கூட நந்தினியின் மீது படவில்லை என்று அவன் சொன்னது பொய்யா...?

"அப்படின்னா.. இப்ப ஏண்டா வாயடைச்சுப் போயி நிக்கிறான்..?"

"அதான்.. எனக்கும் புரியலைம்மா..."

"அந்தப் பொண்ணு சாகும் வரைக்கும் உண்ணாவிரதம்ன்னு நம்ம வீட்டு முன்னாலே உக்காரப் போறாளாம்... அதுவும் சும்மா இல்லையாம்.. நாட்டில இருக்கிற அத்தனை டிவிக்காரங்களையும் கூப்பிட்டு பஞ்சாயத்து வைச்சிட்டுத்தான் உண்ணாவிரதத்தில் உட்காருவாளாம்.. இது வரைக்கும் நம்ம குடும்பம்தான் மத்தவங்களுக்கு பஞ்சாயத்து பண்ணி நியாயம் சொல்லிக்கிட்டு இருந்துச்சு.. இப்ப அது மேலயே பஞ்சாயத்து வந்திருச்சு.. அதை உலகம் பூராவும் பார்க்கனுமா..? அதுக்கா நான் உசிரை வைச்சிருக்கேன்..? இந்த அளவுக்கு அந்தப் பொண்ணு துணிஞ்சிருக்குன்னா.. எந்த அளவுக்கு அந்தப் பொண்ணு பாதிக்கப் பட்டிருக்கனும்..?"

"அம்மா.. இது மிரட்டல்ம்மா..."

"மிரட்டறதுக்கு இவன் இடம் கொடுத்திருக்கானே..."

"விசாரிக்கலாம்..."

"எதை விசாரிக்கச் சொல்ற..? எதுவுமே இல்லைன்னு இவனைச் சொல்லச் சொல்லு..."

"இவன் குற்றம் செய்யலைன்னு சொல்றான்ம்மா..."

"இவனுக்கு எதுவுமே குத்தமாத் தோணாது.. எல்லாத்துக்கும் அப்படியே இருக்குமா..? நல்ல குடும்பத்துப் பொண்ணு ஒருத்தி அவளைக் கல்யாணம் பண்ணிக்கிறதுதான் இவன் செய்ய வேண்டிய பரிகாரம்ன்னு சொல்றான்னா இதுக்கு மேல விசாரிக்க எதுவும் இருக்கா..?"

அப்போதும் மாதவன் தம்பியின் பக்கம்தான் நின்றார்.. அவருக்கு தெரிந்த காவல்துறையின் உயரதிகாரி ஒருவரிடம் பேசினார்.. அவரிடமிருந்து வந்த பதில் மாதவனை யோசிக்க வைத்தது...

"உங்க தம்பிக்கும் அந்தப் பெண்ணுக்கும் பெங்களூர் ஹோட்டலில் தகராறு ஆரம்பிச்சிருக்கு மாதவன்.. அவர் அந்தப் பெண்ணிடம் தவறாகப் பேசினதாக ஹோட்டல் மேனேஜர் சொல்கிறார்.. அதுக்காக மிஸ்டர் ஆதவன் அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்டிருக்கிறார்.. மறுநாள் ஹைதராபாத்தில் கோல்கொண்டா கோட்டையில உங்க தம்பியும்.. அந்தப் பெண்ணும் தனியா ஒரு ரூமில் இருந்ததா சீன் கிரியேட் ஆகியிருக்கு... அதை பப்ளிக் பார்த்திருக்காங்க.. உள்ளே என்ன நடந்ததுன்னு யாருக்கும் தெரியாது.. பட்.. உள்ளே எதுவோ நடந்திருக்கிறதைப் போல.. அங்கேயிருந்தவங்க முன்னாலே ஆதவன் பேசியிருக்கார்..."

அந்த நண்பர் தெளிவாகச் சொல்லிவிட்டார்...

"ஆதவன் மேல அந்தப் பெண் போலிஸ் கம்ப்ளெயிண்ட் கொடுக்கலை.. அது ஏன்னு தெரியலை.. நீங்க சொல்கிறதைப் போல ஏதும் நடந்திருக்காம இருக்கலாம்.. பட்.. அந்தச் சிச்சுவேசனில அந்தப் பெண்ணைப் பார்த்தவங்க அந்த அன்டர் கிரௌண்டு ரூமுக்குள்ளே ஏதோ நடந்ததாகத்தான் பேசியிருக்காங்க.. அதனால அந்தப் பெண்ணோட பெயர் பாதிக்கப் பட்டிருக்கு..."

அதற்குப் பின்னால்தான் மாதவன் பொங்கிவிட்டார்..

"இதுக்கு என்ன சொல்ற ஆதி...?"

"இப்பவும் சொல்றேன்னா.. அந்தப் பொண்ணு மேல என்விரல் கூடப் படலை...."

"அதை அந்த ஜனங்க முன்னால நீ சொன்னியா..?"

ஆதவன் பதில் சொல்லவில்லை.. மாதவனின் முகம் கடுமையானதாக மாறியது...

"நீ பழிவாங்கியிருக்க ஆதி.. இல்லைன்னு உன்னால சொல்ல முடியுமா..?"

ஆதவனால் இல்லையென்று சொல்ல முடியவில்லை...

"நம்ம வீட்டிலயும் பெண்கள் இருக்கிறாங்க.. உன் அக்கா மேலயோ.. வித்யா மேலயோ இப்படியொரு பழி வருகிறதைப் போல ஒருத்தன் செஞ்சா.. நீ அவனை சும்மா விடுவியா..?"

"அண்ணா..." துடித்துப் போய் நிமிர்ந்தான் ஆதவன்...

"உன் குடும்பத்து பொண்ணுன்னா உன் ரத்தம் பதறுது.. அதுவே ஊரான் குடும்பத்து பொண்ணுன்னா அவ பெயரை நாசம் பண்ணத் தோணுதில்ல..?"

"அவ என்மேல பழி போட்டாண்ணா..."

"எப்படி..? நீ ஒதுங்கி நின்னப்ப வேணும்னே உன்மேல பழி போட்டாளா..?"

"அது.. அது வந்து..."

"நீதான் அவகிட்ட வலியப் போய் பேசியிருக்கிற.. எனக்கு எல்லாம் தெரியும் ஆதி..."

"நான் சாதாரணமாத்தான் பேசினேண்ணா..."

"அதைக்கூட ஏன் செய்த..? உன்னைப் போல ஒருத்தன் நல்லகுடும்பத்து பொண்ணுகிட்ட சாதாரணமாப் பேசினாலும் அது அவளுக்கு தப்பாத்தானே தோணும்..?"

'உன்னைப் போல ஒருத்தன்...'

மீண்டும் மனதில் அடி வாங்கினான் ஆதவன்...

'அவ நல்லவ... நான் கெட்டவளா..?'

அவன் மனதில் புயலடித்தது.. செண்பகவள்ளியுடன் மாதவனும் கூட்டுச் சேர்ந்து கொள்ள.. நந்தினியை ஆதவனுக்கு திருமணம் முடித்துக் கொள்ளும் ஆபயத்தங்களை ஆரம்பிக்கப் போவதாக பதில் கடிதம் செக்கானூரணியிலிருந்து சுசிலாவிற்கு பறந்தது...

"எதுக்கும் யோசிக்கலாமே..." வைஷ்ணவி தயங்கியபோது..

"இவனுக்கு கழுத்தை நீட்ட அந்தப் பொண்ணுதான் யோசிக்கனும்... அதைப்போல ஒரு நல்ல பொண்ணே துணிஞ்சு கழுத்தை நீட்ட வரும்போது நாம யோசிக்கனுமா..?" என்று மாதவன் கேட்டு விட்டார்...

அதையும் ஆதவனால் மறக்க முடியவில்லை...

நந்தினியின் வீட்டில் விவரம் தெரிய வந்தபோது சூறாவளி கிளம்பியது.. நந்தினியின் அண்ணன் கொதித்தான்...

"இந்த வீட்டில நான் யாருப்பா..? என்னை விட இவ அதிகம் படிச்சிருக்கா.. பெரிய வேலையைப் பார்க்கிறான்னு தலை மேல தூக்கி வைத்துக் கொண்டாடினீங்களே.. இப்ப என்ன நடந்திருக்குன்னு பார்த்தீங்களா..? இஷ்டத்துக்கு ஊரைச் சுற்றிட்டு எதையோ இழுத்துக்கிட்டு வந்து நிக்கிறா.. கூடப் பிறந்த அண்ணன்கிட்ட அதைப் பத்தி மூச்சு விட்டாளா..?"

ஒருவகையில் நித்தியானந்தனின் கோபத்தில் நியாயம் இருந்தது... அவனிடம் நந்தினி சொல்லியிருந்தால்.. வக்கீலின் கடிதம் போவதற்கு பதில்.. அவனே செக்கானூரணிக்கு கிளம்பிப் போயிருப்பான்.. ஆதவனின் சட்டையைப் பிடித்திருப்பான்.. நந்தினி அதைச் செய்யாமல் விட்டுவிட்டாள்...

## 13

செய்கின்ற செயல்களைவிட.. செய்யாமல் விட்டுவிட்ட செயல்கள் தான் வாழ்நாள் முழுவதும் நம்மைத் துரத்தும்...

குருஷேத்திர யுத்தத்திற்காக கிளம்பி வந்த பாண்டவர்களின் தாய் மாமனான சல்லியனைக் கவனித்து உபசாரம் செய்யத் தவறிவிட்டார்கள் பாண்டவர்கள்.. அப்படிச் செய்யாமல் விட்ட அந்தச் செயலால் சல்லியனை

கௌரவர்களின் பக்கமாக தாரை வார்த்துக் கொடுத்து விடவேண்டிய துயரம் அவர்களுக்கு நேர்ந்து விட்டது..

சல்லியன் மாவீரன்..! நகுல.. சகாதேவர்களைப் பெற்ற மாத்ரியுடன் கூடப் பிறந்த சகோதரன்..! மகா ரதர்களில் ஒருவன்..!.. அவனை பாண்டவர்கள் எதனால் இழந்தார்கள்..?

அதே போல்தான் நந்தினியும்.. தமையனின் அன்பை இழந்து நின்றாள்...

அவள் அவனைத் தேடியிருக்க வேண்டும்.. 'அண்ணா' என்று அவன் தோளில் சாய்ந்து கதறியிருக்க வேண்டும்.. நடந்ததைச் சொல்லிப் புலம்பியிருக்க வேண்டும்...

அவற்றை மட்டும் அவள் செய்திருந்தால்.. அவன் அவளை விட்டுக் கொடுத்திருக்கவே மாட்டான்.. அவளுக்காக அவன் போராடியிருப்பான்.. ஊரைக் கூட்டி நியாயத்தைக் கேட்டிருப்பான்.. எப்பாடு பட்டாவது ஆதவனுக்கே அவளைத் திருமணம் செய்து கொடுத்திருப்பான்...

நந்தினி அதைச் செய்யவில்லை.. தனது பிரச்னையைப் பற்றி குடும்பத்திடம் மூச்சு விடவில்லை.. அவளே யோசித்து அதற்கான தீர்வைக் கண்டுபிடித்து செயல்படுத்தி விட்டாள்.. அது நித்தியானந்தனின் மனதைக் காயப் படுத்திவிட்டது...

இருக்கலாம்.. நந்தினி அதைத் தமையனிடம் சொல்லாமல் விட்டதற்கான காரணங்களாக ஆயிரம் இருக்கலாம்.. அவளுக்கு நிகழ்ந்ததை தோழிகளிடம் பகிர்ந்து கொள்ளக்கூட அவளுக்கு வாய் வரவில்லை.. அந்த அளவுக்கு சங்கடப்பட்டாள்.. ஆஷாவின் செல்போன் வழியாக அவளறிந்தவைகளை மற்ற தோழிகளும் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.. நந்தினி வாய் திறந்து ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை...

அந்தரங்கத்தைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய தோழிகளிடமே அவள் வாய் திறக்கவில்லையெனும்

போது கூடப் பிறந்த சகோதரனிடம் எப்படி அதைச் சொல்லுவாள்..?

எதுவுமே நடக்கவில்லை.. ஆனால்.. ஏதோ நடந்திருக்கிறது.. அது நந்தினியை ஆதவனைத் தவிர வேறு ஒருவனை மணம் முடிக்கத் தான் தகுதிவாய்ந்தவள் அல்ல என்று நினைக்க வைத்திருக்கிறது என்றால் அது எப்படிப்பட்ட கொடுமையான நிகழ்வாக இருக்கக்கூடும்..?

அந்த நிகழ்வைச் சொல்லி தமையனின் கால்களில் விழ நந்தினியால் முடியவில்லை.. அதை தனக்கு ஏற்பட்ட மரியாதை குறைவாக நித்தியானந்தன் நினைத்தான்..

அவன் நினைத்ததிலும் தவறில்லை.. சிறு வயதிலிருந்தே அவன் அண்ணன் என்ற அவனது ஆளுமையை நந்தினியின் மீது பிரயோகிக்க முயல்வான்.. அது அடக்கு முறையான ஆளுமையாக இருக்காது.. அவனின் உரிமையை வலியுறுத்துவதாகத்தான் இருக்கும்... அதை நந்தினி உணரமாட்டாள்.. எளிதாக அவனை அலட்சியப் படுத்தி விடுவாள்.. படிப்பில் அவள் முதல் மாணவியாக இருக்க.. அவன் கடைசி மாணவனாக இருந்ததில் பெற்றவர்களுக்கு அவள் செல்லப் பிள்ளையாக மாறிப் போனதினால் ஏற்பட்ட அலட்சியம் அது...

சிறுபிராயத்தில் அவள் காட்டிய அலட்சியம் நித்தியானந்தனின் மனதில் வடுவாக மாறிப் போனது.. வளர்ந்த பின்னாலும்.. அவள் பி.ஈ படித்து எம்பிஏ முடித்து உயர் பதவிக்கு போக.. அவன் டி.என்.பி.எஸ்.சி பரிட்சைகளை மாய்ந்து.. மாய்ந்து எழுதி.. கிளார்க் வேலைக்குப் போனான்...

பிறந்தது முதல் மட்டம் தட்டிக் கொண்டேயிருந்த தங்கையின் அலட்சியத்தைப் பற்றிய மனப் பொருமலுடன் வளர்ந்த நித்தியானந்தன்.. திருமணம் என்று வந்த போது.. அதிகம் படிக்காத கிராமத்துப் பெண்தான் மனைவியாக வரவேண்டும் என்று நிபந்தனை விதித்தான்.. அவன்கூட வேலைபார்த்த லலிதா அவன்மீது ஆசைப்பட்டும் அவன் அவளது காதலை நிராகரித்தான்.. அதில்

நித்தியானந்தனைப் பெற்ற நாராயணசாமிக்கும்.. மங்கையர் கரசிக்கும் ஏகப்பட்ட மன வருத்தம்..

"ஏண்டா இப்படி இருக்கிற..? அவனவன் வேலை பார்க்கிற பொண்ணுதான் வேணும்ன்னு தேடி அலைகிறானுக.. உனக்கு அது தானா வந்து மாட்டுது.. ரெண்டு பேரும் கவர்ண்மென்ட் சம்பளம் வாங்கினா எங்கேயோ போயிடுவீங்கடா..," நாராயணசாமி சின்னக் குழந்தைக்கு புத்திமதி சொல்லுவதைப் போலச் சொல்லிப் பார்த்தார்...

"எனக்கு எங்கேயும் போக வேணாம்.. இருக்கிற இடத்தில இருந்தாப் போதும்...", என்று நித்தியானந்தன் அதை மறுத்து விட்டான்...

"அந்தப் பொண்ணு வேணாம்ன்னா.. எங்க அக்கா மகளோட மக... டீச்சர் வேலை பார்க்கிறா.. அவளைத் தர்றோம்ன்னு ஒத்தைக் காலில நிக்கிறாங்க.. அவளைக் கட்டிக்க..", மங்கையர்க்கரசி மல்லுக்கு நின்றாள்...

"ஏம்மா.. உங்களுக்கு வேற.. தனியாச் சொல்லனுமா..?" என்று நித்தியானந்தம் எரிந்து விழுந்தான்...

கடைசியில் அவன் மனம் போலவே.. கிராமத்து பெரிய வீட்டில் பிறந்த கனகா அதிகப் படிப்பில்லாமல்.. கழுத்து நிறைய நகைகளும்.. வண்டி.. வண்டியாக சீர்வரிசைகளுமாக அவனுக்கு மனைவியாக வந்து வாய்த்தாள்..

கையெழுத்துப் போடவே திணறுகின்றவளுக்கு.. பட்டப் படிப்பு படித்து அரசாங்க வேலை பார்க்கும் கணவனைப் பார்க்கும் போது பிரமிப்பாக இருந்தது.. நித்தியானந்தனுக்கு அதுதானே வேண்டும்..?

குடும்ப நிர்வாகம் நித்தியானந்தனின் கைக்குப் போனது.. கனகா சமைத்துப் போட்டதை சாப்பிட்டுக் கொண்டு அதிகம் பேசாமல் இருப்பதற்கு நாராயணசாமியும்.. மங்கையர்க்கரசியும் பழகிக் கொண்டார்கள்.. கனகாவைப் பொறுத்தவரை அவளுடைய கணவன் மட்டுமே பெரிய படிப்பு படித்து உத்தியோகம் பார்ப்பவன்.. நந்தினியின்

படிப்பையும்.. வேலையையும் ஒருநாளும் அவள் சட்டை செய்ததே இல்லை.. இந்த ஒன்றிற்காகவே நித்தியானந்தன் மனைவியைக் காதலிக்க ஆரம்பித்தான்...

"இந்தா பாரு.. நீ டில்லிக்கு ராணியாவே இரு.. எனக்கு அதைப் பத்திக் கவலையில்ல.. இந்த வீட்டில நான் வாழ வந்தவ.. நீ வேற வீட்டுக்கு வாக்கப்பட்டுப் போகப் போறவ... அதனால உன் படிச்ச திமிரை மூட்டை கட்டி வைச்சிட்டு அடக்க ஒடுக்கமா இருக்கப் பழகு.."

திருமணமாகி வந்த முதல் வாரத்திலேயே கனகா சட்டமாக நந்தினியிடம் பேசிவைத்ததில் உள் வீட்டுக் கலவரம் மூண்டது... நித்தியானந்தன் மனைவியின் பக்கம் நின்றான்...

"வேனும்னா நான் அவகூட தனிக்குடித்தனம் போயிடவாம்மா..?"

இந்த அஸ்திரத்தில் நாராயணசாமியும்.. மங்கையர்க்கரசியும் அரண்டு போனார்கள்.. அதற்குப் பின்னால் நந்தினி கனகாவிடம் அதிகமாக பேசிக் கொள்ளமாட்டாள்.. வீட்டில் ஏற்பட்டிருந்த அதிகார மாற்றத்தை ஜீரணிக்க கற்றுக் கொண்டு விட்டாள்...

நித்தியானந்தனின் சுயமரியாதை நிமிர்ந்து நின்றது.. அந்தக் குடும்பத்தின் தலைவனாக அவன் ஆனான்.. அவனைக் கேட்காமல் கனகா துரும்பையும் அசைத்ததில்லை.. அவளைக் கேட்காமல் அவளுடைய மாமனாரும்.. மாமியாரும் துரும்பைக்கூட அசைக்க அவள் விட்டதில்லை...

அப்படி மாறிவிட்ட குடும்பச் சூழலில் நந்தினி தன் திருமணத்தை தானே நிர்ணயம் பண்ணிக் கொண்டதை கனகா வன்மையாக கண்டித்தாள்..

"இதான் நீ படிச்ச படிப்பா..? ஆத்தாடி.. நானெல்லாம் என் அண்ணன் மார்களுக்குத் தெரியாம ஒரு ஆணியைக்கூட அசைக்க மாட்டேன்.. நீ மலையையே புரட்டியிருக்க.. பெரிய புரட்சிக்காரின்னு உன் மனசுக்குள்ள நினைப்பிருக்கலாம்..

ஆனா.. ஒரு பொம்பளைக்கு இவ்வளவு துணிச்சல் கூடாதுன்னு தான் நான் சொல்லுவேன்.. நீயென்ன பெத்தவங்க.. கூடப் பொறந்தவங்கன்னு யாருமில்லாத அநாதையா..? அண்ணன்காரன் ஒருத்தரு ஆலமரம் போல நிக்கராரில்ல..? அவருகிட்ட வந்து சொல்லியழுதா குறைஞ்சா போயிருவ..? நீ பெரிய படிப்புப் படிச்சு.. பெரிய பதவியில இருந்தாலும்.. உன்னைத் தாரை வார்த்துக் கொடுக்க உன்னைப் பெத்தவங்கதானே சபையேறி நிக்கனும்..? உனக்குச் சீர் கொடுக்க உன் அண்ணன்தானே பலகாரக்குடம் சுமக்கனும்.? இல்ல.. அதுக்கும் நீ வேற ஆளைத் தேடி வைச்சிருக்கியா..?"

கனகா கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள்.. பச்சை மிளகாயைக் கடித்ததைப் போன்ற காரமான வார்த்தைகளை இயல்பாக பேசுவதில் வல்லவள்.. ஆனானப்பட்ட மங்கையர்க்கரசியே அவளின் வார்த்தைகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் வாயை மூடிக் கொண்டிருக்க பழக்கப்பட்டிருந்த போது.. நந்தினியால் அவள் பேச்சுக்கு எப்படி ஈடு கொடுக்க முடியும்..?

"விடு கனகா.. என்னைக்குமே அவ அண்ணன்னு என்னை நினைச்சதில்ல.. இன்னைக்கு மட்டும் புதுசா நினைக்கச் சொன்னா எப்படி நினைப்பா..? கடமைக்காக நாம கல்யாணத்தில தலையைக் காட்டிட்டு வரலாம்..."

நித்தியானந்தன் அப்படித்தான் வந்தான்.. மதுரையில் நடந்த திருமணத்தில் பட்டுக் கொள்ளாமல் நின்றான்.. அவசரத் திருமணம்தான் என்றாலும் அதை முறைப்படி சிறப்பாக நடத்தி வைத்தாள் செண்பகவள்ளி..

நந்தினியின் வீட்டுக்கு அவர்கள் பெண் பார்க்க வரவில்லை.. சம்பந்தம் பேச வரவில்லை.. ஆனால்.. இந்தத் தேதியில் இந்த ஊரில்.. இந்த மண்டபத்தில் திருமணம் என்ற திருமண அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டு நந்தினியின் வீட்டுக்கு ஆனுப்பி வைக்கப்பட்டன...

இருவீட்டார் அழைப்பு என்ற இடத்தில் நந்தினியின் சொந்த பந்தங்களின் பெயர்களை தெளிவாக அச்சிட்டிருந்தார்கள்...

"எப்புடிடா.." நாராயணசாமி ஆச்சரியப்பட்ட போது..

"இதைக்கூட நம்மை மதிச்சுக் கேட்காம.. அவங்களாவே விசாரிச்சுப் போட்டிருக்காங்கன்னு நானே எரிச்சலில இருக்கேன்.. நீங்க வேற என்னையை ஊத்தி வைக்காதீங்க..." என்று நெற்றிக் கண்ணைத் திறந்தான் நித்தியானந்தன்...

நந்தினியின் குடும்பம் நேராக மதுரையிலிருந்த திருமண மண்டபத்திற்கு அவளோடு போய் இறங்கியது.. பெண்ணழைக்க என்று யாரோ இரண்டு பெண்கள் அறிமுகமில்லாத பார்வையுடன் வந்து நின்றதை கனகா விமரிசித்துக் கொண்டிருந்தாள்.. ஆதவனின் பக்கமோ.. அவர்கள் தரப்பு உறவினர்களிடம் வேறு விதமாக கதை பிணைந்து சொல்லிக் கொண்டிருந்தார்கள்...

"அப்பா உயிரோட இருந்தப்ப இந்தப் பொண்ணைத்தான் நம்ம ஆதவனுக்கு கட்டி வைக்கனும்னு அம்மாகிட்ட வாக்கு வாங்கிக்கிட்டாராம்..."

"அப்படியா மாதவா..? உன் அப்பாவுக்கு இந்தப் பொண்ணைத் தெரியுமா..? ஏன் கேட்கிறேன்னா.. உன் தம்பிக்கு எட்டு வயசாய் இருக்கிறப்ப உன் அப்பா போய் சேர்ந்துட்டாரே.."

மாதவன் பிணைந்த கதையில் உள்ள ஓட்டை உடைசலை எடுத்துச் சொல்லிய அந்த வயதான மனிதரைக் கொலைவெறியுடன் பார்த்தார் மாதவன்..

'உங்க ஞாபக சக்தியில் இடி விழ...'

என் அப்பாவே போய் சேர்ந்துட்டாரே.. அவரைவிட இருபது வயது அதிகமான நீங்கள் ஏன் போய் சேரவில்லை என்ற வார்த்தைகளைக் கேட்க வேண்டுமென்ற ஆசை அவருக்கு மிகுந்தது..

ஆனாலும் ஆசையை அடக்கிக் கொள்ள வேண்டும் என்ற போதி மரத்து புத்தரின் ஞானத்தோடு அதை.. ஓடு என்று விரட்டி விட்டு.. பொறுமையாக தன் பொய்யைத் தொடர்ந்தார் மாதவன்..

"அதுவா சின்னத்தாத்தா.. அப்பாவுக்கு இந்தப் பெண்ணைத் தெரியாது.. பெண்ணைப் பெற்றவரைத் தெரியும்.. அதோட அப்பா போய் சேர்ந்தப்ப இந்தப் பொண்ணுக்கு ஒரு வயது..."

## 14

பாவம் நாராயணசாமி..! அவர் ஆதவனைப் பெற்ற தந்தையான மணிமாறனின் முகத்தைக்கூடப் பார்த்ததில்லை.. அப்படி ஒருவர் இருந்ததே அவருக்குத் தெரியாது..

அப்படியிருக்க.. கிழக்குச் சீமையிலே பிறந்த மணிமாறனும்.. மேற்குச் சீமையிலே பிறந்த நாராயணசாமியும் ஈருடல் ஓர்உயிர் என்று தோழமை பாராட்டியவர்கள் என்று கதைசொல்லப்பட்டது..

குசேலனிடம் அன்பு பாராட்டிய கண்ணனைப் போல நாராயணசாமியிடம் அன்பு கொண்டிருந்தார் மணிமாறன் என்று திருமணமண்டபத்தில் பேசப்பட்ட போது.. நித்தியானந்தன் பற்களை நறநறக்கவே ஆரம்பித்து விட்டான்..

"ஏழையா இருந்தாலும்.. உன் மகளைத்தான் என் சின்ன மகனுக்கு கட்டி வைப்பேன்னு அந்த நாராயணன்கிட்ட நம்மஊரு பெரியய்யா வாக்குக் கொடுத்திருந்தாராம்..."

யாரோ ஒருவர் சொல்லிக் கொண்டுபோக..

"போதுமா..?" என்று தந்தையிடம் வெடித்தான் அவன்...

மங்கையர்க்கரசி கையெடுத்து கும்பிட்டே விட்டாள்...

"உன் தங்கச்சியோட வாழ்க்கையை நினைச்சுப் பாருப்பா.."

பெற்றவள் கெஞ்சியதில் அவன் கொஞ்சம் தழைந்து கொடுத்தாலும்..

"நீங்க என்ன குசேலனா..?" என்று நாராயணசாமியிடம் மோதாமல் இருக்கவில்லை...

"நான் நாராயணசாமிடா.." என்றார் அவர் பரிதாபமாக...

"அந்த ஆள் கண்ணனாம்..."

"இருந்துட்டுப் போகட்டுமேடா.."

"தாராளமா இருந்துட்டுப் போகட்டும்.. எனக்கென்ன வந்துச்சு..? கூடவே உங்களை எதுக்காக குசேலனா இருக்கச் சொல்றாங்க..?"

"உன் தங்கச்சியைப் பெத்துட்டேனேடா..."

"கூடவே என்னையும் சேர்த்து பெத்து வைச்சிருக்கீங்களே.. இந்தக் கல்யாணத்துக்கு வேற என் மாமனார் வீட்டில இருந்து வந்து தொலைச்சிருக்காங்க... என் மானம் போகுது..."

நித்தியானந்தன் கொதித்துக் கொண்டிருக்க.. நாராயணசாமி வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருக்காமல்..

"எனக்கு அப்படியொன்னும் தெரியலையேடா..." என்று சொல்லி வைத்து விட்டார்..

"அப்பா..." கோபத்துடன கர்ஜித்த நித்தியானந்தன்.. நந்தினியின் மீதும்.. ஆதவனின் குடும்பத்தின் மீதும் இருந்த கடுப்பையெல்லாம் நாராயணசாமியின் மீது பிரயோகிக்க ஆரம்பித்தான்...

வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருக்காத கொடுமைக்கு அனுபவிக்கட்டும் என்று மங்கையர்க்கரசியும் விட்டு விட்டாள்.. நல்லவேளையாக அவரைக் காப்பாற்றும் ஆபத்பாந்தவன்.. அனாதை ரட்சகனாக.. நித்தியானந்தனின் மாமனார் அங்கே பிரசன்னமானார்...

"கேட்கவே ஆச்சரியமா இருக்கு மாப்பிள்ளை..."

"எதை மாமா..?"

"செக்கானூரணி மணிமாறன்னா சுத்துப்பட்டிக்கும் தெரியுமாமே..."

"எனக்குத் தெரியாது..."

"அட என்ன மாப்பிள்ள நீங்க.. அவரு எப்பேர்பட்ட மனுசன்.. ஊருக்கே பெரியவீடு.. பரம்பரையா பெருங்கொண்ட பணக்கார வம்சம்.. அவருகூட நம்ம சம்பந்தி சிநேகிதமா இருந்திருக்காரு.. நம்ம சம்பந்தி பெத்த பொண்ணைத்தான் கட்டுவேன்னு அவரு பொண்டாட்டிகிட்ட வாக்கு வாங்கிட்டுச் செத்திட்டாருன்னு கேள்விப்படறப்ப புல்லரிக்குது மாப்பிள்ள..."

'மாடு மேய்ந்து விடும்.. போர்த்திக்கங்க...' என்று சொல்லத்தான் நினைத்தான் நித்தியானந்தன்..

கனகாவின் காதல் முகம் நினைவில் வந்து அந்த ஆசையைத் தடுத்தது.. மண்டபத்தின் ஒலிபெருக்கியில்.. செக்கானூரணி பெரிசுகளின் நேயர் விருப்பமாக.. ஒலித்த பழைய பாடலில்..

"சொல்ல நினைத்த ஆசைகள்..

சொல்லாமல் போனதேன்...?"

என்று பி.சுசிலா கேட்டுக் கொண்டிருந்தார்...

எது.. எப்படியோ.. ஆதவனுடனான நந்தினியின் திருமணம் முறைப்படி பெரியவர்கள் பேசி முடித்து நடத்தி வைக்கப் பட்டத் திருமணமாக நடந்து முடிந்து விட்டது...

திருமணத்திற்கு வந்திருந்த இருபக்க சொந்தக்காரர்களில் ஆதவனின் பக்க சொந்தக்காரர்கள்.. மணப் பெண்ணின் படிப்பையும்.. அழகையும் வியந்து பாராட்ட.. நந்தினியின் பக்க சொந்தக்காரர்கள்.. ஆதவனின் பணத்தையும்.. பரம்பரைப் பெருமையையும் வியந்து பாராட்டினார்கள்...

மதிய உணவு முடிந்து.. முக்கிய சொந்தக்காரர்கள் மட்டும் பக்கத்திலிருக்க.. மற்றவர்கள் மொய் எழுதிவிட்டுக் கிளம்பிச் சென்று விட்டார்கள்.. அந்த முக்கிய

சொந்தக்காரர்களும் மாலையில் சென்றுவிட.. இருபக்கத்து குடும்பத்தார் மட்டும் மண்டபத்தில் இருந்தார்கள்...

பெண்ணையும்.. மாப்பிள்ளையையும்.. செக்கானூரணியில் கொண்டு போய்விட வேண்டிய கடமையுடன் பெண் வீட்டார் தேங்கி.. நிற்க.. மாப்பிள்ளையின் குடும்பத்தார் இருந்த அறைப்பக்கமிருந்து பலத்த வாக்குவாதத்தின் அறிகுறியாக சப்தங்கள் வந்து கொண்டிருந்தன.. அவர்கள் கிளம்புவதற்கான சுவடே தெரியவில்லை...

நித்தியானந்தன் நாராயணசாமியைப் பார்த்தான்...

"ஏம்ப்பா.. பொழுது சாயப் போகுது.. இன்னும் இவங்க புறப்படற வழியா இல்லையே.. என்னவாம்..?"

"ஒருவேளை ரிசப்சன் வைப்பாங்களே..."

"அதெல்லாம் எங்களுக்கு பழக்கமில்லன்னு அவங்க சொல்லிட்டாங்களே.. மறந்து போச்சா..?"

"வேற என்னவா இருக்கும்..?"

"நான் உங்களைக் கேட்டா... நீங்க.. என்னைக் கேட்கறிங்களா..? போயி அவங்ககிட்ட இந்தக் கேள்வியைக் கேட்டுட்டு வாங்க..."

"எப்படிடா கேட்கிறது..?"

இப்படிக் கேட்ட தகப்பனாரை முறைத்துப் பார்த்தான் நித்தியானந்தன்..

"ஏன்..? வாயால கேட்கிறது.. உங்களுக்கு வாய் இல்லையா..?"

"நீ போய் கேளேன்..."

"இந்தா பாருங்க.. நானே கடமைக்கு வந்திருக்கேன்.. மத்தபடி என்னை இதில இழுத்து விடாதீங்க..."

இவர்கள் வழக்கடித்துக் கொண்டிருந்தபோதே.. மண்டபத்தின் மாடிப்படிகளில் வேகமாக இறங்கி வந்தான் ஆதவன்.. அவன் பின்னால் மாதவனும் வைஷ்ணவியும்

பதட்டத்துடன் வந்தார்கள்.. நீண்ட ஹாலில் ஓரமாக சக்கர நாற்காலியில் தலையில் கைவைத்து விசனத்துடன் அமர்ந்திருந்த செண்பகவள்ளியின் முன்னால் கடுமையான முகத்துடன் நின்றான் ஆதவன்...

"கிளம்புங்கம்மா..."

"எங்கேடா..?"

"நம்ம வீட்டுக்கு.."

"நீ மருமகளைக் கூப்பிடு..."

"முடியாது..."

"ஆதவா..."

"இது மனம் விரும்பிப் பண்ணிக்கிட்ட கல்யாணமில்ல.. நிர்பந்தத்திலே பண்ணிக்கிட்டது... இவகூட என்னால வாழ முடியாது.."

மங்கையர்க்கரசி நெஞ்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள்.. நாராயணசாமி மாதவனின் காலைப் பிடிக்காத குறையாக கெஞ்ச ஆரம்பித்து விட்டார்.. நித்தியானந்தன் மட்டும் அசையவில்லை...

"டேய் நித்தியா.. என்னன்னு கேளுடா.." மங்கையர்க்கரசி மன்றாடினாள்...

"என்னன்னும்மா கேட்பேன்.. இது உங்க மகளாப் பார்த்துப் பண்ணிக்கிட்ட கல்யாணம்.. இதைக் காப்பாத்தி வாழ முடிஞ்சா வாழ்ந்து காட்டட்டும்..."

"நீ அவளுக்கு அண்ணன்டா..."

"இப்பத்தான் அது உங்களுக்கு ஞாபகம் வருதா..? இவ பிறந்ததில இருந்து ஒரு நாளாவது என்னை அண்ணன்னு நினைச்சிருப்பாளா..? மதிச்சிருப்பாளா..? இவ சம்பந்தப்பட்ட எதுக்கும் என்னை முன்னால வைச்சதில்ல.. இந்தக் கல்யாணத்திலயும் அப்படித்தான் தூக்கியெறிஞ்சா.. இப்பப் போயி நானா முன்னால நின்னா.. என் பெண்டாட்டி கூட என்னை மதிக்க மாட்டா..."

நித்தியானந்தன் நியாயம் கேட்கவில்லை.. அதைக் கேட்ட நாராயணசாமிக்கு அது கிடைக்கவில்லை.. மற்றவர்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் கேட்காமல்.. யாரைப் பற்றியும் கவலைப் படாமல்.. நந்தினியைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் ஆதவன் திருமண மண்டபத்தை விட்டு வெளியேறி விட்டான்... அவனைக் கூப்பிட்டபடி மாதவன்.. போய்விட.. செண்பகவள்ளியின் சக்கர நாற்காலியைத் தள்ளியபடி வைஷ்ணவியும் அவர்களைப் பின்தொடர்ந்து விட்டாள்..

மண்டபத்தில் நந்தினியும்.. அவளுடைய குடும்பமும் மட்டுமே தனித்து நின்றது...

"இதுதான் உன் நிலைமை..." நித்தியானந்தன் வெறுப்பைக் கக்கினான்...

நந்தினி சுற்றிலும் பார்த்தாள்.. முதல்நாள் மாலையிலிருந்து ஜனக்கட்டுடன் நிறைந்திருந்த அந்த திருமண மண்டபம் வெறுமையாக காட்சியறித்தது...

"உன்னைக் கட்டினவன் விட்டுட்டுப் போயிட்டான்.. அவன்தான் போனான்னா.. அவன் குடும்பமும் அவனைத் தொடுத்துக்கிட்டுப் போயிருச்சு.. இப்ப என்ன செய்யப்போற..?"

நித்தியானந்தனின் கேள்விக்கு நந்தினியிடம் பதிலில்லை...

"என்னவோ.. நீதான் மெத்தப் படிச்ச மேதாவி.. உனக்குத்தான் எல்லாமும் தெரியும்ன்னு அகங்காரம் பிடிச்சு ஆட்டம் போட்டியே.. இப்ப என்ன ஆச்சுன்னு பார்த்தியா..?"

இதற்குத்தானே நீ காத்திருந்தாய் என்று நந்தினி கேட்கவில்லை..

அவளுக்குத் தெரியும்.. அவன் அதற்காக காத்திருக்கவில்லை என்பது.. ஒருநாளும் அவன் அதைச் செய்ய மாட்டான்.. ஒவ்வொருவரின் மனதிலும்.. ஏதாவது ஒரு முள் பாய்ந்துதான் இருக்கிறது.. நித்தியானந்தனுக்கும்

அப்படித்தான்.. அவன் மனதில் முள்ளைப் பாய்ச்சிய நந்தினி மௌனமாகத்தான் நிற்க வேண்டும்.. இது மறுக்கப்பட்ட உரிமையை நினைத்துக் குமுறும்.. ஒரு அண்ணனின் மனக்குமுறல்.. அவன் காயம் பட்டவன்.. இப்போது நந்தினி பட்டிருக்கும் காயத்திற்கு நிவாரணம் தேடித்தர முடியாத நிலையில் நந்தினியாலேயே ஆக்கப்பட்டவன்.. அவன் அப்படித்தான் பேசுவான்.. நந்தினி மட்டும் அவனிடம் முழுமையாக சரணடைந்திருந்தால்... அவன் அவளை வாழ வைத்திருப்பான்..

நந்தினிதான் அதைச் செய்யவில்லையே...

"இப்ப என்ன செய்யப் போற..?" முகச் சுளிப்புடன் கேட்டான் நித்தியானந்தன்..

"சென்னைக்குப் போகப் போறேன்..."

"அங்கே யாரிருக்கா..?"

"என் வேலையிருக்கு..."

அப்போதும் அவள் அண்ணனிடம் அடைக்கலம் தேடவில்லை என்ற நினைவில் முகம் கருத்தான் நித்தியானந்தன்..

"திமிர்...! சம்பாதிக்கிற திமிர்..! அதுதானே உன்னை உன் போக்கில ஆட வைக்குது..? பெத்தவங்களுக்கும்.. கூடப்பிறந்தவனுக்கும் தெரியாம டூர் போக வைக்குது..? போன இடத்தில வினையை இழுத்துக்கிட்டு வர வைக்குது..? இழுத்த வினையை வீட்டில சொல்லி சரிபண்ணப் பார்க்காம உன் இஷ்டத்துக்கு ஒரு முடிவைப் பண்ண வைக்குது..? போ.. இத்தனை பட்டும்.. இன்னும் நீ அடங்கலைன்னா.. உன் போக்கிலேயே நீ போ.. நான் ஏன்னு கேட்க மாட்டேன்..."

அப்போதும்.. அவன் சென்னைக்கான டிக்கெட்டை எடுத்து அவளை பஸ்ஸில் ஏற்றி அனுப்பி விட்டுத்தான் போனான்...

பெற்றவர்கள்.. கூடப்பிறந்தவனுடன் போய்விட.. யாருமற்ற அநாதையாக.. தனியே சென்னைக்குத் திரும்பினாள்

நந்தினி...

15

அதிகாலையில் ஈரக்காற்று முகத்தில் படிய.. கண்விழித்தாள் நந்தினி.. அகன்ற வாய்க்காலில் நீரோடிக் கொண்டிருக்க.. அதன் பக்கத்திலிருந்த சாலையில் கார் ஓடிக் கொண்டிருந்தது...

"அசந்து தூங்கிட்ட.. எழுப்பலை.." என்றான் ஆதவன்...

நந்தினி பதில் சொல்லவில்லை.. வசதியான அறையில்.. ஏஸியின் இதமான குளிரில் வராத தூக்கம்.. காருக்குள் ஒடுங்கி உட்கார்நத் நிலையில் எப்படி வந்தது என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது...

ஒருவருடமாக அவளை அணுகாத தூக்கம் அவனின் அருகாமையில் எப்படி அவளை அணுகியது என்ற விந்தை புரியாமல் திகைத்தாள் அவள்...

"இது மேலக்கால் வாய்க்கால்..." ஆதவன் சொன்னான்...

'அதான் குளிர்ந்த காற்று அடிக்குதா..' நந்தினி ரசித்துப் பார்த்தாள்...

அவள் பிறந்து வளர்ந்தது தூத்துக்குடியில்.. அங்கே உப்பளங்கள்தான் அதிகமிருக்கும்.. இப்படிப் பச்சைப் பசேலென்ற வயல்வெளி இருக்காது.. லேசாக வீசிய காற்றில் நாற்றுக்கள் தலையசைந்து ஆடியது.. ஒரு அழகான நடனக் காட்சியினைப் பார்ப்பதைப் போல அவளுக்குத் தோன்றியது...

"உன் ஊரில் உப்பு விளையும்.. இங்கே அப்படியில்லை.. வயித்தை ரொப்புற நெல் விளையும்.." காரை ஓட்டியபடி ஆதவன் பேசினான்...

"வெறும் சோத்தில கொஞ்சம் உப்பைப் போட்டாத்தான் அந்தச் சோறும் வயிற்றில இறங்கும்..", பிறந்த ஊரை விட்டுக் கொடுக்காமல் பேசினாள் நந்தினி...

அவன் மெச்சுதலாக புருவங்களை உயர்த்தியபடி.. வளைந்த சாலையில் காரை ஒடித்துத் திருப்பினான்.. அந்த வளைவை எதிர்பார்த்திராத நந்தினி அவன்மேல் சரிந்தாள்...

நொடிப் பொழுதுதான்.. ஆதவனின் உடல் வெப்பத்தை உணர்ந்தவளாக அவள் அவசரமாக விலகி அமர.. ஆதவனின் புருவங்கள் சுருங்கின.. எதையோ சொல்ல நினைத்தவனாக அவளைப் பார்த்தவன் அதைச் சொல்லவில்லை.. யோசனையுடன் சாலையைப் பார்த்தான்..

"அது எப்படி.. எல்லா விசயத்திலயும் ஆரம்பம் என்னதா இருக்கு.. முடிவு உன்னதா இருக்கு..?" அர்த்தம் பொதிந்த கேள்வியினைக் கேட்டான்...

"இதுக்கு எனக்குப் பதில் தெரியாது பாஸ்..! ஆனா ஒனனை மட்டும் உறுதியா என்னால சொல்ல முடியும்.. ஆரம்பிச்சு வைக்கிறது நானில்ல.." அழுத்தமாக பதில் சொன்னாள் நந்தினி...

திரும்பவும் ஆதவன் புருவங்கள் சுருங்க.. அவளைப் புரியாத பார்வை பார்த்து வைத்தான்.. என்னவென்று அறியும் ஆவல் மனதில் தோன்றினாலும்.. என்னவென்று கேட்காமல் வயல்வெளியை ரசிக்க ஆரம்பித்தாள் நந்தினி...

"ஜெயிச்சுக்கிட்டே இருக்கிற கர்வமா..?" கடுமையாக கேட்டான் ஆதித்தன்...

"அப்பவும் சொல்றேன்.. இப்பவும் சொல்றேன்.. உங்களை ஜெயிக்கனும்ங்கிற எண்ணமே எனக்குக் கிடையாது.. நான் என் போக்கிலே இருக்கிறேன்.. அவ்வளவுதான்.." நிதானத்துடன் சொன்னாள் நந்தினி...

"ஹ..! பேச்செல்லாம் நல்லாத்தான் பேசற.. பேச உனக்குச் சொல்லியா கொடுக்கனும்..? எத்தனை பேசியிருப்ப..?

எத்தனை கேட்டிருப்பேன்..", பழைய நினைவில் ஆதவனின் முகம் இறுகியது...

"திரும்பவும் சொல்ல வேண்டியிருக்கேன்னு இருக்கு.. என்ன செய்யறது..? சொல்ல வந்ததைச் சொல்லித்தானே ஆகனும்.." வருத்தப் படுவதைப் போல முகத்தை வைத்துக் கொண்டாள் நந்தினி...

"ஆமாமாம்.. நீ இதுக்கெல்லாம் தயங்கற ஆளுதான்.. நடிக்காதேடி.. உன் நடிப்பைப் பார்த்து என் அம்மா ஏமாறலாம்.. தியாகு ஏமாறலாம்.. நான் ஏமாற மாட்டேன்.. உன்னை எனக்குத் தெரியாதா..?" சூடாக பேசினான் ஆதவன்...

"என்ன தெரியும்..?" அவனை முறைத்தாள் நந்தினி...

"சொல்லுங்க.. என்ன தெரியும்ன்னு நான் கேக்கறேன்.. முன்ன பின்ன தெரியாதவகிட்ட வாயைக் கொடுத்து வம்பைக்கட்டி இழுத்தது யாரு..? நானா..? இல்லை... நீங்களா..? சும்மா எத்தனை பேசியிருப்பன்னு ராகம் போடக்கூடாது.. சொல்லிட்டேன்.. எனக்கும் பேசத்தெரியும்.. வழியோடு போனவ கிட்ட வாய் வளர்த்து வம்பை ஆரம்பிச்சிட்டு.. நீ பேசின.. நீ பேசினன்னு என்மேல பழியைத் தூக்கிப் போடக்கூடாது.. எத்தனை பேசியிருப்பன்னு கேக்கறிங்களே.. உங்ககிட்ட நானா பேச்சை ஆரம்பிச்சேன்.. நீங்கதானே..?" நந்தினியின் வார்த்தைகளில் கொதிப்பிருந்தது...

ஆதவன் பதில் சொல்லவில்லை.. அவன் முகத்தில் கடினம் வந்திருந்தது... எதையோ சொல்ல நினைப்பதும்.. அதை மறைப்பதுமாக அவன் முகத்தில் மாறிமாறி உணர்வுகள் வந்து வந்து போயின...

நந்தினி பெருமூச்சு விட்டாள்.. அவளுக்குத் தெரியும்.. இது போராட்டம்தான் என்பது.. யார் கூடவோ.. யாரையோ பிணைத்து  விதி வகுத்த போராட்டம்...

இந்தப் போராட்டத்தைப் போராடியாக வேண்டும் என்று விதி அவளுக்கு விதித்திருக்கும் போது.. அவளால்

என்னதான் செய்ய முடியும்..?

'கால் கொண்டு ஆடும் பிள்ளை..

நூல் கொண்டு ஆடும் பொம்மை...

உன் கையில் அந்த நூலா..?

நீ சொல்லு நந்தலாலா...!'

அவள் மனதில் பாடல் வந்தது... அவள் யார்..? அவன் யார்..? இருவரையும் ஏன் விதி பிணைத்தது..?

வாழ்க்கை வகுத்திருக்கும் இந்த நியதியில் அவள் மனம் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கிடைத்து விடுமா..?

விடையில்லாக் கேள்விகளை முன் வைக்கும் வாழ்க்கையிடம் கேள்விகளுக்கான விடைகளைப் பெறுவது எப்படி..? இது வாழ்க்கை..! வாழ்ந்துதான் ஆகவேண்டும்.. யார் கண்டது..? வாழ்க்கையின் ஓட்டத்தில் என்றேனும் ஒர்நாளில் இந்தக் கேள்விகளுக்கான விடைகள் அவளுக்குக் கிடைத்தாலும் கிடைக்கலாம்..

சாலையை ஒட்டி ஓடிக் கொண்டிருந்த அகன்ற நீரோடையில் அவளது விழிகள் பதிந்தன... இதுதானே வாழ்க்கை என்று.. அவளுக்குத் தோன்றியது...

"ஊர் வரப் போகுது..." என்றான் ஆதவன்...

அவன் எதையோ சொல்லப் போகிறான் என்பது நந்தினியின் உள்ளுணர்விற்குப் புரிந்தது.. அதனால் அவனைப் பேச விட்டு அமைதிகாத்தாள்...

"உன்னைப் பொறுத்தவரை என் முடிவு ஒன்னுதான்.. அதில் மாற்றமில்லை..."

ஆதவனின் முகத்தில் புருவங்கள் சுளித்திருந்தன.. அவன் சொல்ல வருவதை நந்தினி இனம் கண்டு கொண்டாள்..

"நான் ஒன்னும் அதில மாற்றத்தைக் கேட்கலையே..." அவள் புருவங்கள் ஏறி இறங்கின...

அவளைத் திரும்பிப் பார்த்த ஆதவனின் பார்வையில் தீப்பொறி பறந்தது...

"உன் ஆணவம் அடங்காதுடி.. அதை அடக்கலைன்னா நான் ஆதவனில்ல.."

"செய்யுங்க.."

"திமிர்டி.. உன்னை முதன் முதலா பார்த்தப்ப என்ன திமிரைக் காட்டினயோ.. அதேதிமிர் இன்னைக்கு வரைக்கும் உன்கிட்டக் குறையாம இருக்கு..."

"என்ன பாஸ் நீங்க.. இது பிறந்தப்ப கூடவே பிறந்ததிமிர்.. அவ்வளவு சீக்கிரமா ஓடிப் போயிருமா..?"

"இது பேயோட்டற ஊர்.. உன் திமிரையும் ஓட்டாம நான் விடமாட்டேன்..."

"ஓட்டுங்க..."

"வார்த்தைக் வார்த்தை பதில் சொல்லலைன்னா உனக்குத் தொண்டையில தண்ணி இறங்காதா..?"

"அதான்.. திமிர்ன்னு நீங்களே சொல்லிட்டிங்களே பாஸ்..."

"ஏய்ய்..! பல்லைக் கழட்டிருவேன்..."

"அது எதுக்கு..?"

"இது சென்னையில்ல.. செக்கானூரணி..."

"அதுக்கும்.. நீங்க என் பல்லைக் கழட்டறதுக்கும் என்ன சம்மந்தம் பாஸ்..?"

"சும்மா.. பாஸ்.. பாஸ்ன்னு சொல்லித் தொலைக்காதே.."

"ஓ... அதுக்குத்தான் பல்லைக் கழட்டப் போனீங்களா..? ஏன்..? பாஸ்ன்னு சொன்னா என்னவாம்..?"

"உனக்கு ஒன்னுமில்ல.. எனக்குத்தான் தலைவலி.. இந்த ஊருக்குள்ள நான் உனக்கு புருசன்..."

"இந்த ஊருக்கு வெளியே நீங்க எனக்கு யாரு..?"

அவள் சிரிக்காமல்தான் கேட்டாள்.. பவ்யமாக முகத்தை வைத்துக் கொண்டு பணிவாகத்தான் கேட்டாள்.. அவனுக்குத்தான் கோபம் கொப்பளித்துக் கொண்டு வந்தது.. பற்களை நொறுக்கியே தீருவது என்ற முடிவோடு இருக்கிறவனைப் போல நறநறத்தான்..

"எதுக்குடி உன் வாயை இப்படி வளர்த்து வைச்சிருக்க..?"

அவனுடைய கோபத்தில் நந்தினிக்கு சிரிப்பு வந்து விட்டது..

அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் முகத்தை வைத்துக் கொண்டாலும்.. அவளின் கண்கள் சிரித்து அவளைக் காட்டிக் கொடுத்து விட்டன...

அவன் முகத்தில் லேசான இளக்கம் கோடிட்டு மறைந்தது..

"சிரிப்பு..? ம்ம்..? சிரிடி.. நீசிரிக்க.. நான் பார்த்திருக்கனும்னு விதிச்சிருக்கு..?", கோபமில்லாமல் சொன்னான் அவன்...

"உங்களுக்கு என்னதாங்க பிரச்னை..?"

"நீதான் பிரச்னை..."

"அதுக்கு என்ன செய்ய முடியும்..? நான் ஒதுங்கித்தானே இருந்தேன்..? தேடிவந்து கூப்பிட்டது யாரு...?"

"நிச்சயமா நான் அதைச் செய்யனும்னு நினைக்கல..."

"யார் நினைச்சா எனக்கென்ன..? வந்தது யாரு.."

"வந்து தொலைச்சாச்சு... நீயும் கூடவந்து தொலைச்சாச்சு.."

"தெரியுதில்ல.. அப்புறமும் எதுக்காக இந்த பில்ட் - அப்..?"

"உங்கிட்ட ஹீரோ மாதிரிக் காட்டிக்கனும்னு ஆசை பாரு.."

சொன்னவன் ஹீரோவைப் போலத்தான் இருந்தான்.. அவனின் தோற்றம் மனதில் பதிந்த அந்த நேரத்தில் அவன் செய்த வில்லத்தனத்தின் நினைவில் அவள் மனம் இறுகியது...

அவள் பதில் சொல்லாமல் இருந்ததை அவன் கண்டு கொள்ளவே இல்லை.. சொல்ல வேண்டியதை சொல்லி விடும் அவசரத்தோடு அவன் இருந்தான்...

"இந்த ஊருக்குள்ள புருசனை பெண்டாட்டி 'பாஸ்'ன்னு கூப்பிட மாட்டா..."

"ஓ.. இதான் உங்க பிரச்னையா..? வேற எப்படிக் கூப்பிடலாம்.. ஆதவான்னு கூப்பிடவா..?"

"பல்லைக் கழட்டிருவேன்..."

"நீங்க என்ன பல்டாக்டரா..? ஆதவன்தானே உங்கபெயர்..?"

"கடுப்பைக் கிளப்பாதேடி.. ஏற்கனெவே நான் கொலைவெறியில இருக்கேன்.. சொல்லிட்டேன்.. எங்க ஊரில புருசனை பெண்டாட்டி பெயரைச் சொல்லியும் கூப்பிட மாட்டா.."

"வேற எப்படித்தான் கூப்பிடுவது..?"

பள்ளிச் சிறுமியைப் போல முகத்தை வைத்துக் கொண்டு அவனிடம் அப்பாவி போல கேள்வி கேட்டாள் நந்தினி...

16

அதற்கான பதில் ஆதவனுக்குத் தெரியும்தான்.. ஆனால் அவன் அதைச் சொல்லவில்லை..

"மத்தவங்க எப்படிக் கூப்பிடறாங்கன்னு பார்த்துக்கிட்டு அதைப் போலக் கூப்பிட்டுத் தொலை..."

அந்த நேரத்தில் அவனுக்குத் தெரியாது.. அதையே பிடித்துக் கொண்டு நந்தினி அவனைப் பற்பலப் பெயர்களில் கூப்பிடப் போகிறாள் என்பது..

அது தெரியாதவனாக அவன் அடுத்த விவரத்திற்குத் தாவினான்...

"ஊர் திருவிழாவுக்கு சொந்தக்காரங்க வருவாங்க.."

"ம்ம்ம்...."

"அப்ப நீ அங்க இருக்கனும்னு அம்மா பிடிவாதம் பிடிச்சாங்க.."

"அதான் தெரியுமே.."

"அதுக்காக மட்டும்தான் நீ என்கூட வர்ற.."

"வேற எதுக்காகன்னு நான் நினைச்சுக்குவேன்னு நீங்க நினைச்சீங்க..? ம்ம்ம்..?"

நந்தினி இகழ்ச்சியாக உதட்டை மடித்து புருவங்களை உயர்த்தியதில் ஆதவனுக்குள் சினம் மூண்டது.. எந்த வகையிலும் அவளைத் தோற்கடிக்க முடியாததில் அவனுக்குள் வெறி கிளர்ந்தது..

"உன்னை மாதிரி ஒருத்தியை நான் பார்த்ததே இல்லைடி.."

"எப்படிப் பார்த்திருப்பீங்க..? உங்களைச் சுத்தி உங்க பணத்துக்காக... சுத்தற பொண்ணுகளைத்தானே இது வரைக்கும் நீங்க பார்த்திருக்கீங்க..?"

"அழகை விட்டுட்டியே..."

அவன் வேண்டுமென்றே கேட்டான்.. அவனை நந்தினி பார்வையிடுவதைப் பற்றி அவனுக்கு நன்றாகவே தெரியும்..

"அழகா..? நீங்களா..? ஹ.."

அலட்சியம் போல அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாலும் சிவந்து விட்ட அவளின் முகம் அவளைக் காட்டிக் கொடுத்து விட்டது..

ஆதவனின் மனதில் இனம் புரியாத ஓர்விதமான இதம் பரவியது.. அந்த இதமான மனநிலையுடன்.. காரை வீட்டுக் காம்பவுண்டிற்குள் செழுத்தினான்.. நீண்டு சென்ற சிமிண்ட் பாதையின் இரு பக்கமும் இருந்த பெரிய தோட்டத்தைப் பார்த்த நந்தினியின் விழிகள் விரிந்தன..

"வாவ்..! பூங்காவைப் போலவே இருக்கே.."

"உனக்கு தோட்டம் பிடிக்குமா..?"

"தோட்டத்தைப் பிடிக்காதவங்களும் இருக்காங்களா..?"

"நீ சென்னையில இருக்கிறவளாச்சே.. கான்க்ரீட் காட்டுக்குள்ள இருக்கிறவளுக்கு தோட்டத்தைப் பத்தின நினைப்புக்கூட இருக்கா..?"

பேசியபடி காரை நிறுத்தி விட்டு இறங்கினான் ஆதவன்.. அதற்குள் அவன் வந்து விட்ட செய்தி வீடு முழுவதும் பரவி விட.. புள்ளி மானைப் போல வாசலுக்கு ஓடி வந்தாள்... வித்யா..

"சித்தி...!"

அப்போதுதான் காரை விட்டு இறங்கிய நந்தினி.. அவளைக் கட்டிக் கொண்டு.. கன்னத்தில் முத்தமிட்ட அந்த தாவணிப் பெண்ணின் அன்பில் திக்கு முக்காடி விட்டாள்..

ஆண்டாண்டு காலமாக அறிந்திருந்தவளைப் போல அவள் காட்டிய பாசத்தில் நந்தினியின் கண்கள் கலங்கி விட்டன..

"வித்யா...!"

பதிலுக்கு ஆதவனின் அண்ணன் மகளை அன்புடன் அணைத்துக் கொண்டாள் நந்தினி...

"எப்படியிருக்கீங்க சித்தி..?" நந்தினியின் முகத்தோடு முகம் வைத்துக் கேட்டாள் வித்யா..

"அதான் நேரிலயே பார்க்கறியே.." ஆதுரத்துடன் வித்யாவின் கன்னத்தில் செல்லமாகத் தட்டினாள் நந்தினி..

"விலகு வித்யா.. உன் சித்தியை சித்தப்பா பக்கத்தில நிற்கச் சொல்லு.. ஆரத்தி எடுக்கனும்.."

கையில் ஆரத்தித் தட்டோடு வந்த வைஷ்ணவி அதட்டினாள்..

"இது வேறயா..?"

முகம் சுளித்த ஆதவனை முறைத்தாள் வைஷ்ணவி.. அவன் தோள்களைக் குலுக்கிக் கொண்டு நந்தினியின் அருகே நின்றான்.. வைஷ்ணவி ஆரத்தி எடுத்து முடித்து விட்டு..

"இதை வாசலில் கொட்டு மல்லிகா..." என்று தட்டை மல்லிகாவிடம் கொடுத்து விட்டு.. நந்தினியை அன்போடு அணைத்துக் கொண்டாள்..

"வலது காலை எடுத்து வைச்சு உள்ளே வாம்மா.."

"த்சு.. என்ன அண்ணி இது..? சினிமாப் பார்க்கிறதைப் போலவே இருக்கு.."

"ஆதவா.. நீ கொஞ்சம் வாயை மூடிக்கிட்டு இருக்கியா..?"

"அதைத்தானே கொஞ்ச நாளா செய்துக்கிட்டு இருக்கேன்..?"

"எப்பவுமே அப்படியே செய்யேன்.. உனக்குப் புண்ணியமாப் போகும்.."

"அதுக்கு வேற ஆளைப் பாருங்க.. வரவர இந்த வீட்டிலே ஆண்களுக்கு பேச்சுச் சுதந்திரம்ங்கிறதே இல்லாமப் போயிருச்சு.."

சலித்துக் கொண்ட ஆதவனைப் பார்த்த நந்தினிக்கு.. அந்த அண்ணி.. மைத்துனனின் பேச்சும் உறவும் ஆச்சரியமாக இருந்தது.. அவள் வீட்டில் கனகா இத்தனை அன்பாகவும்.. உரிமையாகவும் பேச மாட்டாள்.. அவளுக்கு நித்தியானந்தன் மட்டுமே உலகம்.. மற்ற உறவுகளை பொருட்படுத்த மாட்டாள்..

இங்கே யாரையும் பொருட்படுத்தாத ஆதவனை ஒரு அன்பான பார்வையில் அடக்குகிறாள் அவனுடைய அண்ணி.. அவனும் அவள் சொல்வதையும்.. செய்வதையும்.. கேலி போலப் பேசிக் கொண்டே ஏற்றுக் கொள்கிறான் எனும்போது அந்த உறவையும்.. பாசத்தையும் மனதுக்குள் வியந்து கொண்டாள் நந்தினி..

வித்யா நந்தினியிடம் ஒட்டுப் புல்லைப் போல ஒட்டிக் கொண்டாள்.. அவளை நந்தினி பார்த்தது கூட இல்லை..

திருமணம் நடந்தபோது.. அவளுக்கிருந்த மனக்கிலேசத்தில் யாரையும் அவள் ஊன்றிக் கவனிக்கவில்லை.. செண்பக வள்ளியோ மற்றவர்களோ அவனைத் தேடி வந்து பார்க்கவுமில்லை.. ஆதவன் அவள் கூட வாழ மறுத்து திருமண மண்டபத்தை விட்டு வெளியேறிய போது சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த செண்பகவள்ளியையும்.. அதைத் தள்ளிக் கொண்டு போன வைஷ்ணவியையும் பார்த்த ஞாபகம்.. மாதவனைக் கூட அவளுக்கு நினைவில்லை..

அப்படியிருக்கும் போது வித்யா அவளிடம் ஒட்டிக் கொண்டதில் அவளுக்கு ஆச்சரியமான ஆச்சரியம்.. ஒல்லியான.. கொடி போன்ற உடல்வாகுடன்.. இளமை ததும்பும் முகத்துடன் வித்யா இருந்தாள்.. அவள் முகத்திலிருந்த ஒர்விதமான துறுதுறுப்பு அவளுக்கு அழகைக் சேர்த்தது.. ஒரிடத்தில் நிற்காமல் துள்ளலான நடையுடன் இங்கும் அங்கும் கொழுசு சப்தத்துடன் அவள் ஓடியதில் வீடே மங்களகரமாக ஒளிர்ந்தது..

மயில் கழுத்து நிறத்தில் கெட்டி ஜரிகைக் கரையிட்ட பட்டுப் பாவடை உடுத்தி.. அதே நிறத்தில் ஜாக்கெட்டும்.. அரக்கு வண்ணத்தில்.. தாவனியும் அணிந்திருந்தாள்.. நீண்ட பின்னலும் மல்லிகைப் பூவுமாக இருந்த அந்த குட்டித் தேவதை.. தமிழ்நாட்டுப் பெண்களின் பாரம்பர்யத்தின் பிம்பமாக மிளிர்ந்தாள்..

நந்தினிக்கு அவளைப் பிடித்திருந்தது.. என்னவோ காலம்.. காலமாய் பழகியவளைப் போல கை கோர்த்தபடி.. சளசளவென்று பேசியபடி.. ஒட்டி உறவாடியபடி கூட வந்தவளிடம் அவளுக்கு சட்டென்று பாசம் ஏற்பட்டு விட்டது..

"வந்துட்டிங்களா சித்தி.." பரபரப்பாக வந்தான் தியாகு..

"ம்ம்ம்.." நந்தினி முறுவலித்தாள்..

"எப்பக் கிளம்பினீங்க சித்தி.."

தியாகு என்னவோ இயல்பான பாசத்துடன்தான் கேட்டான்.. ஆனால் அண்ணன் பிள்ளைகள்.. ஆதவனைக் கண்டு

கொள்ளாமல்.. நந்தினியை மட்டும் கண்டு கொண்டதில் லேசான பொறாமைக்கு ஆளாகியிருந்த ஆதவன்..

"ம்ம்..? நான் எப்ப கிளம்பினேனோ.. அப்பக் கிளம்பினா.. போதுமா.. போய் வேலையை பாருடா.." என்று எரிந்து விழுந்தான்..

தியாகுவும்.. வித்யாவும் ரகசியமாக கண் சிமிட்டி சிரித்துக் கொண்டார்கள்..

"நீ சித்தப்பாவைக் கவனிக்கலைடா.. அப்புறம் அவர்கிட்ட பாட்டு வாங்குவியா.. மாட்டியா..?" விரலை ஆட்டினாள் வித்யா..

"அவர் பாடிட்டாலும்.." தியாகு ராகம் போட்டு இழுத்தான்..

"பாருடா.. இன்னும் இவன் அடங்க மாட்டேங்கிறானே.. அவர் பல்லவியோடதானே நிறுத்தியிருக்கார்..? இரு.. அவரைக் கிளப்பி விட்டு.. அனு பல்லவி.. சரணத்தையெல்லாம் கொட்டச் சொல்றேன்.." மிரட்டினாள் வித்யா..

"போடி.." அவளது மிரட்டலை அலட்சியப் படுத்தினான் தியாகு..

"சித்தப்பா.."

வித்யாவின் அழைப்பில் மாடிப் படியில் கால் வைத்திருந்த ஆதவன் திரும்பிப் பார்த்தான்..

"என்னம்மா..?"

"இவன் கவலைப் படறான் சித்தப்பா.."

"எதுக்காம்..?"

"நம்ம ஊரு ரோடு.. குண்டும்.. குழியுமா இருக்குதா..?"

"இருக்குது.. அதுக்கென்ன..?"

"அதில நீங்க காரை ஓட்டத் தெரியாம ஓட்டியிருப்பீங்களாம்.. சித்திக்கு முதுகு வலிச்சிருக்குமாம்.. என்னை வெந்நீர் ஸ்விட்சைப் போடுன்னு விரட்டறான் சித்தப்பா.."

வித்யா ஒன்றும் தெரியாத அப்பாவியைப் போல இமைகளைக் கொட்டிக் கொட்டி கதை சொன்னதில் நந்தினியே அசந்து போனாள்..

"அடிப்பாவி.. நான் எப்ப.. அப்படிச் சொன்னேன்..?"

தியாகு அலறிது ஆதவனின் காதுகளில் விழவில்லை.. அவன் அண்ணன் மகனை காய்ச்சு.. காய்ச்சென்று காய்ச்ச ஆரம்பித்து விட்டான்..

"நேற்றுப் பிறந்த பயல் நீ.. நான் காரோட்டறதை சொல்லிக் காண்பிக்கிறயா.." என்று ஆரம்பித்த ஆதவன்.. தியாகராஜன் பிறந்து.. குப்புற விழுந்ததில் இருந்து.. அவனுக்கு டிரவுசர் போடத் தெரியாத காலத்திற்கு வந்து.. இப்போது லேசாக அரும்பு கட்டியிருக்கும் மீசையினால் தானும் ஒரு ஆண்பிள்ளையென்ற நினைவில் இந்தத் துள்ளு துள்ளுகிறான் என்பதில் கொண்டு வந்து முடித்தான்..

"ஹப்பா.. இடி இடிச்சு மழை கொட்டி ஒய்ஞ்சதைப் போல இருக்கு.." என்று சொல்லிய வித்யா.. தியாகராஜனின் முகத்தைப் பிடித்து தன் பக்கமாகத் திருப்பி.. அவனின் அடர்த்தியான மீசையை தொட்டுப் பார்த்தாள்..

"ஏய்.. குரங்கே.. என்ன செய்கிற..?" தியாகு கோபத்துடன் அவள் கையை தட்டி விட்டாள்..

"இல்ல.. கட்டபொம்மனைப் போல மீசையை வைச்சிருக்க.. இதைப் போயா லேசா அரும்பு கட்டியிருக்கும் மீசைன்னு சித்தப்பா சொன்னாரு..?" சந்தேகம் கேட்டாள் வித்யா..

"இப்பத்தான் நீ மூட்டி விட்டதில சித்தப்பா ஆடி ஒய்ஞ்சிருக்காரு.. அடுத்து என்கிட்ட அவரைப் பத்தி மூட்டி விட வந்துட்டியா..? கோள் சொல்லி...! உனக்கல்லாம் வித்யான்னு யாருடி பேரு வைச்சது..?"

"அம்மா..! இவனைப் பார்த்தீங்களா.. உங்களுக்குப் பெயர் வைக்கத் தெரியலையாம்.. இவன் சொல்றான்.."

"இப்பத்தான் சித்தப்பா முடிச்சார்.. அடுத்ததா அம்மாகிட்ட மூட்டி விட்டுட்டியா.. போச்சு போ.."

தியாகு தலையில் கைவைக்க.. நந்தினி அதை ரசித்து சிரித்தாள்..

## 17

மாடிப்படியில் ஏறப் போன ஆதவன்.. மீண்டும் பின் வாங்க.. 'இப்ப என்னவாம்..' என்ற நினைவோடு அவனைப் பார்த்தாள் நந்தினி..

"அப்பா.. வர்றார்.." தியாகு ரகசியக் குரலில் சொன்னான்..

உடனே நந்தினியின் உடலில் ஒர்விதமான விறைப்பு வந்தது.. அவள் லேசாக தலை குனிந்தபடி.. புடவை முந்தானையை இழுத்துக் கையில் பிடித்துக் கொண்டு நின்றாள்..

மாடியிலிருந்து இறங்கி வந்த மாதவன் அவளைக் கண்டதும் தயங்கி நின்றார்.. எப்படி அவளை வரவேற்பது என்று அவருக்குத் தெரியவில்லை..

"வாம்மா..." என்று பொதுப்படையாகச் சொன்னார்..

"ம்ம்ம்.." நந்தினி முணுமுணுத்தாள்..

அதற்குமேல் அவளிடம் என்ன பேசுவது என்ற சங்கடத்துடன் தம்பியைப் பார்த்தார் அவர்..

"அம்மாவைப் பார்த்துட்டிங்களா..?"

"இப்பத்தான் வீட்டுக்குள்ளேயே காலடி வைக்கிறோம்.."

"முதல்ல அம்மாவைப் பாருங்க.. மத்ததெல்லாம் அப்புறம்தான்.."

அவருடைய கண்டிப்பில் நந்தினியைத் திரும்பிப் பார்த்தான்.. ஆதவன்.. அவள் அவனைப் பின் தொடர்ந்தாள்.. செண்பக வள்ளியின் அறை ஹாலை ஒட்டியிருந்தது.. பெரிய அறை.. முன்பக்கம் வரவேற்பறையாகவும்.. அடுத்ததாக படுக்கையறையாகவும் பிரிக்கப்பட்டிருந்தது.. வேலைப் பாடுகளுடன் கூடிய பெரிய தேக்கு மரக்கட்டிலில் படுத்திருந்த செண்பகவள்ளியின் அருகே சென்று நின்ற ஆதவன்..

"அம்மா.." என்று மெதுவாக அழைத்தான்..

சட்டென்று கண்திறந்து பார்த்தாள் செண்பக வள்ளி.. அவள் பார்வை ஆதவனின் பின்னால் துழாவி.. நந்தினியின் முகத்தில் சென்று நின்றது..

அவளின் பார்வையில் நந்தினி சங்கடம் கொண்டாள்..

"இங்கே வாம்மா.." செண்பகவள்ளி எழுந்து அமர முயன்றாள்..

"மெல்லம்மா.." அவசரமாக குனிந்து ஆதவன் அவளைப் பற்றித் தூக்கி.. உட்கார வைக்க.. நந்தினி தலையணைகளை எடுத்து அவள் முதுகிற்கு அணைவாக வைத்து விட்டாள்..

இயல்பான அவளின் அந்தச் செய்கையில் செண்பகவள்ளியின் முகத்தில் பரிவு வந்தது.. அதை எதிர்பார்த்திராத ஆதவனுக்குள் யோசனை வந்தது..

"இப்படி உட்காரும்மா.."

சின்ன மருமகளை அழைத்து தன் பக்கத்தில் கட்டிலில் உட்கார வைத்துக் கொண்டாள் செண்பகவள்ளி.. அவளது கை மருமகளின் தலையை ஆதரவுடன் கோதிக் கொடுத்தது..

"ஒரு வருசம்..!" அவள் பெருமூச்சு விட்டாள்..

"ஒரு வருசமா உன் காலடி இந்த வீட்டில படலை.. அதை நான் நினைச்சும் பார்க்கலைன்னு நீ சொல்லிட்ட.. நீ

சொன்னதில குத்தமில்ல.. பெரிய மனுஷியா இருந்துக்கிட்டு நான் என்ன செய்திருக்கனுமோ.. அதைச் செய்யலை.. சொல் பேச்சுக் கேட்காத மகனைப் பெத்தா.. இப்படிப் பேச்சையெல்லாம் கேட்டுத்தானே ஆகனும்..?"

நந்தனி எதுவும் பேசாமல் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. ஆதவன் அவளையே உற்றுப் பார்த்த வண்ணம் கைகளை முன்பக்கமாக மடக்கிக் கட்டியபடி நின்று கொண்டிருந்தான்..

"கடைசியாப் பொறந்தவன்.. செல்ல மகனாப் போயிட்டான்.. அவனோட அப்பா இருந்த வரைக்கும் இவனை ஒரு சொல்லு சொல்ல விட மாட்டாரு..

அவரும் போனதுக்கப்புறம் இவன் தகப்பனில்லாத பிள்ளையாப் போயிட்டான்.. மாதவனும்.. இவனோட அக்காக்களும் அப்படித்தான் ஆனாங்கன்னாலும் அவங்க கதை வேற.. என் புருசன் இருந்த காலத்திலேயே மாதவனுக்கும்.. அவனுக்கு அடுத்ததாப் பொறந்த பனி மலருக்கும் கல்யாணத்தைப் பண்ணி வைச்சிட்டார்.. அவர் போனப்ப இவனுக்கு எட்டு வயசு.. இவனுக்கு நேர் மூத்த மகிழ மலருக்கு பதினெட்டு வயசு.. இவன் குழந்தைப் பையன்.. அவ குமரிப் பொண்ணு.. மறு வருசமே மாதவன் மகிழாவோட கல்யாணத்தை நடத்திவைச்சிட்டான்.. தியாகு பிறக்கிற வரைக்கும் இந்த வீட்டில குட்டிப் பையனா யாரை நினைப்போம்..? நீயே சொல்லு.."

மாமியாரின் கேள்வியில் எதிரே நின்றவனை நிமிர்ந்து பார்த்தாள் நந்தினி.. அவனின் முரட்டுத்தனமான முகம்...

'நானா.. குட்டிப் பையன்..?' என்று அவளை அரட்டியது..

எதற்கு வம்பு என்று அவள் தலையைக் குனிந்து கொண்டாள்...

"இவன் கேட்டது கிடைச்சுச்சு.. நினைச்சது நடந்துச்சு.. எதிலயும் அடம்.. அது இதிலயும் வந்து நின்னுருச்சு.. எங்க குடும்ப கௌரவத்துக்காகத்தான் ஒரு வருசம் கழிச்சு உன்னை நினைச்சுப் பார்த்தேன்னு என்மேல

மனத்தாங்கல் படாதே தாயி.. இது உன்னோட குடும்பமும்தான்.."

'அப்படியா..?' என்று கேட்க தோன்றியதை கேட்காமல் விட்டு விட்டாள் நந்தினி..

அவள் வந்திருப்பது ஒரு விருந்தாளியைப் போலத்தான்.. அதையறியாமல் பேசும் செண்பக வள்ளியின் மீது லேசான பரிதாபம் அவளுக்குள் சுரந்த அந்த வேளையில்..

'அவளைப் பார்த்து நீ பரிதாபப் படுகிறாயா..?' என்று அவளின் மனம் அவளைக் கேள்வி கேட்டது..

நாடகம் முடிந்ததும் வேசத்தைக் கலைக்க வேண்டிய நிலையிலிருப்பவள் அவள்.. அந்தத் திருவிழா முடியும்வரை ஆதவனின் மனைவியாக அந்தக் குடும்பத்திற்குள் அவளுக்கு இடம் கிடைக்கும்.. அதற்குப் பிறகு..?

அவள் வேசத்தை கலைத்துத்தானே ஆக வேண்டும்..?

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு செண்பக வள்ளி விடுதலை கொடுக்க.. அறையை விட்டு ஆதவனும்.. நந்தினியும் வெளியே வந்தார்கள்..

"குளிச்சிட்டு வம்மா.. சாப்பிடலாம்.." காபியை நீட்டியபடி சொன்னாள் வைஷ்ணவி..

'எந்த ரூமில் தங்கிக்க..?' கேட்க நினைத்த கேள்வியை காபியுடன் விழுங்கினாள் நந்தினி..

அதற்குள் நந்தினியின் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு வந்து விட்ட மல்லிகா.. நந்தினி கேட்க நினைத்த கேள்வியை வைஷ்ணவியிடம் கேட்டு விட்டாள்..

"சின்னம்மா பொட்டிகளை எந்த ரூமில் வைக்கம்மா..?"

இப்படிக் கேட்ட மல்லிகாவை எரிப்பதைப் போல முறைத்தாள் வைஷ்ணவி...

"இது என்ன கேள்வின்னு கேட்டு வைக்கிறவ..? ம்ம்..? சின்னம்மா பொட்டிகன்னு சொல்லத் தெரியுதில்ல.. அதை

சின்னய்யா ரூமிலதான் வைக்கனும்கிற அறிவு வேணாமா..?"

மல்லிகா நகரப் போக.. ஆதவன் மறுத்துப் பேசப் போனான்.. வைஷ்ணவியின் உக்கிர பார்வையில் அடங்கிப் பேசாமல் இருந்து விட்டான்...

நந்தினிக்கு சங்கடமாக இருந்தது.. அவனுடன் ஒரே அறையில் தங்க வேண்டுமா என்று மலைப்பாக இருந்தது.. அவனுடன் ஒர் இரவு முழுவதும் ஒரே காரில் பயணித்து வந்தவள்தானே என்று மனது கேள்வி கேட்டபோது.. அதுவும் இதுவும் ஒன்றா என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள்..

ஆதவன் போய் விட்டான்.. நந்தினி தயக்கத்துடன் மாடிப் படிகளில் ஏறினாள்.. கூடவே சளசளத்துக் கொண்டு வந்த வித்யா.. ஆதவனின் அறை வாசலை எட்டியதும் காணாமல் போய் விட்டாள்.. உள்ளே போய்த்தான் ஆக வேண்டுமா என்ற மனக்கிலேசத்துடன் நந்தினி அங்கேயே நின்று விட்டாள்... அப்போது பார்த்து ஆதவனைத் தேடிவந்த மாதவன் அவளைக் கண்டதும் புருவங்களை உயர்த்தி...

"என்னம்மா..?" என்று கேட்டார்...

"ஒன்.. ஒன்னுமில்ல..." வார்த்தைகள் தந்தியடிக்க.. அவசரமாக அறைக்குள் புகுந்து கொண்டாள் நந்தினி...

உள்ளே வந்த நந்தினியைத் துளைக்கும் பார்வையுடன் எதிர் கொண்டான் ஆதவன்..

நந்தினிக்கு எரிச்சலாக இருந்தது... இவள் என்னவோ திட்டம் போட்டு அவன் அறைக்குள் நுழைந்து விட்டதைப் போல அவன் பார்த்த பார்வையை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. பதிலுக்கு எதையும் பேசாமலிருந்தால் அவள் நந்தினி இல்லையே...

"வான்னு கூப்பிட்டுக்கிட்டு வரத் தெரியுதில்ல..? வந்தவளுக்கு ஒரு தனி ரூமைக் கொடுக்கத் தெரியுதா..?" என்று சண்டைக்கு போனாள்...

"கடுப்பைக் கிளப்பாதே.. பார்த்துக்கிட்டுத்தான இருந்த..? அண்ணி இந்த மாதிரி செய்து வைப்பாங்கன்னு நானென்ன கனவா கண்டேன்..?" பதிலுக்கு முறைத்தான் ஆதவன்...

"இப்படிச் சொல்லிட்டா ஆச்சா..? இதையெல்லாம் முன்கூட்டியே யோசிச்சிருக்கனும்..."

"உன்னைக் கூப்பிட்டுக்கிட்டு வரனும்னே நான் யோசிக்கல.. இதில உனக்கு ஒரு ரூமைக் கொடுக்கனும்னு எங்கேயிருந்து யோசிக்கிறது..?"

நந்தினிக்குள் சுர்ரென்று ரோசம் கிளம்பியது... அந்த ரோசத்துடன் அவனை வெளுத்துக் கட்ட அவள் ஆயத்தமானபோது அறை வாசலில் இருந்து...

"ஆதி..." என்ற மாதவனின் குரல் கேட்டது...

"அண்ணன் போல இருக்கே.." என்றான் ஆதவன்...

"போல என்ன..? உங்க அண்ணனேதான்.." என்றாள் நந்தினி..

"அங்கே நின்னுக்கிட்டு ஏன் கூப்பிடறாரு..?"

"அறிவுக் களஞ்சியம்தான்.. ரூமுக்குள்ள நானிருந்தா அங்கே நின்னு கூப்பிடாம என்ன செய்வாராம்..?"

"ஓ.. அது ஒன்னு இருக்கில்ல..."

"ஒன்னில்ல.. ஓராயிரம் இருக்கு.. இப்ப நான் குளிக்கனும்.."

"அதை ஏன் என்கிட்டச் சொல்ற..?"

"உங்க அண்ணன்கூடக் கொஞ்சிட்டு நீங்க லேட்டாவந்தாத் தேவலை..."

"ம்ம்ம்..."

ஆதவன் நகர்ந்ததும்... அறைக்கதவை தாழிட்ட நந்தினி.. விடுதலையுணர்வுடன் அங்கேயிருந்த அலமாரியில்.. பெட்டியைப் பிரித்து உடைகளை எடுத்து அடுக்கினாள்..

மாற்றுடையும்.. துவாலையுமாக குளியலறைக்குள் புகுந்தாள்.. சற்றுப் பொறுத்து

ஆதவன் வந்தபோது.. அவள் தலையைப் பின்னிக் கொண்டிருந்தாள்...

அறைக் கதவை திறந்து விட்டவளை ஏற இறங்கப் பார்த்தான் ஆதவன்.. கனகாம்பரப் பூவின் வண்ணத்தில் பிரிண்டட் சில்க் சேலையை உடுத்தியிருந்தாள்.. காதுகளில் வளைவான பூத்தோடு, கழுத்தில் கெட்டியான தாலிச் செயின்.. கைகளில் தங்க வளையல்கள்.. எளிமையான அலங்காரத்திலும் அதீதமான சோபையோடு நின்றவளைப் பார்த்த போது...

'இந்த அழகுதானே என்னை அவமானப்படுத்தும் திமிரை இவளுக்குக் கொடுத்தது...' என்ற எண்ணம் அவனுக்கு வந்தது...

"நான் கீழே போறேன்.. என் வேலை முடிஞ்சிருச்சு.. இனி இது உங்களோட ரூம்.." நந்தினி போய் விட்டாள்...

அறைக் கதவை மூடிய போதுதான் அந்த இனிமையான நறுமணத்தை உணர்ந்தான் ஆதவன்.. மல்லிகைப் பூவின் வாசத்தோடு கூடிய பிரத்யேகமான பெண்ணின் வாசனை அந்த அறையில் நிரம்பியிருந்தது.. தரையில் உதிர்ந்திருந்த மல்லிகைப் பூக்களும்.. அலமாரியில் அடுக்கப் பட்டிருந்த அவளின் உடைகளும் அவனுக்குள் கிளர்ச்சியை ஏற்படுத்தின... அவள் மீதான வெறுப்பை மறந்து.. லேசான விசிலொலியுடன்

குளிக்கப் போனான் ஆதவன்..

# 18

திருவிழாக் கொண்டாட்டம் ஒவ்வொரு வீட்டிலும் தெரிந்தது.. ஊரே களை கட்ட ஆரம்பித்தது.. காப்பு கட்டியாகிவிட்டது.. யாரும் வெளியூருக்கு போகக் கூடாதென்று வித்யா சொல்லிய போது.. கண்களை விரித்து நந்தினி அதைக் கேட்டுக் கொண்டாள்.. பகல் பொழுதில் வைஷ்ணவியுடன் அவளின் பொழுது கழிந்தது.. நண்பகல் வேளையில் செண்பகவள்ளிக்கு புத்தகம் வாசித்துக் காட்டப் போய் விடுவாள்.. மாலையில் வித்யாவும்.. தியாகுவும் வந்து விட்டால் நேரம் போவதே தெரியாமல் ஓடிப் போய் விடும்.. இரவு வரும் போதுதான் நந்தினி திணறிப் போவாள்...

காலை வேளைகளில் ஆதவன் தோட்டத்தில் உலாவப் போகும் போது குளித்து முடித்து விடுவாள்.. இரவில் குளியல் போடுவதுதான் அவளுக்குச் சிரமமான ஒன்றாக இருந்தது...

முதல்நாள் இரவில் அவள் அறைக்குள் வந்த போது ஆதவன் கட்டிலில் அமர்ந்து லேப்-டாப்பை நோண்டிக் கொண்டிருந்தான்.. அறைக்குள் வந்தவளை நிமிர்ந்து பார்த்துவிட்டு..

"ரூம் கதவை யாரு தாழ்ப்பாள் போடுவாங்க..?" என்று கேட்டான்..

"தாழ்ப்பாள் போடுவதா..?" நந்தினிக்கு விளங்கவில்லை..

"ஓ.. நீ சென்னைப் பெண்ணில்லை.. மறந்திட்டேன்.."

"நான் சென்னைப் பெண்ணில்லை.. தூத்துக்குடி..."

"என்னவோ ஒரு குடி..." ஆதவன் தோள்களைக் குலுக்கினான்...

"அதானே.. உங்களுக்கு குடியை மட்டும் தானே நினைப்பிருக்கம்..?" நந்தினி இடக்காக பேசினாள்...

"இந்தாரு.. உன்னைக் கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கேன்கிறதுக்காக வாயை விட்டேன்னு வைய்யி.. ஒரே அடியில முகரையை பேர்த்திருவேன்.. ஞாபகம் வைச்சுக்க.." அவன் முறைத்தான்..

"ஓகே... ஞாபகத்தில வைச்சுக்கறேன்..." இலகுவாக அவள் சொன்னாள்...

"ஏய்.. போய் கதவை லாக் பண்ணித் தொலைடி.."

"என்னது..?!" அவள் அரண்டு விட்டாள்...

"எதுக்கு சத்தம் போட்டு ஊரைக் கூட்டறவ..?"

"அதெப்படி கதவை லாக் பண்ணுன்னு நீங்க சொல்லலாம்.."

"ஆமாண்டி.. மூடின கதவுக்குள்ள உன்னை ஸ்வாஹா பண்ணலாம்கிற ஆசையிலதான் கதவை மூடச் சொல்றேன்.. அறிவு கெட்டவளே..! நீயும் நானும் புருசன் பெண்டாட்டி.. அந்த நினைப்பு உனக்கிருக்கா..?"

'உனக்கு மட்டும் இருக்கா..?'

"வந்துட்டா.. வரிஞ்சு கட்டிக்கிட்டு விளக்கம் கேட்க... அடச்சீ... வழியை விடு.. வீடு பூரா வேலையாளுக நடமாடிக்கிட்டு இருக்கிறாங்க.. இதில ரூம் கதவு திறந்து கிடந்தா வேற வினையே வேணாம்..."

அவன் அறைக்கதவை மூடிவிட்டு வந்தான்.. நந்தினிக்கு குளிக்கப் போக வேண்டியிருந்தது... அவள் தயக்கத்துடன் அலமாரியைத் திறந்து நைட்டியை எடுத்தாள்.. லேசாக இருமினாள்..

"சொல்லு..." நிமிர்ந்து பார்க்காமல் சொன்னான் ஆதவன்...

"நான் நைட் தூங்கறதுக்கு முன்னாலே குளிப்பேன்.."

"அதை எதுக்கு என்கிட்டச் சொல்ற..?"

"குளிக்கப் போகனும்.."

"போ.. அதுக்காக இந்த நேரத்தில நான் தோட்டத்தில வாக்கிங் போக முடியாது.. புரிஞ்சதா..?"

புரிந்தது என்று சொல்லாமல் நந்தினி குளியலறைக்குள் போய் எரிச்சலுடன் கதவை அடைத்தாள்.. அவள் நைட்டியுடன் வெளியே வந்த போது அவள் மீது கமழ்ந்த சோப்பின் நறுமணத்தை நுகர்ந்தவனாக ஆதவன் நிமிர்ந்து பார்த்தான்...

கடல் நீல நைட்டியில் முடியை விரிய விட்டபடி அவள் நின்றபோது.. தேவதையைப் போல அவனுக்குத் தோன்றியது.. முழங்கால்களைத் தாண்டித் தொங்கிய அவளின் கூந்தலின்.. நீளத்தில் வசீகரிக்கப் பட்டவனாக அவளையே பார்த்தான் அவன்..

அவனது பார்வையை உணர்ந்தவளாக நந்தினி உதட்டைக் கடித்தபடி கட்டிலின் மீது கிடந்த விரிப்பை இழுத்தாள்...

"என்ன செய்ற..?"

"படுக்கப் போறேன்.. தூக்கம் வருது..."

எந்தவித ஒப்பனைகளுமில்லாத அவள் முகத்தின் மாசு மறுவற்ற அழகை அள்ளிப் பருகுவதைப் போல பார்த்தபடி...

"அதுக்கேண்டி விரிப்பை உருவற..? தூக்கம் வந்தா கட்டிலில் படுத்துத் தூங்க வேண்டியதுதானே.." என்று கேட்டான் அவன்...

இவன் தெரிந்துதான் பேசுகிறானா என்ற கோபம் அவளுக்குள் வந்தது.. அவனுடன் ஒரே அறையில் தங்கவே அவள் சிரமப் படும் போது.. ஒரே படுக்கையில் படுப்பதா..?

கோல்கொண்டா கோட்டையின் நினைவில் அவளின் உடல் நடுங்கியது.. அவன் அதைக் கவனிக்கத் தவறவில்லை..

"என்னடி..?" அழுத்தமாக வினவினான்...

"நான் தரையில படுத்துக்கறேன்.." அவன் முகம் பார்க்காமல் அவள் சொன்னாள்..

"இந்தாரு.. உன்னைக் கட்டிலில படுன்னுதான் நான் சொன்னேன்.. நானும் இதிலதான் படுப்பேன்னு சொல்லலை புரிஞ்சதா..?"

ஆதவன் எழுந்து அந்த இரட்டைக் கட்டிலைப் பிரித்துப் போட்டான்...

"இப்பப் படு.. இங்கே யாரும் அலையலை.. புரியுதா..?"

அவனின் கோபத்தில் அவள் அடங்கிப் போனவளாக படுத்து கண்களை மூடிக் கொண்டாள்.. தூக்கம் வரத்தான் வெகு நேரம்  ஆனது.. இரண்டாம் நாள்.. மூன்றாம் நாளில் அவளுக்கு அந்தச் சூழல் பழகி விட்டது.. படுத்ததும் உறங்கிப் போனாள்..

உறக்கம் இழந்தது ஆதவன்தான்.. விடிவிளக்கின் மெல்லிய ஒளியில் சீரான சுவாசத்துடன் உறங்கிக் கொண்டிருந்தவளின் உடல் வளைவுகள்.. வரி வடிவமாக.. ஒரு கோட்டுச் சித்திரம் போலத் தெரிய உறக்கத்தைத் தொலைத்தான் அவன்..

திருவிழாவிற்காக ஒரு வாரத்திற்கு முன்னதாகவே ஆதவனின் அக்காக்களின் குடும்பங்கள் வந்து இறங்கி விட்டன...

"இனி திருவிழா முடியற வரைக்கும்.. உன் காட்டில மழைதாண்டா.." வித்யா தியாகுவை கிண்டலடித்தாள்...

"ஏன் அப்படிச்சொல்ற..?" நந்தினிக்கு அதை அறியும் ஆவல் மிகுந்தது..

"இவன் சொல்லலையா சித்தி..?"

"எதை..?"

"அதான்.. இவனுக்கு ஒன்னுக்கு ரெண்டா.. அத்தை மகள்கள் இருக்கிற பகுமானத்தை.."

"பகுமானமா..?"

'ஙே' என்று விழித்தாள் நந்தினி.. வாய் பொத்திச் சிரித்தாள் வித்யா...

"இது கூடத் தெரியலையா..? நீங்க சென்னையிலே பெரிய ஆபிசர்ன்னு தியாகு சொன்னானே..."

"அது பொய்யில்லைம்மா.. பெர்சனல் மேனேஜரா ஆகுறதுக்கு என்ஜினியரிங் படிப்பும்.. எம்பிஏ படிப்பும் இருந்தாப் போதும்ன்னு சொன்னாங்க..."

"என்னத்தை என்ஜினியருக்கு படிச்சீங்களோ போங்க.. பகுமானம்ன்னா பெருமை பீத்தல் களஞ்சியம்ன்னு அர்த்தம் சித்தி..."

நந்தினிக்கு 'பெருமை' புரிந்தது... பீற்றல் களஞ்சியத்தை சுத்தமாகப் புரியவில்லை.. அதைச் சொன்னால்.. அதற்கும் எதையாவது வித்யா விமரிசித்து வைக்கும் அபாயம் இருந்ததால்.. ரொம்பத் தெரிந்தவளைப் போல..

"அப்படியா..? ஹா.. ஹா..." என்று சிரித்து வைத்தாள் நந்தினி...

அதற்கெல்லாம் மசிகிற ஆளா வித்யா..?

"என்ன அப்படியா..? பெருமை பீத்தல் களஞ்சியம்னா என்னன்னு சொல்லுங்க..." என்று கிடுக்கிப் பிடி போட்டாள்..

"அதுவா வித்யா.. அதான் நீ சொன்னியே.. பகுமானம்.."

நந்தினி ஏதோ ஓர் அனுமானத்துடன் எதற்கும் இதைச் சொல்லி வைப்போமே என்றுதான் சொல்லி வைத்தாள்.. அடுத்த கிடுக்கிப் பிடியில் மூச்சுத் திணற அவள் தயாராகிக் கொண்டிருந்த போது...

"குட்.. இப்போத்தான் நீங்க செக்கானூரணிக்கு மருமக..." என்று சான்றிதழ் வழங்கினாள் வித்யா...

"இது கரெக்ட் ஆன்ஸரா..?" நந்தினியால் அதை நம்பவே முடியவில்லை..

அவள் என்ஜினியரிங் படித்தபோது பல்கலைக் கழகத்தில் முதல் மாணவியாக தங்கப் பதக்கம் வாங்கிய போதுகூட இவ்வளவு சந்தோசப் பட்டதில்லை.. அந்த அளவுக்கு..

'பகுமானம்' என்பதற்கான விளக்கவுரையை சொல்லி விட்டதில் அவள் மகிழ்ந்து போனாள்..

"சரியாப் போச்சு போங்க.. இவ கையில எம்புட்டிங்கன்னா.. உங்களை ஒருவழி பண்ணிருவா.. அப்புறம் உங்க பேச்சு வழக்கையே மறந்து... வேற மாதிரி பேச ஆரம்பிச்சிருவீங்க.. பத்திரம் சித்தி.." எச்சரித்தான் தியாகு...

அதற்குள்.. பனிமலரும்.. மகிழமலரும் நந்தினியைப் பார்க்க வந்து விட்டார்கள்.. இருவரின் உடல்களிலும் வைரங்கள் டாலடித்தன.. வெறும் தாலிச் செயினுடன் நின்றவளை ஒரு மாதிரி பார்த்து வைத்தவர்கள் தங்களுக்குள் தாழ்ந்த குரலில் எதையோ பேசிக் கொண்டார்கள்..

அவர்கள் வந்தவுடன் நந்தினி எழுந்து நின்று விட்டதில் அவர்கள் முகத்தில் திருப்தி நிலவியது.. தம்பியின் மனைவி மெத்தப் படித்தவள் என்று கேள்விப் பட்டிருந்ததில் திமிர் பிடித்தவளாக.. பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்காதவளாக இருப்பாளோ என்ற எண்ணம் அவர்கள் மனதில் ஓடிக் கொண்டிருந்தது...

அப்படி இல்லையென்று அவள் காட்டி விட்டதில் அவர்களுக்கு பெருத்த சந்தோசம்...

"உட்காரும்மா.." என்றபடி அருகில் உட்கார்ந்தவர்கள் பொதுவாக பேசிக் கொண்டிருந்தார்கள்...

அவர்களின் பிள்ளைகளில் மூத்தவளான பனி மலரின் மகன் திருமண வயதில் இருந்தான்... வித்யாவை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.. அவன் பெயர் ரமணன் என்று அவன் போனபின்பு வித்யா சொன்னாள்.. ரமணனின் தங்கை வித்யாவின் வயதில் இருந்தாள்.. அவள் பெயர் ராதா என்று அவள் போன பின்பு தியாகு ஜொள்ளினான்...

ஆதவனுக்கு நேர் மூத்தவளான மகிழ மலருக்கு வித்யாவின் வயதில் கீதா என்ற மகளும்.. வித்யாவை விட நான்கு வயது குறைவில் கிரிதரன் என்ற மகனும் இருந்தார்கள்...

ராதாவும்.. கீதாவும் போட்டி போட்டுக் கொண்டு தியாகுவை பார்வையிட்டார்கள்.. அவன் அதை கண்டு கொள்ளாதவனைப் போல 'கெத்து' காட்டினான்.. அத்தனையும் சும்மா என்று.. வித்யா நந்தினியில் காதைக் கடித்தாள்.. அவர்கள் அவனைப் பார்வையிடுவதை

விட நூறு மடங்கு அதிகமாக அவன் அவர்களைப் பார்வையிடுவான் என்ற புள்ளி விவரங்களை பிட்டுப் பிட்டு வைத்தாள்...

"நீ ரமணனை சைட் அடிக்காததைப் போல சைட் அடிக்கிறயே.. அதைப் போலவா..?" என்று நந்தினி கண்சிமிட்டிய போது...

"போங்க சித்தி..." என்று முகம் சிவக்க ஓடிவிட்டாள்..

'இது வீடு...' என்று தோன்றியது நந்தினிக்கு.. அங்கே ஆனந்தம் பொங்கித் தளும்பியது.. அப்படியொரு வீட்டில் பிறந்த ஆதவனா அவளுக்கு கெடுதல் செய்தான்..? எங்கோ அவளுக்கு இடித்தது...

## 19

அன்று இரவு அவள் தூங்கப் போன போது அவளது கட்டிலில் நகைப் பெட்டிகள் இருந்தன.. கேள்வியுடன் ஆதவனைப் பார்த்தாள் நந்தினி...

"உனக்குத்தான்..." என்றான் அவன்...

நந்தினி அவற்றைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை... மாறாக...

"கேட்டேனா..?" என்று வெடித்தாள்..

"இந்தாரு.. இந்த சரவெடியை வெடிக்க விடற வேலையையெல்லாம் என்கிட்ட வைச்சுக்காதே..."

"ஓஹோ..."

"உனக்கு ஏற்கனெவே சொல்லியிருக்கேன்..."

"என்னன்னு..?"

"இந்த ஊருக்குள்ள நீ எனக்குப் பெண்டாட்டின்னு..."

"ஊருக்கு வெளியே யாரு மச்சான்..?"

"மச்சானா...?"

அவளை நிமிர்ந்து பார்த்த ஆதவனின் கண்களில் ஆச்சரியம் இருந்தது.. அந்த அழைப்பில் அவன் மனதில் கிறக்கம் படிந்தது...

"ஆமாம் மச்சான்.. உங்களை எப்படிக் கூப்பிடனும்னு நான் கேட்டப்ப மத்தவங்க கூப்பிடறதைப் பார்த்து அதைப்போல கூப்பிடுன்னு நீங்கதானே சொன்னீங்க மச்சான்..?"

"மச்சான்னு இந்த வீட்டில யாருடி கூப்பிட்டது..?"

"நம்ம மல்லிகா இல்ல மச்சான்.. அவ கோதண்டத்தைப் பார்த்து மச்சான்னுதான் கூப்பிட்டா மச்சான்.."

"இதைப் பார்றா.. இந்தக் கதை எத்தனை நாளா நடக்குது..?"

"எனக்குத் தெரியாது மச்சான்.."

"அடியே இவளே.. நம்ம வீட்டு ஆளுக கூப்பிடறதைப் பார்த்து அதைப் போல கூப்பிட்டு வையுடின்னு சொன்னா.. நீ வேலையாளுக கூப்பிடறதைப் பார்த்து காப்பி அடிச்சு வைக்கிறயா..? ம்ம்..? இந்த மல்லிகா கோதண்டத்துக்கு நூல் விடறாளா..?"

"அதில உங்களுக்கு உலக மகா காண்டு இருக்கும் போலத் தெரியுதே.. மச்சான்..."

"அடச்சீ.. வாயைக் கழுவு.. அவங்க மேல எனக்கெதுக்கு காண்டு..?"

"அதானே.. உங்க லெவலே வேறயாச்சே.. அதை விடுங்க.. இந்த நகை மேட்டருக்கு வாங்க..."

"நீ தாலிச் செயினோட மட்டும் நிக்கறியாம்.. என் அக்காக்கள் ரெண்டு பேரும் என்னை பிடிபிடின்னு பிடிச்சுட்டாங்க.. அம்மா கூப்பிட்டு உன் பங்கு நகைகளை உன்கிட்டக் கொடுக்கச் சொன்னாங்க..."

"என் பங்கா..?"

"ம்ம்.. குடும்ப நகைகளில மருமகளுக்குன்னு இருக்கிற நகைகளில பாதியை அண்ணிக்குக் கொடுத்துட்டாங்க.. மீதியை எனக்கு வரப் போகிற பெண்டாட்டிக்குன்னு வைச்சிருந்தாங்க.. அதான் நீ வந்து தொலைச்சிட்டயே.. வாங்கிக்க..."

இதை இத்தனை சலிப்பாக சொல்ல வேண்டுமா என்ற நினைவுடன் உதட்டைக் கடித்தபடி நகைப் பெட்டிகளை திறந்து பார்த்தாள் நந்தினி.. வைரங்களின் ஒளிர்வில் அறை முழுவதும் வெளிச்சம் பரவியது..

"டயமன்ட்ஸ்.." நந்தினி விழி விரிந்தாள்..

"வைரம் தான்.. வைச்சுக்க.." தாராள மனத்தோடு சொன்னான் ஆதவன்...

"உங்க தயாள குணத்துக்கு நன்றி மச்சான்.. ஆனா எனக்கு இதுகள்ளாம் வேணாம்..."

"இம்சையைக் கிளப்பாதேடி.. என் பெண்டாட்டியா நீ நிற்கிறப்ப இந்த நகைகளை போட்டுக்கிட்டுத்தான் நின்னு தொலைக்கனும்டி.. புரிஞ்சுக்கடி.."

"ஓகே.. இதை நான் போட்டுக்கறேன்.. பட்.. ஒன் கண்டிசன்.."

"ஏற்கனெவே கண்டிசன்களை சொல்லி முடிச்சுட்ட.."

"அது அப்ப.. இது இப்ப..."

"சொல்லித் தொலை..."

"என் வேலை முடிஞ்சதும் நான் சென்னைக்கு கிளம்பறப்ப இந்த நகைகளை திருப்பிக் கொடுத்துட்டுத்தான் போவேன்..."

அவளை அப்படியே நாலு அப்பு.. அப்பினால் என்ன என்ற ஆவேசம் ஆதவனுக்குள் எழுந்தது.. அவள் 'மச்சான்' என்று அழைத்ததில் ஏற்பட்டிருந்த கிறக்கத்திலிருந்து அவன் வெளியே வந்தான்.. இனிய கனவு கலைந்த எரிச்சல் அவனுக்கு...

"ஏண்டி உனக்கு எந்த நேரத்தில எதைப் பேசனும்கிற விவஸ்தையே கிடையாதா..?"

"ஏன்.. இந்த நேரத்துக்கு என்ன..?"

ஆதவன் பதில் சொல்லவில்லை.. அவனால் பதிலைச் சொல்ல முடியவில்லை.. மில்லுக்குப் போனாலும் வீட்டிலிருக்கும் அவளின் நினைவு அவன் மனதில் மையம் கொள்வதை எப்படி அவளுக்கு உணர வைப்பது என்ற யோசனையுடன் அவன் கட்டிலைப் பிரித்துப் போட்டான்.. அதை அவன் இழுத்த வேகத்தில் அவனுடைய கோபத்தின் பரிணாமம் வெளிப்பட...

"மெல்ல.. அதுக்கு வாயிருந்தா அழுதிருக்கும்..." என்று இடக்குப் பேசினாள் நந்தினி...

"இந்தாரு.. நானே எரிச்சலில இருக்கேன்.. கடுப்பைக் கிளப்பாம தூங்கப் போயிரு..." எச்சரித்தான் ஆதவன்...

"எதுக்காக எரிச்சல் படறிங்க மச்சான்..?"

நந்தினி இமைகளைக் கொட்டி விழிக்க.. ஆதவனின் எரிச்சல் காற்றில் கலந்த கற்பூரமானது...

மறுநாள் காலையில் காபியுடன் வந்தவள்...

"ஆது.. ஆது..." என்று அவனை எழுப்பினாள்...

'ஆதுவா..? யார் அது..?'

கண்களை விழித்து காபியை வாங்கிக் கொண்டவன்...

"நீதான் எனக்குப் பெயர் வைச்சியா..?" என்று முறைத்தான்..

"என்ன ஆது.. இப்படிக் கோவிச்சுக்கறிங்க..? நீங்கதானே மத்தவங்க கூப்பிடறதைப் பார்த்து அதைப் போல கூப்பிடனும்னு சொன்னீங்க..?"

"இப்ப யாரைப் பார்த்த...?"

"உங்க சின்னக்காவைப் பார்த்தேன்.."

மகிழமலர் ஆதவனை 'ஆது' என்றுதான் கூப்பிடுவாள்... அந்த வழக்கப்படி நந்தினியிடம் 'ஆது எழுந்திருச்சிட்டானா..?' என்று கேட்டிருக்கிறாள்.. உடனே நந்தினிக்கு ஆதவன்.. ஆதுவாகி விட்டான்...

"ஆத்தாடி..."

"யாரைக் கூப்பிடறிங்க..?"

"உன்னைத்தாண்டி கூப்பிடறேன்.. என் பொண்டாட்டி திலகமே..."

"என்ன ஆது..?"

"இந்த ஆது.. சாதுவையெல்லாம் இந்த ரூமுக்குள்ளேயே மூட்டை கட்டிப் போடு.. வெளியே பேசிவைக்காதே..."

"ஏன் ஆது..?"

"ஏனா..? இதைக் கேட்டா என் சின்னக்காவே உன் முதுகில டின் கட்டி அடிக்கும்.. பரவாயில்லையா..."

"ஊஹீம்..."

"அஃது..."

குளிக்கப் போன ஆதவனின் முகத்தில் வந்த சிரிப்பு மறைய வெகு நேரமானது.. மதிய உணவுக்கு அவன் வந்தபோது.. நந்தினி குடும்பத்தாரின் மத்தியில் இருந்தாள்.. ராதா.. கீதாவுடன் அவள் பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்தவனுக்கு.. அவளின் இயல்பாக ஈஷிக் கொள்ளும் பாசத்தின் மீது ஈர்ப்பு ஏற்பட்டது.. வந்த முதல் நாளிலேயே செண்பகவள்ளியின் முதுகுக்கு தலையணையை அணைவாக அவள் போட்டு விட்ட நினைவுடன் லேசாக கண் சமிக்ஞை செய்து அவளின் கவனத்தை கவர முயற்சித்தான்.. அதை நந்தினி பார்ப்பதற்குப் பதிலாக.. ராதாவும்... கீதாவும் பார்த்து விட்டார்கள்.. அவர்கள் முகத்தில் குறும்பு வந்தது...

"ஹ.. மாமா என்னைப் பார்த்து கண்ணடிக்கிறாரு..."

"போடி கீது.. அவர் என்னைப் பார்த்துத்தான் கண்ணடிச்சாரு.. இல்ல மாமா.."

"குழையாதேடி.. மாமாவுக்கு இந்த ராதா மேலதான் இஷ்டம்..."

"ஹீஹீம்.. மாமாவுக்கு கீதான்னாத்தான் இஷ்டம்.. நீன்னா கஷ்டம்..."

"இந்த ராதையின் நெஞ்சம்.. மாமாவுக்குத்தான் சொந்தம்.."

"இந்த கீதையின் நெஞ்சம்.. மாமாவிடம்தான் தஞ்சம்..."

இரண்டு அக்கா மகள்களும்.. தாய் மாமனை வம்பிழுத்துக் கொண்டிருக்க.. அவர்களின் அருகே வந்தான் ஆதவன்...

"ஆத்தாடி.. என் அக்கா மகள்களே..! உங்களைப் பார்த்துக் கண்ணடிக்க.. என் அண்ணன் மகன் வருவான்.. நான் என் பெண்டாட்டியைப் பார்த்துக் கண்ணடிச்சேன்..."

அவர்களின் முன்னாலேயே நந்தினியைப் பார்த்து அவன் கண்ணடித்து அழைக்க.. ராதாவும்.. கீதாவும்...

"ஓ...." என்று குரல் எழுப்பினார்கள்...

நந்தினியின் முகம் குங்குமமாகிவிட்டது.. ஆதவனைப் பின்தொடர்ந்து அறைக்குள் வந்தவள்.. படபடவென்று இமைகளை பட்டாம் பூச்சிகளைப் போல அடித்தாள்...

"எதுக்கு மாமா.. கண்ணடிச்சு என்னைக் கூப்பிட்டிங்க..?"

உன்னைக் காதல் பண்ணத்தான் என்று சொல்லி விடலாமா என்று யோசித்தான் ஆதவன்.. அதைச் சொல்லாமல்..

"மாமாவா..?" என்று புருவங்களை உயர்த்தினான்...

"ஆமாம் மாமா.. ராதாவும் கீதாவும் மாமா.. உங்களை மாமான்னுதானே கூப்பிட்டாங்க மாமா..?"

"நிறுத்துடி.. இந்த மாமா எத்தனை நேரத்துக்கு..."

"நீங்க சொன்னா காலம் முழுமைக்கும் மாமா..."

"நான் சொல்ல மாட்டேன்.. இப்ப எதுக்கு உன்னைக் கூப்பிட்டேன்னு சொல்றேன் கேளு..."

"சும்மா கூப்பிடலை மாமா.. கண்ணடிச்சுக் கூப்பிட்டிங்க மாமா..."

"அதை எதுக்குடி கட்டி இழுக்கற...?"

"ச்சும்மா.. உங்களுக்கு நினைவு படுத்தத்தான் மாமா..."

அவளின் 'மாமா' என்ற அழைப்பில் மையலாகிப் போனான் ஆதவன்... அவளை கட்டியணைக்கும் ஆசை வந்ததில்... கண்கள் இடுங்க.. அவளை ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தான்...

"என்ன மாமா..?" உஷாரானாள் நந்தினி...

"ஊம்..? அக்காக்களுக்கும்.. அவங்க குடும்பத்துக்கும் புதுத்துணி எடுத்திருக்கேன்.. அதைக் கொடுத்திட்டு வரலாம்.. வா.."

"இப்பத்தானே.. அக்காவும்.. மாமாவும் கொடுத்துட்டு வந்தாங்க..."

"அது அவங்க முறைக்கு.. இது நம்ம முறை...."

"ஓ..."

"இத்தனை வருசமா.. எனக்குக் கல்யாணமாகலைன்னு நான் முறைசெய்யலை.. இப்பத்தான் நீ வந்திருக்கயே.. தனியா முறை செஞ்சுதான் ஆகனும்.. இல்லைன்னா சொல் பேச்சு வந்திரும்.."

இவன் இதற்கெல்லாம் முக்கியத்துவம் கொடுப்பான் என்ற நினைவில் மௌனித்தாள் நந்தினி...

ஒரு சொல் வந்து விடக் கூடாது.. அது மட்டுமே அவனுக்கும்.. அவன் குடும்பத்திற்கும் முக்கியம்..

அந்தச் சொல்லை அடுத்தவர் வீட்டுப் பெண்ணுக்கு அவன் வர வைக்கலாம்.. அதற்கு அவன் தயங்க மாட்டான் என்ற

நினைவில் அவள் மனம் கசந்தது..

ஆதவனுடன் புதுத் துணிகளை எடுத்துக் கொண்டு அவளும் போனாள்... பனிமலருக்கும்.. மகிழமலருக்கும் ஆதவன் முதல் முறையாக தனி முறையைச் செய்தபோது அவனின் மனைவியாக பக்கத்தில் நின்றாள்...

அன்று மாலையில் செண்பகவள்ளி அவளையும்.. ஆதவனையும் வரச் சொல்லி விட்டாள்...

"இந்தாம்மா.. உனக்கும் ஆதவனுக்கும் திருவிழாவுக்கான புதுத்துணி.. மதியம்தான் ஜவுளிக்கடைக்காரர் வந்திட்டுப் போனார்..."

படுத்த படுக்கையிலும்.. பெற்ற பிள்ளைகளுக்கான துணி வகைகளை வீட்டுக்கே வரவழைத்து எடுத்துத் தந்த அந்தத் தாயின் அன்பில் நந்தினியின் மனம் நெகிழ்ந்தது...

## 20

தேர் வந்து கொண்டிருந்தது.. அசைந்தாடிய தேரில் அலங்கார ரூபனாக பெருமாள் வீற்றிருந்தார்.. அவரின் இருபக்கமும் தேவியர் இருக்க.. தேரின் முன்னிலையில் இருபக்கமும் அனுமனும்.. கருடனும் கை குவித்து நின்றிருந்தார்கள்...

பூச்சரங்களின் மத்தியில் தேர் ஆடிய போது தானும் ஒய்யாரமாக தேவியருடன் ஆடியபடி பவனி வந்தார் உலகளந்த பெருமாள்...

தேர்வடத்தைப் பிடித்தபடி வந்த ஆதவனின் பட்டு வேட்டி.. பட்டுச் சட்டையில் மாப்பிள்ளையைப் போன்ற அழகுடன் கம்பீரமாக இருந்தான்.. தேருடன் ஒட்டி

நடந்த மக்கள் கூட்டத்தில் குடும்பத்தாருடன் நடந்து கொண்டிருந்த நந்தினி அரக்கு வண்ணப் பட்டுப்

புடவையில் அம்சமாக இருந்தாள்..

"சித்தி.. பாருங்களேன்.. நம்ம வீட்டுக் கள்ளன்.. இந்தக் கள்ளிகளை சைட்டோ.. சைட்டுன்னு சைட் அடிக்கிறான்..."

வித்யாவின் கிசுகிசுப்பில் ஆதவனின் அருகே தேர்வடத்தைப் பிடித்துக் கொண்டிருந்த தியாகராஜனைப் பார்த்தாள் நந்தினி.. அந்த நேரம் பார்த்து யதேச்சையாக ஆதவன் அவளைப் பார்த்து வைக்க.. இருவர் பார்வையும் சந்தித்துக் கொண்டன...

பெட்ரோமாக்ஸ் விளக்குகளின் தங்க நிற ஒளியில் ஆதவனின் தோற்றம் அவளை அசத்தியது... அவள் மனதில் ஏற்பட்ட மயக்கத்தை அவன் விழிகள் பிரதிபலித்து.. அவனும் அவளை ரசித்துக் கொண்டிருப்பதைக் காட்டிக் கொடுத்தன...

அவள் ஆதவனைப் பார்த்துக் கொண்டிருப்பதை அறியாத வித்யா நந்தினி தியாகுவைத்தான் கண்காணித்துக் கொண்டிருக்கிறாள் என்ற நினைவில்...

"பார்த்தீங்கள்ல..?" என்று கேட்டாள்...

"பார்த்தேன்..." ஆதவனைப் பார்த்தபடி பதில் சொன்னாள் நந்தினி...

ஊர்வலம் வந்து முடிந்த பெருமாள் கோவிலுக்குள் சென்றுவிட.. கோவில் வாசலில் ஆட்ட பாட்டங்கள் ஆரம்பமாகின...

"சொக்குப் பொடி போட்டானே...

மச்சான்.. மச்சான்...

அவன் சொன்னதையெல்லாம்...

கேட்கும் படி...

வைச்சான்.. வைச்சான்..."

தலையில் கரகத்தை வைத்துச் சுழன்றாடிய பெண் பாடியபோது... ஆதவனைத்தான் நந்தினியின் பார்வை தேடியது.. அவளது தேடுதலை இனம் கண்டு கொண்ட

மின்னலுடன் அவன் பார்வை.. அவள் பார்வையை எதிர்கொள்ள.. சொக்கிப் போனவளாக லேசான வெட்கத்துடன் அவள் முகம் திருப்பிக் கொண்டாள்...

"ஏன் சித்தி.. இந்த மூக்குப் பொடியை கிழக்குத்தெரு தாத்தா போறப்ப பார்த்திருக்கேன்.. இந்த மிளகாய் பொடியை அம்மா குழம்பில கொட்டறப்ப பார்த்திருக்கேன்.. இதென்ன சித்தி புதுதினுசான பொடியாய் இருக்கு..? நீங்க சொக்குப் பொடியைப் பார்த்திருக்கிறீங்களா..?"

அறியாப் பெண்ணைப் போல வித்யா வினவ.. கூட இருந்த ராதாவும்.. கீதாவும்.. அதுதான் சாக்கென்று கலகலவென்று சிரித்து தியாகுவின் கவனத்தை கவர முயன்றார்கள்...

தியாகு அவர்கள் பக்கமாக பார்த்தானோ இல்லையோ ஆதவன் அவர்கள் பக்கமாக பார்த்தான்.. அவனின் ஊடுருவும் பார்வையில் நந்தினிக்கு உடம்பையும்.. மனதையும் என்னவோ செய்தது...

'அதான் உங்க சித்தப்பா கண்ணில பார்க்கிறேனே..' என்று சொல்ல நினைத்தாள் நந்தினி...

சிறு பெண்ணிடம் தன் மனதை பகிர்ந்து கொள்ள முடியாமல் மௌனமாகி விட்டாள்...

"இவ சொல்றதை நம்பாதீங்க அத்தை.." கீதா சிரித்தாள்..

"எனதம்மா..?" நந்தினி கேட்டாள்..

"அதான் இவளுக்கு சொக்குப் பொடின்னா என்னன்னு தெரியாதுன்னு பீலா விடறாளே.. அதை.." ராதா சொன்னாள்..

"அப்படியா..? எங்க வித்யா பீலா விடறாளா..? சேச்சே.. பீடாவைச் சொல்லு.. அது என்னன்னு இவளுக்குத் தெரிஞ்சிருக்கலாம்.. பீலாவைச் சொன்னா இந்தக் குழந்தைக்கு என்னன்னு தெரியும்..?"

நந்தினி வித்யாவின் கன்னம் வருட.. அவள் இமை கொட்டி குழந்தை முகத்தைக் காட்டினாள்...

"அடிப்பாவி.. நீ குழந்தையா..? அத்தை இது அநியாயம்.." கீதா வாயில் அடித்துக் கொள்வதைப் போலப் பாவனை செய்தாள்..

"அதானே.. இவ ஊருக்கே டியுசன் எடுப்பா.. இவ குழந்தையாம்.. நாங்க நம்பனுமாம்.. யாருகிட்ட காது குத்தறிங்க..?" ராதா இடுப்பில் கை வைத்துக் கொண்டாள்...

"இவளுகளுக்கு என் குழந்தை மனசு மேல பொறாமை சித்தி.." வித்யா நந்தினியின் தோளில் சாய்ந்து கொண்டாள்..

"உன்னை எனக்குத் தெரியாதா வித்தி.." நந்தினி இருபொருள்படக் கூறினாள்...

"என்னத்தைத் தெரிஞ்சுக்கிட்டிங்களோ.. அங்கே பாருங்க என் அண்ணன் மந்திரிச்சு விட்ட மாதிரி ஒரு மார்க்கமா முழிச்சுக்கிட்டு நிக்கிறதை..." ராதா கை காண்பித்தாள்..

அந்தப் பக்கம் பார்த்தால்.. ஆதவன்தான் அந்த தினுசில் ஒரு மார்க்கமாக நின்று கொண்டிருந்தான்.. அவனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த ரமணன் வித்யாவை காதல் பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்...

"பார்த்தீங்களா..?" என்ற அவர்களின் கேள்விக்கு இப்போதும் ஆதவனைத்தான் பார்த்தேன் என்று நந்தினியால் சொல்ல முடியவில்லை...

"ம்ம்ம்.." என்று முணுமுணுத்தாள்...

"எதனால அவன் அப்படிநிக்கிறான் தெரியுமா..?"

"எதனாலாம்..?" என்று கேட்ட நந்தினிக்கு குரல் எழும்பவில்லை...

"எல்லாம் இவ போட்ட சொக்குப்பொடி செய்ற வேலைதான் அத்தை.. உலகத்தோட ஒட்டு மொத்த சொக்குப் பொடியை இவதான் குத்தகைக்கு எடுத்திருக்கா அத்தை..."

அப்படியென்றால்.. ஆதவனுக்கு நந்தினிதான் சொக்குப் பொடி போட்டிருக்கிறாளா...? லேசாக விழியுயர்த்தி

அவனிருக்கும் திசையில் பார்த்தவளுக்கு 'திக்' கென்று ஆகிவிட்டது.. அவளின் கள்ளப் பார்வையை அவன் கண்டு பிடித்து விட்டான்.. கண்களில் மின்னலோடு.. அவன் உற்றுப் பார்க்க.. அவசரமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள் நந்தினி...

'என்னடா இது.. இவன் இப்படி ஆரம்பிக்கிறான்...'

அவளால் அவனைப் பார்க்கவும் முடியவில்லை.. பார்க்காமலிருக்கவும் முடியவில்லை...

"சொக்குப் பொடி மீனாட்சி...

சொக்கநாதன் நான் தாண்டி..."

கரகம் முடிந்த பின்னால் வந்த ஆட்டக்காரன்.. கூட ஆடிக் கொண்டிருந்த பெண்ணிடம் பாடிக் கொண்டிருந்தான்...

சொக்குப் பொடி மீனாட்சியான நந்தினியின் சொக்கநாதனான ஆதவன்.. அன்றிரவில் அவளை நெருங்கினான்.. கோவிலில் இருந்து அவன் வருவதற்கு முன்பாகவே வீடு திரும்பியிருந்த நந்தினி.. குளித்து முடித்து.. நைட்டிக்கு மாறி அவளுடைய கட்டிலைப் பிரித்துப் போட்டு படுத்து உறங்கி விட்டாள்...

அறைக்குள் ஆதவன் வந்ததையோ.. அறைக் கதவை தாழிட்டு விட்டு அவளையே பார்த்தபடி நின்றதையோ அவள் உணரவே இல்லை...

அவளுடைய வழக்கப்படி பிரித்து விடப்பட்டிருந்த பின்னல்.. கூந்தல் மழையாக கட்டிலில் பரந்து விரிந்திருந்தது.. அதனருகில் வெண்ணிற நிலவைப் போல அவளின் முகம் மந்தஹாசத்துடன் தூக்கத்தில் இருந்தது.. மூடின அவளின் இமைகள் அந்த முன்னிரவுப் பொழுதில் அவள் பார்த்த பார்வைகளை நினைவுபடுத்தி முத்தமிட ஆதவனை அருகே அழைத்தது..

ஆதவன் அவளருகே சென்றான்.. கட்டிலில் அமர்ந்தான்.. குனிந்து அவள் இமையில் முத்தமிட்டான்...

சட்டென்று விழித்துக் கொண்ட நந்தினியின் முகத்துக்கு வெகு அருகாமையில் அவனது முகம் இருக்க.. அவள் பதறி விலகப் பார்த்தாள்.. முடியவில்லை... ஆதவன் இருபக்கமும் கைகளை ஊன்றி குனிந்திருக்க.. அவன் கைகளுக்கிடையில் சிறைபட்டிருந்தாள் நந்தினி...

"இது உங்க கட்டிலில்ல..." நடுக்கத்துடன் சொன்னாள்...

"ஆனா.. நீ என் பெண்டாட்டிதான..?" அவன் நகரவில்லை.. நெருங்கி அமர்ந்தான்...

"வேணாம்.. எனக்கு விருப்பமில்ல..." நந்தினி அவன் முகத்தை மறுத்தாள்...

"ஹ... யார்கிட்ட கதை விடற..? இன்னைக்குப் பூராவும் நீ பார்த்த பார்வை சொல்லும்டி.. உனக்கு விருப்பமிருக்கா.. இல்லையான்னு.." ஆதவன் அவளை விலக விடாமல் முகத்தை இறுகப் பற்றி அவள் உதட்டில் முத்தத்தைப் பதித்தான்..

"என்ன சொல்லிக் கூப்பிட்டு வந்திங்க..?"

"எனக்கு நினைவில்லை..."

"திருவிழா முடிஞ்சதும் நான் திரும்பிப் போகனும்..."

"அதை அப்பப் பார்க்கலாம்..."

ஆதவனின் கைகள் முன்னேறி ஆக்டோபஸ் போல அவளை வளைத்துக் கொண்டதில்.. நந்தினி தன் வசமிழக்க ஆரம்பித்தாள்.. மெல்ல அவனுக்குள் அவள் புதைந்து கொண்டிருந்த நேரத்தில் கோல்கொண்டா கோட்டை அவள் மனதில் எழுந்து நின்றது..

"விடுங்க..." அவள் உத்வேகத்துடன் திமிறினாள்..

"ஏன்..? இவ்வளவு நேரமும் பேசாமத்தான இருந்த..? இப்ப மட்டும் என்ன வந்திருச்சு..." அவன் விடவில்லை...

"ச்சே.. நீங்கள்ளாம் ஒரு மனுசனா..? முன்ன பின்ன தெரியாத பொண்ணுகிட்ட ராத்திரி நேரத்தில தப்பா பேச நினைச்சதுமில்லாம.. அதை நான் கண்டிச்சேன்கிற ஒரே

குற்றத்துக்காக.. கோல்கொண்டா கோட்டையில என்னை அசிங்கப்படுத்தின ஆளுதானே நீங்க..?"

"நந்தினி.. திரும்பவும் எல்லை மீறிப் பேசற... அன்னைக்கு நீ சொன்ன 'ச்சே'iயே இன்னும் நான் மறக்கலை.. இப்பவும் 'ச்சே'ங்கிற.. ஜாக்கிரதை.."

"என்ன செய்துருவீங்க..? இன்னும் என்ன பாக்கியிருக்கு..? அதான் என் மரியாதையை அங்கேயிருந்த ஜனங்க முன்னாலே பூண்டோட அழிச்சுட்டிங்களே.. அதுக்கு மேலயும் உங்க வெறி அடங்கலையா..?"

"அடங்கலைடி.. இன்னும் என்ன பாக்கியிருக்குன்னா கேட்ட..? எதையுமே இன்னும் நான் ஆரம்பிக்கவே இல்லையேடி.. எல்லாம் பாக்கியிருக்கே.. அந்தக் கணக்கை தீர்க்காம.. உன் திமிரை அடக்காம விடமாட்டேன்..."

"தொடாதீங்க.. எப்படி நீங்க நிர்பந்ததுக்காக என் கழுத்தில் தாலியைக் கட்டினீங்களோ.. அதைப் பேலத்தான் நானும் என் மரியாதையைக் காப்பாத்திக்க உங்களுக்கு கழுத்தை நீட்டினேன்.."

"அதுக்கான விலையை நீ கொடுத்தியா..?"

"எதுக்கான விலை..?"

"உன் கழுத்தில் நான் கட்டியிருக்க தாலிக்கான விலை..."

ஆதவன் விலகவில்லை.. அவனுக்கான பாக்கியை நந்தினியிடமிருந்து வசூலிக்க ஆரம்பித்தான்...

நந்தினியின் கழுத்தில் ஆதவன் கட்டிய தாலி இருந்தது.. அவளைத் தொடும் உரிமை அவனுக்கு இருந்தது.. அவன் அதை நினைவுறுத்தினான்...

"இது நிர்பந்தத்தில் கட்டின தாலிதான்.. ஆனா.. இதனால எனக்கும்.. உனக்குமிடையே ஒரு பந்தம் வந்துருச்சா இல்லையா..?"

"அந்த பந்தத்தை நீங்க மதிச்சீங்களா..?"

"மதிக்காமலா உன்னைத் தேடி வந்தேன்.."

"அதுவும் ஒரு நிர்பந்தம்தானே..."

"அந்த நிர்பந்தத்துக்கும் கட்டுப்பட்டேனா இல்லையா..? இன்னைக்கும் சரி.. நாளைக்கும் சரி.. என் பொண்டாட்டின்னு உன்னைத்தானே ஊர் காட்டும்..?"

"ஸோ.. வாட்..?"

"அதுக்கென்னவா..? அதுக்கான விலைதாண்டி இது.. சும்மா இருக்கிறவனை நீ உசுப்பேத்தி விடுவ.. பெண்டாட்டி தானேன்னு தொட வந்தா பிகு பண்ணுவே.. என்னை என்னன்னு நினைச்சே..?"

"இங்கே வர்றதினால உங்க முடிவில எந்த மாற்றமும் வராதுன்னு நீங்க சொன்னதா ஞாபகம்..."

"எனக்கு ஞாபகமில்லை..."

"கல்யாண மண்டபத்தில இவகூட வாழ முடியாதுன்னு நீங்க சொன்னதா ஞாபகம்..."

"எனக்கு ஞாபகம் வரலைடி.. எனக்கு ஞாபகமிருக்கதெல்லாம் நீ போட்ட சொக்குப் பொடிதாண்டி.."

ஆதவன் அதற்கு மேல் அவளைப் பேச விடாமல் பரவிப் படர்ந்தான்.. நந்தினி மூச்சுத்திணற அவனிடம் தோற்றுக் கொண்டிருந்தாள்.. விடிகின்ற வேளையிலே ஆதவன் அவளை ஜெயித்து முடித்திருந்தான்...

காலையில் அவன் கண்விழித்த போது நந்தினி அவனருகில் இல்லை.. எழுந்து அறை வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்தான்..

"இந்தா ஆது காபி..." என்று மகிழமலர் காபியை நீட்டினாள்..

"அவ எங்கேக்கா..?"

"ஏண்டா..? அவ கொடுத்தாத்தான் காபித்தண்ணி உன் தொண்டையில இறங்குமா..? இந்த அக்கா கொடுத்தா இறங்காதா..?" செல்லச் சண்டையைக் கிளப்பினாள் மகிழமலர்...

"உனக்கு வேலை வைக்கிறாளேன்ன சொன்னா.. நீ இப்படி எடுத்துக்கிட்டியே..." அழகாக சண்டையை சமாளித்தான் ஆதவன்..

"இன்னைக்கு நம்ம கொடை... ஆது ஞாபகம் இருக்கில்ல.. உனக்கும் அண்ணனுக்கும் பரிவட்டம் கட்டுவாங்க.. அண்ணன் விட்ட விடிகாலையிலேயே கோவிலுக்குப் போயிட்டார்.. நீ எப்பவும் அவர் கூடவே போகிற ஆளு.. இன்னைக்கு என்னவோ அசந்து தூங்கிட்ட..."

"ஆமாமில்ல..." குற்ற உணர்வுடன் நாக்கைக் கடித்துக் கொண்டான் ஆதவன்..

"அதான்.. நீ எழுந்திருச்சதும்.. குளிச்சுட்டு உடனடியா கோவிலுக்கு வரச்சொல்லி அண்ணன் சொன்னாரு..."

"அவளாவது எழுப்பி விட்டிருக்கலாம்.." அப்போதும் நந்தினியின் முகம் பார்க்கத் தவித்தான் ஆதவன்...

"ஏண்டா நம்ம ஊரு திருவிழாவைப் பத்தி உனக்குத்தான் தெரியும்.. அவளுக்கு என்ன தெரியும்..?" நந்தினிக்காக பரிந்து பேசினாள் மகிழா...

"பாருடா... தம்பி பெண்டாட்டிக்கு சப்போர்ட்டெல்லாம் பலமாய் இருக்கு.. பார்த்துக்க.. உன்மேல நாத்தனார்ங்கிற பயம் அவளுக்கு இல்லாம போயிரப் போகுது..."

வேடிக்கை பேசின ஆதவனின் பேச்சை ரசித்துச் சிரித்தபடி மகிழமலர் போய்விட்டாள்.. ஆதவன் குளித்து.. புது பட்டு வேட்டி.. சட்டைக்கு மாறி மாப்பிள்ளைப் பொழிவோடு மாடியை விட்டு இறங்கி வந்தான்...

"அசத்தறிங்க மாமா.. அப்படியே நம்பர் ஒன் வேட்டி விளம்பரத்துக்கு வர்ற மாடலைப் போலவே இருக்கு..."

ராதா ஆதவனின் தோற்றத்தை ரசித்ததை தியாகு ரசிக்கவில்லை.. ஜாடையாக அவளை முறைத்தான்.. அவன் அருகில் நிற்பதைக் கவனிக்காமல் ஜொள்ளிவிட்ட ராதா.. கன்னத்தில் போட்டுக் கொள்ளாத குறையாக அவனிடம் பார்வையிலேயே மன்னிப்பை யாசித்தாள்...

'இருடி உன்னை கவனிச்சுக்கறேன்...'

தியாகு கீதாவைக் கவனிக்க ஆரம்பித்தான்.. இரண்டு பக்கமும் பார்வையை அலைய விடாமல் ஒரே இடத்தில் நிலை கொண்ட ஆசுவாசம் அவனுக்கு...

"ஆயிரம்தான் சொல்லு வித்யா.. உன் அண்ணன் போட்டிருக்கிற ஜீன்ஜீக்கும்.. கார்கோ காட்டன் சட்டைக்கும் பட்டுவேட்டி கிட்ட வந்துருமா..? செம தூளா.. ஹீரோ கணக்கா தூள் கிளப்பறாரில்ல..?"

கிடைத்த வாய்ப்பை அழகாகப் பயன்படுத்திக் கொண்ட கீதா.. மறக்காமல் தியாகராஜனின் காது கேட்க அவனுடைய உடையை புகழ்ந்து வைத்தாள்...

'இவ சந்துக்குள்ளே சிந்து பாடுகிறவாள்சே..' ராதாவின் காதுகளில் புகைவந்தது...

இந்த யௌவன மோதல்களைக் கவனிக்காமல் மனைவியின் முகத்தில் முதல்நாள் இரவுக்கான மயக்கத்தின் மீதம் தெரிகிறதா என்று விழிகளால் ஆராய்ந்தான் ஆதவன்...

நந்தினியின் முகத்தில் எந்தவிதச் சலனமுமில்லை.. ராதாவைக் கவர்ந்த பட்டுவேட்டி அவளைக் கவரவுமில்லை...

குனிந்த தலை நிமிராமல் கோவிலுக்கு கொண்டு போக வேண்டிய அபிஷேகப் பொருள்களையும்.. பட்டு வஸ்திரங்களையும் எடுத்து வைப்பதில் வைஷ்ணவிக்கு உதவிக் கொண்டிருந்தாள்..

"ஆதி..."

அவனைக் கண்டதும் வைஷ்ணவி அவசரமாக அவனருகில் வந்தாள்...

"என்னங்கண்ணி..?"

"எழுந்திருக்க இவ்வளவு நேரமா..? கோவிலுக்கு போப்பா.. நாங்க வந்துக்கிட்டே இருக்கோம்ன்னு உன் அண்ணன்கிட்டச் சொல்லு..."

"சரிங்கண்ணி..."

அப்போதும் உடனே கிளம்பாமல் நந்தினியின் ஒரு சிறு பார்வைக்காக தேங்கி நின்றான் ஆதவன்..

"என்ன ஆதி..? கிளம்பலையா..?" வைஷ்ணவி குரல் கொடுத்தாள்...

"இதோ போய்க்கிட்டே இருக்கேண்ணி..." ஆதவன் நகர முனைந்தான்...

"மசமசன்னு நிற்காதேப்பா.. இது என்ன...? எந்த வருசமுமில்லாம இந்த வருசம் இப்படி மயங்கி நிற்கிற..? இன்னைக்கு நம்ம கொடை.. ஞாபகம் இருக்கில்ல..?"

"இருக்குண்ணி..."

"அப்ப ஓடு..."

ஏறக்குறைய ஆதவனை விரட்டி விட்டு நந்தினியின் பக்கமாக வந்த வைஷ்ணவி...

"முப்பது வயசாகிருச்சு.. இன்னும் சின்னப் புள்ளைதான்..." என்று முறுவலித்தாள்...

'அவனா சின்னப்புள்ளை..?' முதல் நாள் இரவின் நினைவில் முகம் சிவக்க தலையைக் குனிந்து கொண்டாள்

நந்தினி...

"ம்ம்.. சீக்கிரம்.. அரட்டையை மூட்டை கட்டி வைச்சுட்டு எல்லோரும் காருக்கு ஓடுங்க.. கோவிலில் நம்ம அபிஷேகம் முடிஞ்ச பின்னாலதான் சாப்பாடு..."

வைஷ்ணவி போட்ட சத்தத்தில் மொத்தக் குடும்பமும் கார்களுக்குத் தாவியது...

"அண்ணன் எங்கேண்ணி..?"

பனிமலரிடம் மரியாதையாக வினவினாள் வைஷ்ணவி...

"அவரும் மகிழாவோட வீட்டுக்காரரும் எங்க அண்ணனோட காலம்பரவே கோவிலுக்குப் போயிட்டாங்கண்ணி..." பனிமலர் சிரித்தாள்...

செண்பகவள்ளி.. குளித்து.. லேசான வண்ணத்தில் பட்டுப் புடவையுடுத்தி.. கம்பீரமாக சக்கர நாற்காலியில் அமர்ந்து அதை உருட்டிக் கொண்டு வந்தாள்...

வித்யா பேசுவதை கேட்டுக் கொண்டிருந்த நந்தினி சட்டென்று மாமியாரின் அருகே போய் சக்கர நாற்காலியைத் தள்ளிக் கொண்டு போகும் பொறுப்பை தானாக எடுத்துக் கொண்டாள்...

அதைப் பார்த்துக் கொண்டிருந்த பனிமலருக்கும்.. மகிழமலருக்கும் மனதுக்கு இதமாக இருந்தது...

"குடும்பத்துக்கு ஏத்த பொண்ணு..." வைஷ்ணவியிடம் சொன்னாள் பனிமலர்..

"ஆமாமாம்.." மகிழமலர் அதை ஆமோதித்தாள்...

"தியாகுக்கும்.. வித்யாவுக்கும் அவங்க சித்தின்னா உயிரு..." பெருமை பொங்கக் கூறினாள் வைஷ்ணவி...

"என்னவோ அண்ணி.. உங்களைப் போலவே.. ஆதவனின் பெண்டாட்டியும் குணவதியா வந்து அமையனும்ன்னு நாங்க வேண்டாத தெய்வமில்ல... எங்க வேண்டுதல் கிடைச்சிருச்சு..." மனதாரச் சொன்னாள் பனிமலர்...

"ஆமாண்ணி... ஒரு வீட்டில பொறந்த பொண்ணுகளுக்கு என்ன வேணும்..? அவங்க எப்ப வந்தாலும் ஆதரிக்கிற பிறந்த வீடு வேணும்.. கல்யாணம் பண்ணி புகுந்த வீட்டுக்குப் போன பொண்ணுகளுக்கு பிறந்த வீடு அன்னியமாகிரக் கூடாது.. அது எப்ப நடக்கும்..? அந்த விட்டில வாழ வர்ற பொண்ணுக.. பிறந்த பொண்ணுகளை ஆதரிச்சு குடும்பம் நடத்தறப்பதான் நடக்கும்.. அந்த வகையில நீங்க வந்திங்க.. எங்களைத் தாங்கினீங்க.. ஆதவனின் பெண்டாட்டி வந்த பின்னால நிலைமை மாறுமோன்னு நினைச்சு பயந்தோம்.. அவளும் உங்களைப் போலவே இருக்கா..", நிம்மதியுடன் சொன்னாள் மகிழமலர்...

மகள்களின் சம்பாஷணை செண்பகவள்ளியின் காதுகளையும் எட்டியது.. ஏற்கனெவே நந்தினியின் அன்பான பணிவிடைகளில் மகிழ்ந்து போயிருந்த செண்பகவள்ளியின் மனம்.. மகள்களின் திருப்தியான பேச்சில் இன்னமும் மகிழ்ந்தது...

கோவிலுக்குள் அங்கு மிங்கும் நடந்தபடி குடும்பத்தினரின் வரவுக்காக காத்திருந்த மாதவன்... அவர்கள் வந்தவுடன் கூட அழைத்துக் கொண்டு சன்னிதானத்தை நோக்கி நடந்தார்...

அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகின.. தீப ஒளியில் பெருமாளின் தோற்றமும்.. அவரின் தேவியரின் தோற்றங்களும் ஆடை.. ஆபரண அலங்காரங்களுடன் ஜொலித்தன...

செண்பகவள்ளி.. எதையோ சொல்ல குனிந்து கேட்டுக் கொண்ட நந்தினி.. அருகிலிருந்த வித்யா காதோரம் கிசுகிசுத்த போது அதை ரசித்து ரகசிய சிரிப்பை சிரித்தாள்...

'அது எப்படி.. இவளாலே ஒரே நேரத்தில பெரியவங்ககிட்ட பணிவாயும்.. சிறிசுககிட்ட நட்பாவும் இருக்க முடியுது...?'

அவளையே பார்த்துக் கொண்டிருந்த ஆதவன் தனக்குள் கேட்டுக் கொண்டான்.. தீபாதரனைத் தட்டின் ஜோதியைத்

தொட்டு கண்களில் ஒற்றியபடி நந்தினியைப் பார்த்த போது அவளும் அவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்...

மாதவனுக்கும்.. ஆதவனுக்கும் பரிவட்டம் கட்டி மரியாதை நடந்தது.. கோவிலை வலம் வந்தபோது ஆதவன் நந்தினியின் அருகே நடந்து பேச முயன்றான்...

"வித்யா.."

முன்னால் போய் கொண்டிருந்த வித்யாவை அழைத்தபடி நந்தினி விரைவாக நடந்து விட்டாள்...

# 22

"இப்ப என்னதாண்டி சொல்ற..?" இரைந்தான் ஆதவன்..

"சென்னைக்குக் கிளம்பறேன்னு சொல்றேன்..." துணிகளை பெட்டியில் அடுக்கியபடி அமைதியாகப் பதில் சொன்னாள் நந்தினி...

"நீ போக வேண்டியதில்லை..."

"அதுதான் ஏன்னு நான் கேட்கிறேன்.. கிளம்பும் போதே திருவிழா முடிகிற வரைக்கும்தான் உங்க வீட்டில் தங்கனும்கிறது தானே நமக்குள்ளே பேசிக்கிட்ட பேச்சு..?"

அவன் சொன்ன வார்த்தைகளை வைத்தே அவனை மடக்கினாள் நந்தினி...

"அது.. அப்ப.. ஏதோவொரு கோபத்தில பேசின பேச்சு.." ஆதவன் முணுமுணுத்தான்...

"நேரத்துக்கொரு பேச்சைப் பேசறது உங்க பழக்கமாயிருக்கலாம்.. ஆனா.. ஒரு சொல்.. ஒரு வார்த்தையில நிற்கிறதுதான் என்னோட பழக்கம்..."

அழுத்தமாக சொல்லி விட்டு பெட்டியை கையில் தூக்கிக் கொண்டாள் நந்தினி...

"சென்னையில என்ன இருக்குன்னு அங்கே போகனும்னு இந்தத் தாண்டு தாண்டற..?" ஆதவன் எரிச்சல் பட்டான்...

"என் வேலையிருக்கு..." முகம் இறுகப் பதில் சொன்னாள் நந்தினி...

அவளருகே வந்து விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான் ஆதவன்.. அவள் முகம் திருப்பிக் கொண்டாள்.. பலவந்தமாக ஆதவன் அவளைத் தொட்டு விட்டதிலிருந்து இப்படித்தான்.. ஆதவனை நேருக்கு நேர் பார்ப்பதை தவிர்த்து விடுகிறாள்...

'என் மூஞ்சியை இவளுக்குப் பிடிக்கலையா...' ஆதவனுக்கு கடுப்பாக வந்தது...

அன்று தொட்டதை தொடர நந்தினி விடவில்லை.. மறுநாளில் இருந்து.. ஆதவன் வருவதற்குள் அறைக்குள் புகுந்து.. பால்கனியில் விரிப்பை விரித்து.. தலையணையுடன் தஞ்சமடைந்து விடுவாள்.. தாழ்ப்பாள் இட்ட கதவை.. திறக்க முயன்று முடியாதவனாக விட்டு விடுவான் ஆதவன்...

அதை உடைக்க அவனுக்கு ஒரு நொடி கூட ஆகாது.. அந்தச் சத்தத்தில் வீட்டிலுள்ள குடும்பத்தார்கள் விழித்து விடலாம்.. ஏனென்ற கேள்வியை எழுப்பலாம்.. அதனால் விட்டு வைத்தான்.. தாழ்ப்பாளை கழட்டி விடலாம் என்றால் அவனது அறையின் பால்கனிக்கு அவனுடைய அக்காவின் பிள்ளைகள் வந்து போவதுண்டு.. அவர்களின் பார்வையில் அது பட்டு விட நேரிடலாம்.. எனவே.. திருவிழா முடிந்ததும் தாழ்ப்பாளைக் கழட்டி விட வேண்டுமென்று மனதிற்குள் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தான்.. கடைசியில் பார்த்தால் திருவிழா முடிந்ததும் முதல் ஆளாக நந்தினி பெட்டியைக் கட்டி விட்டாள்...

"உனக்கு சென்னைக்குத் தான போகனும்..? இன்னைக்கு ஒரு நாளைக்கு பொறு..."

"அது என்ன.. ஒருநாள் கணக்கு..?"

"இன்னைக்குத்தான் அக்கா குடும்பத்தாளுக ஊருக்குக் கிளம்பி போயிருக்காங்க.. வீடே வெறிச்சுன்னு இருக்குன்னு அம்மா புலம்பிக்கிட்டு இருக்காங்க.. நீயும் கிளம்பினா அவங்க மனசுக்கு தாங்காது.."

"அவங்களுக்குத் தெரியும்.."

"என்னது..?"

"நான் கிளம்பப் போறது அவங்களுக்குத் தெரியும்ன்னு சொன்னேன்..."

"என்னடி சொல்லி வைச்சிருக்கிற..?"

"லீவு முடிஞ்சிருச்சு.. போய் வேலையை ரிஸைன் பண்ணிட்டு மூட்டை முடிச்சைக் கட்டிக்கிட்டு கிளம்பி வந்துடறேன்னு சொல்லியிருக்கேன்..."

முகத்தில் எந்தவித உணர்வுகளையும் பிரதிபலிக்காமல் அவள் சொல்ல.. ஆதவனின் முகம் சந்தோசத்தை பிரதிபலித்தது...

"நிஜமாவா சொல்ற நந்தினி...?" ஆவலோடு கேட்டான்..

"இல்லை..." அவள் மறுத்தாள்...

"அடிப்பாவி...! உனக்கென்ன கல் மனசா..? ஆனாலும் உனக்கு இத்தனை அளும்பு ஆகாதுடி.. வயசானவங்களை நம்ப வைச்சு ஏமாத்தப் பார்க்கிறயே.. உனக்கெல்லாம் மனச்சாட்சியே இல்லையா...?"

ஒருநொடி நந்தினியின் கண்களில் துயரம் வந்து போனது.. மறுநொடியில் சுதாரித்துக் கொண்டாள் அவள்...

"வயசானவங்க என்கிறதாலதான் பொய் சொல்ல வேண்டியதாப் போச்சு.. இல்லைன்னா.. நான் பாட்டுக்கு கிளம்பிப் போய்கிட்டே இருப்பேன்.. யார் என்னைத் தடுக்கிறது..?"

அவளின் பேச்சில் ஆதவனுக்குள் உறங்கிக் கிடந்த மிருகம் விழித்துக் கொண்டது... கட்டிலில் வைத்திருந்த அவளின்

பெட்டியைத் தூக்கி வீசியெறிந்தான்.. அது அறையின் மூலையில் போய் விழுந்தது...

"போ.. போய் தொலை... உலகத்தில நீ ஒருத்தி மட்டும் தான் பொண்ணுன்னு இல்லை.. பொண்டாட்டியாச்சேன்னு பார்த்தேன்.. கூப்பிட்டதும் கூடவந்து இணக்கமாய் குடும்பத்தோட ஒட்டிக்கிட்டவளாச்சேன்னு பார்த்தேன்.. போனாப் போகுது.. நடந்ததை மறந்து குடும்பம் நடத்தலாம்ன்னு பார்த்தா.. ரொம்பத்தான் சிலுப்பிக்கிறவ.. உன்னையெல்லாம் திரும்பிப் பார்த்தேன் பாரு.. எனக்கு இதுவும் வேணும்.. இன்னமும் வேணும்.."

படுவேகமாக அறைக்கதவைத் திறந்து ஓங்கிச் சாத்திவிட்டு தடதடவென்று மாடிப்படிகளில் இறங்கினான் ஆதவன்..

"தியாகு..."

திருவிழாவுக்கு வந்திருந்த அத்தை மகள்களை செல்போனில் படம் பிடித்து வைத்திருந்த தியாகு.. அப்போதுதான் அதைப் பார்க்கலாமென்று கையில் எடுத்தான்.. ஆதவன் போட்ட சத்தத்தில் அது கை நழுவி கீழே விழுந்தது...

"என்ன சித்தப்பா..."

"உன் சித்தி சென்னைக்குப் போகனுமாம்.. கொண்டு போய் விட்டுட்டு வா..."

"நீங்க போகலையா சித்தப்பா...?"

"எனக்கு அர்ஜன்டா வேலை வந்திருச்சுடா..."

ஆதவன் போய் விட்டான்.. தியாகராஜன் மாதவனைத் தேடிப் போய் விவரம் சொன்னான்... அவர் தாடையைத் தடவியவாறே மனைவியைப் பார்த்தார்...

"வேலையை ரிசைன் பண்ணத்தான் போறாளாம்..." என்று சொன்னாள் வைஷ்ணவி...

"உன்கிட்டச் சொன்னாளா..?"

"ஊஹீம்.. அத்தையிடம் சொன்னாளாம்..."

"அப்பச்சரி.. தியாகு நீ மாடிக்குப் போய் கிளம்பறதுக்கு தயாராகு..."

நிம்மதியானார் மாதவன்.. சித்தியைத் தேடிப் போனவித்யா அவளிடம் விவரம் சொன்னாள்..

"சித்தப்பாவுக்கு வேலையிருக்காம்.. தியாகுதான் உங்களைவிட வருகிறான் சித்தி..."

நந்தினிக்கு கண்களில் நீர் துளிர்த்தது... அவள் உடலில் இருந்து ஏதோ கழன்று விட்டதைப் போல உணர்ந்தாள்.. அவள் மனம் வலித்தது.. பெட்டிகளைக் கைக்கு ஒன்றாய் பிடித்தபடி கிளம்பினாள்...

"இங்கே கொடுங்க சித்தி..." என்று அதைவாங்கிக் கொண்ட வித்யா...

"மல்லிகா..." என்று அழைத்து அவளிடம் பெட்டிகளை ஒப்படைத்தாள்...

"கொண்டு போய் காரில் வை..."

மல்லிகா பெட்டிகளுடன் வெளியேறிவிட.. ஆதவனின் அறையை விட்டு வெளியே நடந்தாள் நந்தினி.. அவளுடைய சொந்த இடத்தை விட்டு வெளியேறும் உணர்வு அவளுக்குள் ஏற்பட்டது.. செண்பகவள்ளியிடம் விடைபெற்றுக் கொண்டாள்..

"சீக்கிரமா வந்துரும்மா..." அவள் விடைகொடுத்தாள்...

அந்த வயோதிகப் பெண்மணிக்கு பொய்யான நம்பிக்கையைக் கொடுக்கிறோமே என்ற குற்ற உணர்வு அவளுக்குள் எழுந்தது... பதில் சொல்ல முடியாமல் தலையசைத்தாள்.. வைஷ்ணவி அவள் நெற்றியில் குங்குமம் வைத்து விட்டு வழி அனுப்பி வைத்தாள்.. வாசலுக்கு வந்து காரில் ஏறும் முன்.. ஒருமுறை அந்த வீட்டைப் பார்த்துக் கொள்ள வேண்டும் போலத் தோன்ற.. நந்தினி திரும்பி அந்த வீட்டைப் பார்த்துக் கொண்டாள்..

அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாய் அங்கே கழித்த இனிய தினங்களின் நினைவில் அவள் நெஞ்சம் நிலை

கொண்டது...

"திருப்பி எப்ப வருவீங்கம்மா...?" மல்லிகா ஆவலுடன் கேட்டாள்...

'வரமாட்டேன்..' நந்தினி மௌனப் புன்னகையுடன் காரில் ஏறிக் கொண்டாள்...

அதே செக்கானூரணியின் பாதை.. ஓரத்தில் மேலக்கால் வாய்க்கால் நீர்.. அந்த நீரோடு சேர்ந்து அவளின் மனமும் ஓடியது.. பிரியாமல் அங்கேயே நிலை கொண்டு விட வேண்டுமென்று தவித்தது...

"ஒவ்வொரு திருவிழா முடிஞ்ச பின்னாலும் இப்படித்தான் சித்தி.. வீடே வெறிச்சோன்னு கிடக்கும்.. இந்த வருசம் நீங்க வந்தீங்க.. வீடே நிறைஞ்சிருந்துச்சு.. நீங்களும் கிளம்பிட்டிங்க.. திரும்பி அனுப்ப மனசில்ல சித்தி... நம்ம வீட்டிலேயே இருக்கிறதைப் போல எப்பக் கிளம்பி வருவீங்க சித்தி..." தியாகுவிடம் பிரிவுத்துயர் தெரிந்தது...

அப்படி ஒரு நாள் வரவே வராது என்று சொல்ல முடியாதவளாக வெற்றுப் புன்னகையை சிந்தினாள் நந்தினி...

சென்னைக்குள் நுழைந்தபோது.. மீண்டும் இயந்திரமயமான வாழ்விற்குள் நுழைய வேண்டுமே என்ற மலைப்பு அவளுக்குள் எழுந்தது...

"ஹாய் நந்து.. ஆஷா.. மேகா.. நந்து வந்திட்டா..." கௌசல்யா குதூகலித்தாள்...

நந்தினியை அவளுடைய தோழிகளிடம் சேர்த்து விட்டு மாலைப் பொழுதுவரை ஓய்வெடுத்து விட்டு கிளம்பிப் போனான் தியாகராஜன்...

"சொல்லு.. ஊர் எப்படியிருந்துச்சு..?"

தோழிகள் ஆர்வமாக விசாரித்தார்கள்.. நந்தினியும் சொன்னாள்.. கடைசியில் மேகாதான் அந்தக் கேள்வியை கேட்டாள்...

"ஏன் நந்து.. உன்னை அங்கேயே இருந்து விடச்சொல்லி யாருமே சொல்லலையா..?"

சொன்னார்கள்.. எல்லோருமே சொன்னார்கள்.. முக்கியமாக ஆதித்தன் சொன்னான்.. அதைச் சொன்னால் மற்ற அந்தரங்க நிகழ்வுகளைப் பற்றியும் சொல்ல வேண்டியிருக்கும் என்பதினால்.. நந்தினி வெறுமையான புன்னகையுடன் எழுந்து விட்டாள்..

"இவளை இருக்கச் சொல்லலை போல..."

தோழிகள் கோபத்துடன் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.. நந்தினி வழக்கம்போல அலுவலகத்திற்கு போய்வர ஆரம்பித்தாள்.. அந்த மாத முடிவில் அவளுக்கு அந்தப் பிரச்னை ஆரம்பித்தது...

தலை சுற்றலும்.. மயக்கமும் நந்தினியைப் போட்டுப் பாடாய் படுத்தி எடுத்தது.. போதாக்குறைக்கு அவள் சாப்பிட்டது எதுவும் தொண்டையைத் தாண்டி கீழே இறங்க மறுத்ததில் மற்ற தோழிகள் சந்தேகப் பார்வை பார்த்தார்கள்...

"இது மசக்கை போல தெரியுதும்மா..." ஈஸ்வரி தான் நந்தினிக்கு வந்திருந்த கோளாறை முதலில் கண்டு பிடித்தாள்...

"நந்து..?" கௌசல்யாவின் விழிகளில் கேள்வி தோன்றியது..

அவசரமாக மனக் கணக்குப் போட்ட நந்தினியின் முகம் வெளுத்து விட்டது.. அதைக் கவனித்த மற்ற தோழிகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்...

"உன்னை அங்கே இருக்கச் சொல்லலைன்னு சொன்ன.. அப்புறம்.. இது மட்டும் எப்படி..?" கௌசல்யா சூடாகக் கேள்வி கேட்டாள்...

"கௌசி..." நந்தினி தடுமாற்றத்துடன் கண் கலங்கினாள்..

"அழாதே.. கண்ணைத் துடைச்சுக்க.. வா.. முதலில் டாக்டரைப் பார்க்கலாம்.." மேகா அவளின் கை பிடித்து எழுப்பி விட்டாள்...

நந்தினியை பரிசோதித்த லேடி டாக்டர்.. அவள் தாய்மை அடைந்திருப்பதை உறுதிபடுத்தினாள்.. தோழிகளின் முகங்கள் இறுகின.. அந்த வார இறுதியில் மசக்கையோடு இருந்த நந்தினியை ஈஸ்வரியின் பாதுகாப்பில் விட்டுவிட்டு தோழிகள் மூவரும்.. மதுரையை நோக்கிப் பறந்தார்கள்...

கோபம் கொந்தளிக்கும் முகங்களுடன் எதிரே அமர்ந்திருந்த மூவரையும் பேசவிட்டு அமைதிகாத்தான் ஆதவன்... அவர்கள் கொதிப்போடு இருந்தார்கள்.. நந்தினியின் வாழ்க்கைக்காக நியாயம் கேட்டு வந்திருப்பதாகச் சொன்னார்கள்.. அவனுடைய குடும்ப கௌரவம் காக்க கிளம்பி வந்தவளை தாய்மை அடையச் செய்து விட்டு.. கூடக் குடும்பம் நடத்தச் சொல்லாமல் கைகழுவி விட்ட அவனுக்கு இரும்பு மனமா என்று கேட்டார்கள்...

"என்ன..?" ஆதவனின் முகம் மாறிவிட்டது...

"என்ன.. என்ன..? பாட்டா பாடறிங்க.. அவளைத் தொடத் தோணிச்சில்ல.. அப்புறம் எதுக்காக சார் அவளைத் திருப்பி அனுப்புனீங்க..?" மேகா படபடத்தாள்...

"பொறுமையா பேசுங்க.. நந்தினி கர்ப்பமா இருக்கிறாளா..?"

"ஆமாம் சார்... ஆமாம்..."

"எனக்கு இது போதும்.. அவளை எப்படி என்கிட்ட வர வைக்கிறதுன்னு எனக்குத் தெரியும்..."

ஆதவன் சொல்லவும் அவர்கள் மூவரும் புரியாமல் விழித்தார்கள்..

"என்ன பார்க்கறிங்க..? உங்க பிரண்டை நான் திருப்பி அனுப்பலை.. அவதான் என்னை வேணாம்ன்னு சொல்லிட்டுப் போயிட்டா..."

"என்ன சார் சொல்றிங்க..?"

"ஆமாங்க.. எங்க அம்மாகிட்ட வேலையை ரிஸைன் பண்ணிட்டு திரும்பி வந்திடறதா பொய் சொல்லிட்டுக்

கிளம்பிப் போயிட்டா.. என் குடும்பமே அதை உண்மைன்னு நம்பிக்கிட்டு வழியனுப்பி வைச்சிருக்கு..."

"அவ வேற மாதிரிச் சொன்னாளே..."

"சொல்லுவா.. சொல்லுவா.. ஏன் சொல்ல மாட்டா..? கட்டிக்கிட்டவளைத்தான் தொட்டேன்.. அது குத்தமாம்... என் முகத்தைக் கூடப் பார்க்க மாட்டேன்னு கிளம்பிப் போயிட்டா... என்னை என்ன செய்யச் சொல்றிங்க..."

"இது தெரியாம நாங்க ஏதேதோ பேசிட்டோம்..."

"தெரியாமத்தானே பேசினிங்க.. விட்டுருங்க... நீங்க இங்கே வந்து போனதை அவகிட்டச் சொல்ல வேணாம்.. இனி நான் பார்த்துக்கிறேன்..."

தோழிகள் வந்த சுவடு தெரியாமல் சென்னைக்குத் திரும்பி வந்தனர்.. அது தெரியாத நந்தினி சோர்வோடு அலுவலகத்திற்கு கிளம்பிப் போனாள்.. அவளுக்குப் பதிவு தபால் வந்திருந்தது.. அனுப்பியவர் யாரென்று பார்த்தால் மதுரையிலிருந்து வக்கீலின் முகவரி இருந்தது...

'டைவர்ஸ் கேட்டிருக்கானோ...'

நந்தினி யோசனையுடன் தபாலைப் பிரித்தாள்.. படித்தாள்...

திருமதி நந்தினி ஆதவனுக்கு...

என் கட்சிக்காரர் ஆதவன் கடந்த வருடம் உங்களை ஊரறிய சட்டப்படி மணம் முடித்திருக்கிறார்.. இருந்தும் அவருடன் வாழ நீங்கள் மறுத்து வந்திருக்கிறீர்கள்.. கடந்த இரு மாதங்களுக்கு முன்பாக அவருடன் வாழ ஒப்புக் கொண்டு அவர் வீட்டுக்கு வந்திருக்கிறிர்கள்.. ஒரு மாத அளவில் சேர்ந்து வாழந்திருக்கிறீர்கள்.. மீண்டும் அவருடன் வாழ மறுத்து கிளம்பிப் போய் விட்டீர்கள்.. இந்தச் சூழ்நிலையில் நீங்கள் தாய்மை அடைந்திருப்பதாக என் கட்சிக்காரர் ஆதவனுக்கு தெரிய வந்துள்ளது அவர் மீதுள்ள வெறுப்பில் அவருடைய குழந்தையை பெற்றுத்தர மறுத்து ஏதேனும் தவறான முடிவை எடுத்து விடுவீர்கள் என்று என் கட்சிக்காரர் அஞ்சுகிறார்.. அவருடைய குழந்தையின்

பாதுகாப்பிற்காக அவர் கோர்ட்டுக்குப் போவதாக இருக்கிறார்.. அவருடைய பாதுகாப்பில்.. அவர் வீட்டில் தங்கி.. அவருடைய குழந்தையை நீங்கள் பெற்றுத்தரவேண்டும் என்றும் அதன் பின்னால் பிரிவதாக இருந்தால் பிரிந்து கொள்ளலாம் என்றும் அவர் கூறுகிறார்.. அவருக்கு அவருடைய குழந்தை மட்டுமே தேவை.. இந்த ஏற்பாட்டிற்கு நீங்கள் மறுத்தால் உங்களைக் கோர்ட்டில் சந்திக்க அவர் தயராக உள்ளார்..

கடிதத்தை திரும்பத்திரும்பப் படித்தாள் நந்தினி.. அவள் முன்னால் உலகம் சூழல்வதைப் போல இருந்தது.. கடிதம் கூறிய விவரங்களை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை...

'என் குழந்தை எனக்குச் சொந்தமில்லையா...?' அவளது கை தன்னிச்சையாக வயிற்றில் படிந்தது...

23

சூடான தோசையின் நறுமணத்தில் ஈர்க்கப் பட்டான் நித்தியானந்தன்.. வட்ட வடிவமான தோசை நடுவிலிருக்க சுற்றிலும் சின்னச் சின்னக் கிண்ணங்களில் சிவந்த நிறத்தில் தக்காளி சட்னியும்.. வெண்மை நிறத்தில் தேங்காய் சட்னியும்.. பச்சை நிறத்தில் கொத்தமல்லிச் சட்னியும் கண்ணுக்கு அழகாய் அணி வகுத்து நின்றன...

"என்னங்க.. சாப்பிடாம தட்டைப் பார்த்து ரசிச்சுக்கிட்டு இருக்கீங்க..?" அடுத்த தோசையுடன் வந்த கனகா கேட்டாள்...

பதில் சொல்லாமல் லேசாகச் சிரித்தவன் சாப்பிட ஆரம்பித்தான்... அவனை உட்கார வைத்து.. சுடச்சுட தோசைகளை பரிமாறும் மனைவியின் கவனிப்பில் அவன் திளைத்துக் கொண்டிருந்தபோது காலிங் பெல் ஒலித்தது...

"யாருன்னு பார்க்கக் கூடாதா..?" மாமியாரை முறைத்தாள் கனகா...

'இந்த வீட்டில் நான் மாமியாரா.. இல்ல.. இவ மாமியாரா..? மனதுக்குள் புழுங்கிக் கொண்டே எழுந்து சென்று கதவைத் திறந்தாள் மங்கையர்க்கரசி..'

"நந்தினி..!"

"அம்மா..."

பேப்பரைப் படிப்பதைப் போல பாவனை செய்தபடி.. வெறுமையாக அமர்ந்திருந்த நாராயணசாமி.. மகளின் குரலில் கையிலிருந்த பேப்பரை நழுவ விட்டார்...

"என்ன.. நந்தினி வந்திருக்காளா..? எங்கே.. எங்கே..."

கைகள் நடுங்க அவர் வாசலுக்கு விரைய.. கனகா முகவாயை தோள்பட்டையில் இடித்துக் கொண்டாள்..

"உங்க அப்பாவும்.. அம்மாவும் போடற சத்தத்தைக் கவனிச்சிங்களா..? இத்தனை நாளா இந்தச் சத்தத்தை எங்கே ஒளிச்சு வைச்சிருந்தாங்களாம்..?இதுவே ஸ்கூல் முடிஞ்சு என் பிள்ளைக.. தாத்தா.. பாட்டின்னு வந்தா.. பதிலுக்கு ஏன்னு கூடக் கேட்க மாட்டாங்க..." கணவனிடம் அவள் புலம்பினாள்... அவனும் பதிலுக்கு கேட்டான்...

"நந்தினியா வந்திருக்கா...?"

கனகாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. அவள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறாள்..? அவன் என்ன கேட்கிறான்..?

"ஆமாங்க.. அவதான் வந்திருக்கா.. வீட்டை வேனும்னா திருப்பி வையுங்க.. அவ என்ன பெரிய இவளா..?"

"என் தங்கச்சிடி..."

அமர்த்தலாகப் பதில் சொன்ன நித்தியானந்தன் எழுந்து கை கழுவினான்.. வீட்டுக்குள் வந்த நந்தினியை வாவென்று கேட்காமல் உற்றுப் பார்த்தான்.. கனகா நொடித்தபடி சமையலறைக்குள் போய் விட்டாள்...

"ஆபிஸீக்கு கிளம்பிட்டியா அண்ணா..?"

"ம்ம்ம்..."

"உன்கிட்டப் பேசனும்.. எனக்கு ஒரு ஆறுநிமிசம் கொடுப்பியா..?"

நந்தினியின் தழதழத்த குரலில் எதை உணர்ந்தானோ.. நித்தியானந்தனின் இமைகள் லேசாகத் துடித்தன.. தோள்களைக் குலுக்கியபடி சோபாவில் உட்கார்ந்தான்..

"சொல்லு..." என்றான்...

நந்தினி ஆதித்தனின் வக்கீல் அனுப்பிய கடிதத்தை எடுத்து நித்தியானந்தனிடம் கொடுத்தாள்.. பிரித்துப் படித்தவனின் புருவங்கள் சுருங்கின.. நந்தினியைக் கடுமையாகப் பார்த்தவன்...

"அவன் உன்னைப் பார்க்க வந்திருந்தானா..?" என்று கேட்டான்...

"ம்ம்ம்..."

"நீ அவன்கூட அந்த ஊருக்குப் போனியா..?"

"அண்ணா ப்ளீஸ்.. கோவிச்சுக்காதே.. உன் கோபத்தைத் தாங்கற சக்தி எனக்கில்லை.. அவரோட அண்ணன் மகன்தான் முதலில் என்னைப் பார்க்க வந்தான்.. திருவிழா வருது.. சொந்த பந்தங்கள் வருவாங்க.. என்னை விசாரிப்பாங்கன்னு சொன்னான்.."

நந்தினி சொல்ல ஆரம்பித்தாள்.. குறுக்கிடாமல் நித்தியானந்தன் அதைக் கேட்டுக் கொண்டான்.. ஊடே ஏதோ பேசவந்த மனைவியைப் பார்வையில் அதட்டி.. அடக்கினான்...

"எல்லாம் சரி.. இந்தக் கடிதத்தில வேற என்னென்னவோ போட்டிருக்கே.."

நந்தினி உதட்டைக் கடித்துக் கொண்டு சங்கடத்துடன் தரையைப் பார்த்தாள்... நித்தியானந்தனின் முகத்தில் யோசனை வந்தது...

"அவன் கூப்பிட்டான்.. நீயும் போன.. தப்பில்ல.. அவன் யாரு...? உன்னோட புருசன்தானே.. அவங்க குடும்பம்தான் உன்னைக் கொண்டாடியிருக்கே.. அப்புறமும் ஏன் திரும்பி வந்த..?"

"முடியலைண்ணா.." நந்தினி அழுதுவிட்டாள்...

"என்னால நடந்ததை மறக்க முடியல.. அவரை மன்னிக்க முடியல.. என்மேல எந்தத் தப்பும் இல்லைண்ணா.. நேரங் கெட்ட நேரத்தில என்கிட்ட பேசவந்தார்.. நானும் கடுமையாய் பேசினேன்.. அதுக்காக எப்பேற்பட்ட கொடுமையை எனக்குச் செய்யத் துணிஞ்சாரு.. அதையெல்லாம் மறந்துட்டு என்னால அங்கே இருக்க முடியல..."

"அப்படி நினைக்கிறவ அங்கே போயிருக்கக் கூடாது..."

"மனசு..! இந்த மனசு கேட்கலையே.. அந்த வீட்டில அவரைத்தவிர மத்தவங்க எல்லாரும் அருமையான மனுசங்க அண்ணா.. சித்தின்னு கூப்பிட்டுக்கிட்டு தியாகு வந்தப்ப என்உயிர் ஆடுச்சுண்ணா.. எனக்காக வயசான என் மாமியார் ஏங்கிக்கிட்டு இருக்காங்கங்கிறதை கேள்விப்பட்டப்ப ஒருதரம் போய் அவங்க முகத்தைப் பார்த்துட்ட வந்துடலாம்ன்னு தோணுச்சுண்ணா..."

நித்தியானந்தன் கண்களை மூடி ஒரு நொடி மௌனித்தான்.. அவனால் நந்தினியின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடிந்தது..

"இப்ப நீ அம்மாவாகப் போறியே.. இதுக்கு மேலயும் பிடிவாதம் பிடிக்கனுமா..?"

"இல்லண்ணா.. அவர் கூப்பிட வந்தப்பவே.. திருவிழா முடிகிற வரைக்கும் தான் அங்கே நான் தங்கலாம்ன்னு கண்டிசன் போட்டு கூப்பிட்டுக்கிட்டுப் போனாரு..."

"அப்படியா சொன்னான்..?" நித்தியானந்தனின் கண்கள் சிவந்தன...

"ம்ம்ம்..."

"இப்ப என்ன செய்யலாம்...?"

"எனக்கு என் குழந்தை வேணும்.."

"அவனும் அதைத்தானே கேட்கிறான்..."

"நான் தரமாட்டேன்..."

"அவன் டைவர்ஸ் கேட்பானே..."

"கொடுத்துடறேன்னு சொல்லுங்க..."

"அறிவோடதான் பேசறயா..? இதுக்கா இத்தனை பாடு..?"

"எனக்கு வேற வழி தெரியலையே அண்ணா..."

பேசிக் கொண்டிருந்த நந்தினி சட்டென்று உடைந்து போனவளாக.. தமையனின் முன்னால் மண்டியிட்டு.. அவன் மடியில் முகம் புதைத்து அழுதாள்...

நித்தியானந்தனால் அவன் கண்களையே நம்ப முடியவில்லை.. சின்னஞ்சிறு வயதில்.. கீழே விழுந்து கால்களில் காயம் ஏற்படுத்திக் கொண்டு...

"அண்ணா..." என்று தேம்பி அழுதவாறு அவன் கால்களில் முகம் புதைத்துக் கொண்ட குழந்தையான நந்தினி அவன் நினைவுக்கு வந்தாள்...

அப்போதெல்லாம் அவளுக்கு நித்தியானந்தன்தான் பாதுகாவலன்..! வளர.. வளரத்தான் அவளுக்குள் 'தான்' என்ற எண்ணம் வளர்ந்து தொலைத்தது...

ஊடே வந்த காலங்கள் மறைந்து.. பழைய நந்தினியாக.. சின்னஞ்சிறுமியாக மடியில் விழுந்து அழுத தங்கையின் முடி கோதிய நித்தியானந்தனின் கண்களில் இருந்து இரண்டு சொட்டு கண்ணீர் உதிர்ந்து நந்தினியின் தலையை நனைத்தது...

"அழாதே நந்தினி.. இப்படியே வாழ்க்கை போயிராது... என்னன்னு நான் கேட்கிறேன்.. என்கிட்ட பொறுப்பை விட்டுட்டு.. நீ நிம்மதியா இரு..."

மகனின் தங்கை மீதான அக்கறையில்.. பெற்றவர்களின் மனங்கள் குளிர்ந்தன...

"கனகா.. நான் மதுரை கிளம்பறேன்..."

"இது அவசியம்தானா..?"

"எனக்கு அவசியம்.. அவ என் தங்கச்சி.. நான் வருகிற வரைக்கும் அவளைப் பத்திரமா பார்த்துக்க..."

கனகா பதில் பேசவில்லை.. ஆனாலும் அவன் சொன்னதை அவள் கட்டாயம் நிறைவேற்றுவாள் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது.. கனகாவின்

குணம் அப்படி.. அவளுடைய கணவன் யாருக்கு முக்கியத்துவம் கொடுக்கிறானோ அவர்களுக்குத்தான் அவள் முக்கியத்துவம் கொடுப்பாள்.. அவன் கண்டு கொள்ளாவிட்டால் அவளும் கண்டு கொள்ள மாட்டாள்...

இப்போது நித்தியானந்தன் தங்கையை கண்டு கொண்டிருந்தான்... அதனால்.. கனகாவும் அவளைக் கண்டு கொள்வாள் என்பது அவனுக்குத் தெரியும்.. அவன் அன்றே மதுரைக்குக் கிளம்பிச் சென்றான்...

மில்லைச் சுற்றிப்பார்த்துக் கொண்டிருந்த ஆதவனுக்கு நித்தியானந்தன் வந்திருக்கும் செய்தி வந்தது.. அவன் விரைவாகப் போய் மைத்துனனை எதிர் கொண்டான்...

"வாங்க.. வாங்க..." என்று வரவேற்றவனை முறைத்துப் பார்த்தான் நித்தியானந்தன்...

திருமண மண்டபத்தில் பார்த்த ஆதவனுக்கும்.. இன்று அவன் பார்க்கும் ஆதவனுக்கும் இடையே நிறைய மாற்றங்கள் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.. ஆதவன் வரவழைத்த குளிர்பானத்தைத் தொட்டுக் கூடப் பார்க்காமல்...

"நந்தினிக்காக பேச வந்திருக்கேன்..." என்றான்...

"தாராளமாப் பேசுங்க.. நீங்க சொல்றதை நானும் கேட்டுக்கிறேன்.. ஆனா.. அந்தப் பேச்சை கூல்டிரிங்கை

குடித்தபடி பேசலாமே..." என்று தன்மையாகச் சொன்னான் ஆதவன்...

"நான் கூல்டிரிங்க் குடிக்க இங்கே வரலை..."

"ஓகே.. இப்ப கூல்டிரிங்க ஒரு பிரச்னையா இல்லை.. அதை விட்டுரலாம்.. சொல்லுங்க.. உங்க தங்கை என்ன சொல்லி விட்டிருக்கா..?"

"அவளுக்கு அவ குழந்தை வேணுமாம்.."

"அது என்னோட குழந்தை.. நித்தியானந்தன்..! எனக்கு என்னோட வாரிசு வேணும்..."

"அவ தர மாட்டேங்கிறாளே..."

"கோர்ட்டுக்குப் போய் வாங்கிக்கறேன்.."

"பிடிவாதம் பிடிக்காதீங்க ஆதவன்.. உங்களுக்கு டைவர்ஸ் வேனும்னா கொடுக்க அவ ரெடியாயிருக்கா..."

ஆதவனின் முகத்தைப் பார்த்தபடியே நிதானமாக நித்தியானந்தன் சொல்லச் சொல்ல.. ஆதவனின் முகம் பயங்கரமாக மாறியது...

"ஓ.. அதை வைச்சுக்கிட்டு நான் என்ன செய்ய..?"

"இன்னொரு கல்யாணத்தைப் பண்ணிக்கலாம்.. வாரிசைப் பெத்துக்கலாம்..."

"அதை அவளைச் செய்யச் சொல்லுங்க.. அவளுக்கு டைவர்ஸ் வேணும்னா நான் கொடுக்கிறேன்.. ஆனா எனக்கு இந்தக் கல்யாணம் போதும்.. என் குழந்தை மட்டும் போதும்..."

ஆதவனின் இந்தக் கோபத்தில் நித்தியானந்தனின் முகத்தில் எள்ளல் வந்தது...

"என்னவோ.. கல்யாணத்தையும்.. தாலியையும்.. பெண்களையும் மதிக்கிறவரைப் போலத்தான் பேசிவைக்கறிங்க.. சும்மா இருங்க சார்.. சிரிப்பு.. சிரிப்பாய் வருது.. நந்தினி உங்களைப் பத்தி எல்லாத்தையும் சொல்லியிருக்கா.. உங்களைச் சுத்தி பெண்கள் கூட்டம்

இருக்குமாமே.. நேரத்துக்கு ஒரு பெண்ணோட பெங்களூரைச் சுத்தி வந்தீங்களாமே.. ஆக்சுவலாய் என் தங்கைக்கு நீங்க பண்ணிய கெடுதலுக்கு உங்க குடலை உறுவி மாலையாய் போட்டிருக்கனும்.. தங்கச்சி புருசனாய் போயிட்டிங்கன்னு விட்டு வைக்கிறேன்..."

"ஓ.. என் இடத்துக்கு வந்து என்கிட்டேயே சவாலா..? யாரு நீங்க..? நந்தினிக்கு அண்ணன்தானே.. அவளைப் போலதான் நீங்களும் பேசுவீங்க.. கல்யாணத்துக்கு முன்னாலே நான் ஆட்டம் போட்டவன்தான்.. இல்லேன்னு யாரு சொன்னது..? அது பணத்துக்காக வந்த கூட்டத்தோடு போட்ட ஆட்டம்.. கல்யாணத்துக்கு பின்னாலே நான் அலைஞ்சதா சொல்லச் சொல்லுங்க பார்ப்போம்..."

"நல்லாத்தான் பேசறிங்க.. அந்தக் கல்யாணம் எப்படி நடந்தது..? நீங்க பெண்கேட்டு வந்து.. முறைப்படி பேசி முடிச்சா நடந்தது..? இல்லை.. உங்க அம்மா சொன்னபடி.. உங்க கண்ணனான அப்பா.. குசேலரான என்னைப் பெத்த அப்பாவுக்கு வாக்குக் கொடுத்ததை நிறைவேத்தவா நடந்துச்சு..?"

"பெண் கேட்டு வந்திருப்பேன்.. அதுக்காகத்தான் உங்க தங்கையிடம் விசாரிக்கப் போனேன்.. அவ எனக்கு தப்பானவன்னு பெயர் கட்டி விட்டுட்டா..."

"பொய்யைச் சொன்னாளா..?"

"உண்மையைச் சொல்லலை.. ஏன்னா.. அந்த உண்மையைப் பத்தி அவளுக்கே தெரியாது..."

"எந்த உண்மை..? இது என்ன புதுக்கதை..?"

"இது கதையில்லை மைத்துனரே.. நிஜம்.. உங்க தங்கையை பெங்களூரில் கண்டதும் எனக்குள்ளே சின்னதா காதல் வந்துருச்சு.."

"காதில பூச்சுத்தறிங்களா..?"

"நம்பலைன்னா இதைப் பாருங்க..."

ஆதவன் எடுத்துப் போட்ட கவரிலிருந்து போட்டோக்கள் கொட்டின.. அதில் பெங்களூரின் பூங்காக்களில் நந்தினி நின்று கொண்டிருந்தாள்...

நடந்தபடி.. பேசியபடி.. சிரித்தபடி.. என்று இயல்பாக அவளிருந்த தோற்றங்கள்.. அந்தப் போட்டோக்கள் அவளுக்குத் தெரியாமல் எடுக்கப் பட்டவை என்பதை உணர்த்தின...

"உங்க கூடப் பெண்கள் இருந்ததா நந்தினி சொல்றாளே.."

"நான் அலைகிறவன்தான்.. அன்னைக்கு அலையலை.. என் மில்லுக்கான விளம்பரப் படம் எடுக்க வந்திருந்தேன்.. அவங்கள்ளாம் மாடலிங் பண்றவங்க.. நாலைந்து இடங்களில.. வேற வேற மாடலோட ஷீட்டிங் நடந்துச்சு.. உங்க தங்கை ஷீட்டிங்கைப் பார்க்காம.. அவங்க கூடப் பேசிக்கிட்டு இருந்த என்னைப் பார்த்துட்டா..."

"நம்ப முடியலையே..."

"நம்பலைன்னா.. இந்த போட்டோக்களைப் பாருங்க..."

ஆதவன் அடுத்துக் கொடுத்த போட்டோக்களில் வேறுவேறு பெண்கள் பெங்களூரின் பூங்காக்களிலும்.. நந்தினி தங்கியிருந்த ஹோட்டலின் நீச்சல் குளத்தருகிலும் நின்றிருந்தார்கள்... போட்டோவில் விளம்பர வாசகங்கள் இருந்தன...

"இதை எடுத்தது சென்னையில் இருக்கிற அட்வெர்டைஸில் கம்பெனிதான்... உங்க தங்கையோட எனக்கு வாக்குவாதம் ஏற்பட்ட அந்த நைட் நேரத்தில அவங்களும் அதே ஹோட்டலில் தான் தங்கியிருந்தாங்க.. இப்போ யோசிச்சுப் பாருங்க.. அந்த சூழ்நிலையில் தப்புச் செய்யாத எனக்கு எப்பேற்பட்ட தலைகுனிவு ஏற்பட்டிருச்சு..? அந்த மாடல் பெண்களும்.. அட்வெர்டைஸிஸ் கம்பெனிக்காரங்களும் என்னைப் பத்தி என்ன நினைச்சிருப்பாங்க..?"

நித்தியானந்தனுக்கு என்ன பதிலைச் சொல்வதென்றே தெரியவில்லை.. முதன் முறையாக ஆதவனின் பக்கமும்

நியாயம் இருக்கக்கூடுமோ என்று அவன் யோசிக்க ஆரம்பித்தான்...

"உங்க தங்கையை எனக்குப் பிடிச்சிருந்தது.. அவளும் என்னை லேசு பாசா பாத்து வைச்சா.. என் கூட இருந்த பெண்களால் என்னைத் தப்பா நினைக்கிறான்னு எனக்கு அப்பத் தெரியாமப் போச்சு.. ஷீட்டிங் நடந்ததை உங்க தங்கை பார்த்திருப்பான்னு நினைச்சேன்.. அவ அதைக் கவனிக்காம.. பொண்ணுகளையும் என்னையும் மட்டுமே கவனிச்சிருக்கா..."

"ம்ம்ம்..."

"ஹோட்டலில் நைட் நேரத்தில் நீச்சல் குளத்துப் பக்கத்தில் ஷீட்டிங் நடந்துச்சு.. அப்பத்தான் உங்க தங்கை மட்டும் தனியா பால்கனியில நின்னுக்கிட்டு இருந்ததை நான் பார்த்தேன்.. அவகூடப் பேச அது சரியான வாய்ப்புன்னு என் மனசுக்கு பட்டுச்சு.. நானும் பேசப் போனேன்.. அவ என்னைக் கண்டதும் பயந்துட்டா..."

"பயப்படாம என்ன செய்வா..? எங்க வீட்டுப் பெண்ணை நாங்க அப்படித்தான் வளர்த்திருக்கிறோம்.. அவ வெறும் வாய்தான் அடிப்பா.. மத்தபடி துணிச்சலான வேலையெல்லாம் பண்ண மாட்டா..." நித்தியானந்தன் தங்கையைப் பற்றிப் பெருமைப் பட்டுக்கொண்டான்...

"முன்ன பின்னத் தெரியாதவன் மேல பழி போடறது துணிச்சலான வேலையில்லையா..?" ஆழ்ந்தகுரலில் ஆதவன் கேட்டான்...

"அது.. சந்தர்ப்ப சூழ்நிலையால் ஏற்பட்ட தவறு.." நித்தியானந்தன் தணிந்தே பேசினான்...

ஆதவன் மீது தவறில்லை.. அவன் தவறான நோக்கத்துடன் நந்தினியிடம் பேச வரவில்லை என்பதை அறிந்த பின்பு.. பொறுமையாகப் பேசுவதுதான் நந்தினியின் வாழ்க்கைக்கு நல்லது என்று.. ஒரு தங்கைக்கு அண்ணனாக.. அவனுக்குள் ஞானோதயம் ஏற்பட்டிருந்தது...

நித்தியானந்தனின் தன்மையான வார்த்தைகளில் பொங்கியெழுந்த ஆதவனின் கோபமும் தணிந்து விட்டது.. நந்தினி வேண்டுமென்று அவனுடைய மனமும்.. வாழ்வும் காத்திருக்கும் போது.. சமாதான உடன்படிக்கைக்காக நீளும் நித்தியானந்தனின் கரங்களை இறுக்கிக் பிடித்துக் கொள்வதே சாலச்சிறந்தது என்று அவனுக்கும் தோன்றி விட்டது...

இருள் என்றும் நிரந்தரமாக இருப்பதில்லை.. புலர்காலைப் பொழுது வந்தால்.. அங்கே விடியலின் ஆட்சி ஆரம்பமாகிவிடும்.. வெளிச்சத்தின் கதிர்களும் பரவி விடும்...

24

அங்கே அழகானதொரு பாசப் பிணைப்பு.. ஆதவனுக்கும் நித்தியானந்தனுக்குமிடையே உருவாகியிருந்தது.. தான் சொல்ல வந்ததைக் காது கொடுத்துக் கேட்டும் மைத்துனனின் மீது ஆதவனுக்குள் நட்பு பெருகியது.. தங்கையின் கணவன் தங்கையும்.. மற்றவர்களும் கணித்து வைத்திருந்ததைப் போல முற்றிலும் தவறானவன் அல்ல என்ற உண்மையை அறிந்த பின்பு.. ஆதவனின் மீது நித்தியானந்தனுக்குள்ளும்

பாசம் பெருகியது...

"அவ எந்த ஊர்ன்னுதான் நான் முதலில் கேட்டேன்.. அவளைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு அவ குடும்பத்தோட பேசிப்பெண் கேட்கனும்கிறதுதான் என்னோட எண்ணம்.. அவமேல மட்டும்தான் எனக்கு நோக்கம்ன்னா.. அவ பெயர் என்னன்னுதானே முதலில் கேட்டிருப்பேன்...?" ஆதவன் அந்த நாளுக்குப் போனான்..

"புரியுது..." நித்தியானந்தன் அனுதாபத்தோடு சொன்னான்..

"அவ பதறிட்டா.. படபடன்னு பேசிட்டா.. ஒரு நொடி அவ நிதானமா செயல்பட்டிருந்தாக் கூடப்போதும்.. இந்த வினையெல்லாம் வந்திருக்காது.. அவ நிதானிக்கல.. ப்ச்சு.. என்னைன்னவோ நடந்துருச்சு..." ஆதவனின் குரலில் உண்மையான வருத்தம் தெரிந்தது...

நித்தியானந்தன் பேசவில்லை.. பேச்சுக்கள் தேவையற்ற மௌனம் அங்கே குடி கொண்டிருந்தது.. ஆதவன் ஒரு பெருமூச்சுடன் அந்த மௌனத்தைக் கலைத்தான்...

"எங்க அம்மா சொன்னதுக்காக மட்டும்தான் நான் நந்தினியின் கழுத்தில் தாலியைக் கட்டினேன்னா நினைக்கறிங்க..? எத்தனையோ வழக்குகளைப் பார்த்தவனுக்கு அவ விட்ட வக்கீல் நோட்டிஸெல்லாம் ஜீஜீபி..."

"உண்மைதான்..."

"எனக்கும் தெரியும்.. எதுவும் நடக்கலைன்னாலும்.. அவ என்னைத்தவிர வேறு யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டான்னு... அதான்.. அவ கழுத்தில தாலியைக் கட்டினேன்.. ஆனா.. நானும் மனுசன்தானே.. செய்யாத தப்புக்கு தண்டனை வாங்கின எனக்குத்தானே அந்த வலி தெரியும்..? உங்க தங்கைக்கு நான் பண்ணின அநியாயத்திற்கு பரிகாரம் பண்ணிட்டேன்.. எனக்கு அவ செய்த அநியாயத்திற்கு அவ பரிகாரம் செஞ்சாளா..? அதான்.. தாலியைக் கட்டின உடனே அவளை விட்டுட்டுப் போயிட்டேன்.."

"போனவர் அவளைத் தேடி வராம இருந்திருக்கனுமில்ல.."

என்னதான் ஆதவன் குற்றமற்றவனாக இருந்த போதிலும்.. தங்கை என்று வரும்போது நித்தியானந்தனுக்கும் 'சுரீர்' என்றுதானே இருக்கும்..? அவன் சட்டென்று கேட்டு விட்டான்.. அதை மெச்சும் பாவனையில் ஆதவனின் கண்கள் மின்னின...

"அவ என்னைத் தேடி வரலையே..." இலகுவாக சிரித்தான்..

அவனுடைய அந்தச் சிரிப்பில் நித்தியானந்தனின் மனதில் ஏற்பட்டிருந்த சுணக்கம் மறைந்து விட்டது.. அவனும் தங்கை கணவனுடன் சேர்ந்து சிரித்தான்...

"அவ பிடிவாதக்காரி மாப்பிள்ளை..." இயல்பாக உறவு கொண்டாடினான்...

அந்த உறவு கொண்டாடுதலில் ஆதவனின் மனம் மலர்ந்தது.. நந்தினி அவன் குடும்பத்தில் இணைந்ததைப் போல.. அவள் குடும்பத்தில் அவனால் இணைய முடியவில்லையே என்று அவன் மனதில் ஏற்பட்டிருந்த ஏக்கம் மறைந்து விட்டது...

"அதைச் சொல்லுங்க மச்சான்..." அவனும் சலுகையுடன் உறவு கொண்டாடினான்...

"சொன்ன பேச்சைக் கேட்க மாட்டாமாப்பிள்ளை.."

"அடம் மச்சான்..."

"சின்ன வயசில இருந்தே அப்படித்தான்..."

"அதுக்காக தாலி கட்டினவன்கிட்ட காலம் பூராவும் முறைச்சுக்கிட்டே நிக்கனுமுன்னு முறைச்சா எப்படி..."

"பொண்டாட்டியும் முறைப் பொண்ணுதானேன்னு நினைச்சிட்டாளோ என்னவோ..."

"இருக்கும்.. இருக்கும்..."

அவர்கள் மனம் விட்டுச் சிரித்தார்கள்.. நித்தியானந்தன் தூத்துக்குடிக்கு கிளம்பிய போது.. ஆதவனும் கூடவே கிளம்பினான்.. தனியாகப் போன மகன்.. மருமகனுடன் திரும்பி வந்ததில் பெற்றவர்கள் மனதில் ஆனந்த அதிர்ச்சி வந்தது...

"வாங்க மாப்பிள்ளை..." மங்கையர்கரசிதான்.. கைகளைக் குவித்து முதலில் வரவேற்றாள்...

அவள் பெண்ணைப் பெற்றவள்.. வாழ்ந்து பார்த்தவள்.. மகளின் வாழ்வில் எது நடந்திருந்தாலும்.. வந்திருப்பது மகளின் கணவன்.. அந்தக் குடும்பத்தின் மருமகன்..

அவனுக்கான மரியாதையைக் குறைவில்லாமல் கொடுக்க வேண்டும்.. என்ற வளமை அறிந்தவள்...

"உட்காருங்க மாப்பிள்ளை..." நாராயணசாமியும் மனைவியுடன் இணைந்து கொண்டார்..

"கனகா.. மாப்பிள்ளையைக் கவனி..." நித்தியானந்தன் மனைவிக்கு உத்தரவிட்டு விட்டு தங்கையைத் தேடிச் சென்றான்... அவள் மாடியறையில்.. கோபத்துடன் குறுக்கும்.. நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தாள்.. தமையனைக் கண்டதும்...

"அவரை எதுக்காகண்ணா கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்க..?" என்று வெடித்தாள்..

நித்தியானந்தன் அவள் முகத்தையே

பரிவுடன் பார்த்தான் அவன் பார்வையில் எதைக் கண்டாளோ..

"அண்ணா..." என்று விசும்பியபடி அவன் தோள் சாய்ந்தாள் அவனுடைய தங்கை...

"உனக்கு அவரைப் பிடிச்சிருக்கு நந்தினி.. இல்லேன்னு பொய் சொல்லாதே.. உன் விருப்பமில்லாம உன்னைத் தொடலைன்னு அவர் சொல்றார்..."

"அண்ணா.. அது வந்து..."

"விட்டுரு.. விளக்கம் சொல்லச் சிரமப்படாதே.. இது அண்ணன்கிட்டத் தங்கை சொல்ல வேண்டிய விளக்கமில்லை.. அவர் உன்புருசன்.. அந்த நினைப்பு

உன் மனசில ஆழமா படிஞ்சிருக்கு.. அதை இல்லைன்னு உன்னால சொல்ல முடியாது.. உனக்கு என்ன பிரச்னை..? அவர் உனக்குப் பண்ணிய கொடுமை தானே பிரச்னை..? ஆனா.. எதுக்கு முன்னாலேயே அவருக்கு நீ கொடுமை பண்ணிட்டயே.. அதுக்கு உனக்கு யாரு தண்டனை கொடுக்கிறது..?"

"அண்ணா..."

"நாணயத்துக்கு இரண்டு பக்கம் உண்டு... நீ உன் பக்கத்திலேயே நிற்கிற.. அவர் பக்கத்தையும் பாரு.. பேசு.. அவர்கூடப் பேசு.. பேசித் தெளிவாகு.. இது உன்னோட வாழ்க்கை.. உன் புருஷனைக் கொண்டு வந்து உன் முன்னாலே விட்டிருக்கேன்.. கேட்க வேண்டிய கேள்விகளை அவர்கிட்டக் கேளு.. அதே சமயம் அவர் கேட்கிற கேள்விகளுக்கும் பதில் சொல்லு.. அதுக்குப் பின்னாலே ஒரு முடிவுக்கு வா..."

நித்தியானந்தன் மாடிப் படிகளில் இறங்கிப் போய் விட்டான்.. சற்று நேரத்தில்.. நந்தினிக்குப் பழக்கப்பட்ட அழுத்தமான காலடியோசை கேட்டது.. துளைக்கும் பார்வையோடு ஆதவன் அவள் இருந்த அறைக்குள் வந்தான்..

"ஏண்டி என்கிட்டச் சொல்லலை.." என்று கேட்டான்...

"எதை..?" நந்தினிக்கு குரல் எழும்பவில்லை..

"என் குழந்தைக்கு நீ அம்மாவாகப் போகிறதை..?"

"அது என் குழந்தை.."

"அப்பா.. நான்தான்..."

"அதுக்காக குழந்தையைப் பெத்து உங்க கையில கொடுத்துட்டு நான் வெளியேறிக்கனுமா..?"

"யாரு வெளியேறச் சொன்னது..? வா.. வாழ்ந்து பார்க்கலாம்..."

"அதுக்கு வேற ஆளைப் பாருங்க..."

"அந்த உத்தேசம் எனக்கில்லைடி.. என்னைக்கு உன்னை முதன்முதலா பெங்களூரில் பார்த்தேனோ.. அப்பவே நீதான் என் பெண்டாட்டின்னு முடிவு பண்ணிட்டேன்.. முறைப்படி உன்னைப் பெண் கேட்கலாம்ன்னுதான் உன் ஊர் எதுன்னு கேட்டேன்..."

நந்தினிக்குள் இருந்த ஏதோ ஒன்று விழித்துக் கொண்டது.. அவள் அந்த நாளுக்குப் போனாள்.. அவளுக்கு நன்றாக

நினைவிருந்தது.. அவன் அவளுடைய பெயரைக் கேட்கவில்லை.. ஊர் எது என்றுதான் கேட்டான்...

"நீ நினைச்சதைப் போல உன்கிட்ட நான் தவறாய் பேச வந்திருந்தா.. உன் ஊரைப் பத்தி ஏண்டி கேட்கனும்..? அது என்ன தேவைக்கு..? எனக்கு தேவைப்படறதே வேறயாத்தானே இருக்கும்..?"

ஆதவன் உணர்த்திய விதத்தில் நந்தினியின் முகம் சிவந்து விட்டது.. அவள் தவறு செய்து விட்டாளா..?

"நான் உன்னை மதிச்சேண்டி.. மரியாதை கொடுத்தேன்.. என்னை உனக்குப் புரிய வைக்க பாடாய் பட்டேன்.. ஆனா.. நீ..?"

அவனின் முடிக்கப்படாத கேள்வியில் நந்தினி மனம் கலங்கி விட்டாள்.. ஆதவனின் பக்கம் நியாயம் இருந்ததா..?

"அன்னைக்கு அங்கே என் மில்லுக்கான விளம்பரப் படத்தை எடுத்துக்கிட்டு இருந்தாங்க.. வேற வேற இடத்தில.. வேற வேற மாடல் பெண்கள் போஸ் கொடுத்துக்கிட்டு இருந்தாங்க.. எனக்கு என்ன மாதிரியான உணர்வுகளை முகத்தில் கொண்டு வரனும்கிறதை அவங்ககிட்ட நான் சொல்லிக்கிட்டு இருந்தேன்.. நீ அதைப் பார்த்த.. ஷீட்டிங்கைப் பார்க்கலை..."

ஆதவன் சொல்லச் சொல்ல.. நந்தினியின் மூளையில் மின்னலடித்தது.. அவள் பார்த்தாள்.. ஆதவனைப் பார்த்த ஒவ்வொரு முறையும் அவனுக்குப் பக்கத்தில் படப்பிடிப்பு நடப்பதைப் பார்த்தாள்.. ஆனால்.. அவனுக்கும்.. அதற்கும் சம்பந்தம் இருக்கக்கூடும்

என்று அவளுக்கும்.. அவளுடைய தோழிகளுக்கும் தோன்றாமல் போய் விட்டது...

"நீ என்னைப் பார்த்த.. நானும் உன்னைப் பார்த்தேன்.. எனக்கு உன்னைப் பிடிச்சிருந்தது.. அதைத்தானே அன்னைக்குச் சொன்னேன்..? உனக்கும் பிடிச்சிருந்தா நீ உன் ஊரையும்.. அட்ரஸையும் சொல்லியிருக்கலாம்.. இல்லைன்னா.. உன்னை எனக்குப் பிடிக்கலைடா மாங்கா

மடையான்னு சொல்லிட்டுப் போயிருக்கலாம்.. அதைவிட்டுட்டு நீ என்ன காரியம் செய்துட்டடி..?"

ஆதவனின் குற்றச்சாட்டில் நந்தினி மிரண்டு விழித்தாள்... அவளின் குற்ற உணர்வுகளைத் தாங்கிய பார்வையினை ஆதவனால் தாங்க முடியவில்லை..

அவன் ஒரே எட்டில் மனைவியை அணுகி அவளைத் தன்னோடு இறுக்கி அணைத்துக் கொண்டான்...

"வேணான்டி.. இப்படிப் பார்க்காதே..."

"நான் தப்புப் பண்ணிட்டேன்..."

"தெரியாமத்தானே செஞ்சே...?"

"உங்களுக்குக் கெடுதல் பண்ணிட்டேன்..."

"பதிலுக்கு நானும் உனக்கு கெடுதல் பண்ணித் தொலைச்சுட்டேன்டி.."

"எனக்கு மன்னிப்புக் கிடையாது..."

"யார் சொன்னது..? என்னை நீ மன்னிக்கிறப்ப.. உன்னை நான் மன்னிக்க மாட்டேனா..?"

ஆதவனின் ஆதரவான மொழிகளில் அவளின் இதயம் குளிர்ந்து விட்டது.. இப்படிப்பட்ட கணவனின் மனதை நோகச் செய்து விட்டோமே என்ற தவிப்புடன்...

"அத்தான்..." என்று அவன் மார்பில் முகம் புதைத்தாள்..

"ஏய்ய்..." கண்கள் மின்ன அவள் முகத்தை நிமிர்த்திப் பார்த்தான் ஆதவன்.. அதில் காதலும்.. ஆசையும் கவிழ்ந்திருந்தன..

"உனக்குத் தெரிஞ்சிருக்கில்ல.. என்னை அத்தான்னு கூப்பிடனும்னு உனக்குத் தெரிஞ்சிருக்கில்ல.. அப்புறமும் ஏண்டி ஊரில இருக்கிற அத்தனை பேரையும் சொல்லிக் கூப்பிட்டுட்டு.. அதை மட்டும் சொல்லாம விட்ட..?"

"அது அப்படித்தான்.." அவள் குறும்பாக கண்சிமிட்டினாள்..

"நந்தினி..." அவன் கிளர்ச்சியுடன் அவள் இதழ்களைத் தேடிக் குனிந்தான்.. நீண்ட முத்தத்திற்குப் பின் அவளை விடுவித்தவன்... சிவந்திருந்த அவள் முகத்தை ஆசையுடன் தடவிக் கொடுத்தான்...

"அக்கா கூப்பிட்டதைச் சொல்லுவ.. ராதா கூப்பிட்டதைச் சொல்லுவ.. மல்லிகா கோதண்டத்தைக் கூப்பிட்டதைச் சொல்லுவ.. அண்ணி அண்ணனைக் கூப்பிடறதைப் போல மட்டும் கூப்பிட்டு வைக்க மாட்ட.. நீ சரியான கள்ளிடி.."

"நீங்க கள்ளன்னா.. நான் கள்ளிதான்..."

அவர்கள் சேர்ந்து சிரித்தார்கள்.. கைவிரல்களோடு விரல் கோர்த்து.. ஒரு வருடத்துக் கதைகளையும் பேசி முடித்தார்கள்.. இடையில் அவள் முகத்தில் முத்தங்களைப் பரிசளித்துக் கொண்டே இருந்தான் ஆதவன்.. நந்தினியும் அவற்றைத் திருப்பிக் கொடுத்து கணக்கை நேர் செய்தாள்...

"என் குழந்தை மட்டும் வேணும்.. நான் வேணாமா..?"

"நீ மட்டும் என் குழந்தையை உன் வயித்துக்குள்ளே ஒளிச்சு வைச்சுக்கிட்டுச் சொல்லாம ஓடிப் போகலாமா..?"

அவர்கள் சொல்லச் சண்டையிட்டுக் கொண்டிருந்த போது.. அசைவச் சமையலின் வாசனை மாடியை எட்டி அவர்களின் நாசிகளில் நுழைந்தது...

"மறு வீட்டு விருந்து..." நந்தினி கண்களைச் சிமிட்டினாள்...

"சும்மா.. சும்மா கண்ணடிச்சு கிளப்பி விடாதேடி..." ஆதவன் அவளை விழுங்கி விடுவதைப் போலப் பார்த்தபடி நெருங்கினான்..

"நந்தினி.. அண்ணனைச் சாப்பிடக் கூப்பிட்டுக்கிட்டு வா..." திறந்திருந்த அறைக் கதவுக்கு வெளியே முகத்தைத் திருப்பிக் கொண்டு கனகா நின்றிருந்தாள்...

"அண்ணி..." வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள் நந்தினி.. கனகா விரைவாக இறங்கிப் போய்விட.. 'உங்களால் தான்'

என்று வெட்கத்துடன் கணவனிடம் சண்டையிட்டாள் நந்தினி...

"புருசன்கூட சண்டையாம்.. புருசன தள்ளி வைக்கப் போறாளாம்.. கதை விடறா.. மாடியில புருசன் பொண்டாட்டி ரெண்டு பேரும் கொஞ்சிக் குழாவினதைப் பார்க்கனுமே..." கீழே வந்த கனகா கணவனிடம் சொன்னாள்...

"நீயேண்டி அங்கே போன..?" அவன் மனைவியைக் கடிந்து கொண்டான்...

"ஊம்.. மார்னிங் ஷோ பார்க்கனும்னு ஆசை..."

"விடுடி.. நீயும்.. நானும் கொஞ்சினதை விடா அவங்க ரெண்டு பேரும் கொஞ்சிக்கப் போறாங்க..? அதுக ரெண்டும் மக்குடி.. ஒரு வருசத்தை வீணாடிச்சிருச்சுக..."

"ஐய்யே.. போதும் விடுங்க.. அத்தையும்.. மாமாவும் பார்த்திரப் போறாங்க..."

அங்கே இன்னொரு காதல்கதை உருவானது...

மறுவீட்டு விருந்தை செமத்தியாக ஒருபிடி பிடித்தான் ஆதவன்.. அன்று இரவு நித்தியானந்தனின் வீட்டில் தங்கினான்... இரவில் அவனிடம் முழுமையாக தன்னை ஒப்படைத்தாள் நந்தினி... அந்த இரவு.. முழுமையான முதல் இரவாக ஆதவனுக்கு மாறிப் போனது.. மறுநாள் காலையில் மனைவியை அழைத்துக் கொண்டு சென்னைக்கு கிளம்பி விட்டான்...

"என்ன முடிவு பண்ணியிருக்க நந்தினி..?" நித்தியானந்தனின் கண்களில் சிரிப்பிருந்தது...

நந்தினிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.. ஆனாலும்.. தமையனுக்கும்.. பெற்றவர்களுக்கும் தேவையான தகவலை அவள் சொன்னாள்...

"சென்னையில பார்த்துக்கிட்டு இருக்கிற வேலையை ரிஸைன் பண்ணிட்டு.. இவர்கூட செக்கானூரணிக்குப் போகப் போறேன் அண்ணா..."

**சொ** ன்னதைப் போலவே வேலையை ராஜினாமா செய்தாள் நந்தினி.. தோழிகள் வழியனுப்பி வைக்க.. விடிகின்ற வேளையிலே ஆதவனுடன் செண்பகவள்ளியின் முன்னால் போய் நின்றாள் அவள்..

"சொன்னபடி வந்திட்டேன் அத்தை..."

"சும்மாவும் வரலைம்மா.. உங்க பேரப் புள்ளையை வயித்தில சுமந்துக்கிட்டு வந்திருக்கா..."

ஆதவன் சொன்னதைக் கேட்டதும்.. அந்த வீடே மகிழ்ந்து போய் விழாக்கோலம் பூண்டது.. தூத்துக்குடியிலிருந்து சீர்வரிசைப் பொருள்களை லாரிகளில் ஏற்றிக் கொண்டு நித்தியானந்தன் குடும்பத்துடன் வந்து சீர் செய்து விட்டுப் போனான்.. பதிலுக்கு தீபாவளியைக் கொண்டாட நந்தினியும்.. ஆதவனும் தூத்துக்குடி போய் வந்தார்கள்..

ஏழாம் மாதத்தில் வளைகாப்புச் செய்ய மறுபடியும் நித்தியானந்தன் வந்தான்.. குழந்தை பெற்றுக் கொள்ள.. நந்தினி.. பிறந்த வீட்டிற்குப் போனாள்...

திருமணம் என்பது.. இரண்டு குடும்பங்களை ஒன்று படுத்தும் உன்னதமான உறவு.. அடுத்து வந்த திருவிழாவில் ஆதவனின் சொந்த பந்தங்களோடு நந்தினியின் சொந்த பந்தமும் சேர்ந்து வந்து இறங்கினார்கள்...

அவர்களை நந்தினி ஆதவனோடு அவர்களின் மகனும் சேர்ந்து வரவேற்றான்.. குட்டிக் கண்ணனின் வரவால் அந்தத் திருவிழா.. வழக்கத்தை விட அதிகமாகவே களை கட்டியது...

விடிகின்ற வேளை வந்தால் நன்மைகள் எல்லாம் கூடும்தானே...!

- முடிந்தது -